மகாதேவ ரகசியம்



இந்திரா சௌந்தர்ராஜன்

12

மகாதேவ ரகசியம்

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
புதிய எண்: 16, பழைய எண் 55,
வெங்கட் நாராயணா சாலை
தி.நகர், சென்னை–600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559

முதற் பதிப்பு: நவம்பர், 2003
இரண்டாம் பதிப்பு: டிசம்பர் 2008
உரிமை: ஆசிரியருக்கு©

MAHADEVA RAGASIYAM

By: **Indra Soundarrajan**

Second Edition - December 2008

No. of Pages: 288

Paper used: 11.6

விலை ரூ. 100.00

THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 23610810

Printed at: : உதயம் ஆப்செட்ஸ், சென்னை – 2

என்னுரை

தினமலரில் நான் எழுதிய 'சிவம்' என்கிற நாவலைத் தொடர்ந்து நான் எழுதிய இன்னொரு சிவம் பற்றிய சிந்தனையே இந்த மகாதேவ ரகசியம்.

தமிழன் எக்ஸ்பிரஸ் வார இதழில் 35 வாரங்கள் வெளியிட்டு எனக்கு பெருமை சேர்த்தது. இதற்கு முன்பும் இரண்டு தொடர்களை தமிழன் எக்ஸ்பிரஸில் எழுதியிருக்கிறேன்.

அந்த இதழிற்கும் எனக்கும் அப்படி ஒரு ராசி!

வாசக உலகமும் நன்கு வரவேற்று ஆதரவு காட்டியது.

அதன் ஆசிரியர் சிவா தொடரை நான் தடைகளின்றி எழுத நிறைய வழிவகைகள் செய்து கொடுத்தார்.

'பத்திரிகை ஆசிரியர்களில் சிவா சற்று வித்யாசமானவர். ஆழ்ந்த ஹரிஹர பக்தர்! இவர் இல்லத்திற்கு ஒரு நாள் சென்றிருந்த சுமயம் இவர் வீட்டு பூஜையறையைப் பார்த்து மனம் நெகிழ்ந்தேன்.

ஒரு பார்வையில் பல ஆலயங்களுக்குள் நுழைந்த ஒரு சிலிர்ப்பை அது எனக்குத் தந்தது. சிவாவும் தோற்றத்திற்கு சம்பந்தமில்லாதபடி ஒரு ஆன்மீக ஆழம் உடையவர்.

புரான விஷயங்களை புதுக் கோணங்களில் பார்ப்பவர்... புதிய சிந்தனைகளை பரவசத்துடன் அங்கீகரிப்பவர்.

பத்திரிகை உலகில் இவர் சாதிக்கப் போவது எவ்வளவோ இருக்கிறது.

மகாதேவ ரகசியம்! வெளிப்பட சிவாவும் ஒரு காரணம். சிவாவுக்கு பதில் வேறு ஆசிரியர் இருந்திருந்தால் என்னை வேறுவிதமான மர்மக் கதை எழுதச் சொல்லியிருக்கக் கூடும்.

சிவாவோ அந்த ரகசியங்களை நானும் அறிந்து கொள்கிறேனே என்று கூறிவிட்டார். அவருக்கும் அவரது மதிப்புரைக்கும் என் நன்றி.

எப்பொழுதும் சிவம் பற்றி சிந்திக்கும் பொழுது என்னுள் ஒரு ஆன்மிக அருவி ஆர்ப்பாட்டமாக சொட்ட ஆரம்பித்து விடுகிறது.

அதன் மூலம் எது...? அது எங்கிருந்து பாய்ந்து வருகிறது? என்பதெல்லாம் எனக்கே விளங்காத ஒரு அதிசயம்.

எனக்கும் ஆழமான விஞ்ஞானப் பார்வை உண்டு. அந்தப் பார்வையாலும் இந்த உணர்வுகளுக்கெல்லாம் என்னால் விடைகாண முடியவில்லை.

இருப்பினும் இந்த மகாதேவ ரகசியம் என்கிற தொடர் ஒரு யானையைப் போன்றது என்றும் அதை நான் பானக்குள் (35 வாரம்) அடைக்க முயன்றதில் அவஸ்தைப்பட்டு விட்டேன் என்பதும் பதிவு செய்யப்பட வேண்டிய ஒரு விஷயம்.

ஒரு வார இதழில் இவ்வளவு இடம் கிடைத்ததே பெரிய விஷயம். அதிலும் நடந்து கொண்டிருப்பது டி.வி. யுகம். பத்திரிகைத் தொடர்கள் மெல்ல வழக்கொழிந்து வருகின்றன. ஒரு சிலரே தொடர்ந்து காலட்சேபம் செய்து வருகிறோம். நாங்களும் எவ்வளவு நாட்கள் தொடருவோம் என்பது தெரியாது. ஓடும் வரை ஓடட்டும் என்று ஓடியபடி இருக்கிறேன். அதேசமயம் என் மாத நாவல் வரிசையில் ஒரு புது எழுச்சியைப் பார்க்கிறேன்... ஆன்மிக மர்மங்களை அலசும் நாவல்களாக அவைகள் இருக்கின்றன.

அதனாலோ என்னவோ அவைகளுக்கு ஒரு நல்ல வரவேற்பும் கிட்டி வருகிறது.

பொதுவில் நிகழ்காலம் ஆன்மிகத்திற்கு ஒரு பொற்காலமாக திகழ்வதை பார்க்கிறேன். பாதயாத்திரைகள், திருவிழாக்

கள், பிரதோஷ காலங்கள், பண்டிகைகள் என்று எங்கணும் கூட்டம்... கூட்டம்... கூட்டம்.

புண்ணிய ஸ்தலங்களில் விசேஷ நாட்களில் நிற்க இடம் கிடைப்பது அரிதாக உள்ளது.

முன்பு திருவண்ணாமலை திருச்சி சேலம் போல ஒரு ஊராகத் தான் பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது 30 நாளைக்கு ஒருமுறை ஐந்து லட்சம் பக்தர்கள் வந்து செல்லும் மாபெரும் க்ஷேத்திரமாகி விட்டது.

மனிதன் தன்னையும் தன் இனத்தையும் நம்புவதை விட இறையை நம்புவதை பெரிதாக நினைப்பதையே இது காட்டுகிறது.

மனித வாழ்க்கையிலும் ஆயிரம் அழுத்தங்கள். அவனுக்கு சன்னதியில்தான் மனது லேசாகிறது. அவரிடம்தான் குறைகளைச் சொல்லி அழ முடிகிறது. கடவுள் கல்லாக இருப்பது அவனுக்குப் பிடித்திருக்கிறது. அவரே ஒரு ஜீவனாக கண்ணுக்குத் தெரிந்தால் இவ்வளவு தூரம் அவன் இறையை விரும்புவானா என்றெல்லாம் நானும் யோசிக்கிறேன்.

இது இன்றைய கால நிலை.

இதனுள் என் ஆன்மிக கருத்துக்களையும் பதிவு செய்ய இந்த நாவல்கள் உதவி செய்கின்றன.

எனது கருத்து என்னும்போதே அதில் சரிகளும், தவறுகளும் இருக்க வாய்ப்பிருப்பதையும் கொள்ளுவன கொண்டு, தள்ளுவதைத் தள்ளிவிடுவதே சாலச் சிறந்த செயலாகும் என்பதையும் கூறி ரகசியத்திற்கு அனைவரையும் காது கொடுக்க அழைக்கிறேன்.

அன்புடன்

இந்திராசௌந்தர்ராஜன்

15.10.03
மதுரை-3.

மதிப்புரை

ஆர்.சிவகுமார், ஆசிரியர், தமிழன் எக்ஸ்பிரஸ்

அந்த வானம் புதியதா, பழையதா...? பழையதென்றால் அலுப்புத் தட்டியிருக்குமே? முதிர்ந்திருக்குமே! ஆயின் புதிது, புதிதாகவும் அது தினசரி உதிப்பதில்லையே!

இந்தக் காற்று புதிதாக உற்பத்தி செய்யப்பட்டதா? ஏற்கனவே இருப்பதன் சுழற்சியா? புதிதென்றால் எங்கிருந்து பிறக்கிறது? பழையதென்றால் இதன் புத்துணர்வு, தாவரங்கள் வெளியிடும் ஆக்ஸிஜனாலா? அல்லது ஆதி பரப்ரும்மம் எனப்படுவதின் ஸ்வாஸத்தினாலா...?

இப்படிப்பட்ட கேள்விகள், சிருஷ்டியின் எல்லாக் கூறுகளுக்குமே பொருந்தும். இவற்றுக்கான பதில்களை எங்கே தேடுவது...?

வெள்ளை தோல் உடையவர்கள், சிற்சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் தெரிந்து கொண்ட கண்டுபிடிப்புகளில் இதற்கான விடைகள் இருப்பதாக ஒரு தரப்பினர்க்குத் தோன்றலாம். ஆனால் பெரும்பாலானவர்கள், பாரத அன்மீகச் சுரங்கத்திலே இல்லாதவையோ, அது சொல்லாதவையோ எதுவுமில்லை என்று கருதுபவர்களே! நானும் அந்த ரகம் என்பதால் மகாதேவ ரகசியம் எனக்குத் தெளிவாகக் கேட்டது.

இது நவீன யுகம்; இதில் அன்றைய சமாச்சாரங்கள் எடுபடுமா? என நினைப்பவர்கள் அனைவருமே ஒரு வகையில் கிணற்றுத் தவளைகளே! ஏனெனில், எல்லாக் கால கட்டத்தி

லும் அதை நவீனமானதென்றுதான் அதில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கருதுவார்கள். அதுதான் மனித மனத்தின் இயல்பு. அது உண்மையும் கூட!

மொஹஞ்சதாரோ, ஹரப்பா மக்கள் நவீனம் பற்றி அன்று எவ்வித வித்யா கர்வத்துடன் வாழ்ந்தார்களோ அதே உணர்வின் எடையில் இம்மி பிசகாமல்தான் நாஸாவில் வேலை செய்கிறவர்களும் இன்றிருப்பார்கள். இன்றும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வரப் போகிறவர்களும் தாங்கள் புதுமை யுகத்தில் இருப்பதாகத்தான் பூரித்துக் கொள்வார்கள். உலகின் வளர் சிதை மாற்றம் படுத்துகிற பாடு அப்படிப்பட்டது!

ஆனால் புதுமை என்று நினைக்கப்படுகின்ற அனைத்துக்கும், பழமை என்று கருதப்படும் யாவினுக்கும் ஒரு நிரந்தர உள்ளீடு என்றென்றும் உண்டு. அந்த உள்ளீடு நேற்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது; நாளையும் அது நலிவடையாது! அந்த உள்ளீட்டின் பெயர் தெய்வம். மாணிக்கவாசகரின் வார்த்தைகளில் அது, முன்னைப் பழம்பொருட்டும் முன்னைப் பழம் பொருள்! பின்னைப் புதுமைகளோடும் தொடர்பகலாத பெருமை கொண்டது.

அந்தப் பெருமையின் கருவியாகத் தங்களைக் கருதிக் கொள்வோரும், அதன் ஆற்றலை உணர்ந்தும் உணர்த்த வெட்கப்படாத உயர்மதியினரும் கால வெள்ளச் சூழலில் புதைந்து போகாமல் கரையேறும் வன்மையைப் பெறுவார்கள் என்கின்றனர் பெரியோர்.

அப்படிக் கரையேறும் இச்சையுடன் பேனா பிடித்திருப்பவர் இந்திரா சௌந்தர்ராஜன். அதனால் அவர் எழுத்தும் ஆற்றங்கரை ஊற்றாக என்றென்றும் வறட்சி காணாதிருக்கிறது.

அவர் கருவை மட்டும் சிந்தித்துக் கதையெழுதுவதாகத் தோன்றவில்லை. கருவைத் தாண்டியும் யோசிக்கிறார். அதன் வெளிப்பாடுகளை, இது இப்படித்தான் என்று அடக்கி

விடாமல், இது இப்படியும் இருக்கலாம் என அடக்கத்தோடு தருகிறார். இத்தன்மை அவருடைய எல்லாப் படைப்புகளுக்கும் பொருந்துவதால் நானும் மகாதேவ ரகசியத்துக்கான அணிந்துரையாக மட்டுமே இதை எழுதவில்லை. அப்படியெனில் நான் சொல்ல முயற்சித்திருப்பது எதனை...? ஒரு வேளை, இந்திராசௌந்தரராஜ வெற்றி ரகசியமாகவும் அது இருக்கலாம்.

பிரியமுடன்...
ஆர்.சிவகுமார்

மகாதேவ ரகசியம்

1

அற்புதமான வனம் அது!

அநேகமாய் அதுவே தாருகாவனமாய் இருந்திருக்க வேண்டும் என்பது என் யூகம். அங்கே எனக்கு நேரிட்ட அனுபவங்கள் நம்புவதற்கு இயலாதவை. ஒரு மூலிகை வைத்தியனாய் மூலிகைகள் பறிப்பதற்குச் சென்ற நான் அந்தக் காட்டில் வழி தவறிப் போனேன். வெளியே வருவதற்கும் வழிவகை தெரியவில்லை. சுற்றிச் சுற்றி வந்தேன். திரும்பத்திரும்ப நான் ஒரே இடத்திற்கே வந்து சேர்ந்தேன். ஒரு வட்டத்தில் பயணம் செய்கிறவர்கள் ஆரம்பமும் இல்லாமல், முடிவும் இல்லாமல் பயணம் செய்கிற மாதிரி இருந்தது. பசி வேறு, காதை அடைக்க ஆரம்பித்தது.

அப்பொழுதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. எனக்கு எதிரே மிளகு உருண்டை அளவில் சிவப்பாய் பழம் பழுத்திருந்த கொடிகள் பல, என் கண்ணில் பட்டன. பசியின் காரணமாக அதை பறித்துச் சாப்பிட முயன்றேன். ஒரு சித்த வைத்யனான எனக்கே அந்தக் கொடியும் பழங்களும் புதிது. பழம்

மிக ருசியாக இருந்தது. ஒரு உள்ளங்கை கொள்ளும் அளவிற்குத்தான் அவைகளைச் சாப்பிட்டிருப்பேன். என் பசி போன இடம் தெரியவில்லை. அதேசமயம் எனது புலன்களுக்கெல்லாம் எப்பொழுதும் உள்ளதைவிட பலமடங்கு கூடுதலாக ஒரு சக்தி கிடைத்த மாதிரி இருந்தது.

அப்படியே தலையை உயர்த்தி ஆகாயத்தைப் பார்த்தேன். ஒரு கழுகு வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அதன் காலிடையே அது ஒரு பறவைக் குஞ்சை பற்றிக் கொண்டிருப்பது கூட எனக்கு துல்லியமாகத் தெரிந்தது. எனக்குப் புரிந்துவிட்டது, நான் சாப்பிட்ட அந்தப் பழத்திற்கு நிச்சயம் அசாதாரண சக்தி இருக்க வேண்டும் என்று தோன்றியது. உடனேயே மீதமிருந்த பழங்களை எல்லாம் மளமளவென்று கொடியின் வேரோடு பறித்து நான் என் கையோடு கொண்டு சென்றிருந்த இரண்டடி உயர மூலிகைக் கூடைக்குள் போட்டுக் கொண்டேன்.

ஏதோ கண்டறியாததைக் கண்டறிந்துவிட்ட சந்தோஷம் என்னிடம். அப்பொழுது சற்றுத் தள்ளி ஒரு பாம்புப் புற்றைக் கண்டேன். அந்த புற்றுக்குள் இருந்து 'ஓம் நமச்சிவாய' என்கிற மெல்லிய குரல் ஒலித்தபடி இருந்தது!

-ரசமணி வித்தகர் பெரியய்யா

ஒரு ஆச்சரியம் போல இதமான சீதோஷ்ண நிலையோடு விடிந்திருந்தது அன்றைய சென்னை! மெல்லிசான கரும் புகை போல. வானம் முழுக்கத் திடமில்லாத கார் மேகங்கள். நிச்சயம் பெரிய மழை இல்லை என்று தான் தோன்றியது. அதேசமயம் ஒரு மோர்ப் பானையின் உட்பாகக் குளிர்ச்சி போன்ற அந்த நிலவலும் இந்திய அரசியல்வாதி போல எப்பொழுது வேண்டுமானாலும் மாறலாம் என்றும் தோன்றியது.

சரண்யனும் அப்படித்தான் நினைத்தான். ராயப்பேட்டை பங்களா போர்ட்டி கோவில் நின்று கொண்டிருக்கும் காருக்குள் ஏறுவதற்கு முன் வானத்தை ஒரு ஆச்சரியப் பார்வை பார்த்தான்.

"அதிசயமா இன்னிக்கு வெய்யில் இல்லீங்க..." என்று ஒரு கருத்தும் அப்போழுது அவன் காதில் வந்து விழுந்தது. டிரைவர் ராமதாஸ்தான் அப்படிச் சொன்னவன். ஆனால் அதை சரண்யன் ரசிக்கவில்லை என்பது அவன் முகம் போன போக்கில் தெரிந்தது. பதிலுக்கு எதுவும் பேசாமல் காரில் ஏறி அமர்ந்தான். கையில் ஒரு சிறிய மெரூன் நிற லெதர் பேக் வைத்திருந்தான். அதைத் திறந்து அதனுள் ஒரு பிரிவில் கிடந்த லேட்டஸ்ட் 'டைம்' இதழைப் பிரித்துக் கொண்டு படிக்க ஆரம்பித்து விட்டான்.

ராமதாசும் சற்றுத் தயங்கிவிட்டு காரைக் கிளப்பினான். இதுவே சரண்யன் அப்பா சக்கரவர்த்தியாக இருந்தால் அவரை ஒரு பார்வை பார்க்க வேண்டும். அவர் சிக்னல் கொடுத்த பிறகுதான் காரைக் கிளப்ப வேண்டும். மிக சகஜமாகவும் அவரோடு பேசலாம். 'எம்.டி, டிரைவர்' என்கிற பேதச் சிடுக்குகள் எல்லாம் கிடையாது அவரிடம்.

"என்னடா... 'பாபா' சரியா போகலையாமே? வீரப்பன் மாட்டுவான்னு நினைக்கறே நீ? ஆமா எப்படி நீ அந்த ஏரியாவுல குடி இருக்கே..?" என்று பலதரப்பட்ட விசாரங்களும் சக்ரவர்த்தியிடம் இருக்கும். ஏனோ சரண்யன் நேர்மாறாக இருக்கிறான். புரிந்து கொள்வதே சிரமமாக இருந்தது ராமதாசுக்கு... இதுதான் அந்தத் தலைமுறைக்கும் இந்தத் தலைமுறைக்கும் உள்ள வித்யாசம் என்று நினைத்துக் கொண்டவன், மிக நிதானமாகத்தான் காரை முன்னுக்கு எடுத்தான்.

சக்ரவர்த்திக்கு வேகமாகப் போவதே பிடிக்காது. 'பார்த்து நிதானமாப் போ ராம்' என்பார் வாஞ்சையாக. அவர்

ராமதாஸ், என்று கூப்பிடாமல் 'ராம்' என்று கூப்பிடு வதில் ஒரு ஆசையும் உரிமையும் இருப்பதை ராமதாசும் ரசிப்பான். தன் அப்பா கூட, 'ராம்' என்றே பெயர் வைத் திருக்கலாம். கூடவே ஒரு தாசைச் சேர்த்து, பெயரைப் படுகர்னாடகமாக்கி விட்டதாகவெல்லாம் வருத்தப்பட்டுக் கொள்வான்.

வாழ்க்கையில் சில சிறிய விஷயங்கள், சமயங்களில் இப்படித்தான் நம்மால் யூகிக்க முடியாத திசைகளில் எல்லாம் பயணம் செய்யும்.

அது என்னவோ தெரியவில்லை... சரண்யனைப் பார்க்கும் போதெல்லாம் சக்கரவர்த்தி நினைப்பு, ஒரு ஊதுவத்திப் புகைச்சுருள் போல ஜிகு ஜிகுவென்று மனம் முழுக்க ஆக்ரமித்துக் கொண்டு விடுகிறது. அதே வேளை யில் 'டிரைவர்... எதுக்கு இப்படி டார்ட்டாய்ஸாட்டம் போறே? கோ ஃபாஸ்ட் மேன்'

என்கிற சரண்யனின் குரல், அவனது பின் முதுகைக் குத்தியது. அவன் அப்படிச் சொல்லி விட்டதற்காக காரை வேகப்படுத்தவும் முடியவில்லை, சென்னையின் இன் றைய டிராஃபிக், அந்த வட்சணத்தில் அல்லவா இருக் கிறது?

இருந்தும் வேகமாகச் செல்ல முயன்றான்.

முடியவில்லை. ராயப்பேட்டை மணிக்கூண்டு அருகி லேயே டிராஃபிக் சிக்னல் விழுந்து அந்த சியாலோ காரை தேக்கி நிறுத்தியது.

"ஃபாஸ்ட்டா போன்னு சொன்னேன். நைன் தர்ட்டிக்கு எக்ஸிகியூடிவ் டைரக்டர்ஸ் மீட்டிங் இருக்கு."

"இல்ல சார்... சிக்னல் விழுத்திருக்கு. அதான்!" சரண் யனும் கழுத்தைச் சற்று சரித்து வெளியே பார்த்து விட்டு, பிறகு திரும்பவும் 'டைம்' இதழின் பக்கங்களுக் குள் நுழையப் பார்த்தான். சிக்னல் வழி விடவும் ராமதாசும் வேகமாக காரைக் கிளப்பினான். புஷ்டியான

ஒரு கோயில் மாடு 'என்ன அவசரம்?' -காரை உரசிக் கொண்டு போய் எரிச்சல் மூட்டியது. அடுத்த நொடி, "நான்சென்ஸ்... இங்க கார்ப்பரேஷன்ல யாரும் வேலையே பார்க்கறதில்லையா?" என்று ஒரு கோபமான கேள்வி சரண்யனிடமிருந்து வந்து திரும்பவும் ராம தாஸை இடித்தது.

"இது என்னய்யா கூத்து? ரோடுங்கறது மனுஷங் களுக்கா...? ஸ்டேட்ஸ்ல இப்படி எல்லாம் நடந்தா, மெஷின் கன்னாலேயே சுட்டுடுவாங்க. என்ன சிட்டி இது?"

"வாஸ்தவம்தான் சார்..." மிடறு கட்டியபடியே ஆமோ தித்து முடிக்கும் முன், தர்கா அருகே மீண்டும் சிக்னல் மறிப்பு. கூடவே விதம்விதமான விகாரத் தோற்றங்களில் பிச்சைக்காரர்களின் குறுக்கீடுகள்.

அதில் ஒரு கை இல்லாத பிச்சைக்காரர், நிஜமாலுமே இதயத்தில் ஈரத்தை ஸ்ப்ரே செய்தார். மளமளவென்று கண்ணாடியை கீழிறக்கி அவருக்கு ஒரு ஐந்து ரூபாய் நாணயத்தைப் போட்டு விட்டு வேகமாக கண்ணாடியை ஏற்றி விட்டுக் கொண்டு ராமதாஸ், அதை சரண்யன் பார்த்திருப்பானோ என்று சந்தேகப்பட்டான். ரியர் மிர்ரர் வழியாகப் பார்த்தபோது சரண்யனும் சிடுசிடுவென்று கவனித்தபடி இருப்பது தெரிந்தது. இதற்கு என்ன சொல்வானோ என்னும் ஒரு டென்ஷன் தொற்றிக் கொண்டது.

ஆனால் சரண்யன் எதுவும் சொல்லவில்லை. சிக்னலும் வழி விட்டதில் கார் திரும்பவும் வேகமெடுத்தது. பக்க வாட்டில் எல்.ஐ.சி., டி.வி.எஸ் என்கிற நழுவல்கள், ஆயிரம் விளக்கு அருகே மீண்டும் சிவப்பு விளக்கு காரைத் தடுத்து நிறுத்தியது.

மளமளவென்று முன்னும், பின்னும், பக்கவாட்டிலும் மேலும் பல கார்கள் வந்து நெருக்கிக் கொண்டு நின்றன.

அதற்கு நடுவிலும் புகுந்து புகுந்து கச்சிதமாக சரண்யனின் கார் அருகே வந்து, ராமதாசின் முன்னால் நின்றாள் ஒரு பிச்சைக்காரக் கிழவி.

அவளுக்கும் டேஷ் போர்டில் கிடந்த சில்லரைகளில் ஒரு ஐந்து ரூபாய் நாணயத்தை எடுத்துப் போட்டான். அவளும் பெரிதாக ஒரு கும்பிடு போட்டாள். "மகராசனா இருக்கணும்" என்றபடியே சரண்யனைப் பார்த்து கொஞ்சம் போல ஆச்சரியமும் அதிர்ச்சியுமானாள்.

"சரி, சரி கிளம்பு... சிக்னல் விழுந்துடப்போகுது." ராமதாஸ் பரபரத்தான்.

"சாமி வரலியா?"

"இனிமே இவர்தான் சாமி."

"என்ன சாமி சொல்றீங்க..."

"அடப்போ கெழவி... நேரம் காலம் தெரியாம, நடு ரோட்ல நின்னு கேள்வி கேட்டுகிட்டு..."

சீறி விழுந்தான் ராமதாஸ். நல்ல வேளையாக சிக்னல் அவனுக்கு வேலை கொடுத்தது.

காரும் சீற ஆரம்பித்தது.

"ஆமாம், உன்னோட சேலரி எவ்வளவு?"

சரண்யன்தான் ஒரு மாதிரி, தழைந்த குரலில் பின்னால் இருந்து கேட்டான். அந்தத் தொனியே அவன் ஒரு பிடி பிடிக்கப் போகிறான் என்று சொல்லாமல் சொல்லிற்று.

"பிடித்தமெல்லாம் போக ஆறாயிரத்து நானூறு கையில் வாங்கறேங்க."

"அதான்... அதேதான்... உங்களுக்கெல்லாம் ஆயிரம், இரண்டாயிரமே அதிகம். அள்ளிக் கொடுத்தா இப்படித் தான் கர்ணமகாப்பிரபுவாயிடுவீங்க..."

"இல்ல தம்பி... அதுல ஒரு விஷயம் என்னென்னா..."

"ஸ்டாப் இட்... ஆமாம், என்ன சொன்னே? தம்பியா.. நான் உனக்குத் தம்பியா?"

"ஸாரி சார், நம்ம எம்.டி. எப்பவும் சில்லரை மாத்தி வெச்சிருந்து இப்ப நான் பிச்சை போட்ட நபர்களுக் கெல்லாம் ரெகுலரா காசு போடுவார். அதான்..."

"என்ன உளர்றே... செர்ட்டன்லி நாட்! என் டாடி பிச்சையை ஒழிக்கணும்னு வேணா நினைச்சிருப்பார். என்கரேஜ் பண்ற மாதிரி எப்பவுமே நடந்துகிட்டிருக்க மாட்டார். அவர் இப்ப உயிரோட இல்லேங்கறதால என் காதுல நீ பூ சுத்தறியா?"

அலறினான் சரண்யா. மூக்கு நுனி எல்லாம் சிவந்து விட்டது.

ராமதாசும் வேகத்தைச் சற்று குறைத்துக் கொண்டே பேசினான், "சத்யமா இல்லீங்க சார்... ஆயிரம் விளக் காண்ட ஒரு கிழவி உங்களைப் பார்த்துட்டு ஆச்சரியப் பட்டுப் போய் சாமி வரலியான்னு கேட்டதை ஒரு நிமிஷம் யோசிச்சுப் பாருங்க..." என்றான்.

சரண்யனும் அந்தப் பதிலில் சட்டென்று அமைதி யானான். ஸ்பெக்ஸை கழற்றி, வலக்கையால் மெதுவாகச் சுழற்றிக் கொண்டே யோசித்தான். ராமதாஸ் சொல்வதை அவன் நம்புகிற மாதிரிதான் தோன்றியது.

"எம்.டி. என்னை எப்பவும் தன் மகன் மாதிரி நினைக் கறதாதான் சொல்வார். நான்னு இல்ல. நம்ம ஃபேக்ட ரில வேலை பாக்கற ஆயிரத்து எட்நூறு பேரும் அவருக்கு. அவர் பெறாத பிள்ளைங்க மாதிரிதான். மீட்டிங்ல பேசும் போதெல்லாமும் அப்படித்தான் சொல்வார். நானும் அவரை எம்.டி.யா நினைச்சதில்ல. என்னோட அப்பா மாதிரிதான் நினைச்சேன். அதான் உங்கள தம்பின்னு கூப்பிட்டேன், தப்பா இருந்தா மன்னிச்சுடுங்க சார்...."

ராமதாசின் அடுத்த கட்ட விளக்கம் அவனை பட்டு நூலால் இறுக்க கட்டிய காஸ்ட்லியான பொருளைப்

போல ஆக்கிவிட்டது. அதன் பிறகு அவன் வாயே திறக்க வில்லை. 'சக்கரவர்த்தி மோட்டார்ஸ்' என்கிற நியான் விளக்கு போர்டைக் கடந்து வளைந்து திரும்பி, பின் செக்யூரிட்டி ஷெட்டை சமீபித்து, அவர்கள் விரைத்துக் கொண்டு நின்று சமர்ப்பித்த சல்யூட்களை எல்லாம் ஒரு பார்வையாலேயே ஏற்றுக் கொண்டு, அப்படியே ஒரு ஐம்பது ஏக்கர் அளவிலான பரந்த புல்வெளிக்கு நடுவில் படு திருத்தமாய் போடப்பட்டிருந்த தார்ச் சாலையில் நாற்பது கிலோமீட்டர் வேகத்தில் ஓடி, அங்கங்கே வளைந்து திரும்பி, பல யூனிஃபார்ம் போட்ட தொழி லாளர்களின் வேகமான குட்மார்னிங்குகளை எல்லாமும் உள்ளிருந்தபடியே அங்கீகரித்த நிலையில் கார்ப்பரேட் ஆபீஸ் பில்டிங் முன்னால் நின்றது கார். சரண்யனும் அந்த மெரூன் லெதர் பேக்கோடு உதிர்ந்தான்.

பி.ஏ. வாசுதேவன் பேக்கை வாங்கவும் சரண்யனை வரவேற்கவுமாக ஓடி வந்து நின்றான். அவனும் லெதர் பேக்கை அவனிடம் தந்துவிட்டு வேகமாக நடந்தான்.

எதிர்ப்பட்ட கார்ப்பரேட் ஸ்டாஃப்கள் அவ்வளவு பேரும் பரம பவ்யமாக ஒதுங்கி, மரியாதையாக அவனுக்கு வழிவிட அவனுக்கான பிரத்யேக அறையில் நுழைந்தான்.

நுழையும் போதே கைக்கெடிகாரத்தில் ஒரு பார்வை. மணி சரியாக எட்டு ஐம்பத்தி எட்டு! சரியான நேரத்திற்கு வந்துவிட்ட ஒரு சந்தோஷம், அந்த நொடி அவன் நெஞ்சை நிமிர்த்தியது.

அச்சு அசலான அமெரிக்கப் பழக்கம். சீட்டில் போய் அமர்ந்தான். ஜாஸ்மின் வாசம் மூக்கை நிரவியது. நிமிர்ந்துப் பார்த்தான். அவன் சீட்டுக்குப் பின்னால் வரிசையாக அவனது தாத்தா, பெரியப்பா படங்களின் வரிசை. அதில் சக்கரவர்த்தியும் சேர்ந்து மாலை போட்டுக் கொண்டிருந்தார். மல்லிகைப் பூமாலை. அதன் வாசம்! குல்லாய் தரிக்காத கிராப் வைத்த ஜவஹர்லால்

நேருவைப் போல ஒரு அழகிய புன்னகையோடு அவர் அவனைப் பார்ப்பது போல் இருந்தது.

அவனது இதயப் பகுதி, கொஞ்சம் போல நடுங்கத் தொடங்கியது. பதினைந்து நாள்களுக்கு முன்வரை இந்த நானூறு கோடி ரூபாய் நிறுவனத்துக்கு அவர்தான் நிர்வாக இயக்குனர். இடையில் பதினைந்தே நாள். அதாவது ஜஸ்ட் த்தீஹண்ட்ரட் அண்ட் சிக்ஸ்ட்டி அவர்ஸ் பொழு துதான் கழிந்திருக்கிறது. அதற்குள் அவர் சடலமாகி, பின் சாம்பலாகி, அதற்குப் பின் கங்கை ஆற்றில் கரைக் கப்பட்ட திரவக்கரைசலாகவும் காலம் அவரை ஆக்கி விட்டது.

அமெரிக்க மண்ணில் கொலராடோவில் 'விஷ்க்க்' என்கிற சப்தமுடன் கால்ஃப் விளையாடிக் கொண்டிருந்த சரண்யனையும் காலரைப் பிடித்து இழுத்து வந்து சென்னையிலுள்ள அவரது தொழிலகத்துக்கு வாரிசுப்படி அவனை நிர்வாக இயக்குனராக்கிவிட்டது.

அதை நினைத்தவனுக்கு அடிக்கடி அவர், அவன் வரையில் சொல்லும் ஒரு கருத்துதான் சட்டென்று உள் ஓடத் தொடங்கியது.

'டைம்தான் சரண் கடவுள், அந்தக் கடவுள் நினைச்சா எதுவும் நடக்கும்! ஃப்ராக்ஷன் செகண்ட் போறுண்டா.... எல்லாமே தலைகீழாக மாறிடும்.'

'நீ எப்பவும் அதை லேஸியாக நினைச்சுடாதே. ஒவ் வொரு செகண்டையும் தங்கச் சொட்டுக மாதிரி நினைச்சு, ஒரு வேல்யுவோட ஸ்பெண்ட் பண்ணு, அப்புறம் பார்... அந்த டைம் உன்னை ராஜாதிராஜாவாவே ஆக்கிடும்.'

அவர் பேச்சை ஞாபகச் செல்களில் இருந்து ரீவைண்ட் செய்து தனக்குள் ஒருமுறை ஒலிபரப்பிக் கொண்டான். கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த பி.ஏ. வாசுதேவனைப் பார்த்தான்.

"சார்... இன்னிக்கு ப்ரொக்ராம் உங்க முன்னால் ஃபைல்ல இருக்கு."

"குட்!"

"நைன்தர்ட்டிக்கு எக்ஸிக்யூடிவ் டைரக்டர்ஸ் மீட்டிங் தான் ஃபர்ஸ்ட் ப்ரொக்ராம்."

"ஐ நோ..."

"எக்ஸ்க்யூஸ்மீ சார். இன்னொரு முக்கியமான விஷயம்."

"என்ன?"

"ஒரு அஸ்ட்ராலஜர் உங்களைப் பார்க்க வந்திருக்கார்!"

"அல்ரெடி அப்பாய்ன்ட்மென்ட் வாங்கியிருக்காரா?"

"நோ சார், இவர் நம்ம ஃபார்மர் எம்.டி.யோட குளோஸ் ஃப்ரெண்ட். எம்.டி.யோட டெத்தும் போது அந்தமான்ல இருந்ததால் கண்டலன்சுக்கு வரமுடியலையாம். இப்ப அதுக்காக வந்திருக்கற மாதிரிதான் தெரியுது."

"ஆபீஸ்ல கண்டலென்சா? ரிடிகுலஸ்...!"

"அஃப்கோர்ஸ் நான்கூட அவாய்ட் பண்ணப் பார்த்தேன். ஒரு அஞ்சு நிமிஷம் மட்டும் கொடுங்கன்னு கெஞ்சறார்."

சரண்யன் உடனேயே நெற்றியைத் தேய்த்தான். "சரி, வரச் சொல்லுங்க, அஞ்சு நிமிஷம்னா அஞ்சு நிமிஷம் தான். அதை இங்கிதமா சொல்லி அனுப்புங்க."

அடுத்த இரண்டொரு நிமிடங்களில் அறுபது வயதில் படு ஒடிசலான தேகத்துடன் நெற்றியில் பளிச்சென்ற விபூதிப் பட்டையுடன் அந்த அறைக்குள் நுழைந்தார் அந்த அஸ்ட்ராலஜர். சரண்யனும் நிமிர்ந்தான்.

"நமஸ்காரம்."

"சொல்லுங்க... என்ன விஷயம்?"

"சக்ரவர்த்தி என்னைப் பத்தி உங்ககிட்ட எதுவும் சொன்னதில்லையோ?" உட்கார்ந்தபடியே கேட்டார்.

அவர் சக்ரவர்த்தியை மிக நெருக்கமானவர் போன்ற தொனியில் பேரைக் குறிப்பிட்டு கேட்டது சரண்யனை கொஞ்சம் நறுக்கியது.

"நீங்க யார்... முதல்ல அதுவே எனக்குத் தெரியலையே?"

கேள்வியோடு கைகளை உதறினான்.

"நான் ஒரு ஆஸ்ட்ரோ சைன்டிஸ்ட். பட் என்னை ஜோசியன்னு கொஞ்சம் மட்டுப்படுத்தி சொல்வாங்க. என் பேர் நாகபூஷணம்."

"சரி, நான் என்ன பண்ணணும்? நீங்க துக்கம் கேக்க வந்திருக்கறதாதான் என் பி.ஏ. சொன்னார். ஆனா நீங்க பேசறதைப் பார்த்தா..."

சரண்யன் பேச்சை முடிக்குமுன் ஒரு கடித உறையை அவனை நோக்கி நீட்டினார் அந்த மனிதர்.

அவனும் வாங்கிப் பிரித்தான். அது அவன் அப்பா சக்கரவர்த்தி அவருக்கு எழுதியிருந்த கடிதம்.

அன்புள்ள நாகபூஷணம்! நீங்கள் அந்தமானில் இருப்பதாக அறிந்து இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். எனக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருப்பது தெரிந்தும் நீங்கள் எப்படி அந்தமானுக்குப் போகலாம்? இரண்டு முறை, நெஞ்சுவலி வந்துவிட்டது. நிச்சயம் நீங்கள் குறித்துக் கொடுத்த அந்த 22ஆம் தேதி பத்தரை மணிப் பொழுதை நான் தாண்டப் போவதில்லை. போவதற்குள் அந்த சிவன் கோயில் விஷயமாக ஒரு முடிவுக்கு வந்து சில விஷயங்களை செய்துவிட்டே போய்விடலாம் என்று பார்க்கிறேன். தயவு செய்து உடனே புறப்பட்டு வரவும்.

அன்புடன்
சக்கரவர்த்தி

கடிதத்தைப் படித்த சரண்யனுக்கு கொஞ்சம் போல பகீரென்றது. சக்கரவர்த்தி இறந்ததும் 22ஆம் தேதி பத்தரை மணிக்குத்தான். அது அவருக்கும் தெரிந்திருக்கிறது. தெரிவித்தவரும் இதோ எதிரில்...

சரண்யன் முதல் முறையாக கூர்மையான, உண்மையான அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்துக்கும் ஆட்பட்டவனாய் அவரைப் பார்த்தான். அதற்குள் ஐந்து நிமிடங்கள் முடிந்து அவரை அழைத்துச் செல்ல பி.ஏ. வாசுதேவனும் உள்ளே நுழைய... "வாசு... நீங்க போகலாம். நான் கூப்பிட்றவரை யாரும் உள்ளே வரக்கூடாது" என்றான்.

வாசுதேவன் முகமும் ஆச்சரியத்துக்கு மாறியது.

2

'பரம்புப் புற்றில் இருந்து வெளிப்பட்ட நமச்சிவாய என்கிற முணுமுணுப்பைக் கேட்டு நானும் சிலிர்த்துப் போனேன். எனக்குப் புரிந்து விட்டது. புற்றுக்குள் யாரோ ஒரு முனிவர்தான் தவம் செய்து கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. இப்படி புற்று மூடுமளவு தவம் செய்ய வேண்டும் என்றால் மாதக்கணக்கில் அப்படி இப்படி அசையாமல் அமர்ந்திருக்க வேண்டும்.

உடலின் உஷ்ணமும் கரையான்கள் உணர முடியாத அளவு குறைந்திருக்க வேண்டும். இந்த மாதிரி தவங்களை நான் கதைகளில்தான் படித்திருக்கிறேன். சில சினிமாக்களிலும் பார்த்திருக்கிறேன். இப்பொழுதோ நேரில்...

எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. புற்று முன்னால் விழுந்து வணங்குவதுதான் உசிதம் என்று தோன்றியது. அதேபோல் செய்தேன், பின் எழுந்து நின்றேன். அருகே ஒரு பருத்த வில்வ

மரம். அதன் இலைகள் உதிர்ந்து அர்ச்சித்த மாதிரி புற்றின் மேல் விழுந்திருந்தது.

புற்றும் சற்றுத் தொலைவில் இருந்து பார்ப்பதற்கு ஒரு சிவலிங்கம் போலத்தான் இருந்தது. லிங்கவடிவான புற்றை வில்வமரமே அர்ச்சிக்கிறது என்றுதான் தோன்றியது. இது தற்செயலான ஒரு விஷயமா இல்லை திட்டமிட்ட ஒன்றா என்பது எனக்கு விளங்கவில்லை. ஒன்று மட்டும் புரிந்தது. நான் ஒரு அசாதாரண வனத்தில் நின்று கொண்டிருக்கிறேன் என்பதுதான் அது. அப்போது ஒரு கீச்சுக் குரல் என் காதில் விழுந்தது.

கார்த்திகேயா.. யார் என்று தெரியவில்லை.. ஒரு நரன் கீழே நின்று கொண்டிருக்கிறான் பார். அவன் அமிர்தமணிப்பழங்களையும் சாப்பிட்டு விட்டான்! என்கிற அந்த குரல் என்னை உடனே நிமிர்ந்து பார்க்க வைத்தது, மேலே...

-ரசமணி வித்தகர் பெரியய்யா

ஆச்சரியமாகிப்போன பி.ஏ. வாசுதேவன் மறுபேச்சு பேசாமல் திரும்பிச் சென்றான்.

தன்னை ஒரு ஆஸ்ட்ரோசைன்டிஸ்ட் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த மனிதரும் அவன் அப்படிச் சொன்னதைக் கேட்டு ஒரு சிறு புன்னகையை முகத்தில் பரவவிட்டார்.

"மிஸ்டர் நாகபூஷணம்... என்ன இது? என்னால இதை நம்ப முடியலை. இது என் அப்பா உங்களுக்கு போட்ட லெட்டர்தானா?"

சரண்யன் அடுத்த தன் சந்தேகத்தைதான் கேள்வியாக்கினான்.

"நீங்க இப்படித்தான் கேட்பீங்க, ஏன்னா அமெரிக்காவுல வளர்ந்த பிள்ளை இல்லையா?" இது அவர்.

"ஹவ்... ஹவ் இட் ஈஸ் பாசிபிள்?"

"எது...?"

"என்... என் அப்பாவோட சாவை எப்படி உங்களால முன்னாலேயே சொல்ல முடிஞ்சது?"

"முதல்ல இந்த கடிதம் உங்க அப்பா எனக்கு எழுதினதுதானாங்கற சந்தேகத்துல இருந்து வெளியில் வாங்க, பிறகு நான் உங்களுக்கு பதில் சொல்கிறேன்."

அவன் கடிதத்தை ஒருமுறை ஊன்றிப்பார்த்தான். அவரது லெட்டர் ஹெட் தாளில் அவரது பார்க்கர் பேனா வால் எழுதப்பட்ட கடிதம்தான் அது என்பது அப்பட்டமாக தெரிந்தது.

கடித உறையில் அந்த ஜோதிடரின் அந்தமான் முகவரி. அவர் அதை எக்ஸ்ப்ரஸ் கொரியர் சர்வீசில் அனுப்பியதற்கான முத்திரைகள் வேறு.

"என்ன... சந்தேகம் நீங்கிடிச்சா?"

"சந்தேகம்... சந்தேகம்... சரி, அதை விடுங்க. அப்பா பெரும்பாலும் கைப்பட கடிதம் எழுதறவரே கிடையாது. இன்னிக்கு அதுக்கு அவசியமும் இல்ல. ஏன்னா உங் களுக்கே தெரியும். ஈமெயில், சாட்டிங். செல்ஃபோன்னு வி ஹேவ் லாட் ஆஃப் ஃபெசிலிடிஸ்..."

"என்கூட டெலிபோன்ல பேசியிருக்கலாமேன்னு சொல்ல வர்றீங்க, அப்படித்தானே?"

"யெஸ்... அங்க உங்களை தொடர்பு கொள்ள போன் வசதி இல்லையா?"

"ஆமாம், நான் செல்ஃபோன் வெச்சுக்கிற ஆசாமியும் கிடையாது."

"போகட்டும், அப்பாவுக்கு இப்படி ஒரு முடிவு வரப் போகுதுன்னு தெரிஞ்ச நீங்க அவர் பக்கத்துல இல்லாம அந்தமான் போகக் காரணம்?"

நான் இங்க இருக்கறதால எதுவும் மாறப்போறது கிடையாது மிஸ்டர் சரண்யன். எனக்கும் அங்க ஒரு முக்கிய வேலை இருந்தது.

அவர் பதிலை தொடர்ந்து அவன் சில நொடிகள் எதுவும் பேசாமல் பரபரப்பாக எது எதையோ பற்றி சிந் திக்க ஆரம்பித்தான். அவரும் குறுக்கிடாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

டேபிள் மேல் பேப்பர் வெயிட் அவன் கைபட்டு சுழன் றது. ஃபைல்களும் அங்கும் இங்கும் இடம் மாறியது. அவன் குழம்புகிறான் என்பது துல்லியமாகத் தெரிந்தது. அவரும் அமைதியாக பார்த்தபடி அமர்ந்திருந்தார். நெடு நேரத்திற்கு பிறகு அவனே வாயைத்திறந்தான்.

"ஓ.கே மிஸ்டர் நாகபூஷணம், இப்ப நீங்க இங்க வந்த காரணத்தை நான் தெரிஞ்சுக்கலாமா?"

"அந்த கடிதத்துலேயே அது இருக்கே..."

"இதுலயா....?" அவன் நெற்றி சுருங்க திரும்பவும் கடிதத்தைப் பார்த்தான்.

"நல்லா பாருங்க மிஸ்டர் சரண்யன், அதுல சிவன் கோயில் பற்றி அவர் எழுதியிருக்கறத..."

"யெஸ் என்ன இது? மொட்டையா சிவன் கோவில்னு இருக்கு. எனக்கு ஒண்ணுமே புரியல."

"சொல்றேன். உங்கப்பாவை எனக்கு கடந்த ஒரு வருஷமாகத்தான் தெரியும். உங்க மாமா ரங்கராஜ்தான் உங்கப்பாகிட்ட என்னை அறிமுகப்படுத்தினார். நான் ஒரு ஜோதிடன்கறதால என்கிட்ட தன்னோட ஜாதகத்தை கொடுத்து தன் எதிர்காலம் பற்றி கேட்டார் உங்க அப்பா."

"ஆச்சரியமாயிருக்கு... அப்பா இந்த ஜோதிடம்-ஜாதகத்தை எல்லாம் நம்பறவரே இல்லை."

"உண்மைதான். ஆனா என் சந்திப்பு அவரை மாத்திடிச்சுன்னு வைச்சுக்குங்களேன்."

"சரி நீங்க சிவன் கோவில்பத்தி ஏதோ சொல்ல வந்து ட்ராக் மாறிட்டதா நினைக்கிறேன்."

"மாறலை... நான் சொல்லவேண்டியதத்தான் சொல்லி கிட்டு இருக்கேன். சமீபகாலமா உங்க தொழிற்சாலைல நிறைய விபத்துக்கள் நடத்திருக்கணுமே..."

அவர் ஒரு புள்ளியை நோக்கி வருகிற மாதிரிதான் தெரிந்தது.

"விபத்து... யூமீன் ஆக்சிடென்ட்ஸ்."

"ஆமாம்!"

ஃபேக்டரின்னா ஆக்சிடென்ட்ஸ் சகஜம்தானே?

"இருக்கலாம், ஆனா அதுக்கு ஒரு அளவு இருக்குல்ல?"

"தெரியல. நான் இப்பதான் சார்ஜ் எடுத்துகிட்டிருக் கேன். இனிமேதான் அந்த ஏரியால கான்சன்ட்ரேட் பண்ண ணும், சரி அதுக்கென்ன?"

"அதுமட்டும் காரணமில்ல. உலக அளவுல உங் களுக்கு கிடைக்க வேண்டிய பல எக்ஸ்போர்ட் ஆர்டர்ஸ் கூட கடைசி நிமிஷத்துல கிடைக்காம போயிருக்கு..."

"யா..: நானும் கேள்விப்பட்டேன். அதனால?"

"சுருக்கமா சொல்றேனே... மதுரைக்கு பக்கத்துல புதுசா ஒரு ஃபேக்டரிகட்ட நீங்க இடம் வாங்கியிருக்கீங்க தானே?"

"ஆமாம்... ஒரு ஹண்ட்ரட் ஏக்கர்ஸ் லேண்டை நாங்க சொக்கம்பட்டிங்கற இடத்துல ஆக்குபை பண்ணியிருக் கோம்."

"எப்ப அதை நீங்க வாங்கினீங்களோ அப்ப இருந்து தான் உங்க அப்பாவும் புதுசா புதுசா பிரச்சினைகளை சந்திக்க ஆரம்பிச்சார்:"

"அப்ப அந்த இடத்துலதான் ஏதாவது வாட் ஈஸ் தட்... ஆங் தோஷம் சாபம்னு ஏதாவது சொல்வாங்களே அந்த மாதிரி ஏதாவது இருக்கா?"

அவன் திருப்பிக்கேட்ட விதமும், அந்தத் தொனியும் அவன் கேலியாகத்தான் கேட்கிறான் என்பதை அவருக்கு உணர்த்தியது.

அதுவரை சாதாரணமான முகக்குறிப்புகளோடு இருந் தவர் கொஞ்சம் போல கோபத்தை கண்களில் காட்டத் தொடங்கினார்.

"என்ன சார்... ஏன் அப்படி பார்க்கறீங்க?"

"என்ன பண்ணட்டும் உங்க பேச்சுல நம்பிக்கையே தெரியலியே..."

"மிஸ்டர் நாகபூஷணம், ஒரு பழமொழி ஐ மீன் ப்ராவெர்ப் தெரியுமா உங்களுக்கு?

'குற்றாலத்துல இடி இடிச்சா கோட்டயத்துலயா மழை பெய்யும்'ன்னு கேட்பாங்க. அப்படி இருக்கு நீங்க சொல்றது."

"சிவன் சொத்துல கை வெச்சா எங்கேயும் எதுவும் நடக்கும் மிஸ்டர் சரண்யன். அது தெரியுமா உங் களுக்கு?"

"வாட் டு யூ மீன்... எது சிவன் சொத்து?"

"சொக்கம்பட்டியே சிவன் சொத்துதானே?"

"என்ன நீங்க... புதுசு புதுசா ஏதேதோ சொல்லிகிட்டு போறீங்க? லா படி அதை விலைக்கு வாங்கி ரிஜிஸ்டர் பண்ணியிருக்கோம். சிங்கிள் பைசா பாக்கி கிடையாது. இல்லீகலா ஒரு சின்ன விஷயம் கூட இல்ல.

'சக்கரவர்த்தி மோட்டார்ஸ் ஒரு வேர்ல்ட் ஆர்கனை சேஷன். எல்லா விஷயத்துலயும் எக்ஸாம்பிளா இருக்கற ஒரு நிறுவனம் இது. இமேஜை டிஸ்டர்ப் பண்ற எந்த விஷயத்துக்கும் இந்த ஃபேக்டரில இடம் கிடையாது. என் டாடியோட லைஃப்லயும் இடம் கிடையாது."

-சரண்யன் ஆக்ரோஷமானான். அவர் அதை ரசிப்பது போல பார்த்தார். பிறகு எழுந்து நின்றார். அவனும் வெறித்தான்.

"இப்ப நான் புறப்பட்றேன். இங்க என்னோட காண்டாக்ட் நம்பர் உங்க ரிசப்சனிஷ்ட்கிட்ட இருக்கு. சொன்னா போதும், லைன் போட்டு கொடுத்துடுவாங்க. கொஞ்ச நாள்ல நீங்களே என்னை கூப்பிடுவீங்க. அப்ப மேற்கொண்டு பேசலாம்."

"மன்னிக்கணும். 'ஐந்து நிமிஷம்'னு சொல்லிட்டு கிட்டதட்ட முப்பது நிமிஷம் வரை எடுத்துக்கிட்டதுக்கு. நான் வரேன்."

-அதற்கு பதறல் இல்லாமல் பேசிவிட்டு திரும்பி நடந்தவர் கதவருகே சென்ற நிலையில் திரும்பி சக்கர வர்த்தியின் புகைப்படத்தைப் பார்த்தார். தொடர்ந்து ஒரு சன்னப் பெருமூச்சு...

சரண்யனும் அவர் செய்கையை பார்த்துக் கொண்டு தான் இருந்தான். அவர் தலைமறையவும் கைகளைப் பிசைந்து கொண்டான். முப்பது நிமிஷத்துக்குள் சொல்ல முடியாத அளவு குழம்பி விட்டது போல தோன்றியது. பி.ஏ. வாசுதேனும் கச்சிதமாக உள்ளே நுழைந்தான்.

"மீட்டிங் ஹாலுக்கு போலாமா?"

"யெஸ் சார்...."

"வாசுதேவன் அடுத்த முறை இந்த மனுஷர் வந்தா நான் இல்லைன்னு சொல்லிடுங்க. ஜோசியம் ஜாதகம்னு மனுஷர் ஒரேயடியா கன்ஃப்யூஸ் பண்றார்."

வெளிப்படையாகவும் அலுத்துக் கொண்டான். வாசுதேவன் தலை பதிலுக்கு ஆமோதிப்பதாக அசைந்தது.

பின் இருவரும் கான்ஃப்ரன்ஸ் ஹால் நோக்கி நடக்கும் போது எதிரில் பிளானட் மேமேஜர் சதாசிவராவ் படுவேக மாக வந்து கொண்டிருந்தார். அவர் நடையில் சொல்ல முடியாத அளவு பதற்றம்!

3

நிமிர்ந்து பார்த்த என் கண்களுக்கு இரண்டு கிளிகள்தான் கண்ணில் பட்டன! ,கிளிகள், மனிதர்களின் மொழியை பேசக்கூடியவை என்பது எனக்குத் தெரியும். அநேகமாக அது நாம் சொல்லிக் கொடுத்த வார்த்தைகளாக இருக்கும். ஆனால் இங்கோ அந்தக் கிளிகள் இரண்டு பேர் நேருக்கு நேர் நின்று உரையாடிக் கொள்கிற மாதிரி பேசிக்கொண்டது எனக்கு ஆச்சரியத்தை மூட்டியது.

உண்மையில் பேசிக் கொண்டது அவைகள் தானா? இல்லை வேறு யாராவதா? என்கிற சந்தேக மும் வரத் தவறவில்லை.

அதற்குள் நான் பார்ப்பது தெரிந்தோ அல்லது வேறு காரணம் கருதியோ அந்தக் கிளிகள் பறந்து விட்டன. அதேசமயம் அவை பேசிக் கொண்டதை வைத்து நான் சாப்பிட்ட பழம் அமிர்தமான கனி என்பதும் எனக்குத் தெரிந்து போயிற்று.

இப்படி ஒரு கனி பற்றி நான் இதுவரையில் கேள்விப்பட்டதே இல்லை என்பதுதான் உண்மை. போகர் நாலாயிரத்தில் தொடங்கி, சொர்ண ஜாலத் திரட்டு வரையிலும் பல சித்து நூல்களைப் படித் திருக்கிறேன்.

அநேகமாக பாரத தேசத்தில் என் கால் படாத காடுகளும் கிடையாது எனலாம். எண்பது வயதில்

இருக்கும் எனக்கு சித்த வைத்தியத் துறையில் அறு பத்து ஐந்து வருட அனுபவம். இந்த அனுபவத்தில் பல காடுகளில், பல அனுபவங்களுக்கு உள்ளாகி யிருக்கிறேன். பலவிதமான மனிதர்கள், மிருகங்கள், பட்சிகளைப் பார்த்திருக்கிறேன். சக்கரவாகமும், அன்னமும் கூட என் கண்ணில் பட்டதுண்டு. ஒரு பௌர்ணமி நாளில் இரட்டைத்தலை நாகம் ஒன்று நிலவைப் பார்த்து படம் விரித்து ஆடியதை எல்லாமும் கவனித்திருக்கிறேன். பாம்பு மாணிக்கக் கற்களை கக்கக் கூடியது என்பதை நம்பி அப்படி ஒரு கல் எனக்குக் கிடைக்காதா என்று அலைந்திருக் கிறேன். உண்மையில் அதன் விஷப்பை இறுகி அது கல்லைக் கக்குவதில்லை என்பதை பிறகே புரிந்திருக்கிறேன். ஆனாலும் நீரென்று கருதி இடிக் குழி நீரைப் பருகி, அதனால் தலைப்பாகம் கனத்துப் போய் விஷப்பையில் உள்ள விஷமும் கல்லாகி விட, அதைச் சுமக்க முடியாமல் அவஸ்தைக்குள் ளாகி ரத்தச் சொட்டுகளோடு சில சர்ப்பங்கள் விஷக் கல்லை கக்கும். அதைத்தான் மாணிக்கக் கல் என்று கூறுகிறார்களோ என்றெல்லாம் நான் நினைத்தது உண்டு. இந்த அனுபவங்களை எல்லாம் உள்ள டக்கி வனமகோத்சவம் என்று ஒரு நூல் எழுதவும் நான் எண்ணியதுண்டு. அதற்குமுன் இறுதியாக ஒரு முறைகாட்டுப்பக்கம் போய் வருவோமே என்றுதான் அந்தக் காட்டுப் பகுதிக்கு சென்றேன்.

இறுதியாக என்று ஏன் கூறுகிறேன் என்றால் ஜாதக சாராவளிப்படி எனது ஆயுள் சொற்ப மாதங்கள்தான். மாரகதசையில் இருக்கிறேன். நாகபூஷணம் என்று ஒரு மூன்று கண் உடைய ருத்ர உபாசக ஜோதிடர் ஒருவர் இருக்கிறார். மனிதர் சொன்னால் சொன்னதுதான். அவர் சொன்னபடியும் அடியேனின் ஸ்தூல வாழ்க்கை, ஒரு முடிவுக்கு வரப்போகிறது. போவதற்குள் என் பேர் விளங்கும்படியாக ஒரு விஷயத்தைச் செய்து விடும் ஆசையில்தான் அந்த வனத்திற்கே சென்

றேன். எனக்குத் தேவை, 'நயன சூரீ' என்கிற ஒரு மூலிகை. பிரபல தொழிலதிபர் ஒருவர் மாலைக்கண் வந்து. இரவானால் குருடாகி விடுகிறார். அவர் குருட்டை நீக்கிவிட்டால் ஒரு கோடி ரூபாய் தருவதாகச் சொன்னார். அந் ஆசையும் கூட...

-ரசமணி வித்தகர் பெரியய்யா

பிளான்ட் மேனேஜர் சதாசிவ ராவ், கொஞ்சம் கெந்திக் கெந்தி நடப்பவர். எதிலும் மிக நிதானமானவர். அப்படிப் பட்டவரா இவ்வளவு வேகமாக வருவது..? சரண்யனும் வாசுதேவனும் அதைப் பார்த்து சற்றே தேங்கிநிற்க, சதாசிவ ராவும் சமீபித்தார்.

"வெரி குட் மார்னிங் சார்."

"குட்மார்னிங் ராவ். வாட் ஹேப்பண்ட்?

"எதுக்கு இத்தனை வேகம்?"

"ஐ ஆம் வெரி சாரி சார். யுஹேவ் எ பேட் நியூஸ்."

"பேட் நியூஸ்...?"

"யெஸ் சார்..." சதாசிவராவ் ஆமோதிப்புடன் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தார். ஆங்காங்கே சிலர் நின்றபடி ஆனால் பார்வை என்னவோ, ஊசிக் கூர்மையோடு அவர்களை நோக்கித்தான்.

"என்ன சார் அந்த நியூஸ்?" - வாசுதேவன் கைகளை உதறினார்.

"நம்ம குண்டூர் பிளாண்ட்டுக்கு டிரெய்னிங் புரொக் ராமுக்காகப் போயிருந்த நம்ம W.E.D. மெக்கானிக்கல் சூப்பரவைஸர்சும், ஆப்பரேட்டர்சும் திரும்பி வரும் போது ஆக்சிடெண்ட்டாயி..."

-சதாசிவ ராவால் முடிக்க முடியவில்லை. ஆனால் அவர் சொல்லாமலே சொச்சம் அவ்வளவும் சரண்யனுக் குப் புரிந்து போயிற்று.

"மொத்தம் எவ்வளவு பேர்? ஐ மீன், ஹவ் மெனி மெம்பர்ஸ்...?"

"லெவன் மெம்பர்ஸ் சார். அதுல இரண்டு பேருக்கு இப்பத்தான் கல்யாணமாச்சு. ஒவ்வொருவருமே ஹைலி பொட்டாஷியல்ஸ். சப்ஜெக்ட்ல ஹெவியா ஸ்கோர் பண்ணினவங்க."

"ஓ..!" சரண்யன் அருகில் இருந்த ஒரு பெஞ்ச் கிளார்க்கின் பிஸியான நாற்காலியில் போய் அப்படியே விழுந்தான்!

❑ ❑ ❑

பால்கனியில் அமர்ந்து கொண்டு தாடையை தேய்த்துக் கொண்டிருந்த சரண்யன் எதிரில் மெயின் கேட்டைக் கடந்து ஊடுருவிக் கொண்டிருந்தது சக்கரவர்த்தி மோட்டார்ஸின் ஜி.எம்.மின் கார்.

பரங்கிப்பழம் ஒன்று மனிதனாகப் பிறந்துவிட்டது போல் இருந்தார் காரில் இருந்து இறங்கிய ஜி.எம் சண்முகா!

நல்ல புஷ்டி!

அறுபது வயதைத் தொட்டிருந்தார். இருந்து பேண்ட்-ஷர்ட்டை டக் செய்து கொண்டு, டை கட்டி நிலையில் அவர் நடந்து வரும் போது இருபது வயது சரேலென்று இறங்கி விடும். அப்படி ஒரு அங்க லட்சணம்!

சக்கரவர்த்தியே அவரைப் பார்க்கும் போது எழுந்து நின்று வரவேற்பார். ஏதோ ஒரு வகையில் எதிரில் இருப்பவர்களை ஒரு அமுக்கு அமுக்கி குறுக்கி விடுகிற ஒரு சக்தி அவரிடம் இருந்தது.

தயங்கித்தயங்கி எழலாமா, வேண்டாமா என்று ஊசலாடிவிட்டு இறுதியில் எழுந்து நின்று வெல்கம் என்றான்

சரண்யனும். பதிலுக்கு அவர் கரம் ஒரு புன்னகையோடு நீண்டது. அவர் சரண்யன் கரத்தைப் பற்றிக் குலுக்கிய விதத்தில் அதைப் பற்றி பிரத்யேகமாக அவன் நினைக்கும்படியான ஒருவிதமான ஸ்பரிசம். அதை மனதில் அசைபோட்டபடியே, "உங்களுக்காகதான் காத்திருக்கேன்" என்றான். சக்கரவர்த்தியாக இருந்தால், "என்ன சண்முகா... எப்படி இருக்கே? என்னய்யா, ஒழுங்கா ஜாகிங் போறதில்லையா... ஒரு இரண்டேகால் கிலோ கூடின மாதிரி தெரியறதே?" என்று படு ஃப்ரெண்ட்லியாக ஆரம்பிப்பார்.

இவனிடம் எல்லா விஷயத்திலும் எடுத்த எடுப்பில் அதன் மைய பாகத்திற்கு வருவதே வழக்கமாக இருக்கிறது. அதுதான் இவன் சுபாவமா? இல்லை, இப்படித்தான் எம்.டி.க்கள் நடந்துகொள்ள வேண்டும் என்கிற தீர்மானமா என்பதெல்லாம் இனிதான் விளங்கவேண்டும்.

"கேள்விப்பட்டேன் மிஸ்டர் சரண்... ஆன் தட் டைம், ஐவாஸ் ஷாக்டு.... ஒரு செகண்ட் ஹார்ட்டே ஃப்ரீஸ் ஆயிடுத்து."

"இப்ப என் கவலை, அவங்க செத்தது பத்திக்கூட கிடையாது ராவ். இதை இங்க இருக்கிற இன்வெஸ்ட்கேட்டிவ் ஜர்னலிசம்-ஆடுவெட்டி கோழியடிச்சு சாமி கும்பிட்ற மாதிரி கொண்டாடிடும்ன்னு கேள்விப்பட்டேன்."

யூனியன்ல வேற புதுசா நஷ்ட ஈடு. வாரிசுகளுக்கு வேலைன்னு ஒரு க்ளைம்.

"ஐ நோ... ஐ நோ.. நீங்க கவலைப்பட வேண்டாம். நம்ம கம்பெனி மேல பத்திரிகையாளர்களுக்கு பொதுவா நல்ல அபிப்ராயம் உண்டு. ஆகையால இமேஜை டேமேஜ் பண்ற மாதிரி எதுவும் எழுத மாட்டாங்க. யூனியனோட க்ளைம், ஒரு யூஷவுல் விஷயம்தான். பிரசிடெண்டையும் செகரட்ரியையும் நம்ம ஹெச்.ஆர்.டி. ராகவன் சமாளிச்சிடுவார். அவர் பல் செட்டை கழட்டி க்ளீன்

பண்ற மாதிரி, எதிரியோட மூளையை கழட்டத் தெரிஞ்
சவர்."

சரண்யன் அதைக்கேட்டு ரசித்து சகஜப்படாமல், வெறித்தபடியே இருந்தான்.

"டோன்ட் ஒர்ரி சரண். சக்கரவர்த்தி சார் இருந்தப்ப கூட இப்படித்தான்... டெய்லி எதாவது வந்துண்டே இருக்கும். கரண்ட் பீரியட் அப்படி."

ஆறுதலான பதிலோடு அவனை கூர்ந்து பார்த்தார்.

"எனக்கு எல்லாமே புதுசா இருக்கு... அவங்க கேர் லெஸா நடந்துகிட்டு ஆக்சிடெண்ட் ஆனதற்கு கம்பெனி என்ன பண்ணும்?"

அவனிடம் சிரிஞ்ஜ் மருந்து, கட்டை விரல் அழுத்தத்தில் பீறிடுகிற மாதிரி ஒரு திடீர் பீறிடல்.

"வாஸ்தவத்தில் நாம ஒண்ணும் பண்ணவேண்டாம் தான். இது ஒண்ணும் ஃபேக்டரி ப்ரீமிசஸ்ல நடந்த ஆக்சிடெண்ட் இல்ல. இருந்தாலும் நாம மனிதாபிமானத்தோட நடந்துக்க வேற பல காரணம் இருக்கு. அந்தப் பதினோரு பேர் சாவை ஒரு பெரிய துக்கமா நாம நினைச்சாதான் உள்ள இருக்கற 1600 பேரால சின்னச்சின்ன துக்கங்கள் எதிர்காலத்துல நமக்கு ஏற்படாது. இதெல்லாம் கொஞ்சம் ஸ்ட்ராடஜிகலா பார்க்க வேண்டிய விஷயம் சரண். யூ டோன்ட் ஒர்ரி ஐ வில் டேக் கேர்."

"தேங்க்யூ... உங்ககிட்ட இன்னொரு விஷயமும் நான் கேக்கணும்."

"வித் ப்ளெஷர்.'

"ஆடிட்டிங் ரிப்போர்ட் ஃபைலை பார்த்தேன். நியூ மெஷினரீஸ், இன்வென்ஷன்ஸ்க்கு சமமா கேரயில் களுக்கு டொனேஷன் அமௌண்ட் போயிருக்கு. ஐ மீன் 33.6 லட்சம் ரூபாய்! வாட் நான்சென்ஸ் தீஸ் ஃபா ஆல்?"

அவன் கையை ஆட்டிய விதமே பயங்கரமாக இருந்தது. அதைவிட அவன் 'நான்சென்ஸ்' என்று சொன்னது பயங்கரமாய் இருந்தது.

சண்முகாவே ஒரு கணம் அதிர்ந்து, சங்கடத்துடன் தான் அவனை ஊடுருவினார்.

"ஐ ஆம் வெரி சாரி சரண். நம்ம எம்.டி. அந்த விஷயத்துல யாரோட தலையீட்டையும் விரும்பலை. இன் ஃபாக்ட் அவர் என்கிட்ட ராஜராஜசோழன் மாதிரி நானும் ஒரு பிரகதீஸ்வரர் கோயிலை கட்டணும் சண்முகான்னு அடிக்கடி சொல்லிகிட்டே இருப்பார்."

"அப்பா ஏன் இப்படி ஒரு இடியட்டா இருந்தார்னு தான் தெரியல. அவர் ஒரு பிசினஸ் மேக்னட்டா, இல்ல பண்டாரமான்னு எனக்கு ஒரே சந்தேகமா இருக்கு. அந்த டொனேஷன் அமௌண்ட்டுக்கு ஒரு புது பிராஜக்ட் ஆரம்பிச்சிருக்கலாம். பத்து பேருக்கு காலத்துக்கும் வேலை கிடைச்சிருக்கும்.

'இன்னிக்கு இந்தியாவுக்கு தேவை, கோயில் இல்ல மிஸ்டர் சண்முகா. இண்டஸ்ட்ரீஸ்!'

அதிகமாகவே ஆவேசப்பட்டான். ஆனால் ஏனோ சண்முகா அதற்கொரு பதிலை மட்டும் சொல்ல வில்லை. ஒன்று மட்டும் புரிந்துவிட்டது அவருக்கு.

அவர் சூரியன்... இவனோ சராசரி தீப்பந்தம்.

சண்முகா போன பிறகு ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். எதிரில் மோடாமேல் செல்ஃபோன் கிடந்தது. திடீரென்று அது ஒரு பெண்ணைப் போல குலுங்கிக் குலுங்கிச் சிரித்தது.

அது அவன் காதலி கிளாராவின் சிரிப்பு!

அதையே தனக்காக அழைப்பொலிக்கு மாற்றாக பதிவு செய்து வைத்திருந்தான். ஓடிப் போய் எடுத்து காதைக் கொடுத்தான்.

காதில் பாய்ந்தவளும் கிளாராதான்!

நல்ல தமிழிலேயே அவனுடன் பேசினாள்.

"சரண்... நலமா இருக்கிறீர்களா?"

"க்ளா.. ஆர் யூ?"

"யெஸ் மேன்... நானேதான்."

"ஐயோ க்ளா... டெக்ஸ்ட் வெர்ஷன்ல அப்படியே பேசாதே. அப்படியெல்லாம் யாரும் தமிழ் பேசமாட்டாங் கன்னு சொல்லியிருக்கேன்ல?"

"பட் ஐ லைக் சரண். நான் விரும்புகிறேன்."

"சொல்லாதே. ஆமா இப்பதான் ஃபோன் பண்ண முடிஞ் சுதா உன்னால்?"

"ஐ ஆம் சாரி... நான் கான்சாஸ் போய்ட்டேன். அங்க ஒரு கான்ஃப்ரன்ஸ். வெரிடைட் ஷெட்யூல்."

"படலங்கா...."

"ஐமீன் இது ஒரு லெங்த்தியான வெஜிடபுள் தானே?"

"ரொம்ப முக்கியம். எப்ப இண்டியா வரே? அதைச் சொல்."

"மைடியர் ஸ்டுப்பிட் சரண். செல்லை எடுக்கறதுக்கு முந்தி ஸ்க்ரீனைப் பாருன்னு எவ்வளவு தடவை சொல்லியிருக்கேன்?"

"ஜஸ்ட் எ செகண்ட்..." வேகமாக செல்லை காதை விட்டு நீக்கி, கண்ணுக்கு எதிரே கொண்டு சென்று ஸ்க்ரீனை செர்ச் செய்தான்.

அதில் தோன்றிய எண்கள் அவள் சென்னையி அதிலும் ஸ்பெசிஃபிக்காக மீனம்பாக்கம் ஏர்போர்ட்டி இருந்து பேசுவதை ஊர்ஜிதம் செய்ய, அவனுக்குள் ஊ ஊவ்...! என்கிற ஒரு கூவல். அவன் வரையில் அந் பால்கனியே ஒரு நாட்டிய மேடை மாதிரி ஆகிவிட்ட

அதேசமயம், மெயின் கேட்டுக்கு வெளியே கூர்க்கா வாடு மல்லுகட்டிக் கொண்டிருந்தார் கையில் திரிசூலத் டன் ஒரு சிவனடியார்!

4

அந்தத் தொழிலதிபரின் மாலைக்கண் நோயை குணப்படுத்தினால் கோடி. ரூபாய் கிடைக்கும் என்பதற்காக மட்டும் நான் வரவில்லை.

சாவதற்குள் ஒருவருக்குக் கண்கொடுத்த புண்ணியத்தோடு போய்விட வேண்டும் என்பதே என் ஆசை. அதேசமயம். அந்த ஒரு கோடி நான் கண்டுபிடித்து வைத்திருக்கும் நுட்பமான மூலிகை வைத்திய ஆராய்ச்சிக்கு பயன்பட வேண்டும் என்பது என் விருப்பம்.

இந்த ஜென்மத்தில் குழந்தை பாக்கியம் இல்லை என்று சொன்ன ஒரு ஜோடிக்கு என்னால் குழந்தை உருவானது. ஜோதிட மாமேதை நாகபூஷணமே, உங்களுக்கு இந்தப் பிறப்பில் குழந்தை கிடை யாது, உங்கள் ஜாதகம் அதை துல்லியமாகச் சொல் கிறது என்று சொன்ன கேஸ் அது.

அவர்களுக்கு குழந்தை பிறந்த நிமிடம், அவர் ஆச்சரியத்தில் மூழ்கினார். என்னிடம் வந்து, நீங்கள் தன்வந்தரியின் நேரடிப் பிரதிநிதி என்று புகழ்ந்தார்.

இப்படியாக என் மூலிகை ஆராய்ச்சி, பாறையில் பூக்க வைத்துள்ளது. நான் மனித வாழ்வின் சௌக்யங்களுக்காக மருத்துவ ரீதியாக நிறைய யோசித்திருக்கிறேன். நாகபூஷணம் கூட என்னைப் பார்த்தபோது, இறப்பதற்குள் உலகம் போற்றும் புத்தகம் ஒன்று எழுதுவீர்கள். அதில் நிறைய ஆன்மிக ரகசியங்கள் இருக்கும் என்றார்.

ரசமணி வித்தகன் என்று என்னைக் கூறுபவர்கள் இந்தப் புத்தகத்தை வாசித்த பிறகு, 'பெரியப்பா' ஒரு ஞானி என்றும் கூறுவார்கள்...

போகட்டும்... பீடிகையை விட்டு விட்டு, விஷயத்திற்கு வருகிறேன். அந்தக் காட்டில் அமிர்தமணிக் கனியால் ஒரு அதீத சக்தி ஏற்பட்டதாகக் கூறினேன் அல்லவா? அது என்னுள் வேறு பல வீர்யமான விஷயங்களையும் தோற்றுவிக்கத் தொடங்கியது.

நம்புங்கள்... தயவு செய்து நான் கூறப்போவதை நம்புங்கள். நான் காட்டில் நடந்தபடி இருந்தேன். என் எதிரில் பல மிருகங்கள்!

ஒன்று கூட என்னைப் பார்த்து திரும்பவோ, ஓடவோ இல்லை. குறிப்பாக ஒரு இடத்தில் கரிக் குருவிகள், தரையில் தத்தித்தத்தி எதையோ பொறுக்கிக் கொண்டிருந்தன. நான் அருகில் சென்று அவைகளைப் பிடிக்கும் வரை அவைகளுக்கு என்னைத் தெரியவில்லை.

பிடித்த பிறகும் மற்ற குருவிகள் அப்படியேதான் இருந்தன. அப்பொழுதுதான் எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

நான் இவைகளின் பார்வையில் படாத அளவிற்கு மாயமாகிவிட்டேனோ?

ஆம்... அதுதான் உண்மை என்று தோன்றியது.

-ரசமணி வித்தகர் பெரியப்

சரண்யன் பால்கனியில் இருந்தபடி, அந்தச் சாமியார் கூர்க்காவுடன் சண்டை போடுவதைப் பார்த்தான். ஆச்சரியமாகியது.

உடனே இண்டர்காமை நெருங்கினான். அடுத்த நொடி மெயின் கேட்டில் இண்டர்காம் அலறியது. கூர்க்கா வும் ஓடி வந்து எடுத்தான்.

"என்ன மேன் சப்தம்... யார் அந்தப் பிச்சைக்காரன்?"

"யார்ன்னு தெரியல... உங்களைப் பார்க்கணும்கறாரு."

"என்னைப் பார்க்கணுமாமா?"

"ஆமாம் சார்..."

பதிலைத் தொடர்ந்து சில விநாடிகள் சிந்தித்த சரண்யன், "அவனை விடாதே... நானே வெளியே வரேன்" என்று புறப்படத் தொடங்க, திரும்பவும் செல் ஃபோனில் சிணுங்கல்.

'ச்சை.... புல்ஷிட்!' என்றபடியே காதலி க்ளாராவை திரும்பவும் அதில் பிடித்தான்.

"டார்லிங் வெரி சாரி... வெளியே ஒரு பிரச்சினை. அதுல உன்னை மறந்துட்டேன். ஐ வில் கம் அண்ட் பிக் யூ... நீ லவுஞ்ச்ல வெயிட் பண்ணு. இட் ஈஸ் எ பிளசண்ட் சர்ப்ரைஸ்."

"பரவசமான ஆச்சரியம் என்று சொல்கிறாயா?"

"க்ளாரா ப்ளீஸ்... இப்படி பழைய தமிழ்ல பேசி எனக்குள்ளே கூச்சமூட்டாதே. இங்கிலீஷ்லயே பேசும்மா. உனக்குத் தாய்மொழி. எனக்கு மாமியார் மொழி ஓ.கே... ஜஸ்ட் ஆஃப் அன் ஹவர்ல நான் அங்க இருப்பேன்."

செல்லை அணைத்தான். படு வேகமானான். ஆபீஸ் வேலைகள் பொலபொலவென்று உதிர்ந்து விழ- ஒரு பாட்டன் ஜீன்சுக்குள் நுழைந்து, ஸ்டோன் வாஸ் ஷர்ட்டில் வெளிவந்தான்.

போர்ட்டிக்கோவில் காரை நோக்கிப் பாயும் போதே பிமோட்டில் அது திறந்து கொண்டது. உள்ளே புகுந்தான். பறக்கத் தொடங்கினான்.

கேட் அருகே பிரேக் அடித்துத் தேங்கினான். அப்பப்பியே எட்டிப் பார்த்தான்.

"ஓம் நமச்சிவாய..." அந்த திரிசூல சிவனடியார், கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

"யார் மேன் நீ... எதுக்கு ரகளை பண்றே?"

"ரகளையா... நானா? அப்பா இறந்துவிட்டார்னு கேள்விப்பட்டு துக்கம் கேட்க வந்துருக்கேன் தம்பி. அதுமட்டுமில்ல... ஒரு கடமையும் பாக்கி இருக்கு!"

அந்தப் பதில் அவனை சில விநாடிகள் வெறிக்க வைத்தது. அவரோ கிட்டத்தட்ட ஒரு மனநோயாளி போல முகபாவனைகளைக் காட்டினார்.

"என்னால் நம்ப முடியல... என் அப்பாவை உனக்கு தெரியுமா?"

"என்ன கேள்வி இது? என்கிட்டதானே அவர் நவபாஷாண லிங்கம் செய்து தரச் சொல்லி, அதுக்கான லட்சம் ரூபாய் பணமும் கொடுத்தாரு..."

"நவபாஷாண லிங்கமா... என்னய்யா உளறிக்கிட்டே போறே?"

"நம்ப முடியலயா.... இதோ?"

அவர் தோளில் தொங்கிக் கொண்டிருந்த ஜோல்னாவில் கையை விட்டு துழவிக் கல்போல் ஒரு அரையடி உயர லிங்கத்தை அவன் எதிரே தொட்டுத் தூக்கி காட்டினார்.

வெளிர் பச்சையில் சற்றே சொரசொரப்பாய் தெரிந்தது அது. அந்தப் பகல் நேர சூரிய ஒளியில் ஒரு திகிலாகத் தான் இருந்தது.

அவனுக்கு லேசாக பகீர் என்றது.

"இது?"

"இதுதான் நவபாஷாண லிங்கம். நான் என் சாமர்த்தியத்தால நவபாஷாணங்களைக் கொண்டு கஷ்டப்பட்டு உப்பு சேர்த்து கூட்டிச் செய்தது."

"இது... இது எதுக்கு?"

"லிங்கம் எதுக்கு...? வழிபாடு செய்யத்தான்."

"சாரி... அதை நீயே வெச்சுக்கோ. எனக்கு இதெல்லாம் எதுவும் தெரியாது. வழியை விடு."

க்ளாரா அவனுக்குள் கட்டி இழுத்தாள். காரும் சீறியது. அந்தச் சிவனடியார் முகத்தில் பலத்த ஏமாற்றமும் கோபமும்...

விமான நிலைய லௌன்ஞ்!

ஏராளமான சூட்கேஸ் மற்றும் ஹோல்டால் பேக்குகளை பேகேஜ் கிளியரிங்கில் இருந்து கிளியர் செய்து ஒரு ட்ராலியில் வைத்து தள்ளி வந்தவளாய், மிகச் செழுமையாக மேனிமேல் ஐஸ்கிரீம் பொதும்பினாற் போல் நின்று கொண்டிருந்தாள் க்ளாரா!

கண்ணிரண்டும் கூலிங்கிளாஸ் சிறைக்குள்! மார்புகூட, இரண்டு ரப்பர் பந்துகளுக்கு ரப்பர் பாண்ட் போட்டாற் போல ஒருவிதமான மேலாடைக்குள் பிதுங்கலில் கங்காருக்குட்டி போல் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஹைஹீல் செருப்பு அவசியமேயில்லாதபடி அவளே ஆறடி உயரமிருந்தாள். போவோர் வருவோர் பார்வைகள், அவளை பிராண்டிக் கொண்டிருந்தன.

பக்கத்தில் ஒரு காஃபி பார். அங்கே அவளுக்காகவே ஜொள்ளிக் கொண்டு ஒருவன் இரண்டாவது காப்பியில் நாக்கை விட்டிருந்தான்.

க்ளாராவுக்கும் எல்லாம் புதுசு. இந்தியாவில் பெண்கள் எல்லாம் துணியால் மூடப்பட்ட புதையல்கள் என்பது அவளுக்குத் தெரியாது.

அமெரிக்க செக்ஸ்க்கு உப்பு, காரம் குறைவு. சுருதி ஏற கொஞ்சம் காலமாகும். இங்கே அப்படி இல்லை. கண்ணில் பார்த்த மாத்திரம் காந்த ஆரம்பித்துவிடுகிறது.

அவளுக்கும் புரிந்தது. நல்லவேளை... சரண்யன் "ஹாய் கிளா..." என்றபடி சிகப்பு ரோஜாக்களில் கொலை

காரக் கமல் சறுக்கி வருகிற தினுசில் அவள் எதிரில் வந்து நின்றான். குழறலான ஆங்கிலத்தில்...

"இப்படியா திடீர்ன்னு கிளம்பி விடுவே?"

"ஏன், வரக் கூடாதா?"

"இடியட், நான் துடிச்சுப் போயிட்டேன்."

"ஓ.கே. மேன். கிளம்பு. ஆமா, ஏன் இங்க எல்லாரும் இவ்வளவு மோசமா பார்க்கறாங்க?"

"அதான் இந்தியா. உன் எக்ஸ்போஷரும் இன்னிக்கு கொஞ்சம் ஓவர். இது மியாமி இல்ல க்ளாரா. அங்க பிகினியிலேயே ஷாப்பிங் போகலாம். இங்க... இங்க... ஓ.கே. வா. போகப் போக பேசுவோம்."

பதிலோடு நடந்தான். போர்ட்டர்கள் சிலர், தொற்றிக் கொள்ளப் பார்த்தனர். தவிர்த்தான். கார் அருகே சென்று டிக்கியைத் திறந்து சகலத்தையும் உள்ளே தள்ளி மூடினான். அவள் முன்னால் ஏறி அமர்ந்திருந்தாள்.

அவனும் ஏறிக் கொண்டு காரை ஸ்டார்ட் செய்தான்.

"ஐ ஆம் வெரி சாரிப்பா.. உன் அப்பாவை உயிரோட பார்க்கற சான்ஸே இல்லாம போச்சு..." அவள் இதமாய் அந்த முக்கிய விஷயத்தைத் தொட்டாள்.

"இட்ஸ் ஓ.கே. என்ன பண்றது? போனவர் சும்மா போகலை க்ளா..."

"என்ன சொல்றே?"

"ஆபீஸ்ல ஒரே குழப்பம். பிரச்சினை. எவ்வளவுக்கெவ்வளவு ஃப்ரீபேர்டா இருந்தேனோ, அவ்வளவுக்கவ்வளவு டைட்டா கைதி மாதிரி ஆயிட்டேன். எப்பப் பார் மீட்டிங்... கான்ஃப்ரன்ஸ். ஃபைல்ஸ்... ஓ...!"

"இதெல்லாம் லைஃப்ல ஒரு பார்ட்தானே... ஏன் அலுத்துக்கறே?"

"நோ... உனக்குப் புரியாது. நல்ல வேளை, நீ வந்தே. நான் இனிமே கொஞ்சம் டென்ஷன் இல்லாம இருப்பேன்."

அவன் சொல்லும்போதே பக்கவாட்டில் ஒரு கோயில் நழுவியது. அவளும் பார்த்தாள்.

"சரண்... அது கோயில்தானே?"

"ஆமாம்...."

"கெட் பேக்... நான் உள்ளே போகணும். பார்க்கணும்."

"நான்சென்ஸ். பேசாம வா.. எல்லாம் அப்புறமா போய்க் கலாம்."

"ஒன் மினிட் சரண்... ப்ளீஸ்.. சொன்னா கேள்."

"நான் சொல்றத நீ கேள். இது சின்னக் கோயில். உன்னை நான் அப்புறமா மகாபலிபுரம் கூட்டிகிட்டுப் போறேன். யு நோ டேஞ்சூர். அங்க கூட ஒரு பெரிய கோயில் இருக்கு..."

அவள் பதில் சொல்லவில்லை. அவன் தொடர்ந்து காரைச் செலுத்துவதற்காகவும் மறுத்ததற்காகவும் சேர்த்துக் கோபத்தில் இருந்தாள்.

அவனுக்குப் புரிந்தது.

சில நிமிடங்களில் கார், ராயப்பேட்டை சந்தடிகளில் நுழைந்து, பங்களா முகப்பில் நின்றது. கூர்க்கா ஓடி வந்து கதவைத் திறந்தான்.

பின் காரும் உள்ளேறியது.

அதேசமயம், பக்கவாட்டில் புல்வெளி மையத்தில் அந்த நவபாஷாண லிங்கம். ஒரு நம்ப முடியாத அதிசயம் போல, அதை ஒரு பாம்பு வளைத்தபடி படம் எடுத்துக் கொண்டிருந்தது!

5

நான் மாயமாகிவிட்டேன். அந்த வனத்தில் உடம்பிருந்தும் இல்லாதவனாகிவிட்டேன். இந்த மாதிரி மாயமாய் மறையும் விஷயங்கள் பற்றி கதைகளில் படித்திருக்கிறேன். நம்பமுடியாத ஒரு விஷயம் அது. இருந்தாலும் மனிதக் கற்பனை களுக்குதான் வானமே எல்லையாயிற்றே? எனவே அது கண்டபடி கற்பனை செய்யும் ஒரு விஷயம் என்றே அந்த மாயமாகும் தன்மை பற்றி நான் கருத்து வைத்திருந்தேன். ஆனால் அது என்வரையில் என்னாலேயே பொய் என்றாகி விட்டது.

நம்புங்கள்.

இருந்தும் இல்லாதவனாகிவிட்ட எனது நடமாட்டமும், அதனால் விளைந்த சப்தத்தையும் வைத்து சில பறவைகள் விலகிப் பறந்தன. மிருகங்கள் நிமிர்ந்து பார்த்துவிட்டு யாரையும் காணவில்லையே? என்கிற சந்தேக நினைப்புடன் திரும்பவும் தங்கள் திரிதலை மேற்கொண்டன.

எனக்குப் புரிந்துவிட்டது. இதற்கெல்லாம் காரணம், நான் சாப்பிட்ட அந்த அமிர்த மணிக்கனி தான்!

அதுதான் புலனுக்கு அதீத சக்தியைக் கொடுத் தது. அடுத்து உடம்பையே மாயமாக்கி மறைய வைத்து விட்டது.

இப்படி மறைவது என்பது அஷ்டமா சித்தியில் அணிமா என்னும் முதல் சித்து வகையினைச் சேர்ந்தது என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

அணிமா பற்றிய வியாக்யானங்களைப் படித்தால் ஒரு திடமான நாத்திகவாதி கூட சற்று யோசிப்பான்.

ஒவ்வொரு உயிருமே பஞ்ச பூதங்களால் ஆனவைதான். ஒரு மைப்புள்ளியளவுள்ள ஒரு செடியின் விதை மண்ணில் புதைந்து நீருடன் கூடிப் புணர்ந்து மெல்ல தண்டுப்பாகமாக மாறி. பிறகு வேர்களைப் பெற்று அதற்கும் பிறகு தன்மேல் உள்ள மூடிக்கிடக்கும் மண்ணிடமிருந்தே உணவு பெற்று அந்த மண்ணையே நெகிழ்த்து அதனுள் முண்டி நுழைந்து பூமிக்கு வெளியே சிறு செடி என்கிற அளவில் தலை காட்டி, பின் காற்றோடு தலைபாகமும், நீரோடும் நிலத்தோடும் வேர்பாகமும் செயலாற்றி, உடம்பு கிளைகள், இலைகள், பூக்கள், கனிகள் என்று பெற்று சர்வசாதாரணமாக பஞ்சபூதா க்ரியை புரிந்தபடி இருக்கிறது.

சாதாரணமாக நடப்பதாலேயே நமக்கு அதன் மதிப்பு தெரியவில்லை... விதை, நிலம், நீர், காற்று, ஒளி இவைதான் தொடக்கத்தில் இருந்தது. இவை கூடிச் செயலாற்றிய நிலையில் இலை, தழை, ஆ, காய் எல்லாம் எங்கிருந்து வந்தது? அந்த விதை எப்படி பஞ்ச பூதங்களிடம் இருந்து பெற்றது? இல்லாத ஒன்றை எப்படி பெற முடியும்? இருப்பதை பெற்று, ஒன்று சேர்த்தால் வடிவம். சேர்த்ததைப் பிரித்தால் வடிவமற்ற வெறுமையோ? அமிர்த மணிக்கனி கூட என்வரையில் அப்படி என் உடற் கூற்றை பிரித்துவிட்டதோ...? இல்லையே.. எனக்கு நான் தெரிகிறேனே... பிறருக்குத் தானே தெரிய வில்லை? இது எப்படி சாத்தியம்?

அப்பொழுதுதான் ஒரு உண்மை புரிந்தது. ஒன்றைக் காண, ஒளி அவசியம். அந்த அம்சம் என்மேல் மட்டும் இல்லையோ? நான் இப்படி குழம் பிப்போன சமயம் ஒரு மலைப்பையன், கழுத்தில் ஒரு மலைப்பாம்பை போட்டுக்கொண்டு தோளில் ஆந்தை ஒன்றுடன் எதிரில் வந்தபடி இருந்தான். அந்த ஆந்தை என்னைப் பார்த்துவிட்டது போல, என் அருகே வரவும் வானமேறிப் பறந்தது. அடுத்து...

-ரசமணி வித்தகர் பெரியய்யா

காரை கிரீச்சிட்டு நிறுத்திய சரண்யன், இறங்கிய வேகத்தில் மெயின் கேட் நோக்கித்தான் ஓடிச் சென்றான்.

க்ளாராவும் இறங்கிப் பின் தொடர்ந்தாள். பார்வை என்னவோ புல்வெளிச் சிவலிங்கத்தின் மேலும், அந்த சர்ப்பத்தின் மேலுமே இருந்தது.

சரண்யன் ஓடி வருவதைப் பார்த்து வாட்ச்மேன் உதறலெடுக்க ஆரம்பித்தான்.

"என்ன மேன் இது... யார் இதை உள்ள வெச்சது?

"அந்தச் சாமியார்தான் சார் வெச்சார். நான் உள்ள விடவே மாட்டேன்னு எவ்வளவோ சொன்னேன். என்னைத் தள்ளிவிட்டுட்டு உள்ள நுழைஞ்சு, அங்கே அந்த லிங்கத்தை வெச்சுட்டாரு.

'திரும்பி வந்து என்னைப் பார்த்து, உன் முதலாளி கிட்டச் சொல்லி, இதை தினம் பூஜை பண்ணச் சொல்... நல்லது நடக்கும். அலட்சியப்படுத்தினா ஆபத்துன்னாரு... எனக்கு ஒண்ணும் புரியலை. சரி, என்னவோ சொல்றாரு. அவர் போகட்டும்; அந்த லிங்கத்தை எடுத்து திரும்ப வெளிய வெச்சிடலாம்னு நினைச்சேன். ஆனா அங்கே போய் லிங்கத்தை வெச்ச நிமிஷம், ஒரு பாம்பு வந்து சுத்திகிச்சு...

"சுத்திகிட்டா என்ன மேன்... ஒரு குச்சியால அடிச்சு தூக்கிப் போடவேண்டியதுதானே?"

"இல்ல சார்... நல்ல பாம்பை அடிக்கறது தோஷம்னு சொல்வாங்க..."

"மண்ணாங்கட்டி..." பற்களைக் கடித்தபடி சரண்யன் கத்தினான்.

க்ளாராவோ ஒரு கேமராவுடன் அந்த லிங்கத்தையும் சுற்றி வளைத்தபடி நிற்கும் பாம்பையும் புகைப்படங்களாய் எடுப்பதில் மும்முரமாகிவிட்டாள்.

மிக அருகே சென்று உடம்பை வளைத்து ஃப்ளாஷ் மின்ன மின்ன ஒவ்வொரு ஃபிலிமாக சுட்டுக் கொண்டிருந்தாள்.

"க்ளா... நோ... கிட்டபோகாதே. அது பாய்சன்ஸ் கோப்ரா..." சரண்யன் அலறினான்.

"ஐ நோ... டோன்ட் ஒர்ரி..." அவளிடம் பதற்றமேயில்லாத பதில்.

அவன் உடம்பில் நடுக்கம். கண்களில் அலைபாய்வு. வாட்ச்மேனும் நடப்பதை ஒரு அதிசயம் போல் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் ஒரு வழியாக ஒரு டஜன் ஸ்நாப்புகளுக்கு மேல் எடுத்தவளாய் திரும்பி வந்தாள். சரண்யன் பார்வை அடுத்த நொடி அதை அடிக்க ஒரு கழியைத் தேடியது. ஆனால் ஒரு செங்கல் துண்டுதான் கிடைத்தது. அதை எடுத்து எறிந்தான். அது லிங்கத்தின் மேல் பட்டு, உதிர்ந்து சிதறியது.

க்ளாராவும், "ஏய், நோ... அதை அடிக்காதே" என்று கத்தினாள்.

"இல்ல க்ளாரா... விட்டா உள்ளேயே வந்துடும்."

"நோ... வராது. உங்க இண்டியன் சினிமாலதான் வரும். அட்த சேம் டைம். இங்க இப்படி இந்த ஸ்டாச்சு மேல இது இருக்கறது அழகா இருக்கு."

"அதுதான் சிவலிங்கம். இந்த ஊர்ல அது சாமி..."

"ஓ... சிவலிங்கம்..."

அவள் வியக்க, அவன் விளக்க, அந்தப் பாம்பு தான் வந்த வேலை முடிந்தது என்கிற மாதிரி லிங்கத்தை விட்டு விலகியது.

அடுத்த நொடி, க்ளாரா ஓடிச் சென்று அந்த லிங்கத்தைத் தொட்டு எடுத்தாள். கும்மென்று ஒருவித மூலிகை வாசம். சரண்யன் தலையிலடித்துக் கொண்டான்.

❑ ❑ ❑

குளித்து முடித்துவிட்டு ஒரு தேவதைபோல வந்தாள் க்ளாரா. கொஞ்சம் மார்பு தெரிகிற மாதிரி ஒரு ஹாஃப் நெக் பனியன். கீழே ஒரு பெர்முடாஸ் ட்ரவுசர்.

டைனிங்கில் பிரெட் சாண்ட்விச்சில் கவனமாக இருந்த சரண்யன் அருகில் வந்து அமர்ந்தான்.

"உனக்கும் ரெடி பண்ணட்டுமா?"

"நோ.... எனக்கு பிரெட் சாண்ட்விச் வேண்டாம். ரசம், குழம்பு இருக்கா?"

"கர்மம்.. உன்கிட்ட நான் இண்டியா பத்திப் பேசி இருக்கவே கூடாது."

"ஏன் அலுத்துக்கறே...? இந்த சாண்ட்விச்சைதான் இருபத்து மூணு வருஷமா சாப்பிட்டுகிட்டு இருக்கேனே! ஜஸ்ட் ஒரு சேஞ்சுக்குதான்."

"அப்படின்னா குக்க கூப்பிட்டு சொல்."

"பேர் என்ன?"

"புஷ்பா மாமி.."

"லேடி..?"

"எக்ஸாட்லி..."

"புஷ்பா மாமிஈஈஈ..." க்ளாரா குரல் கொடுத்தாள்.

அடுத்த சில நொடிகளில் நடுவயதான மடிசார்ப் பெண்மணி, எதிரில் வந்து நின்றாள். க்ளாராவை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

"மாமி, இவ பேர் க்ளாரா. என்னோட உட்பி."

மாமிக்குப் புரியவில்லை என்பது தெரிந்தது.

"புரியலையா...? நான் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணு."

"சொல்லுங்கோ..."

"சரியான வெள்ளைக்காரி. ஆனா நாக்குக்கு வக்கணையா குழம்பு, ரசம் வேணுமாம்."

"பண்ணிட்டா போச்சு."

"பண்ணிடுங்கோ..."

அவன் பேச்சை கட்டளையாகக் கருதியபடி திரும்பினாள்.

"ஒன் மினிட்..." க்ளாரா அழைத்தாள். மீண்டும் திரும்பினாள்."

"எனக்கு சமையல்னா ரொம்ப இண்ட்ரஸ்ட். உங்க இண்டியன் ஐட்டம்ஸ எப்படி சமைக்கறதுன்னு சொல்லித் தருவீங்களா?"

"தாராளமா... இது உங்க வீடு. நான் உங்க வேலைக்காரி. என்ன சொன்னாலும் செய்வேன்."

புஷ்பா மாமி, பதிலோடு நகர்ந்தாள்.

டைனிங்கை விட்டு ஹால் வழியாக சமையல் அறை நோக்கிச் சென்றபோது ஹாலில் மீன் தொட்டி அருகில் சோபா மேல் அந்தச் சிவலிங்கம் இருந்தது.

அதற்குமேல் சக்கரவர்த்தி சாரின் பெரிய புகைப்படம். அதற்கு மாலையெல்லாம் போடப்பட்டிருந்தது. புஷ்பா மாமி பார்க்கும் போது அந்த மாலை நூலறுந்து விழுகிற மாதிரி கீழே விழுந்தது. கச்சிதமாக அந்த லிங்கத்தின் ஆவுடையார்மேல் அழகாகச் சூட்டப்பட்டதுபோல அமர்ந்தது.

ஒரு வினாடி புஷ்பா மாமிக்கு சிலிர்த்துவிட்டது. அவளையுமறியாமல் படபடவென்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

❑ ❑ ❑

சாப்பிட்டுவிட்டு ஹாலில் உள்ள சோஃபாலில் வந்து அமர்ந்த சரண்யனும் நேரே அந்த லிங்கத்தை மாலையோடு பார்த்தான்.

கொஞ்சம் போல சுரீர் என்றது. உள்ளேயே விடக் கூடாது என்று தடுத்த ஒரு விஷயம், ஜம்மென்று மாலையோடு காட்சி தந்தால் எப்படி இருக்கும்?

"ராமசாமிஈஈ..." அலறினான். ஒரு வயதான பெரியவர் ஓடி வந்தார். காக்கிபேண்ட்- வெள்ளை சட்டை போட்டு, இன் செய்திருந்தார். நேம் பேட்ஜ் எல்லாம் வைத்திருந்தார்.

"சார் கூப்பிட்டீங்களா?"

"என்னய்யா அது?"

அவர் பார்வையும் லிங்கம் நோக்கிச் சென்றது. ஆச்சரியமாகியது.

"யார் அந்த லிங்கத்துக்கு மாலை போட்டது?"

"தெரியலை சார்..."

"தெரியலையா... நீங்கதானே இப்ப ஷிஃப்ட் இன் சார்ஜ்."

"ஆமாம்... அந்த மாலையை நான் எம்.டி. படத்துக்குதான் போட்டேன். யார் அவிழ்த்து லிங்கத்துக்கு போட்டதுன்னு தெரியலியே..."

"அப்ப அது என்ன தானா அவிழ்ந்து கீழே விழுந்ததா?"

சரண்யனிடம் கோபம் கொந்தளித்தது. ராமசாமி பதில் சொல்லத் தெரியாமல் பம்மி நின்றார்.

"முதல்ல அந்த லிங்கத்தை எடுத்து எங்கேயாவது எறி..."

அவரும் அதை நோக்கிச் சென்றார்.

"நோ... ஸ்டாப்!" க்ளாரா இடையில் குரல் கொடுத்தாள்.

"க்ளா ப்ளீஸ்... உனக்கு நான் நூறு லிங்கம் நல்ல சில்வர்லையே வாங்கித் தரேன். இது வேண்டாம். இது ஒரு பிச்சைக்கார பரதேசி வெச்சுகிட்டிருந்தது..."

"டோண்ட் சே ரப்பிஷ், யார் வெச்சிருந்தா என்ன? பியூட்டிஃபுல் ஹெர்பல் ஸ்மெல்! ஒண்டர்ஃபுல் ஸ்டரக்சர், எனக்கு ரொம்பப் பிடிச்சதாலதானே உள்ள கொண்டு வந்து வெச்சேன்..."

"அது இல்லம்மா... அது ஏதோ நவபாஷாணமாம். பாஷாணம்னா பாய்சன். உனக்குத் தெரியாது. எங்க ஊரில போலிச்சாமியார்கள் அதிகம். பாஷாணலிங்கம். ரசமணி, அது, இதுன்னு இங்க ஏகத்துக்கும் பித்தலாட்டம்..."

"யூ மீன் ஃப்ராட்!"

"அப்சல்யூட்லி..."

"நீ ரொம்ப அலட்டிக்கறே. ப்ளீஸ் சரண்யன், இந்த சிவலிங்கம் பத்தின உன் கற்பனைகளைக் கொஞ்சம் மூட்டை கட்டு. ஆமா, எப்ப உங்க ஃபேக்டரிக்கு போகப் போறோம்...?"

அவள் கேள்விக்குப் பதில் கூறாமல் அவளையே முறைத்துப் பார்த்தான்.

"உன்னைத்தான் சரண்... வென்வில் வி கோ...?"

"நௌ... இம்மீடியட்லி."

"ஓ.கே. நான் போய் ட்ரெஸ் சேஞ்ஜ் பண்ணிகிட்டு வரேன். ஆங்... உங்க வீட்டுல ஸாரி இருக்கா...?"

அவள் அப்படிக் கேட்பாள் என்று எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியத்துடன் உள்ளே சென்று அவன் அம்மாவின் பீரோவை திறந்தான். உள்ளே நிறைய புடைவைகள்.

"இதுல எது வேணுமோ எடுத்துக்கோ... உனக்கு கட்டத் தெரியுமா க்ளா...?"

"ஒரு பத்து நிமிஷம் கழிச்சு வந்து பார்" அவள் பதி லோடு அறைக் கதவை மூடினாள். அவனும் வெளியே வந்து ஹாலில் அமர்ந்தான். பார்வை எவ்வளவு தடுத்தும் அந்த லிங்கம் மேலேயே சென்றது.

கோபம் கோபமாக வந்தது.

தன் தடைகளை மீறி ஒரு மாலையோடு உட்கார்ந்தி ருப் பது அவன் ஈகோவை எரித்தது. வேகமாக எழுந்தான் கிட்டே சென்று தொட்டுத் தூக்கினான். க்ளாரா சொன்னது உண்மைதான். மூலிகை வாசம் கமகமவென்று அடித்தது அதேசமயம் நல்ல வெயிட். அப்படியே மாலையோடு அதை தூக்கிக் கொண்டு எதிரில் திறந்துக் கிடந்த வழி யில் நடந்தான். பங்களா பின்புறம் வந்தது.

வட்டவடிவ தோட்டத்துக் கிணறு தெரிந்தது. நெருங் கினான். 'ஒழிந்து போ?'

பெரிய நீர்த்தவலை மேல் எழும்ப, அந்த லிங்க கிணற்றுக்குள் விழுந்தது. கையை உதறிக் கொண்டு திரும்பினான். க்ளாராவும் புடைவையோடு வெளியே வந்தாள்.

"ஷல் வி கோ?" கேட்டாள். அவனும் நடந்தான் நல்லவேளை, அவள் லிங்கம் எங்கே என்று திரும்பியெ லாம் பார்க்கவில்லை.

போர்ட்டிகோவில் காரில் ஏறி அமர்ந்தாள். அவனு ஏறினான். டிரைவர் ராமதாஸ் ஓடி வந்தான். அவனை கையாலேயே தவிர்த்து விட்டு, காரைக் கிளப்பினான்

க்ளாரா, அருகில் அமர்ந்தவளாக சென்னையி புறநகர் லட்சணங்களைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அதேசமயம் அவள் காலடியில் ஏதோ கொழகொழ வென்று... என்னவென்று பார்த்தால் லிங்கத்தை வளைத் துக் கொண்டிருந்த அந்தப் பாம்பு!

ஐயோ...

6

அந்த ஆந்தை என்னை பார்த்துவிட்டே மேலேறியதாக நான் உணர்ந்தேன். தொடர்ந்து என் கால்பட்டு அந்த மலைப்பரப்பில் கிடந்த காய்ந்த சருகுகள் சப்தமெழுப்பின. அது அந்த வேடனை கலவரப்படுத்திடவே, யாரது? என்று அவன் குரல் கொடுத்தான்.

நானும் 'ஐயா... உங்கள் கண்களுக்கு நான் தெரிகிறேனா?' என்று திருப்பிக்கேட்டேன். நல்ல வேளை, என் குரல் அவன் காதுகளில் விழுந்தது. அவனும் "சாமி... சித்தர்சாமி... கும்பிடறேன் சாமி" என்றான். எனக்கு அப்பொழுதுதான் புரிந்தது. அவன் என்னை சித்தர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பது..

'வேடா! நான் சித்தனில்லை... ஒரு சித்த வைத்தியன்' என்றேன்.

"அப்படியா... மணிப்பழத்தை சாப்ட்டுட்டீங் களோ...?" என்று அவனும் திருப்பிக் கேட்டான்.

"மணிப்பழமா...?"

"அதான்சாமி... பொடிப்பொடியா செவப்பா இருக்குமே...?"

"ஆமாம்... அதை சாப்பிட்டா இப்படி மாயமா மறைஞ்சிடுவோமா என்ன?"

"மறையறது மட்டுமா... நீங்க இப்ப கல்லைத் தின்னாலும் செரிக்கும். கண் பார்வையும் பளிச் சுன்னு ஆயிடும்."

"அதுக்கு அவ்வளவு சக்தியா?"

"பின்ன..?"

"ஆமா... என் உருவத்தை யாரும் பார்க்கவே முடியாதா?"

"கவலைப்படாதீங்க. இந்த மலையில் ஒரு அருவி இருக்கு. சிவகங்கைன்னு அதுக்குப் பேரு. அதுல போய் குளிச்சா உங்க உருவம் எல்லாருக்கும் தெரியும்."

"ரொம்ப சந்தோஷம்... ஆமா இவ்வளவு விவரம் தெரிஞ்ச நீ அந்தப் பழத்தைச் சாப்பிட்டிருக்கியா?"

"சாப்ட்டதாலதானே எனக்கு விவரமே தெரிய வந்துச்சு. ஆனா அதோட சக்தியெல்லாம் எவ்வளவு நாழிகை இருக்கும்னு பிறகுதான் தெரிய வந்தது. தொடர்ந்து ஒரு மண்டலம் சாப்ட்டா நம்ம கண் பார்வை மட்டுமல்ல, ஏழு ஜென்மத்துக்கு வியாதிகள் எதுவுமே வராது."

"அப்ப நீ அந்த மாதிரி சாப்பிட்டுகிட்டு வர்றியா?"

"அதான் முடியல. அங்கதான் இந்த சித்தர்மலை கண்ணாமூச்சியாடுது. ஒரு நாள் சாப்ட்ட நான், மூணு நாள் இந்த காட்டை சுத்திச் சுத்தி வந்தேன். அப்ப என்னைப் போலவே உருவம் இல்லாம சுத் தின சித்தர் ஒருத்தர் என்ன பார்த்துட்டு அருவியில குளிக்கச் சொல்லி, வெளியே போகவும் வழிகாட் டுனாரு. அப்ப போய்ட்டேன். இருந்தாலும் இந்த மலையில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை நான் என் நண்பர்கள் கிட்ட சொன்னா நம்பமாட்டேங் கறாங்க. அதான் திரும்ப வந்து அந்தப் பழங் களையும் சித்தர்களையும் பார்க்க சுத்திச் சுத்தி வரேன். யாரும் கண்ணுல படமாட்டேங்கறாங்க..."

அவன் சொன்னது என்னைத் திடுக்கிட வைத் தது. அதேசமயம் நான் அலைந்து கொண்டிருந்த இந்த மலைதான் சித்தர் மலை என்பது தெரிந்தது. அப்பொழுது ஒரு உருவமில்லாத சித்தர் சற்று தொலைவில் நடந்து செல்வது இலை-தழை வதங்கும் சத்தத்தில் என் காதுகளுக்கு கேட்டது. அந்த வேடனும் அந்த சப்தத்தை வைத்தே 'சாமி... சித்தர்சாமி...' என்று சப்தம் வந்த திசை நோக்கி ஓடினான்.

-ரசமணி வித்தகர் பெரியய்யா

காருக்குள் காலடியில் பாம்பைப் பார்த்த நொடி, க்ளாரா வீல் என்று அலறாத குறை. சரேலென்று காலை யும் மேலே தூக்கிக் கொள்ள, சரண்யனும் அப்பொழுது தான் அந்தப் பாம்பைப் பார்த்தான்.

சப்தநாடியும் ஒடுங்காத குறையாக காலைத் தூக்கிய படி ஸ்டியரிங்கையும் ஒடிக்க... கார், சாலையில் சென்று கொண்டிருந்த வேகத்தில் பக்கவாட்டில் அப்படியே பிளாட்ஃபாரத்தில் ஏறி அந்த பிளாட்ஃபார வரிசையில் உருண்டு திரண்டு வளர்ந்திருந்த தூங்கு மூஞ்சி மரம் ஒன்றின் மேல் மோதி, ஸ்டியரிங்கோடு சேர்ந்து அப்படியே அவன் மார்பை நசுக்கியது.

அவனும் அலறக்கூட முடியாதவனாக மயங்க, கட்டென்று திறந்து கொண்ட கதவின் வழியே க்ளாரா மட்டும் எந்த விதக் காயமும் இன்றி ஒரு பொட்டலம் போல் உருண்டு பிளாட்ஃபாரத்தில் விழுந்தாள்.

❑ ❑ ❑

இன்டென்சிவ் கேர் முன்னால் நெற்றியில் ஒரு பிளாஸ் டர் கட்டுடன் க்ளாரா! சரண்யனின் பி.ஏ. வாசுதேவனும் பிளாண்ட் ஜி.எம். சண்முகாவும் ஒரு மூலையில் நின்று

பரபரப்பாகப் பேசியபடி இருந்தனர். அவர்கள் வரையில் க்ளாரா புதியவள். அவளிடம் நீ யார்...? உனக்கும் சரண்யனுக்கும் என்ன உறவு? என்று எப்படிக் கேட்பது என்றெல்லாம் குழப்பங்கள்.

நல்லவேளை... சரண்யன் அழைப்பதாக நர்ஸ் ஒருத்தி வந்து அழைக்க, மூவருமே இன்டென்சிவ் கேருக்குள் நுழைந்தனர்.

வெளியில் சக்கரவர்த்தி மோட்டார்ஸின் டாப்லெவல் மேனேஜ்மெண்ட்டே திரண்டு வந்திருந்தது. உள்ளே....

சரண்யன் ஈஸிசேர் போன்ற சரிவான படுக்கை நிலையில் தெரிந்தான். மூக்கில் ஆக்சிஜன் குழாய் வழியாக நுழைந்து கொண்டிருந்தது. தோள்பட்டையில் பெரிய பாண்டேஜ்!

அவன் அதற்கு நடுவிலும் 'க்ளா' என்று அவளைத் தான் முதலில் அழைத்தான். அவள் நெருங்கிச் சென்று நினறாள்.

"சரண்... ஹவ் டு யூ... ஃபீல் மேன்...?"

அவளிடம் இருந்து வார்த்தைகள் சரளமாக வர மறுத்தன. துண்டுத்துண்டாகத்தான் உதிர்த்தாள். ஆசை ஆசையாக ஊரைச் சுற்றப் போவதாக நினைத்து வந்தால் இப்படி ஆகிவிட்டதே என்கிற அதிர்ச்சி..

"ஒய்... நோ... ஐஆம் ஆல்ரைட், வாசுஊ..." அவன் அவளுக்கான ஆறுதலோடு வாசுதேவனைக் கூப்பிட்டான்.

வாசுதேவனும் பணிவாக தலைமாட்டருகே சென்று நின்றான்.

"இட் ஈஸ் வெரி அன் ஃபார்ச்சுனேட் வாசு.

ஐ டிடின்ட் எக்ஸ்பெக்ட்..."

"இட்ஸ் ஓகே சார். நீங்க டென்ஷனாகாதீங்க... ஜி.எம் சார் வந்துருக்கார் பாருங்க..."

"மை டியர் சரண்யன், ஐஆம் வெரி சாரி."

ஜி.எம். சண்முகா மறுபக்கமாய் வந்து தோளைத் தொட்டார்.

"எனக்குப் பயப்படும்படியா ஒண்ணுமில்ல சார். பைதபை, க்ளாராவை நான் இன்னும் உங்களுக்கு அறிமுகப்படுத்தவே இல்லை பாருங்க.. ஷி ஈஸ் மை உட்பி..."

அவன் பதில் சண்முகாவை அடுத்த நொடி வியப்புக்கு மாற்றி, அவன் மார்புக்கு மேலே கைகளை நீட்டி 'கிளாட் டு மீட் யூ' சொல்ல வைத்தது.

"ஆங்... எனக்கு இப்படி ஆயிட்டதால நம்ம ஃபேக்டரி மூவ்மெண்ட்ல ஒரு சின்ன ஜெர்க் கூட இருக்கக்கூடாது. இப்பதான் டாக்டர்கிட்ட கேட்டேன். மேக்ஸிமம் ஒரு மாசம்தானாம். அப்புறம் நான் ஆஸ்யூஷுவல் எல்லா ஆக்டிவிடீஸ்லயும் ஈடுபடலாம்னார்.

"அதுவரை என் சார்பா க்ளாரா ஆபீஸுக்கு வருவா, ஸிவில் டேக் கேர்."

சரண்யன் தொட்டுத் தொட்டு க்ளாராவை ஒரு எம்.டி. லெவலுக்கே டிக்ளேர் செய்தது சண்முகாவை கொஞ்சம் நெருடியது.

பல நூறு கோடி ரூபாய் முதலில் இயங்கும் ஒரு நிறுவனம் அது... இப்படி படுத்த படுக்கையில் இருந்தபடி யாரோ ஒரு பெண்ணைச் சுட்டிக்காட்டுவ தெல்லாம் துளிகூட பொறுப்புள்ள செயலாகவே அவருக்குப் படவில்லை.

சண்முகா முகத்தில் அதன் எதிரொலிகள். க்ளாரா அதை துல்லியமாகக் கவனித்தாள்.

"நோ சரண்... நான் கூட இருந்து உன்னை கவனிச்சுக்கத்தான் விரும்பறேன். அட்த சேம் டைம், எனக்கு உன் ஆபீஸ் பத்தி எதுவுமே தெரியாது. இந்த விஷயத்ல மிஸ்டர் ஜி.எம்.மே எல்லாத்தையும் கவனிச்சுக்கறது

தான் நல்லது. அவராலதான் அதை பர்ஃபெக்டா செய்ய வும் முடியும்..."

வெகு அழகாக சன்முகா பக்கமே அந்தப் பொறுப்பை தள்ளிவிட்டு விட்டு, திரும்பவும் அவர் முகத்தைப் பார்த்தாள். அதில் இப்பொழுது ஏகப்பட்ட ரிலீஃப்!

"நோ பிராப்ளம் சார்... இம்பார்ட்டண்ட் பேப்பர்ஸை நான் இங்கயே கொண்டு வந்து சைன் வாங்கிக்கிறேன். இப்ப அதைப் பத்தியெல்லாம் நீங்க கவலைப்பட வேண்டாம்..." இது பி.ஏ. வாசுதேவன்.

"ஆமாம் சரண்யன். நீங்க முதல்ல ஓய்வெடுங்க. பைதபை அந்த குண்டூர் ஆக்சிடென்ட் பிராப்ளம் அவ்வள வும் சால்வ் ஆயிடிச்சு, யூனியன்லையும் எந்தக் க்ளைமுக் கும் நாங்க வரமாட்டோம்னு சொல்லிட்டாங்க. நீங்க நிம்மதியா ரெஸ்ட் எடுத்தா போதும்..."

சண்முகா அவனுக்கு ஆறுதலாகப் பேசிவிட்டு வெளியில் வந்தார்.

'ஹி ஈஸ் ஆல்ரைட்' என்று ஏ.ஜி.எம், ஆனந்தனிடமும், பி.எம். ராகவனிடமும் உற்சாகமாக சொன்னார்.

வாசுவும் வெளியில் வந்தான். கூடவே க்ளாராவும் வந்தாள்.

"மேடம்.. உங்களுக்கு எங்க ஆபீஸ் லீடிங் டெலிவி கட்ஸை மட்டும் இங்க அறிமுகப்படுத்தறேன். நாளைக்கு ஒரு மீட்டிங் போட்டு எல்லாருக்கும் அறிமுகப்படுத்தறது தான் சரியா இருக்கும். பைதபை நீங்க எங்களைப் போலவே தமிழ்ல பேசறது ரொம்ப ஸ்வீட்டா இருக்கு..."

-வாசு தன் அபிப்ராயத்தோடு ஏ.ஜி.எம். ஆனந்தனை, பி.எம். ராகவனை, தன்னை கவனத்தில் வைத்து அறி முகம் செய்து வைக்கிறானா என்று ஓரப்பார்வை பார்த்த படியே நைஸாக நழுவப் பார்த்த காம்ப்ளக்ஸ் கருணாகரன் என்னும் அக்கவுண்ட்ஸ் மேனேஜரை வரிசையாக க்ளாரா வுக்கு அறிமுகம் செய்து முடித்தான்.

அப்பொழுது ஏரியா இன்ஸ்பெக்டர் ஒருவர் ட்ராஃபிக் போலீஸ்காரர் ஒருவருடனும், ஒரு கான்ஸ்டபிளுடனும் அங்கே பிரவேசித்திருந்தார்.

அப்போதுதான் ஆக்சிடெண்ட் கேஸ் ஞாபகமே வாசு தேவனுக்கு வந்தது.

ஜி.எம். சண்முகா வருபவர்களை என் அருகில் வர விடாமல் பார்த்து சமாளித்து அனுப்பு என்று பார்வை யாலேயே பேசினார்.

"வாங்க சார்... நீங்கதானே இன்ஸ்பெக்டர் ஜெய பால்?" கேள்வியோடு வாசு இன்ஸ்பெக்டரோடு ஒதுங்க, சண்முகா க்ளாரா பற்றிய குடும்பத் தொடர்பான விஷ யங்களைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கியிருந்தார்.

"என்ன சார் இது... உங்க எம்.டி. டிரைவர் வெச்சுக்க மாட்டாரா?"

"இல்ல சார்... டிரைவர் இருக்கார். இன்னிக்கு அவர், அவரோட வருங்கால மனைவியோட அந்தரங்கமா பேசிட்டு வர விரும்பியிருக்கார்... அதான்."

"காருக்குள்ள பாம்பு ஒண்ணு இருந்துருக்கு போலத் தெரியுதே...?"

"பாம்பா... காருக்குள்ளேயா?"

"ஆமாம்.. ஆக்சிடெண்ட் ஆன கார்ல இருந்து அது இறங்கிப் போனத, அங்க ஸ்பாட்ல ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரர் ஒருத்தர் பார்த்துக்காரு..."

"தெரியல சார்... பிரேக் பிடிக்காம இப்படி ஆக்சி டெண்ட் ஆயிட்டதாதான் நான் நினைச்சேன்."

"உங்க எம்.டி. பேசறாரா..? அவர்கிட்டயே கேட் பிரம்..."

"இல்ல சார்... பாம்பு, தேள்னு அவர்கிட்ட பேசினா மனுஷன் டென்ஷனாயிடுவார். ப்ளீஸ்... அப்படியே அது உண்மையா இருந்தாலும் பத்திரிகைக்காரங்க கன்னா பின்னான்னு எழுத ஆரம்பிச்சிடுவாங்க. ஏதோ நடக்கக் கூடாதது நடந்துபோச்சு: நல்ல வேளை, அவர் உயிருக்கு ஒரு ஆபத்தும் இல்லை. விட்ருங்க..."

"என்ன சார் நீங்க... என் தம்பி உங்க ஃபேக்டரியில தான் ஒர்க் பண்றான். இதை மீடியாவுக்கே தெரியாம பார்த்துக்கறது என் பொறுப்பு. நாளைக்கு உங்களுக்கு இன்ஷ்யுரன்ஸ் க்ளைம் அது இதுன்னா எங்க எஃப்.ஐ.ஆர். ரிப்போர்ட்டெல்லாம் தேவைப்படும். அதனால கொஞ்சம் யோசிச்சு சொல்லுங்க..."

"சரி... இப்ப நீங்க கிளம்புங்க. எதுவா இருந்தாலும் நான் ஃபோன் பண்றேன். ரொம்ப அவசியம்னா என்னை என் வீட்டுல வந்து பாருங்க. இல்ல, நான் உங்க ஸ்டேஷனுக்கு வரேன். ஏற்கெனவே கம்பெனிக்கு நேரம் சரியில்லை... கிளம்புங்க, கிளம்புங்க..."

வாசு அழகாக அவரை பொட்டலம் கட்டினான். இன்ஸ்பெக்டருக்கு ஏமாற்றமாக இருந்தது. அவரைவிட ட்ராஃபிக் போலீஸ் முகத்தில் இன்னும் கூடுதலான ஏமாற்றம்.

"சார்... என் மச்சினன் அப்ளிகேஷனைப் பத்தி ஒரு வார்த்தை சொல்லிவைங்க..."

"விடு.. அதான் ஃபோன்ல பேசறேன்னுட்டான்ல? பேசுவான், பேசி ஆகணும். அப்ப பார்த்துக்கலாம்."

இன்ஸ்பெக்டர் முணுமுணுத்துக் கொண்டே தான் வந்த ஜீப்பில் திரும்ப ஏறி, கண்களை விட்டே மறைந்தார்.

அப்பாடா..!

வாசுவுக்கு இதயத்துடிப்பு சீரானது.

சண்முகாவும் ஓரப்பார்வையில் சகலத்தையும் கவனித்துக் கொண்டிருந்தார். மெல்ல அவரையும் க்ளாராவையும் சமீபித்தான்.

"சார்... ஒரு மாதிரி பேசி அனுப்பிட்டேன். இன்ஷ்யூரன்ஸ்ல க்ளைம் பண்ணணும்னா கேஸ் ஃபைல் பண்ணி எஃப்.ஐ.ஆர். ரிப்போர்ட்டெல்லாம் தேவைப்படும். அதுக்காக கொஞ்சம் வெயிட் பண்ணச் சொல்லியிருக்கேன். மத்தபடி மீடியால நியூஸ் பாஸாகாது. பைதபை... கார்ல பாம்பு ஒண்ணு இருந்து வெளியேறினதா இன்ஸ்பெக்டர் சொல்றாரு" அவன் சண்முகாவுடன் பேசியபடியே க்ளாராவுக்கும் சேர்த்து அந்தச் சேதியைச் சொன்னான்.

"யெஸ்... ஒரு ஸ்நேக்தான் ஆக்சிடெண்ட்டுக்கே காரணம். அது ஆரம்பத்துல ஒரு லிங்கா ஸ்டேச்சு மேலே இருந்துச்சு. தென், பக்கத்துல நின்னுகிட்டிருந்த காருக்குள்ள அது வந்துருக்கணும்னு நான் நினைக்கறேன்."

அடுத்த நொடி 'பளார்' என்று அறை விழுந்த மாதிரி ஆகியது ஜி.எம். சண்முகாவின் முகம்.

"ப்ளீஸ் மிஸ் க்ளாரா... கொஞ்சம் விளக்கமா சொல்ல முடியுமா?" அவர் பதைப்பு குறையாமல் கேட்டார். அவளும்... சொல்லி முடித்தாள்.

"ஓ...!" அவர் காற்றை ஊதிக் கொண்டு சலிப்பானார்.

"இஃப் யூ டோன்ட்மைண்ட் அந்த லிங்கத்தை நான் பார்க்கலாமா?" கேட்டார்.

"ஓய் நாட்... வீட்லதான் இருக்கு!"

அந்தப் பதிலைத் தொடர்ந்து ஏதாவது நிமிடம் இருவரும் கிளம்பினர்.

❑ ❑ ❑

லிங்கம் இருந்த இடம் காலியாக இருந்தது பிகீரென்றது.

"அங்கதான்... இங்கதான் நான் வெச்சேன்..." க்ளாரா சாதித்தாள். தொடர்ந்து வீட்டு வேலைக்காரர்கள் அழைக்கப்பட்டனர். சமையல்கார புஷ்பாமாமி, சக்கரவர்த்தி சார் படத்து மாலை அவிழ்ந்து லிங்கம் மேல் விழுந்ததைப் பார்த்ததாகக் கூறினாள். சண்முகாவிற்கு இன்னொரு 'அறை' விழுந்த மாதிரி இருந்தது.

"சரி... இப்ப எங்க?" கேட்டார்.

"தெரியாது சார்..."

"என்ன தெரியாது? இங்கதான் இருந்துருக்கு. பார்த்தவங்களும் இதோ இருக்காங்க... காணோம்னா என்ன அர்த்தம்?"

எல்லோரும் மௌனித்தார்கள்.

"மிஸ்டர் சண்முகா... இதை ஏன் இவ்வளவு பெரிய இஷ்யூ ஆக்கறீங்க..? யாராவது திருடியிருப்பாங்களோங்கற அந்தப் பயமா?"

க்ளாரா கையை கட்டிக் கொண்டு கேட்ட விதத்தில் நல்ல அழுத்தம்.

"சொல்றேன் மேடம்... வாங்க உட்கார்ந்து பேசுவோம்..." அவர் பதிலோடு அருகில் கிடந்த சோஃபாவில் அமர்ந்தார். க்ளாரா எதிரில் அமர்ந்தாள். எல்லோரும் ஒதுங்கிக் கொண்டனர்.

சண்முகா பேச ஆரம்பித்தார்.

"மிஸ் கிளாரா... நான் சொல்லப் போறத கேட்டா உங்களுக்கு ரொம்ப ஆச்சசரியமா இருக்கும். ஒரு பர்சன்ட் கூட முதல்ல நம்ப மாட்டீங்க. மே பீ, என்னை ஒரு கிறுக்கன்னு கூட சொல்லலாம். ஃபைனலா இண்டியா பத்தின விஷயங்களே இப்படித்தான்னும் சொல்லிடுவீங்க. ஏன்னா எனக்கு நல்லா தெரியும்... ஃபாரீன்ல ரொம்பப் பேருக்கு இண்டியா பத்தியே சரியா தெரியல.

'தெரிஞ்ச சிலரோ இந்த நாட்டை தண்ணியில்லாத நாடு, பாம்பாட்டிகள் திரியற நாடுன்னு தப்பும் தவறுமா புரிஞ்சு வெச்சுகிட்டிருக்காங்க." அவரது பீடிகை மிகப் பலமாக இருந்தது. அவள் சிரித்தாள்.

"ரொம்ப தப்பு மிஸ்டர் சண்முகா. இண்டியான்னா எங்க ஜெனரேஷன் ரொம்ப ரிச்சாதான் ஃபீல் பண்றாங்க. ஒரு யோகா சென்டர்லதான் நான் சரண்யனை மீட் பண்ணேன். எங்க யோகா மாஸ்டர் மூலமா இண்டியன் கல்ச்சர் பத்தி ஓரளவு தெரிஞ்சுகிட்டுதான் நான் இண்டியா வந்திருக்கேன். உங்களுக்கு ஆச்சரியமா இருக்கும். என் யோகா மாஸ்டர் ஜோதிடத்துல புலி.

'அவர் என்டேட் ஆஃப் பர்த்தை வெச்சு நான் ஒரு சிவன் கோயில் கட்டுவேன்னு சொல்லியிருக்காரு... தெரியுமா உங்களுக்கு? நீங்க விஷயத்தைச் சொல்லுங்க..."

க்ளாராவின் பதிலைத் தொடர்ந்து சண்முகாவின் கன்னத்தில் மூன்றாவது முறையாக ஒரு 'அறை' விழுந்த மாதிரி இருந்தது.

7

'என்னைச் சுற்றி நடக்கும் ஒவ்வொரு விஷயமுமே எனக்கு அதிர்ச்சியாக, ஆச்சரியமாக, எல்லாமுமாக இருந்தது. எனக்கே உருவமில்லை... என்னைப் போலவே ஒரு சித்தரும் உருவமின்றி உலவுகிறார். அவரை சருகுகள் சப்திப்பதை வைத்து உணர்ந்து அந்த வேடனும் தேடி ஓடுகிறான்! அவனுக்கும் ஆசை... விசித்ரமான ஒரு அமானுஷ்யமான அனுபவத்திற்கு அவன் ஒரு முறை ஆட்பட்டுவிட்டான்... அது அவனை இயக்கியபடி உள்ளது. நானும் அவனைப் பின் தொடர்ந்தேன். என்னதான்

நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவல் என்னையும் அவன் பின்னே ஓட வைத்தது.

ஒரு இடத்தில் அவன் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தான். மாய உருவில் இருந்த அந்த சித்தர் உருவத்தோடு பேசுகிறான் என்பதை ஊகித்துக் கொண்டேன். அந்த சித்தர் அவனிடம் கோபமாக பேசிக் கொண்டிருந்தார். நான் வருவதை வைத்து என்னையும் உணர்ந்தவராக என் காதிலும் விழ வேண்டும் என்கிற எண்ணமுடன் அவர் பேசுவதாகவே எனக்கு தோன்றியது.

'அடேய் மானிடா...

'உனக்கு ஆனாலும் ஆசை அதிகமடா... ஒரு அற்புதமான விஷயம் இந்த வனம். இதன் சூட்சுமத்தை ஞானத்தோடு புரிந்து கொள்ள முடியாமல், அஞ்ஞானத்தோடும் அதீத ஆசைகளோடும் நீ திரும்பத்திரும்ப இங்கே வருகிறாய். இந்த வனத்தை, இங்கு உனக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஒரு சொப்பனம் போல நினைத்துக் கொண்டு திரும்பிவிடு. அதுதான் உனக்கு நல்லது. ஒரு முறை உருவத்தைதான் இழந்தாய்; இன்னொரு முறை நீ இப்படியே நடந்து கொண்டால் உயிரையே இழந்து விடுவாய். அதன் பிறகு இந்த காட்டில் பிசாசாக அலைய வேண்டிவரும், ஜாக்ரதை...'

-அந்த சித்தர் படுஸ்பஷ்டமாக பேசியது என் காதில் விழுந்து எனக்குள்ளேயும் பயமூட்டியது. அந்த சமயத்தில் என் அருகில் உள்ள சருகுகளில் மளமளவென்று தீப்பிடித்தது போல் இருந்தது. திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் திரும்பினால் அந்த சித்தர் இல்லை. அந்த வேடனும் சோர்வுடன் திரும்பிச் சென்று கொண்டிருந்தான்.

அதன்பின் மனக்குழப்பமுடன் நான் அந்த சிவ கங்கை அருவிக்கரையை தேடிச் சென்று முதலில் அதில் நனைந்தேன். அந்த வேடன் சொன்னதுபோல எனக்கு என் உருவம் திரும்பக் கிடைக்கத்து.

'அப்பாடா...' என்றிருந்தது.

அதன்பின் காட்டை விட்டு வெளியேற வழியைத் தேடினேன். வட்டத்தைச் சுற்றும் எறும்பு போல சுற்றிச் சுற்றி வராமல் இந்த முறை நான் அந்தக் காட்டை விட்டு வெளியே வந்துவிட்டேன்!

எனக்குள் வியப்பான வியப்பு.

எனக்கேற்பட்ட அனுபவங்களை நான் யாரிடம் சொன்னாலும் அவர்கள் அதை நம்பமாட்டார்கள். இருந்தும் என்னால் அடக்க முடியவில்லை. ஜோதிடர் நாகபூஷணத்தை தேடிச் சென்று அவரிடம் சொன்னேன்.

பதிலுக்கு ஜோதிடர் சொன்னது என்னை அப்படியே திக்கு முக்காட வைத்துவிட்டது.

அது...?

-ரசமணி வித்தகர் பெரியய்யா

க்ளாரா, சண்முகாவுக்கு அதீத அதிர்ச்சிகளை சாதாரணமாக அளித்தாள். அவளைப் பற்றிய அவரது அனுமானங்களை பொடிப் பொடியாக்கினாள். அதனால் உண்டான சலனங்களோடு ஜி.எம். சண்முகாவும் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தார்.

"மிஸ்டர் சண்முகா... என்ன இது... எதுக்காக இப்படிப் பார்க்கறீங்க?" அவளும் அதுகுறித்து கேட்க, அவரும் மெல்ல வாயைத் திறந்தார்.

"நான் இப்ப பிரமிப்புல இருக்கேன் மேடம்... உங்களைப் பத்தின என் கணிப்புகளை நீங்க தூள் தூளாக்கிட்டீங்க. இண்டியான்னா ஒரு புவர் இமேஜ்தான் உங்ககிட்ட இருக்கும்னு நான் நினைச்சது ரொம்ப தப்புன்னு தெரியுது."

"எக்ஸாக்ட்லி... அதுலயும் உங்களைப்போல டாப் லெவல் அட்மினிஸ்ட்ரேஷன்ல இருக்கறவங்களுக்கு ராங் பர்சப்ஷன்ஸ் கூடவே கூடாது."

-அவளது பதிலால் நான்காவதாக ஒரு 'அறை' அவர் கன்னத்தில் விழுந்ததுபோல் இருந்தது.

முதன்முதலாக ஆஸ்பத்திரியில் சந்தித்தபோதே மனதில் நினைப்பதை அப்படியே புரிந்து கொள்ளும் சக்தியோடு அவள் பேசியதெல்லாம் அவர் ஞாபகத்தில் வரத் தொடங்கியது. கூடவே தன் பெருமதிப்பிற்குரிய எம்.டி.யான சக்கரவர்த்தி சாரின் மகன் ஒரு வெள்ளைக் காரியிடம் பொறுப்பில்லாதபடி மயங்கிவிட்டான் என்று நினைத்ததும், ஆனால் அதில் ஒரு மாற்றம் ஏற்பட்டு அந்த வெள்ளைக்காரி எல்லா வகையிலும் ஒரு பொறுப்புள்ள பெண்ணாக இருப்பதை என்னவென்று சொல்வது?

'சண்முகா... ஏதோ ஒரு சக்தி எப்பவும் எனக்கு துணையா இருக்குயா. நானே தெரியாத்தனமா தப்பு செய்ய நினைச்சாலும் அது விடாதுங்கறதுதான் என் நம்பிக்கை' என்று ஒரு நாள் அவர் பேசியதெல்லாம்கூட ஞாபகமாய் ஞாபகத்தில் வந்தது. அதனால் மீண்டும் ஒரு ஸ்தம்பிப்பு.

சக்கரவர்த்தியின் நம்பிக்கை வீண் போகவில்லை. அது க்ளாரா வடிவில் எதிரில் வந்து அமர்ந்து கொண்டிருக் கிறாற்போல் தோன்றிது.

மீண்டும் அதன் நிமித்தம் ஒரு நிசப்தம் அவருக்குள்.

"மிஸ்டர் சண்முகா... மிஸ்டர் சண்முகா..."

அவள் அவர் மனக்கதவை திரும்பத் தட்டினாள்.

"யெஸ் மேடம்..." அவரும் கலைந்தார்.

"ஆர் யூ ஃபீலிங் நாட் வெல்?"

"நோ மேடம்... இப்பதான் நான் ரொம்ப ரிச்சா ஃபீல் பண்றேன்..."

"தென்... ஓய் ஆர் யூ ஸ்ட்ரக்ளிங்?"

"யெஸ்... ஐ ஹாவ் சம் ஸ்ட்ரக்ளிங்ஸ். இதுக்கு காரணம் வேற."

"என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"நிச்சயமா. நாம் ஃபேக்டரிக்கு போய்கிட்டே பேசு வோமா?"

"எனக்கு இப்ப ஃபேக்டரிக்கு நான் வரது முக்கியம் இல்லை. இங்க வீட்ல இருந்த லிங்கம் என்ன ஆச்சுன்னு தெரியணும்."

"ஒன் மினிட்.. ராமசாமி..." சண்முகா அந்த நிமிஷம் ட்யூட்டியில் இருக்கும் ராமசாமியை அழைக்க, அவரும் அடுத்த நிமிடம் ஓடி வந்து நின்றார்.

"நீதானே இப்ப ஷிஃப்ட்ல இருக்கே?"

"ஆமாம் சார்..."

"மேடம் இங்க ஒரு சிவலிங்கத்தை வெச்சுருந்துருக் காங்க... அது இப்ப எங்க போச்சுன்னு தெரியல... யார்யா எடுத்தது?"

"அப்படியா...? எனக்கு எதுவும் தெரியாதே சார்."

"என்ன எதுவும் தெரியாது.. நீதானே ட்யூட்டியில இருக்கே. உன் கவனமெல்லாம் இங்க இல்லேன்னா வேற எங்கய்யா?"

ராமசாமி வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்வது ஆபத்து என்று அறிந்தவர். எனவே மௌனமாக சண்முகாவை பார்த்தார்.

க்ளாரா சுற்றிச் சுற்றி பார்த்தாள்.

புஷ்பா மாமி வேறு, மாலை விழுந்ததாகச் சொன்னது அவருக்குள் பரபரப்பைக் கூட்டியிருந்தது.

எங்கே போயிருக்கும்?

சண்முகாவையும் அந்தக் கேள்வி போட்டு துருவிக் கொண்டிருந்தது. நடுவில் மார்புப் பக்கத்தில் இருந்த செல்ஃபோன் சிணுங்கியது. கையில் எடுத்து திரையைப் பார்த்தார். அவரது பி.ஏ. ராம்குமார்!

"யெஸ் ராம்குமார்...."

"எக்ஸ்க்யூஸ் மீ சார்... க்யூபா கஸ்டமர்ஸ் ரொம்ப நேரமா வெயிட் பண்ணிகிட்டிருக்காங்க..."

"ஓ... ஐ ஆம் ஸாரி. நம்ம ஏ.ஜி.எம். அனந்தாச்சாரியை விட்டு அவங்கள இன்ட்ராக்ட் பண்ணிகிட்டிருக்கச் சொல். நான் ஒரு ஒன் அவர்ல வரேன்."

"எம்.டி. எப்படி சார் இருக்கார்?"

"ஓ.கே... சீரியஸா ஒண்ணுமில்லை."

"இங்க இவங்க அவரையும் அவசியம் பாக்கணும்னு சொல்றாங்க..."

"நத்திங் டுயிங்... அவர் ஐ.சி.யில இருக்கார். நானே பர்மிஷன் வாங்கித்தான் பார்த்தேன்."

"ஐ நோ சார்... கிட்டத்தட்ட டென் மில்லியன் டாலர் ஆர்டர். இந்தச் சமயத்துல நம்ம எம்.டி.க்கு ஆக்சிடெண்ட்; ஆகையால அடுத்த தடவை பார்த்துக்கலாம்னு சொல்ல முடியாது. அக்ரிமெண்ட் இம்மீடியட்டா சைன் ஆகணும். அவங்களோட விசிட்டே இதுக்குதான்."

"ஐநோ... ஐநோ... இப்படி ஒரு ஆக்சிடெண்ட் ஆகும்னு யாருக்காவது தெரியுமா என்ன? என்ன பண்றது... நாமதான் டீல் பண்ணனும். டோன்ட் ஒர்ரி... நான் பார்த்துக்கறேன்."

"சீக்கிரம் வாங்க சார். பெங்களூர்ல இருந்து சுக்லா இரண்டு தடவை அந்த பார்ட்டிங்களோட பேசிட்டார். அவர் தாவண்கரே மோட்டார்ஸ் லிமிடெட்டுக்கு இவங்களைத் தள்ளிகிட்டுப் போக துடிச்சுகிட்டு இருக்கார்."

ராம்குமார் சில முக்கிய வியாபாரப் போக்குகளை கோடிக் காட்டினான். அவரும் விடாமல் பதில் சொன்னார். அது அவளது காதிலும் விழுந்தது. உண்மையில் அதுதான் பெரிது. இந்த நேரத்தில் சிவலிங்கம் எங்கே என்று தேடுவதெல்லாம் கடைந்தெடுத்த பொறுப்பற்ற செயலாக அவளுக்கும் தோன்ற, "மிஸ்டர் சண்முகா... என்னவோ க்யூபா கஸ்டமர். அக்ரிமென்ட்டுன்னு காதுல விழுந்ததே... எனிதிங் இம்ப்பார்ட்டண்ட்?"

"யெஸ் மேடம்... இன்னிக்கு மிஸ்டர் சரண்யனோட மேஜர் அசைன்மென்ட்டே இதுதான். இட் ஈஸ் எ வெரி பிக் எக்ஸ்போர்ட் ஆர்டர்."

"நோ பிராப்ளம்... இம்மீடியட்டா கிளம்புங்க. ஐ வில் ஆல்ஸோ கம். சரண்யனுக்குப் பதிலா நான் அவங்கள சந்திக்கிறேன். சரண்யனோட பொசிஷனையும் எக்ஸ்ப்ளான் பண்றேன். இந்த ஆர்டர் தள்ளிப்போகவோ, இல்ல வேற கைக்கு மாறவோ கூடாது. கமான் லெட் அஸ் மூவ்..."

பதிலோடு காரை நோக்கித்தான் நடந்தாள் அவள். சண்முகா உள்ளுக்குள் சபாஷ் என்றபடியே ஹாலில் இருந்த சக்கரவர்த்தியின் படத்தை ஒரு நெகிழ்ச்சிப் பார்வை பார்த்தபடியே புறப்பட்டார்.

❑ ❑ ❑

ஒரு வழியாக அக்ரிமெண்ட் சைன் ஆனது. நல்ல வேளை... சரண்யனின் கைகளுக்கு எதுவும் ஆகவில்லை. கையெழுத்திட்ட ஃபைலை மூடி எடுத்துக் கொண்டவள், குனிந்து அவன் நெற்றியில் ஒரு முத்தமிட்டாள்.

அப்படியே, உன் இண்டஸ்ட்ரி பற்றி எனக்கு ஆனா ஆவன்னா தெரியாது... ஆனா இன்னிக்கு டென் மில்லியன் டாலர் ஆர்டர் ஒண்ணை வெரி ஃபர்ஸ்ட் டேவே வாங்கிட்டேன். உன் சைனுக்காக லேட்டாறத கூட நான்

விரும்பல. அதான் நேரே இங்க வந்தேன். இதுக்கு ஜி.எம். சண்முகா, அவர் பி.ஏ. ராம்குமார் இவங்க இரண்டு பேருமே ஒரு பிரதான காரணம். அவங்களை அப்புறமா செல்லுல கூப்பிட்டு, ஒரு அப்ரிஷியேஷனை அவங்களுக்கு பாஸ் பண்ணிடு... ஓ.கே?

"ஷ்யூர் க்ளாரா... ஷ்யூர்..."

"ஓ.கே.ப்பா... நான் கிளம்பறேன். அந்த வி.ஐ.பி.ஸ் காத்துக்கிட்டு இருப்பாங்க."

"தேங்க்யூ ஸோ மச் க்ளாரா..."

"எதுக்கு?"

"வந்த முதல் நாளே உன்னை வேலை வாங்க ஆரம்பிச்சுட்டேன்."

"இது ஒரு ரேர் ஆப்பர்ச்சூனிட்டி சரண். பை, நாளை நைட் மீட் பண்றேன்."

-அவள் ஃபைலுடன் துள்ளியடி விலகினாள். அவனுக்கு கண்ணோரமாய் நீர் கோர்த்துக் கொண்டு விட்டது.

❑ ❑ ❑

அந்த க்யூபா பார்ட்டிகள், க்ளாராவின் உபசரிப்பில் திணறிப் போனார்கள். கூடவே இருந்த சண்முகா அவளது அணுகுமுறைகளை அப்படியே ஒரு வீடியோ கேமரா போல படம் பிடித்துக் கொண்டிருந்தார்.

சக்கரவர்த்தி சார் எப்படி கைகளை ஆட்டி ஒருவித பாடி லாங்வேஜோடு பேசுவாரோ, அப்படியே இருந்தது க்ளாராவின் பேச்சும். ஒருவேளை அவர் ஆவிதான் இவளுக்குள் புகுந்து கொண்டுவிட்டதா என்று கூட தோன்றியது. அந்த க்யூபா பார்ட்டிகளும் ஒரு வழியாக கிளம்பி சென்றனர்.

திரும்பி வந்து நின்றவளை நோக்கி படு உற்சாகமாக கையை நீட்டினார் சண்முகா. அவளும் சிரித்தபடி அவரது பாராட்டை அங்கீகரித்தாள்.

ஏ.ஜி.எம். அனந்தாச்சாரியும் அசந்திருந்தார். "சார்.... ரியலா சொல்றேன். இது பயங்கர வொண்டர். இன்னிக்கு இந்த ஆர்டர் கோவிந்தான்னுதான் நினைச்சேன். அந்த கடங்காரன் சுக்லா, ஷேக் பண்ணிண்டே இருந்தான். அதுக்கு தோதா எம்.டி. வேற ஆக்சிடெண்ட் ஆகிட்டதா தகவல் வரவும், இங்க ஃபேக்டரியே ஸ்தம்பிச்சிடுத்து.

"இனி ஃபேக்டரி அவ்வளவுதான்னு ரொம்பப் பேர் நினைச்சுட்டாங்க. இன்க்ளுடிங் மைசெல்ஃப்."

"இல்ல அனந்தா... சக்கரவர்த்தி சாரோட தர்மங்கள் வேலை செய்ய ஆரம்பிச்சிடுச்சு. இந்த க்ளாரா ஒரு அபூர்வமான பொண்ணு. இவளோட மைண்ட் செட் அப். எனக்கு ஒரு ப்ளசன்ட் சர்ப்ரைஸ், இனி நமக்கு எந்தப் பிரச்சினையும் வரப் போறதில்லை. நல்ல காலம்தான்."

-அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அங்கே திப்பிடித்தாற் போன்ற ஒருவித புகை மூட்டம்!

8

ஜோதிடர் நாகபூஷணம் என்னைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டார். நான் சற்றும் எதிர் பார்க்காத வகையில் சரேலென்று காலில் விழுந்து விட்டார்.

என்னைவிட வயதில் பெரியவர்... மிகப்பெரிய மேதமை உடையவர் என்னை வணங்குகிறார் என்றால்...? எனக்குப் பதைத்தது..

'என்ன ஜோதிடரே... எதுக்கு இப்படி என்னை பாவியாக்கறீங்க?'

'பாவியா...? நீயா...? போய்யா... நீ இப்ப சிரஞ்ஜீவிய்யா...!'

'அப்படின்னா?'

'சிரஞ்சீவின்னா தெரியாதாக்கும்..? அமிர்தம் சாப்பிட்டவன்... தேவன்.'

'போதும் ஜோதிடரே... எதுக்கு இப்படித் தூக்கி வைக்கறீங்க?'

'நான் தூக்கி வைக்கலை. உன் ஜாதகத்துக்கு ராகுவும் கேதுவும்தான் உன்னை இப்படித் தூக்கி வெச்சிருக்காங்க...'

'என்ன சொல்றீங்க..? இன்னும் கொஞ்ச நாள்ல சாகப் போறேன் நான். சனி தசைல மாரகம் நடக்குதுன்னு சொன்னவர் நீங்க...'

'உண்மைதான்.. மாரகத்துல உடம்மை இழந்து தீரணும். உயிர் காத்துல கலந்து அலையணும். அதெல்லாம்தான் காட்டுல சாப்பிட்ட அமிர்தமணிப் பழத்தால நடந்து முடிஞ்சிடிச்சே?'

-ஜோதிடர் இப்படி கேள்வி கேட்டு எனக்கு இன்ப அதிர்ச்சியளித்தார்.

'அப்படின்னா எனக்கான சாவு..?'

'உனக்கு இனி சாவே கிடையாது. மலைல இருந்து குதிச்சாலும் பிழைச்சுடுவே நீ...'

'நம்ப முடியலையே...'

'மனுஷ அறிவால நம்ப முடியாதுதான்...'

'இப்படி சொன்னா எப்படி?'

'வேற எப்படிச் சொல்ல? அந்த சித்தவனத்துக்குப் போக வழி தெரியாம தவிச்சுகிட்டிருக்கறவன் நான்... அங்க போய் அமிர்தமணிப் பழம் சாப்பிட்டு, பதினெட்டு சித்தர்ல ஒருத்தரோட தரிசனமும் பெற்று திரும்பியிருக்கேன்னா சும்மாவா..? ஞானகாரகன் கேதுவும், ராகுவும் அடுத்த ஜென்மத்துல உங்களை பெரிய சன்யாசியா பிறக்க வைப்

..பாங்கன்னு நான் ஒரு கணக்கு வெச்சிருந்தேன். அவங்க இப்பவே அதைக் கொடுத்துட்டாங்க.

'என் ஜாதக கணக்குலயும் ஒரு பிசகு.'

'அப்படின்னா எனக்கு சாவு இல்லையா?'

'அந்த நினைப்பை விடு. நீ மனசுவெச்சா அந்த மகாதேவ ரகசியத்தைக் கூட கண்டுபிடிக்கலாம்!'

ஜோதிடர் 'மகாதேவ ரகசியம்' என்று சொன்னது என் நெஞ்சில் ஒரு சுடர்போல எரியத் தொடங்கியது.

-ரசமணி வித்தகர் பெரியய்யா

திடீரென்று தோன்றிய அந்தப் புகைமூட்டம் எல்லோர் கவனத்தையும் திசை திருப்பியது. அனந்தாச்சாரியும் சண்முகாவும் ஓடினார்கள்.

அவர்கள் நின்று பேசிக் கொண்டிருந்த கான்ஃபிரன்ஸ் ஹாலுக்கு பக்கத்தில்தான் இருக்கிறது ஸ்டோர்ஸ் செக்ஷன். அங்கே ஸ்டாக்கில் இருந்த ஹைட்ரோ குளோரைடு ஆசிட்தான் கார்பாய் ஒழுக்கினால் கசிந்து, காற்றோடு கிரியை புரிந்து புகையாக உருமாறியிருந்தது. இந்த நொடியில் ஒரு தீக்குச்சி உரசப்பட்டாலும் கூட போதும்.. கதை கந்தல்தான்!

நல்லவேளை ஸ்டோர்ஸ் ஆப்பரேட்டர், செக்யூரிட்டிக்கு தகவல் தர அவர்கள் மணல்வாளி, பவுடர் ஸ்ப்ரேயர் என்று பாய்ந்து வந்தார்கள். போர் வீரர்கள் போல வளைத்துக் கட்டி நின்று ஒழுகும் கார்பாயை மணலால் மூடி புகையை சிறைப் பிடித்தார்கள்.

அதன்பின் கழுத்தில் வியர்வை பிரள ஒருவரை, ஒருவர் பார்த்துக் கொண்டு மெல்ல வெற்றிச் சிரிப்பும் சிரித்தார்கள்.

அனந்தாச்சாரியும் சண்முகாவும் கூட செக்யூரிட்டி கார்டுகளின் சமயோஜிதத்தைப் பாராட்டி கைகுலுக்கி விட்டு, ஸ்டோர்ஸ் இன்சார்ஜ் ஆன ராமபத்ரனிடம்

வந்தனர். பிளான்ட் மேனேஜர் சதாசிவ ராவ் அவர்களுக்கு முன்னால் வந்து பிரித்து மேய ஆரம்பித்திருந்தார்.

'எப்படி ஆசிட் கார்பாய் லீக் ஆச்சு? நீ ஏன்யா கவனிக்கல..? கொஞ்சம் விட்ருந்தா மொத்த ஃபேக்டரியே எரிஞ்சிருக்குமே...! நீயும்ல போய் சேர்ந்துருப்பே... தூங்கிகிட்டா வேலை பார்க்கறே? இப்பவே சார்ஜ்ஷீட் தரச் சொல்றேன்... நாலு நாள் சஸ்பெண்ட் பண்ணாத்தான் புத்தி வரும் உனக்கு...'

-சதாசிவ ராவ் மூச்சிரைக்க கத்துவதில் கொஞ்சம் சுயநலமும் இருந்தது. இல்லாவிட்டால் அதேகத்தல், அவர் அளவில் அனந்தாச்சாரியிடம் இருந்து நிகழும். சதாசிவ ராவ் மேனேஜராகவே ஏழு வருஷமாக இருக்கிறார். சீனியர் மேனேஜராக இந்த வருடமாவது ப்ரமோட் ஆகவேண்டும் என்பது அவர் கனவு. அதை இப்படி நடக்கும் எதிர்பாராத நிகழ்ச்சிகள் கெடுக்கப் பார்த்தால் விடுவாரா?

க்ளாராவும் அவ்வளவையும் கவனித்துக் கொண்டு தானிருந்தாள். தூர நின்று கவனித்தவள் கிட்டே வரவும், சதாசிவ ராவ் பணிவாகச் சற்று கையை கட்டிக் கொண்டு முகத்தை முடிந்த அளவு ஒரு மாதிரி வைத்துக் கொண்டு அவளைப் பார்த்தார். அவளோ அந்த ஆசிட் கார்பாய் அருகே சென்று பார்த்தாள். மணலால் மூடியிருந்தது அது. திரும்பினாள். நடுங்கிக் கொண்டிருந்தார் ராமபத்ரன். அவரை சமீபித்தவள், "டோன்ட் ஒர்ரி மிஸ்டர் ராமபத்ரன்..." என்றாள் அவரது நேம் பேட்ஜைப் பார்த்து.

ஜி.எம். சண்முகா வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இனிமே கவனமாக இருங்க.. ஆசிட் ஐட்டமெல்லாம் இன்ஃப்ள மேட்டரி ஐட்டம்ஸ். அதை இப்படி எல்லா சாமான்களோட ஸ்டோர்ல ஸ்டாக் வைக்கறது சரியான்னு யோசியுங்க..."

-தட்டிக் கொடுப்பது போல பேசினாள். எல்லோரிடமும் இறுக்கமும் தளர்ந்தது. நடந்தாள். சண்முகாவும் அனந்தாச்சாரியும் அவளைத் தொடர்ந்தனர். ரவுண்ட் டேபிள் மேல் டீயும் பிஸ்கட்டும் காத்திருந்தன. க்ளாரா எடுத்துக் கொள்ளச் சொல்லி சண்முகாவைப் பார்த்து கையசைத்தாள். நல்ல பண்பு.

"தேங்க்யூ..." என்றபடி டீ கோப்பையை எடுத்து உறிஞ்சினார் சண்முகா. அப்படியே, "இன்னிக்கு கோட்டா முவர்..." என்றார் பெருமூச்சோடு..

"ஐ ஆல்ஸோ திங்க் ஸோ..." -என்றார் அனந்தாச்சாரி.

"வாட் டு யூ மீண்?" க்ளாரா அதைக் கேள்வியாக்கினாள். இருவருமே விலா எலும்பில் தூண்டில் முள் மாட்டியது போல ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"மிஸ்டர் சண்முகா... உங்களைத்தான் கேட்டேன். இன்னிக்கு கோட்டா ஓவர்னீங்களே.. எதை வெச்சு?"

"அது வந்து மிஸ் க்ளாரா..."

"நீங்க தயங்கறதப் பார்த்தா ஏதோ நம்பிக்கை சார்ந்த விஷயம் போலத் தெரியுதே...?"

"எக்ஸாக்ட்லி..."

"ப்ளீஸ், விவரமா சொல்லுங்க..." பிரிட்டானியா பிஸ்கட்டின் துணுக்கு, முந்திரிப் பற்களிடம் நசுங்க அவள் கேட்ட விதத்தில் அதிகபட்ச ஆர்வம்.

"எப்படி ஆரம்பிக்கறதுன்னுதான் தெரியல..."

சண்முகா அனந்தாச்சாரியைப் பார்த்தார்.

"இல்ல சார்... இவங்க தெரிஞ்சுக்கட்டும், இவங்க தெரிஞ்சுக்கறதுதான் நல்லது..." என்றார் அனந்தாச்சாரி.

"நீங்களே சொல்லிடுங்களேன் அனந்தா..."

"நானா?"

"ஒய் நாட்... என்னைவிட நீங்க ஹைலி ஆர்த்தடாக்ஸ். பன்னெண்டு திருமண், பூணூல் ஏகாதசி விரதம்னு தூள் பண்றவர் நீங்க. ஐ திங்க் யூ ஆர் எ வெரிஆப்ட் பர்சன்."

"நன்னாருக்கு... விட்டா நான் முக்திநாத் போய்ட்டு வந்ததைப் பத்திக் கூட சொல்வேள்போல இருக்கே..."

-அவர்கள் இருவரும் தலைப் பின்னல் போல தங்களுக்குள்ளேயே போட்டுக்கொண்ட பீடிகை, க்ளாராவை ரொம்பவே உசுப்பியது.

"மிஸ்டர் சண்முகா... மிஸ்டர் அனந்தாச்சாரி.. ஒரு விஷயத்தைச் சொல்ல உங்களுக்குள்ளே இவ்வளவு தயக்கமா?"

"இல்ல மிஸ் க்ளாரா... இது ஒரு மாதிரியான விஷயம்..."

"எகெய்ன் அண்ட் எகெய்ன், யூ ஆர் கோயிங் டு த சேம் பிளாட்ஃபார்ம்."

"விடுங்கோ சார்... நானே சொல்றேன்?"

-அனந்தாச்சாரி முன்வந்தார். அதற்குமுன் சுற்றி ஒரு பார்வை பார்த்தார். கண்ணாடிச் சுவர்களுக்கு அப்பால் தொழிற்சாலை ஊழியர்களின் நடமாட்டங்கள். கவனமாகப் போய் அந்த கான்ஃப்ரன்ஸ் ஹால் கதவைத் தாழிட்டவர், கண்ணாடி சுவர்களையும் கர்ட்டன்களால் மூடினார். க்ளாரா மிக மிகக் கூர்மையாகிக் கொண்டிருந்தாள். அப்படியே ஏ.சி.யின் டெம்ப்பரேச்சர் லெவலை சற்று கூட்டிவிட்டு வந்த அனந்தாச்சாரி, ஞாபகமாக கான்ஃப்ரன்ஸ் ஹாலில் மிக முக்கிய கூட்டம் நடக்கிறது என்னும் செய்தியைச் சொல்லாமல் சொல்லும் மஞ்சள் நிற விளக்கை ஆன் செய்துவிட்டு க்ளாரா எதிரில் வந்து அமர்ந்தார்.

சண்முகா பரபரப்பாகக் கைகளை தேய்த்து விட்டுக் கொண்டிருந்தார். முகத்தில் ஒருவித இனம்புரியாத பரபரப்பு.

"மிஸ் க்ளாரா... இப்ப நான் சொல்லப்போற விஷயத்தைக் கேட்டா உங்களுக்கு சிரிப்புதான் வரும். ஒரு எஞ்ஜினீயரிங் இண்டஸ்ட்ரிக்குள்ள நார்மலா பிசினஸ் சம்பந்தமான டிஸ்கஷன்ஸ்தான் நடக்கும். சம் டைம்ஸ், யூனியனோட வெல்ஃபேர் மேட்டர்ஸ் பேசுவோம். நடுநடுவுல அப்பப்ப கொஞ்சம் கிரிக்கெட், கொஞ்சம் ஷேர் மார்க்கட், கொஞ்சம் பாலிடிக்ஸும் பேசிக்கறது உண்டு. ஆனா நான் இப்ப பேசப் போற விஷயத்தை நிச்சயமாக எந்த இண்டஸ்ட்ரியலையும் யாரும் பேசியிருக்கமாட்டாங்க. எனைப்போல டாப்லெவல்ல உள்ள ஒருத்தர், நிச்சயமா இதை எல்லாம் யோசிச்சுக்கூட பார்த்துருக்க மாட்டார்..."

-அனந்தாச்சாரியிடம் பீடிகை பலமாக இருந்தது. ஆனால் அதற்காக க்ளாரா அலுத்துக் கொள்ளவில்லை. அவர் போக்கில் விட்டுவிட்டாள்.

"நம்ம ஃபேக்டரில கொஞ்ச நாளாவே தினம் ஒரு பிராப்ளம். நான் சொல்றது டெக்னிக்கல் பிராப்ளமில்ல... மனுஷ சக்தியால எடைபோட்டு பார்க்கமுடியாத அமானுஷ்யமான பிராப்ளம்..."

"அமானுஷ்யம்...?"

"யெஸ்... டோட்டலி மித்திகல். மித்திகலைதான் அமானுஷ்யம்போம்..."

"எப்படி?"

"கொஞ்சம் முந்தி ஆசிட் லீக் ஆகி புகை வந்ததே அந்த மாதிரி..."

"தட் வாஸ் கொயட் ஹேப்பண்ட் மிஸ்டர் அனந்தாச்சாரி..."

"ஐ அக்ரி.. நேத்து செக்யூரிட்டி டென்ல தீப்பிடிச்சதே அதை அப்ப என்னன்னு சொல்றது? முந்தா நாள் உள்ளே ஃப்ளோர்ல ஒரு ஆப்பரேட்டர் கை துண்டாப்

போச்சே, அதை என்னன்னு சொல்றது? குண்டூர் போய்ட்டு திரும்பின கம்பெனி ஒர்க்கர்ஸ், குரூப்பா ஆக்சிடெண்ட்டுல செத்துப் போனாங்களே... அதை என்னன்னு சொல்றது? அவ்வளவு ஏன்... எம்.டி. சீட்ல உட்கார்ந்த சரண்யன் சார், இப்ப ஹாஸ்பிடல்ல இருக்காரே... அதை என்னன்னு சொல்றது?"

அனந்தாச்சாரியின் அடுக்கடுக்கான கேள்விகள், க்ளாராவை கட்டிப் போட்டுவிட்டன.

"நோ... நோ... ஆல் ஆர்வெரி நேச்சுரல்... ஜஸ்ட்லைக் கோயின்ஸிடென்ஸ்" என்று தோளைக் குலுக்கிக் கொண்டுதான் அவள் ரீயாக்ட் செய்வாள் என்று நினைத்த வர்களுக்கு ஏமாற்றம். க்ளாரா அனந்தாச்சாரியையே பட்டு கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். நடுவில் ரவுண்ட் டேபிளில் இருந்த தொலைபேசியிடம் சிணுங்கல். சண்முகா நிதானமாக எடுத்து காதைக் கொடுத்தார்.

"நான் ஆஸ்ட்ரோ சைன்டிஸ்ட் நாகபூஷணம் பேச றேன்..." என்று மறுமுனை வழியாக ஜோதிடர் நாக பூஷணம் பேசினார்.

சண்முகா முகத்தில் தீ ஜ்வாலைகள் பட்டு எதிரொலிப் பது போல ஒரு புத்தொளி!

9

ஜோதிடர் நாகபூஷணம் குறிப்பிட்ட மகாதேவ ரகசியம் என்கிற விஷயம் என் பட்டறிவுக்குப் புதிது. நான் அப்பொழுதே ஆவலாகிவிட்டேன். ஜோதிடரிடம் அது என்ன, மகாதேவ ரகசியம்? என்று கேட்டேன். முதலில் சிரித்தவர், முக்தி ரகசியத்தைத் தான் அப்படிச் சொன்னேன் என்றார். எங்கள் பேச்சும் வளர்ந்தது.

"முக்தி ரகசியமா?"

"ஆம்... நாம் முக்தி அடைவது என்பது சாதாரண விஷயமா என்ன?"

"எது முக்தி என்றே தெரியாத நிலையில் அது சாதாரணமா, இல்லை அசாதாரணமா என்று முன்கூட்டியே எப்படி தீர்மானிக்க முடியும்?"

"சொர்க்க பதவி தானய்யா முக்தி?"

"சொர்க்க பதவி, அதாவது இன்பத்தைத் தவிர வேறு ஒன்றுமேயில்லாத வாழ்க்கையைதான் நீங்கள் சொர்க்கம் என்கிறீர்கள்.. சரிதானே?"

"சரியாகச் சொன்னாய்... அதேதான்?"

"அது எப்படி துன்பம் இல்லாமல் ஒருவர் இன்பத்தை உணரமுடியும்?"

"இது விதண்டாவாதம். முக்தி அடைந்து விட்டால் அவ்வளவுதான். மறுபிறப்பு கிடையாது. எப்பொழுதும் ஏகாந்தம்தான். உல்லாசம்தான்... சல்லாபம்தான்..."

"அடக் கொடுமையே... இந்த உல்லாச சல்லாப ஏகாந்தத்துக்காகவா முனிவர்களும், சித்தர்களும் அவ்வளவு சிரமப்பட்டு தவம் செய்கின்றனர்?"

"பின் என்ன..? அது என்ன சாதாரண விஷயமா?"

"அது சரி... சொர்க்கத்திலும் இதே உடம்போடு தான் நம் வாழ்க்கை இருக்குமா?"

"யாருக்குத் தெரியும்... நான் என்ன அதைக் கண்ணாலா பார்த்திருக்கிறேன்?"

"பார்த்திராத ஒன்றைப் பற்றி எப்படி இவ்வளவு திடமாகப் பேசுகிறீர்கள்?"

"பெரியய்யா... என்னய்யா நீ? தேவ அனுபவத் துக்கு உள்ளாகி சிரஞ்ஜீவியாக இருந்து கொண்டு நாத்திகனைப் போல கேள்வி கேட்கிறாய்!"

"இல்லை ஜோதிடரே... சொர்க்கம் நரகம் பற்றிய கருத்துக்களில், செய்திகளில் எனக்கென்னவோ மனித மனத்தின் கற்பனைதான் நிரம்ப இருப்பது போல ஒரு உள்ளுணர்வு."

"போய்த் தொலையட்டும்... ஒன்று மட்டும் உறுதி. உன் மரணம் இப்பொழுதைக்கில்லை. இன்னும் ஒரு நூறாண்டு நீ வாழக் கூடும். அனேகமாக இனி உனக்கு நரைக்காது. கண் பார்வையும் குறைவு படாது. பசியும் பெரிதாகப் பாதிக்காது. உன் பழைய ஜாதகம் இனி உனக்குப் பொருந்தாது. இப்பொழுது நீ அடுத்த பிறப்புக்கான கணக்கில் ஆயுளைத் தொடங்கியிருக்கிறாய் என்பதே என் கணிப்பு. நீ மனது வைத்தால் அஷ்டமாசித்தியைக் கூட அடையலாம். கர்ம உடம்புக்கு சித்திகள் வசப்படுவது சிரமம். கிரகங்கள் கணக்கு கேட்கும். உன் விஷயம் அப்படியில்லை... உன்னுடையது கர்ம உடம்பல்ல. நீ மனது வைத்தால் அந்த சிவனின் தரிசனத்தையே பெறலாம். எதற்கும் நீ அஞ்சவும் தேவையில்லை. பெரிய பெரிய விஷயங்கள் கூட, தொட்டுப் பழகத் தொடங்கிய வுடன் சாந்தம் போல உன்னிடம் ஒட்டிக் கொள்ளும். சுருக்கமாக சொல்லப்போனால் நீ ஒரு அதிசயப் பிறவி."

-சிலர் மேடையில் செயற்கையாகப் புகழ்ந்துரைப் பது போல ஜோதிடர் புகழ்ந்து பேசுவதாகத்தான் முதலில் தோன்றியது. ஆனால் அவர் சொன்னது தான் உண்மை என்பதற்கு ஏற்ப ஒரு அதிசய சம்பவம் நடந்தது. அது...?

-ரசமணி வித்தகர் பெரியய்யா

ஜோதிடர் நாகபூஷணத்தின் குரல் கேட்ட மறுநொடி, அனந்தாச்சாரி மற்றும் சண்முகா முகத்தில் ஒரு அதீத பரவசம்.

"நமஸ்காரம்... எப்படி இருக்கேள்? க்ஷேம சௌக்யங்கள்லாம் எப்படி?"

சண்முகா வாத்சல்யமாக விசாரிக்கத் தொடங்கி விட்டார்.

"நான் நல்லாத்தான் இருக்கேன். உங்க எம்.டி.தான் விபத்து நடந்து ஆஸ்பத்திரியில இருக்கார்னு காதுக்கு சேதி வந்தது. அதான் ஃபோன் பண்ணினேன்."

"ஆமாம் மிஸ்டர் நாகபூஷணம். அவர் இப்ப ஆஸ்பத்திரியிலதான் இருக்கார். ஆனா உயிருக்கு ஒண்ணும் ஆபத்து இல்ல."

"அது எனக்கும் தெரியும். போகட்டும்.. கவனமா பாத்துக்குங்க. அவர் பேச்சைக் கேட்டுகிட்டு சொக்கம் பட்டி விஷயத்துல கவனமில்லாம இருந்துட வேண்டாம். ஒரு மாற்ற முடியாத தீவினைக்கு ஒரே பரிகாரம், நித்ய மும் ஒரு நல்வினை செய்யறதுதான். அதுக்கு நான், வழியைக் காட்டிட்டேன். நான்கற ஆங்காரம், அலட்சியம் இதுதான் இப்ப உங்க எம்.டி.யை ஆஸ்பத்திரியில படுக்க வெச்சுருக்கு... இது அப்படியே நீடிச்சா உங்க திருவனத்தையே இழுத்து மூட வேண்டி வந்துடும். திரும்ப ஒரு தடவை எச்சரிக்கிறேன்."

நாகபூஷணம் பேச்சை முடித்துக் கொண்டார். சண்முகா அந்தப் பேச்சின் காரணமான சலனரேகைகள் முகத்தில் ஓட, க்ளாராவைப் பார்த்தார். அவள் டேபிள் லெயிட்டை உருட்டியபடியே மிகக் கூர்மையாக அவர் டெலிபானில் பேசுவதைக் கேட்டுக் கொண்டுதானிருந்தாள்.

அவர் பேசியதால் அனந்தாச்சாரியும் பேசவில்லை.

"நீங்க ஆரம்பியுங்க அனந்தாச்சாரி..." சண்முகா துரிதப்படுத்த...

"யார் சார் ஃபோன்ல...? ஜோசியர் நாகபூஷணமா?"

"ஆமாம், நம்ம எம்.டி.யோட ஆக்சிடென்ட் பத்தி கேள்விப்பட்டுத்தான் ஃபோன் பண்ணினார்."

"வேற எதாவது முக்கியமான விஷயம் சொன்னாரா?"

"ஏற்கெனவே சொன்னதுதானே... நாம என்ன செய்ய முடியும்? ஊதற சங்கை ஊதி வைக்கலாம். ஆனா நடக்கறதும் நடக்காததும் நம்ம கையிலயா இருக்கு?"

"ஆக்சிடென்ட்டுக்கு காரணமே ஒரு அலட்சியம்தான். உங்களுக்கு முழு விவரம் தெரியாது. நீங்க மேடத்துக்கு சொல்ல வேண்டியதைப் பூரா சொல்லி முடியுங்கோ..."

-சண்முகா அனந்தாச்சாரியை திரும்பவும் துரிதப் படுத்த, க்ளாரா சட்டென்று அவர்கள் இருவரையும் பார்த்து பேசியது போதும் என்கிற மாதிரி கையை உயர்த்தினாள்.

அப்படியே, "மிஸ்டர் அனந்தாச்சாரி. பீடிகை எல்லாம் வேண்டாம். பளிச்சுன்னு விஷயத்துக்கு வாங்க. நீங்க மாறி மாறிப் பேசிக்கறதைப் பார்த்தா எனக்கு ஒரே குழப்பமா இருக்கு..."

"சாரி மேடம்... இது ஒரு அப்நார்மலான விஷயம். அதான் அதுக்குண்டானபடி பேச வேண்டியிருக்கு..."

"அது என்ன... முதல்ல சொல்லுங்க...?"

"நம்ம ஃபேக்டரியோட எக்ஸ்பான்ஷனுக்காக மதுரைக்கு பக்கத்துல சொக்கம்பட்டிங்கற கிராமத்துல இடம் வாங்கியிருக்கோம்."

"நல்ல விஷயம்தானே?"

"எக்ஸ்பான்ஷன்கறது நல்ல விஷயம்தான். ஆனா வாங்கியிருக்கற நிலத்துலதான் சிக்கல்."

"எப்படி?"

"அது லார்ட் சிவனோட சொத்து. ஐ மீன், எங்க இந்து மதத்துல சுப்ரீம் காட் ஷிவாதான். அவருக்கு அந்த லேண்டை ஒன்ஸ்அபான் எ பீரியட்ல எழுதிக் கொடுத்

ட்டாங்க. ஆனா இடைக்காலத்துல அது எப்படி எப்படியோ பலர் கைமாறி, இப்ப சக்கரவர்த்தி மோட்டார்ஸோட ப்ராபர்ட்டியா மாறியிருக்கு."

"அப்ப இல்லீகல் ப்ராபர்ட்டின்னு சொல்லுங்க."

"வெரி சாரி.. இல்லீகல் ப்ராபர்ட்டி கிடையாது. இம்மாரல் ப்ராபர்ட்டின்னு வேணும்னா சொல்லலாம்..."

"ஓ.கே. ஐ அண்டர் ஸ்டுட், அதனால என்ன இப்ப?"

"என்ன அப்படி சொல்லீட்டீங்க. சிவன் சொத்து அலநாசமாச்சே..?"

-அனந்தாச்சாரி கன்னக் கதுப்புகள் துடிக்க திருப்பிக் கேட்டதில் நல்ல ஆழமான உணர்ச்சிகள் தெரிந்தன. சண்முகா தன் பங்குக்கு இடையிடத் தொடங்கினார்.

"மிஸ் க்ளாரா... அனந்தாச்சாரி சொல்ற எல்லாமே மிஸ்டிக் சார்ந்த பிஷயங்கள். கிறிஸ்டியானிட்டில ஜீசஸ் க்ரைஸ்ட்டோட பௌலைத் தேடி பலரும் இப்பவும் முயற்சி செய்யறதா கேள்விப்பட்றோமே... அப்படித்தான் இதுவும் ஒரு நம்பிக்கை சார்ந்த விஷயம். அனா உங்களுக்கு அபத்தமா தெரியும்.

இன்ஃபாக்ட், ஃபேக்டரில தினம் ஒரு ஆக்சிடென்ட். இப்படி எல்லாம் இதுக்கு முந்தி நடந்ததேயில்லை. அது தான் எங்க பயத்தையே அதிகரிக்க வைக்கறது."

"ஐ மீன்... லார்ட் சிவா பனிஷ் பண்றார்னு சொல்றீங்களா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான். இந்த உலகத்துல யாரா இருந்தாலும் சரி, சிவன் சொத்தை அனுபவிக்க நினைச்சா அழிஞ்சு போயிடுவாங்கிறது எங்களோட நம்பிக்கை."

"அதை ஒரு ரொம்ப நல்ல விஷயமா நானும் நினைக்கிறேன். ஆனா ஒரு சந்தேகம்..."

க்ளாரா நிமிர்ந்து அமர்ந்தாள். சண்முகமும் அனந்தாச்சாரியும் அவளையே உற்றுப்பார்த்தனர்.

"ஒரு இம்மாரல் ப்ராப்பர்ட்டி விஷயத்துக்கே இவ்வளவு ப்ராப்ளம். தினம் ஒரு ஆக்சிடென்ட்டுன்னா இந்த வேர்ல்டுல செகண்டுக்கு செகண்டு எவ்வளவோ தப்பான விஷயங்கள் நடக்குதே, அங்கெல்லாம் லார்ட் சிவா ஏன் பொறுமையா வேடிக்கை பார்க்கறார்...?"

-அவள் கேள்வி, அவர்கள் இருவரையும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள வைத்தது.

"மிஸ் க்ளாரா... இந்தக் கேள்வியை நாங்க கேட்டுக்காம இருப்போமா?"

"அப்படின்னா உங்க பதில் என்ன?"

"எனக்கென்னமோ இதெல்லாம் தெய்வச் செயலா இருக்காதுன்னுதான் தோண்றது. எல்லாமே ஏன் மேன் மேடா இருக்கக் கூடாதுன்னு யோசிச்சிண்டிருக்கேன்...."

-சண்முகாவின் பதில், அனந்தாச்சாரியையே கிள்ளியது.

"இன்ஃபாக்ட் சூரியன்ல இருந்து தெறிச்சு விழுந்ததுதான் இந்தப் பூமிங்கறது சைன்ஸ். அப்படிப் பார்த்தா இந்த பூமி மாதிரி எவ்வளவோ அண்டங்கள், பிளான்ட்ஸ் எல்லாம் ஆகாசத்துல இருக்கு.

'அவ்வளவையும் கணக்குல வெச்சுப் பார்க்கும்போது நம்ம ஃபேக்டரி வேண்ட் நூறு ஏக்கர்ங்கறது ஒரு புள்ளிக்குள்ள புள்ளிக்குள்ள புள்ளிக்குள்ள புள்ளியாகூட இருக்க முடியாது.

'அதாவது மெரினா பீச்சுக்குப் போய் ஒரு கை கடல் தண்ணியை மொண்டுண்டு வந்தா அது எவ்வளவு இருக்கும்... அதையும் விட குறைவான அளவு இடத்துக்காக அண்ட சராசரங்களை படைச்சு ஆட்டியும் வைக்கற அந்த ஈஸ்வரன் நம்மை எல்லாம் பனிஷ் பண்றாங்கறத

அந்த ஈஸ்வரனையே கேவலப்படுத்தற மாதிரி கூட தோண்றது."

"எதுக்குச் சொல்ல வரேன்னா..."

-திரும்பவும் விஸ்தாரமானது சண்முகாவின் பேச்சு.

க்ளாரா பொறுமை இழந்தவள் போல, "நோ மிஸ்டர் சண்முகா.. நீங்க தெளிவா யோசிக்கணும், முதல்ல இந்த பூமியை சூரியனோட ஒரு பார்ட்னு சொல்லி சைன்ஸ் பேசிட்டு, அப்படியே வழுக்கி, லார்ட் ஷிவாகிட்ட போய்ட்டீங்க. அவருக்கு அண்ட சராசரங்களே சொந்தமா இருக்கும்போது இந்த நூறு ஏக்கர்லாம் ரொம்ப அல்பம்னு சொல்ல வந்த மாதிரி தெரிஞ்சுது. இதெல்லாம் ஹ்யூமன் தாட்ஸ்! கடவுள் விஷயத்தை ஹ்யூமன் தாட்ஸால அதோட லைஃப் ஸ்டைல் திங்கிங்கால எந்த அளவு சரியா புரிஞ்சுக்க முடியும்னு எனக்குத் தெரியல.

'ஏன்னா இந்த ஆகாயம், காற்று, தண்ணி, நெருப்பு, பூமி இதெல்லாம் நம்மைவிட சுபீரியர். நாம பொறக்கறதுக்கு முந்தியே இருந்தது. நாமபோன பின்னாலயும் இருக்கப் போகுது. இதோட கம்ப்பேர் பண்ணா நாம ரொம்ப ரொம்பச் சின்னவங்க. அதைவிட சின்னது, நம்ம திங்கிங் எபிலிடி!

'சின்ன நம்ம மூளையால எல்லாத்தையும் புரிஞ்சுக்க முயற்சி செய்யறோம். அதைப் பாராட்டலாம். ஆனா அது முடியுமா? ஈஸ் இட் பாசிபிள்...? துணியை மீட்டர் கணக்கால அளந்து வாங்கினாதான் சரியான அளவு கிடைக்கும். அதை எடை போட்டு வாங்கினா சரியான அளவு கிடைக்காது இல்லையா?

'இப்படி மிதிக்கலான விஷயங்களைப் புரிஞ்சுக்கவும் ஒரு மெத்தட் இருக்கு. அது தெரியாம பேசினா எல்லாமே தப்பும். சரியான கன்க்ளூஷனுக்கும் வரமுடியாது."

-க்ளாரா சண்முகாவின் வாயை அடைப்பது போல் பேசியதில் அவரிடம் சிலிர்ப்பு. ஒரு அமெரிக்கப் பெண்ணிடமா இத்தனை ஞானம்! ஆச்சரியம் அவர் கண்ணில் வழிந்தது.

"ஆமாம் எங்க இருக்கு அந்த சொக்கம்பட்டி?" ஆர்வத்துடன் ஒருவித ஈடுபாட்டுடன் அவள் கேட்க.. "மதுரைங்கற ஒரு சிட்டிக்கு பக்கத்துல" என்றார் அனந்தாச்சாரி.

"அந்த இடத்தை நான் பார்க்கணுமே... ஒரு ட்ரிப் அரேஞ்ச் பண்ண முடியுமா?"

"ஷ்யூர்... ஷ்யூர்!" இருவரும் சேர்ந்தாற்போல ஆமோதித்தனர்.

❑ ❑ ❑

சொக்கம்பட்டி!

வேலிக் கருவையின் ஆதிக்கத்தில் செம்மண் காடாய், வறட்சிக்கு இலக்கணம் எழுதிக் கொண்டிருக்கும் ஒரு வானம் பார்த்த பூமியாய் கானல் நீரின் அலைபாய்ச்சலுக்கு நடுவே கிடந்தது.

ஊருக்குள் அழைத்துச் சென்று திரும்பக் கூட்டி வரும் மெட்டல் பரத்தல் சாலையில் ஆங்காங்கே ராட்சஸப் பள்ளங்கள். சாலை போட்டே பல வருஷங்கள் ஆகிவிட்டதை, பார்த்த மாத்திரத்தில் உணர முடிந்தது.

வேலிக் கருவலைக்கும் தூங்கு மூஞ்சி மரங்களுக்கும் நடுவே ஆங்காங்கே புளிய மரங்களும் தழைத்திருந்தன. வெயில் தாங்குவதில் புளியனுக்கு ஈடு ஏது? அதிலும் விருமாண்டியின் புளியங்காடு, ஒரு ஏ.சி. பெட்டி போல குளுகுளு வென்றுதான் இருந்தது.

ஆனால் அந்த காட்டுக்குள் கண்களில் கண்ணீர் வழிய, கையில் ஒரு கயிற்றுத் துண்டுடன் நடந்து கொண்டிருந்தாள் ஒரு இளம் பெண்!

10

'சொன்னால் நம்பமாட்டீர்கள்... நான் எழுதிக் கொண்டிருக்கும் 'மகாதேவ ரகசியம்' என்னும் புத்தகமே நம்பமுடியாத ஒன்றுதானே என்று கூட நீங்கள் சொல்லலாம்.

ஆனால் இதில் உள்ள அவ்வளவும் சத்தியமான நிஜம். சில அமானுஷ்ய அனுபவங்கள் சிலருக்கு எப்போதாவது ஏற்படுவது உண்டு. அதை அவர்கள் கூட அமானுஷ்யமாக நினைக்காமல் ஒரு தற்செயல் சம்பவமாகவே நினைப்பார்கள்.

எவ்வளவு நாள்கள் எத்தனை பேர் நல்ல கருநாகத்தை ஒரு சில மில்லி மீட்டர் இடைவெளியில் மிதிக்காமல் சென்றிருப்பார்கள் தெரியுமா? அதை மிதித்திருந்தால் மரணம் நிச்சயம். ஆனால் அது படுத்திருந்ததே தெரியாத நிலையில் கடந்துவிட்ட அந்தக் கடுமையான சம்பவம் பற்றி எப்படி எண்ணிப் பார்க்க முடியும்?

ஆக நானறிந்தவரையில் அமானுஷ்ய அனுபவங்களுக்கு ஆட்படாத மனிதர்களே இல்லை. ஆனால் உலகில் மிக அதிகம் தொடர்ச்சியாக அமானுஷ்ய அனுபவத்திற்கு ஆளான ஒரு மனிதன் நானாகத்தான் இருப்பேன்.

இப்பொழுது நினைத்தாலும் எனக்கு வியப்பு தான்... சித்த வனத்திற்கு மூலிகை தேடிச் சென்று அமிர்த மணிப்பழங்களை உண்டு, அதன் பின் உடம்பில்லாதபடி மாயமாகி, பிறகு சிவகங்கை அருவியில் நீராடி உடம்பினை திரும்ப காணப்பெற்று

ஊர் திரும்பிய நானொரு சிரஞ்சீவி என்றார் ஜோதிடர் நாகபூஷணம்!

அதுமட்டுமா? நான் தொட்டது துலங்கும், பட்டது விளங்கும் என்றார். அதை நான் அறிந்து கொள்ள ஒரு அருமையான சந்தர்ப்பமும் எனக்கு வாய்த்ததை என்னென்பேன்.

முன்பே மாலைக்கண் நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு தொழிலதிபர் பற்றி குறிப்பிட்டிருந்தேன். அவர் மூலமாகத்தான் எனக்கு அந்த அரிய வாய்ப்பு ஏற்பட்டது... முற்றிலும் எதிர்ப்பார்த்திராத நிலையில் அவரே என்னைக் காண என் வீட்டிற்கு வந்துவிட்டார்.

"என்னய்யா செய்கிறீர்கள்... என் கண் வியாதிக்கு மருந்து கண்டுபிடித்துவிட்டீர்களா...? நீங்கள் மூலிகை தேடிப்போனதெல்லாம் என்னாயிற்று?" என்று பிலுபிலு வென்று பிடித்துக் கொண்டார். நானும் அப்பொழுதுதான் நெருக்கடியை உணர்ந்தேன். அவரை உடனடியாக சமாதானப்படுத்த ஒரு உபாயத்தைக் கையாண்டேன்.

சாதாரணமாக வயல்வெளி வரப்புகளில், குறிப்பாக வேலிப்புதர்களில் 'நேத்ர மூலி' என்று ஒன்று தழைக்கும். கண்ணிற்கு குளிர்ச்சி தரவல்லது. முதலில் காரத்தன்மையுடன் செயல்படும் இது கண் நரம்புகளில் ஏதும் அடைப்பு இருந்தால் அதை இளக்கிக் கரைத்துவிடும் தன்மை உடையது. சாதாரணமாக சாளேஸ்வரக் காரர்கள் நல்லெண்ணெயுடன் கூடி, சூரிய வெப்பத்தால் புணரும் இதனை சொட்டுக்களாய் கண்ணில் விட்டுக்கொண்டால் சாளேஸ்வரத்திரை வளராமல் அழிந்துவிடும்.

அதை எடுத்து அவர் கண்ணில் விட்டு ஒரு வாரத்தில் குணமாகிவிடுவீர்கள் என்று கூறி, அந்த நொடிப்பொழுதிற்கு சமாளித்து அனுப்பிவைத்தேன்.

ஒரு அதிசயம்போல் அவர் மறுநாளே தேடிவந்து ஒரு லட்சம் ரூபாயை தட்டில் வைத்து தந்தார்.

அவரது மாலைக்கண் நோய் முதல்நாளே காணாமல் போய்விட்டதாக அவர் கூறியபோது என்னால் நம்ப முடியவில்லை. சாதாரண நேத்ர மூலிக்கா இத்தனை சக்தி என்கிற கேள்வி ஒருபுறம், இல்லை என் கை பட்டதால் ஏதும் விசேஷமா...? இது இன்னொரு புறம். இந்நிலையில் ஓயாமல் அழுதுகொண்டிருந்த என் பேத்தியை நான் கையால் தொட்டு வருடியது தான் தாமதம்... அவள் அப்படியே சொக்கியது போல் உறங்கிப்போனாள். இந்த நிலையில்தான் என்னை யறியாமல் சுவர் ஒன்றில் மோதிக்கொண்ட நான் ஐயோ என்றோ, அம்மா என்றோ குரல் கொடுக்காமல் சிவ சிவா என்று குரல் கொடுத்தேன்...

என்னிடம்தான் எத்தனை மாற்றங்கள்?

-ரசமணி வித்தகர் பெரியய்யா

கையில் கயிற்றுடன் நடந்தபடி இருந்த இளம் பெண்ணுக்கு இருந்தால் ஒரு இருபது வயதுக்குள் இருக்கலாம். கண்களில் தளும்பி வழியும் கண்ணீர்.. அதனூடே பார்வையால் தான் தூக்கு போட்டுக்கொள்ளத் தோதான ஒரு மரம் எது என்பது போல் ஒரு பார்வை விட்டாள்.

நிறைய அணில்கள் உல்லாசமாக விளையாடிக் கொண்டிருந்தன. மரக்கிளைகளில் பேர் தெரிந்த, தெரியாத என்ற நிலையில் ஏகத்துக்கும் பட்சிகள் அமர்ந்து கொண்டு அவளை மலங்க மலங்கப் பார்த்துக்கொண்டிருந்தன. புளியந்தோப்பில் எங்கும் சூரிய ஒளியே படவில்லை. அந்த அளவு குடையைப் போட்டு மூடியது போல மரக்கிளைகள் தழைத்து அடிப்பரப்பில் நிழலை உருட்டிக் கொண்டிருக்க, அவள் தனக்கு வாகாக ஒரு மரத்தை ஒருவழியாக கண்டுபிடித்துவிட்டாள்.

சொக்கம்பட்டி ஒன்றும் பெரிய ஊர் இல்லை. தபால்காரன் வந்தால் அதிகபட்சம் அரைமணியில் ஊர்த்தெருக்களை சுற்றி வந்துவிட்டு அடுத்த கிராமத்துக்கும் கிளம்பி

விடுவான். யார் செய்த புண்ணியமோ, இல்லை எப்பொழுது செய்த நல்ல காரியமோ இரண்டு மினி பஸ்கள் ஒருமணிக்கு ஒருமுறை ஊருக்குள் நுழைந்து உதிர்க்க வேண்டியவர்களை உதிர்த்து, அள்ளிப் போட்டுக்கொள்ள வேண்டியவர்களை அள்ளியும் போட்டுக் கொண்டு போய்க் கொண்டிருந்தன. ஊரில் ஒரு அக்ரஹாரத் தெருவும் இருந்தது. மற்ற தெரு வீடுகளுக்கும், அந்தத் தெரு வீடுகளுக்கும் ஒரு வித்தியாசம் பளிச்சென்று தெரிந்தது. அக்ரஹார வீட்டுவாசல்களில் சாணித் திப்பிகள் தெரியும் மெழுகல்களும், பெரிய பெரிய கோலங்களும் கண்ணைப் பறித்தன.

ஒவ்வொரு வீட்டு கன்னிமூலைப் பக்கமும் ஒரு தோதகத்தி, அகத்தி மரமும் தழைத்திருந்தன. போஸ்ட் மாஸ்டர் குருமூர்த்தியின் வீட்டு வாசலில் மட்டும் வித்தியாசமாய் ஒன்றுக்கு நான்கு நெட்டிலிங்க மரங்கள்.

அவரும் பார்ப்பதற்கு பளிச்சென்று ஒரு பிராம்மணராகத்தான் தெரிந்தார். முகத்தில ஒருவித தேஜஸ் தெரிந்தது. கழுத்தில் ஒற்றை ருத்ராட்சம் கோர்த்த ஒரு கறுப்புக்கயிறு.

வீட்டு முகப்பையே தபால் ஆபீஸாக்கிக் கொண்டு அமர்ந்திருந்தார். எப்போழுதோ வாங்கிப் போட்டிருந்த டேபிள்ஃபேன்... அதில் நூலாம்படை கட்டியிருந்தது. அதிலிருந்தே அதை குருமூர்த்தி பயன்படுத்துவதில்லை என்று அறியலாம். மீறிப்பயன்படுத்தினாலும் நூலாம் படைகளின் தாயான சிலந்திகளுக்கு இடைஞ்சல் இல்லாதபடி அவர் பயன்படுத்திக் கொள்வதாகத் தோன்றியது.

அவர் பார்வை, ஜன்னல் வழியாக வெளியே சாலை மேலேயே இருந்தது. மினிபஸ் வரும் அரவமும் கேட்கவே தபால் பையுடன் வேலாயுதம் வரப்போவதற்காக அவர் தயாரானார்.

அவனும் வந்து சேர்ந்தான். அசால்ட்டாக ஒரு காக்கிப் பையை தோளில் போட்டிருந்தான். அதன் கழுத்தில் அரக்கு சீல் வைத்து கட்டப்பட்டிருந்தது அவ்வளவாக உள்ளே கடிதங்கள் எப்பொழுதும் இருந்ததில்லை. ஊர்க்காரர்களில் சிலர் ராணுவத்தில் எல்லைப்புறத்தில் பணியாற்றிவருகிறார்கள். அவர்கள்தான் கடிதம் போடுவார்கள். அதுவும் இன்லாண்ட் லெட்டர், மொத்தமாய் பத்து கடிதம் தேறினால் அதிகம். இதற்கு ஒரு பை, சீல் என்று அலுத்துக் கொள்வார் குருமூர்த்தி.

ஆனால் சமீபகாலமாக நிறைய கடிதங்கள். அதிலும் சக்கரவர்த்தி மோட்டார்ஸ் ஊருக்கு தெற்கில் விருமாண்டியின் புளியந்தோப்பை ஒட்டி நூறு ஏக்கர் வாங்கிப் போட்டு அங்கே ஒரு ஆபீஸையும் நிறுவியதில் இருந்தே கடிதங்கள் அதிகம்.

காண்ட்ராக்ட் ஊழியனான வேலாயுதமும் அந்தக் கடிதங்களைக் கொண்டு சென்று சேர்ப்பதில் வேகம் காட்டினான்.

"சாமி, இன்னிக்கு கனம் அதிகம்..." என்று உள்ளே நுழையும் போதே கண்சிமிட்டினான்.

"எல்லாம் புதுக்கம்பெனி லெட்டராக்கும்?"

"அப்படித்தான் தெரியுது... வேற இந்த ஊருக்கு லெட்டர் போட யார் இருக்கா?" என்கிற கேள்வியோடு மளமளவென்று கட்டை உடைத்து கடிதங்களைக் கொட்டினான்.

அவன் நினைத்தது சரிதான். முக்காலே மூணுவீசம் கடிதங்கள் சக்கரவர்த்தி மோட்டார்ஸுக்குதான். ஒரு மாதிரி வெளிர் நிறத்தில் நான்கு அன்னங்கள் ஒன்றன் பின் ஒன்றாக பறந்து செல்வதுதான் சக்கரவர்த்தி மோட்டார்ஸின் ஐக்கன் சிம்பல்.

அந்தக் கவர்களை பார்க்கும்போதே படுபரவசமாக இருந்தது அவனுக்கு. மளமளவென்று சார்ட் செய்ய,

குருமூர்த்தியும் நங்குநங்கு என்று முத்திரையை குத்த ஆரம்பித்தார். அப்படியே கேள்விகள்.

"ஆமா... நூறு ஏக்கரையும் துப்பரவா சுத்தப்படுத்திட்டாங்களாடா...?"

"பண்ணிகிட்டேயிருக்காங்க சாமி..."

"எவ்வளவு பேர் வேலை பாக்கறாங்க..?"

"அது இருக்கும் சாமி ஒரு முப்பது நாப்பது பேர்."

"இந்த லெட்டர்களை எல்லாம் யார் வாங்கிக்கறா?"

"ஒரு குடிசை ஒண்ணு போட்ருக்காங்க. அதுல எஞ்ஜினியர் சங்கரதாஸ்னு ஒருத்தர், சிவில் எஞ்ஜினியராம்.. அவர்தான் கடிதங்களை வாங்கிக்கறார்."

"அப்ப அதுக்குமேல பெரிய தலைகளெல்லாம் இன்னும் இங்க வரலைன்னு சொல்லு?"

"யார்யாரோ வர்றாங்க, கார்லயே ரவுண்டு கட்டி ஒரு பார்வை பார்த்துட்டுப் போய்கிட்டேயிருக்காங்க சாமி..."

அவன் பதில் சொல்லி முடிக்க, கடிதங்களும் முத்திரை இடப்பட்டு முடிந்திருந்தன.

"சரி நீ கிளம்பு... டெலிவரி முடிச்சுட்டு வா. இன்னிக்கு பொட்டியில அறுபது கடுதாசிடா..."

"நிச்சயமா அப்படியே போயிடமாட்டேன். கட்டாயம் வந்து எடுத்துக்கறேன். ஆமா, நம்ம குமார் தம்பி எங்க வேலை பாக்குதுன்னீங்க?"

"தெரிஞ்சுண்டே எத்தனை தடவை கேப்பே? கசகசன்னு கட்டி நெறிக்கிற மும்பை இப்ப அவன் ஊர்.. இங்க புதுக் கம்பெனில வேலை போட்டுக் கொடுத்தா என் கவலை நீங்கும். காலம் பூரா என் ஒரே பிள்ளை என் கூடவே இருப்பான்."

-குருமூர்த்தி தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். "கவலைப்படாதீங்க... அந்த பரமசிவனே வந்து இங்க

கம்பெனி கண்டுகிட்டாகணும், உங்க தொழில் அப்படி! போஸ்ட் மேன் தயவு ஒரு கம்பெனிக்கு அவசியமில்ல...?"

"அப்ப குமாருக்கு இங்க வேலை கிடைக்கும்கறே?"

"கவலையை வுடுங்க, லோக்கல் ஆளுங்க இருபது பேருக்கு வேலை போட்டுக் கொடுத்தே தீரணும்னு நம்ம விருமாண்டி, கம்பெனி முதலாளியாண்டையே சொல்லியிருக்கானாமுல்ல..."

"அப்படி எல்லாம் அடுத்தவங்க பேச்சை கேட்டு நடக்கற கம்பெனி இல்லடா அது. இந்த ஊர்க்காரனுக்கும் வண்டி மோட்டார் பத்தி என்ன தெரியும்? எல்லாப் பயலுகளும் தம் கட்டி, முப்பது நாப்பது மார்க்ல, பாஸ்பண்ணா போறும்னு பாஸ்பண்ணினவங்க."

"அப்ப விருமாண்டிக்கு அல்வா கொடுத்துடு வாங்கன்னு சொல்றீங்களா?"

"அது எனக்குத் தெரியாது..." விருமாண்டி பற்றி கேட்ட வினாடி, குருமூர்த்தி அப்படியே ஜகா வாங்கினார். அது வேலாயுதத்துக்கும் புரிந்தது. படுமென்மையாக ஒரு சிரிப்பு சிரித்தான்.

அப்படியே கடிதங்களை அள்ளிக் கொண்டு புறப்பட்டான். கிளம்பும்போதே, இன்னிக்கு விருமாண்டிக்கும் ஒரு கடுதாசி வந்துருக்கு என்றபடியேதான் புறப்பட்டான்.

❑ ❑ ❑

விருமாண்டி வீடு பூட்டிக் கிடந்தது. அந்த ஊர் வரையில் அது வீடு இல்லை, மாளிகை. பட்டணமாக இருந்தால் மெயின்கேட் போட்டு கூர்க்காவை காவலுக்கு வைத்திருப்பார்கள். கிராமம் என்பதால் அப்படியே விட்டுவிட்டிருந்தனர்.

வீட்டுக்கு வெளியில் நெல்காயப்போட்டபடி இருந்த விருமாண்டியின் மனைவி சம்முகம், "அவரு இல்லீங்களே.. இருந்தா புளியந்தோப்புல இருக்கணும்" என்றாள்.

"ரிஜிஸ்டர் தபால்... அவர் கையெழுத்து வேணும்... இல்லாட்டி கொடுத்திடுவேன்" என்றபடியே நழுவினான் வேலாயுதமும்.

ஊரில் அவ்வளவாய் விவரமில்லை. எப்பொழுதும் திரிந்தபடி இருக்கும் சில தெரு நாய்கள் மட்டும் வழக்கம் போல் அவன் வரவும், ஒரு குலை குலைத்துவிட்டு வழிவிட, சைக்கிளை அழுந்த மிதித்தான். அப்படியே புளியந்தோப்பு முகப்புக்கு வந்தவன், நின்று நாலாபுறமும் பார்த்தான்.

ஆளரவமேயில்லை. தோப்புக்குள் ஒரு குடிசை இருப்பதாக ஞாபகம்.. அதில் ஒருவேளை விருமாண்டி படுத்திருப்பானோ...? கேள்வியோடு உள்ளே நுழைந்து அந்த மரநிழல் இருளோகத்தில் கலந்தாலும் பளிச்சென்று எல்லா இடமும் தெரிந்தன. அவன் பார்க்க ஒரு குட்டிப் புளிய மரக்கிளையில் அந்தப் பெண்ணும் தொங்கிக் கொண்டிருக்க, அவளை கீழிறக்கும் வேலைகள் ஜரூராக நடந்து கொண்டிருந்தன.

வேலை வாங்கிக் கொண்டிருந்தான் விருமாண்டி. பார்க்க வாட்டசாட்டமான உருவம். அடர்வான சுருட்டைத் தலைமுடி, புலி நகச்சங்கிலி, முழுக்கை சட்டையை மடக்கி விட்டுக் கொண்டு வேட்டியையும் மடித்துக்கட்டியிருக்கும் விதமே அவன் ஒரு சண்டியர் என்று சொல்லாமல் சொல்ல, அவனும் வேலாயுதத்தைப் பார்த்தான். துளிகூட பயமின்றி அருகில் அழைத்தான்.

"எவளோ ஒரு நாயி... இவ சாவறதுக்கு என் புளியந்தோப்புதானா கிடைச்சிச்சு? அதான் யாருக்கும் தெரியாம உடம்பை இறக்கி, எங்கிட்டாவது போட்டு மூடிப்பிடலாமான்னு யோசிச்சுகிட்டிருக்கேன்" என்று சொல்லவும் மிடறுகட்டியது வேலாயுதத்துக்கு.

"ஆமா நீ எங்க இங்க?"

"உங்களுக்கு ஒரு ரிஜிஸ்டர் தபால்..."

"எனக்கா?"

"ஆமாண்ணே..."

"ஆச்சரியமாயிருக்குதே... கொண்டா, கொண்டா..." என்றபடி கடிதத்தை வாங்கியவன் மளமளவென்று பிரித்தான். அருகிலேயே கிடந்தது அந்தப் பெண்ணின் உருவம். அவளைப் பார்த்த வேலாயுதத்துக்கு மட்டும் ஏனோ நெஞ்சையடைத்தது!

11

எனது மாற்றங்களை எனது மனைவி, மக்கள் கூட மெல்ல உணர ஆரம்பித்ததுதான் ஆச்சரியம். என்னதான் நான் ஒரு மூலிகை வைத்தியன் என்கின்ற போதிலும் காபி என்றால் எனக்கு மிகவும் இஷ்டம். ஒரு நாளைக்கு பத்து காபிகளுக்கு மேல் குடிப்பேன். ஒரு மூலிகை வைத்தியன் என்கின்ற முறையில் அது உடம்பை எப்படி எல்லாம் கெடுக்கும் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.

உடம்பின் நரம்பு மண்டலத்தையும், ரத்த நாளங்களையும் அது அதற்குண்டான இயல்புடன் செயல்படவே விடாது. காபி குடிக்கக் குடிக்க, இவை இரண்டும் சற்றே தளர்ந்து போகும். காபி குடிக்கும் போது இந்த தளர்வு நீங்குவதால் அதுவே ஒருவித உற்சாகம் போல மூளைக்குத் தோன்றும்; பின்பு திரும்ப தளர்ந்துவிடும். அந்தத் தளர்ச்சி, மூளைக்குத் தொடர்ச்சியாக காபி குடிக்கச் சொல்லும் ஒரு தூண்டலை உருவாக்கியபடி இருக்கும்.

காபி பிரியர்களுக்குள் நிகழ்வது இதுதான். இந்த தளர்ச்சியும், காபி வெறியும் என்னை விட்டு நீங்கி விட்டது.

"இன்று நீங்கள் காபி கேட்டு தொந்தரவே செய்யவில்லை" என்றாள் என் மனைவி.

"ஆமாப்பா... குளிச்சாலே ஒரு தும்மல் போடு வீங்க. இப்பல்லாம் தும்மறதேயில்லை" என்றாள் என் மகள். என்னிடம்தான் இதுபோல எத்தனை மாற்றங்கள்? எது உள்நுழைந்து என்னை இப்படி மாற்றியது? எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். சதா அதைப் பற்றியே சிந்தித்தேன்.

என் மனைவி, மக்களிடம் கூட நான் சித்த வனத்து அனுபவத்தைச் சொல்லவில்லை... ஏனோ சொல்லத் தோன்றவில்லை.

இதற்கிடையே மனித வாழ்க்கை பற்றியும் அதன் பரிமானங்கள் பற்றியும் எனக்குள், குறிப்பாக என் மூளைக்குள் யாரோ அமர்ந்து கொண்டு பாடம் நடத்துவது போல ஒரு உள்ளுணர்வு.

ஒரு முறை ஒரு பிச்சைக்காரன் என் எதிரில் பிச்சைக்காக கை நீட்டினான். எனக்கு பிச்சை எடுக்கின்றவர்களைக் கண்டாலே பிடிக்காது. கோபம் வரும். ஆனால் என் உள்ளுணர்வு அன்று பிச்சை யிடச் சொன்னது. ஒரு இரண்டு ரூபாய் நாண யத்தை அவன் பிச்சைத் தட்டில் போட்டேன்.

'உலகில் எவ்வளவோ கோடிப்பேர் இருக்கிறார் கள். எவ்வளவோ உணவுப்பண்டங்களும் இருக் கின்றன. எந்த உணவுப்பண்டமும் நிலைத்திருக்கப் போவதில்லை. அப்படியிருக்க ஒருவன் பசிக்கு உணவில்லை என்பதும்... அவன் கரம் உன் முன் நீண்டதற்கும் ஒரு சரியான காரணம் உள்ளது. அதாவது ஒரு பசி உணர்வு உன் முன்னால் தன்னை அணைத்துக்கொள்ள கை நீட்டியுள்ளது. அதை நீ அணைப்பது என்பது ஒரு வினைக் கடனை அடைப்பது போன்றது. நீ தவிர்த்திருந்தால் அது

வட்டியோடு வளர்ந்து, இன்னொரு சந்தர்ப்பத்தில் வேறு விதமாய் உன்முன் வந்து நிற்கும்... நீ சரியாகத் தெரிந்து கொள். பிறர்க்கு நீ தருவது என்பது உனக்கு நீ தந்து கொள்வதைப் போன்றது. மகாதேவ ரகசியங்களில் பிரதான முதல் ரகசியம் இதுவே.'

-எனக்குள் இப்படி ஒரு சிந்தனை ஓடியது. இதை நான் என்னென்பேன்...?

பிரதான ரகசியங்களை உனக்கு நான் இனி அவ்வப்போது தெரிவிப்பேன் என்று அந்தக் குரல் மீண்டும் எனக்குள் ஒலித்தபோது உண்மையில் நான் திக்கு முக்காடிப்போனேன்.

-ரசமணி வித்தகர் பெரியய்யா

அந்த இளம்பெண் உருவம், தபால்காரனாகிய வேலா யுதத்துக்குள் ஒரு பெரிய மிரட்சியையே உண்டாக்கி விட்டது.

விருமாண்டியோ தன் சகாக்களை முடுக்கிவிட்டு அவளை ஒரு கோணியில் போட்டு, புளிமூட்டை கட்டு வது போல கட்டுவதில் மும்மரமாக இருந்தான்...

அவள்...

அவள்..?

ஒரு நாள் பக்கத்துக் கிராமமான இருசம்பட்டியில் விருமாண்டியின் முகவரியை கையில் வைத்துக்கொண்டு திருதிருவென விழித்துக்கொண்டிருந்தாள். போஸ்ட்மேன் உடுப்பில் இருந்த அவனிடம் வந்து முகவரியைக் காட்டி கண்களாலேயே வழிகேட்டாள்.

"இது சொக்கம்பட்டி அட்ரஸாச்சே... இருசம்பட்டி இன்னுகிட்டு சொக்கம்பட்டில விருமாண்டிபத்தி விசாரிச்சு கிட்டு நிக்கறியே தாயி..." என்றதும், அவள் பேசமுடி யாமல் வயிற்றைத் தடவிக்காட்டியதும் ஞாபகம் வந்தது.

சிறிது நேரத்திலேயே அவளொரு பேசமுடியாத ஊமை என்பது வேலாயுதத்துக்கு விளங்கிவிட்டது.

"கொஞ்ச நேரத்துல மினிபஸ் வரும், அதுல ஏறு. அது சொக்கம்பட்டிக்கு போகும். அங்க விருமாண்டின்னு எனக்குத் தெரிஞ்சு ஏழெட்டுபேர் இருக்காங்க. இருந்தாலும் ஒருத்தர்தான் ஊருக்கே தாதா மாதிரி... அனேகமாக நீ கேட்கற ஆள் அவராகத்தான் இருக்கணும்" என்று சொன்னதெல்லாமும் ஞாபகத்தில் ஓடியது.

வேலாயுதம் பழசை நினைத்து முடிப்பதற்குள் அவளை மூட்டையில் விருமாண்டியின் சகாக்கள் நன்றாகவே கட்டி விட்டார்கள்.

"தூக்குங்கடா.. கம்மாக்கரை ஓரமா கருவேலங்காட்டுக்குள் எங்கிட்டாச்சும் குழியைத் தோண்டிப்போட்டு மூடிப் புடுங்க... விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது. அப்படி இப்படின்னு விஷயம் கசிஞ்சாலும் சரி, ஒரு நாயி உசுரோட இருக்கமுடியாது."

விருமாண்டி இறுதி எச்சரிக்கை செய்தவனாக கடிதமுடன் நிற்கும் வேலாயுதத்திடம் வந்தான். கை நாட்டு வைத்தபடியே கடிதத்தை வாங்கியவன், "எங்க இருந்து யார்கிட்ட இருந்து வந்துருக்குன்னு படிச்சு நீயே சொல்லு..." என்றான். வேலாயுதமும் வேகமானான்.

கவர் மேலேயே பேங்க் முத்திரை தெரிந்தது. "பேங்குல இருந்து வந்திருக்குண்ணே..." என்று முன் தகவல் கொடுத்தவன், கவருக்குள் நுழைந்துவிட்டு கசங்கலான முகத்துடன் பார்த்தான்.

"என்ன... வாங்குன கடனைக் கேட்டு எழுதியிருக்கானுங்களா?"

"ஆமாண்ணே.. ஆடுமாடு கோழி வாங்கன்னு நீங்க வாங்குன கடன், அரசாங்க மான்யம் போக வட்டியோட முப்பதாயிரம் சில்லரை இருக்குது. பத்து நாள்ல கட்டாட்டி ஜப்தி நடவடிக்கை எடுப்பாங்களாம்."

"கிழிச்சாங்க" படுவேகமாய் விருமாண்டியிடம் இருந்து பதில் பிறந்தது. வேலாயுதத்திடம் சுமாரான நடுக்கம்.

"பம்பாய்க்காரன் ஹர்ஷத் மேத்தா கோடிக்கணக்குல லபக்கிட்டு செத்தும் போய்ட்டான். இங்க எனக்குத் தெரிஞ்சு நம்ம மாவட்ட மந்திரி, லட்சக்கணக்குல கடன் வெச்சிருக்கான்.. அங்கங்க அவனவன் கொழச்சு கொழச்சு போட்டுகிட்டிருக்கானுவ.

'ஆனா இந்த பேங்க்கார வெண்ணெய்களுக்கு சொக்கம்பட்டி விருமாண்டிதான் இளிச்சவாயனாத் தெரியறான் போல..."

-பதிலோடு அந்தக் கடிதம் சுக்கு நூறாகியது. வேலாயுதத்துக்குள் ஒரு அளவான நிலநடுக்கம் போல அதிர்ச்சி.

"இத்த விடு. இனி இப்படி ஒரு லெட்டர் வந்தா தூக்கிகிட்டு இப்படி புளியங்காட்டுக்குள்ளாரல்லாம் வராதே... அதே மாதிரி இங்க பாத்ததையும் வெளிய பத்த வைக்காதே. வெச்சேன்னு வைய்யி..."

-அந்த வைய்யியின் போது விருமாண்டியின் நாவு ஒரு மாதிரி மடங்கி, உதடுகளும் பிதுங்கியது.

"ஐயோ அண்ணே... மூச்சு உடமாட்டேண்ணே..."

"மூச்சு உட்றா. இல்லாட்டி செத்து வைப்பே. வாயை மட்டும் மூடிக்க, ஓடிப்போ..."

-விருமாண்டி சொன்ன விதம், படு கவிதையாக இருந்தது. வேலாயுதமும் அதன் பிறகு அங்கே நிற்கவில்லை.

❑ ❑ ❑

அந்த வேலங்காடு நல்ல அடர்த்தி. கீரிப்பிள்ளைகள் அதியாயத்துக்கு கண்ணில் பட்டன. மரங்களில் ஏகத்துக்கும் கௌதாரிகள். உள்ளே ஊடுருவுவதே மிகவும் சிரமம்

என்கிற மாதிரி, மரத்தின் முட்கிளைகள் மண்டிக் கொண்டு மறித்தபடி இருந்தன.

கையில் ஒரு இளநீர் சீவும் அரிவாளுடன் இடையிட்ட கிளைகளை சீவிச் சீவி விட்டுக்கொண்டு நடந்து கொண்டிருந்தான் விருமாண்டியின்.. பிரதான கையாளான செக்கு. பின்னாலேயே. மூட்டையை தோளில் சுமந்தபடி நடப்பது கிட்டான்.

அநாயாசமாக அவன் அந்த மூட்டையை சுமந்ு கொண்டு நடக்கிற மாதிரி கூட இருந்தது. ஒரு கைதான் மூட்டையைப் பிடித்துக் கொண்டிருந்தது. இன்னொரு கையில் மண்வெட்டி.

முன்னால் நடந்து கொண்டிருந்த செக்கு ஒரு மரத்தடியில் சாய்ந்து கிடந்த நிலப்பரப்பைப் பார்த்துவிட்டு திரும்பி கிட்டானையும். பார்த்தான். "என்ன... இங்கனையே போட்டு மூடிப்பிடலாம், சரியா?"

"ஆமாம்.. இம்புட்டு தூரம் எந்த நாயி வரப்போவுது?"

"அப்ப... இந்தா..... குழியைத் தோண்டு..."

மண்வெட்டியைத் தூக்கி கிட்டான் எறிய, செக்கு அதை பந்தைப் பிடிக்கிற மாதிரி பிடித்து குழிவெட்ட ஆரம்பித்தான்.

கிட்டான் தன் தோளில் கனத்த மூட்டையை அப்படியே ஒரு ஓரமாக கீழ் இறக்கினான். சுற்றிலும் ஒரு பார்வை பார்த்து விட்டு மூட்டையைப் பிரிக்க ஆரம்பித்தான். மூட்டைக்குள் இருந்து அந்தப் பெண், பிணமாய் வெளிப்பட்டாள். ஜில்லிட்டிருந்த உடம்பு கிழங்காய் கண்ணில் மின்னியது.

பிணம் என்று கூட பார்க்காமல் ரசிக்க ஆரம்பித்தான். அவன் கைகள் அவள் உடம்பை நிர்வாணமாக்குவதில் குறியாக இருக்க, குழி வெட்டத் தொடங்கிவிட்டிருந்த செக்கு அவன் செயலைப் பார்த்து, எலேய்... அது

பொணம்டா, அதைப் போய் நோட்டம் போட்டுகிட்டு" என்று தலையில் அடித்துக் கொண்டான்.

"பொணந்தான்.. ஆனாலும் பொட்டச்சி பெணமாச்சே? ஆளைப்பாரு கிட்டான். நல்லா நெய்யாதின்னு வளர்ந்த வளாட்டம் இருக்கறத..."

கிட்டான் உதட்டை நக்கியபடி சொல்லும் போது வக்கிரம் அவன் கண்களில் கொடுரமாய் வெளிப்பட்டது.

அதேசமயம் டணங் என்று ஒரு சப்தம். அவன் பார்வை வேகமாய் குழிப்பக்கம் தாவியது. குழி தோண்ட ஆரம்பித்திருந்த செக்குவின் மண்வெட்டிதான் குழிக்குள் ஏதன் மேலோ பட்டு அப்படி சத்தம் போட்டிருந்தது.

"என்னாடா சத்தம்....?"

"அத்த ஏன் கேக்கறே... இங்கன ஒரு பட்டயக் கல் மாதிரி பட்டையா ஒரு கல்லு கெடக்குது."

"தூத்தேறி... நான் கூட எதனா புதையல் பானை தானாக்கும்னு நினைச்சுட்டேன்."

"என்னேரமும் உனக்கு ஒண்ணு பொட்டச்சி நினைப்பு இல்லாட்டி காசு நினைப்புதான்..."

"ஆமா நீ பெரிய சாமியார் பாரு..."

பேச்சோடு பேச்சாக செக்கு அந்தக் குழியில் கிடந்த கல்லை மண்ணை விலக்கிவிட்டுப் பார்த்தபோது ஒரு ஸ்தூபி போல அரைவட்டத் தலையுடன் மூன்றடி நீளத்திலும், ஒரு அடி அகலத்திலும் நிறைய கல்வெட்டுச் செதுக்கல்களுடன் அது அவன் புருவத்தை வளைத்தது.

"என்ன?"

"என்னவோ எழுதியிருக்குது."

"என்னா எழுதியிருந்தா என்ன... தூக்கி வெளியப் போடு. பொணத்தைத் தூக்கி உள்ளாரப்போட்டு மூடு."

கிட்டானின் விருப்பம் செயலானது. அந்த பட்டயக் கல், மணல் திப்பிகளுடன் புறத்தில் பிரண்டு விழுந்தது.

அந்தப் பெண்ணும் குழிக்குள் அடங்கத் தொடங்கினாள்.

கல்லும் புறத்திலேயே கிடக்க, மண்ணை மூடி காலால் சமமாக மெத்தி விட்டு இருவரும் திரும்பித்திரும்பிப் பார்த்தபடி அங்கிருந்து விலகத் தொடங்கினார்கள்.

❑ ❑ ❑

அடர்வான அதே கருவேலங்காட்டின் மறுபக்கம். புழுதிபறக்க நான்கைந்து கார்கள் வந்து தேங்கி நிற்க, அதிலிருந்தெல்லாம் சக்ரவர்த்தி மோட்டார்ஸின் அதிகாரி வட்டம் டக் செய்தபடி இறங்கிக் கொண்டிருந்தது.

ஒரு ஏ.சி. காருக்குள் இருந்த ஜி.எம். சண்முகாவுடன் க்ளாராவும் இறங்கினாள். ஆச்சரியமூட்டும்படி பட்டுப் புடைவை உடுத்தியிருந்தாள். நெற்றிக்கு குங்குமப் பொட்டும் வைத்திருந்தாள். நெற்றிக்கு கீழே கூலிங் கிளாஸ்! நல்ல அகலமான வட்டக்கண்ணாடி. அதனுள் அவள் விழிகள் சுற்றிச் சுழன்றன.

ஒரு இந்திய நாட்டு கிராமத்தை இப்பொழுதுதான் பார்க்கிறாள். சண்முகாவும் இணக்கமாகச் சிரித்தபடி "மிஸ் க்ளாரா... நாம இப்ப சொக்கம்பட்டில இருக்கோம். திஸ் ஈஸ் சொக்கம்பட்டி வில்லேஜ். வெரி ஏன்ஷியன்ட் வில்லேஜ்" என்றார்.

"ஸோ ஹாட்..." என்று தோளை உயர்த்தினாள் க்ளாரா.

"அம்ப்கோர்ஸ்.. கொஞ்ச நாளாவே மழை இல்ல" என்றபடியே அவர் நடக்க, அவளும் நடக்க, பக்கவாட்டில் அந்த கருவேலங்காடு அவள் கண்ணைக் கரித்தது.

"இது என்ன பிளான்ட்.. இதோட பொட்டானிகல் நேம் தெரியுமா?" கேட்டாள்.

"கருவேலமரம்னு சொல்வாங்க. பொட்டானிகல் நேம் தெரியாது."

"உள்ளே பூரா பூரா இந்த மரங்கள்தானா?"

"ஐ திங்க் ஸோ... இதுவும் நாம வாங்கியிருக்கற ஹண்ட்ரட் ஏக்கர்ஸ்ல ஒரு போர்ஷன்தான்..."

அப்பொழுது ஒரு குயில் ஒன்று கூவோ...? என்றது. க்ளாரா அந்த குரலில் கிறங்கிவிட்டாள். சண்முகாவும் குறிப்பறிந்து, இது ஒருவிதமான குக்கூ பேர்ட். வாங்க... ஐ வில் ஷோ யூ..." என்று ஒருவித ஆர்வத்துடன் பிரிந்து கருவேலங்காட்டுக்குள் நுழைந்தார். அவளும் தொடர, அங்கங்கே மற்றவர்கள் நின்று கவனிக்க அவர்கள் இருவரும் சொல்லி வைத்ததுபோல பிணம் புதைக்கப்பட்ட அந்த இடம் நோக்கியே சென்று கொண்டிருந்தனர்.

சண்முகா கச்சிதமாய் புதைக்கப்பட்ட இடத்துக்கு மேல் நின்று கொண்டு மரக் கிளைகளைப் பார்த்து விட்டு, அப்படியே குழிக்குள் இருந்து எடுத்துப் போடப்பட்டிருந்த அந்தக் கல்லையும் பார்த்தார். அதன் எழுத்துக்களும் அவர் கண்களில் பட அவர் முகத்தில் அடுத்த நொடியே ஒரு அதீத பரபரப்பு வந்து தொற்றிக் கொண்டது.

12

ஒரு பெண். கொஞ்சம் கறுப்பு! ஜாதகத்திலும் செவ்வாய்தோஷம். வயது முப்பதைக் கடந்து விட்டது. அறுபது மாப்பிள்ளைகள் அவளைப் பார்த்துவிட்டார்களாம். ஒருவர்கூட அவளைப் பிடித்திருப்பதாகக் கூறி திருமணத்திற்கு சம்மதிக்க வில்லை.

இந்த நிலையில் அந்தப் பெண்... மனது உடைந்து போய் விஷம் குடித்துவிட்டாள். ஒரு வைத்தியன் என்கிற முறையில் முதலில் அவளை என்னிடம்தான் தூக்கிக் கொண்டுவந்தார்கள்.

நானும் முறி மருந்து கொடுத்து அவளைப் பிழைக்க வைத்தேன். அவள் கண் திறந்த உடன், என்னைத்தான் சபித்தாள். "என்னை எதற்கு பிழைக்க வைத்தீர்கள்?" என்னைக் காப்பாற்றிய உங்களால் எனக்கொரு மாப்பிள்ளையைக் காட்ட முடியுமா?"

என்று அவள் என்னை உலுக்கத் தொடங்கி விட்டாள்.

அவள் உயிரைக் காப்பாற்றியதை ஒரு குற்றம் என்று சொல்லி, என்னைச் சிந்திக்க வைத்துவிட் டாள். அதன் பிறகே அவளது திருமணத் தடைக்கான காரணங்கள் தெரியவந்தன.

ஒரு பெண்ணையும் படைத்து, அவள் இப்படித் தான் வாழவேண்டும் என்கிற நியதிகளையும் படைத்து, அந்த நியதிப்படி அவள் வாழமுடியாத படி தடைகளையும் உருவாக்கிய அந்த இறைவனை நினைத்த போது எனக்கு சிரிப்புதான் வந்தது. அதே நினைப்பாக இருந்தபோது ஒரு அதிகாலை வேளையில் எனக்குள் ஒரு தெளிவு.

'யாருடைய விதியையும் இறைவனாகிய நான் எழுதுவதில்லை. மீறி எழுதச் சொன்னால் அவர் களை நித்யசூரியர்களாகத் திகழும்படிதான் நான் எழுதுவேன். உண்மையில் அவரவர் விதியை அவர வர்களே எழுதிக் கொள்கிறார்கள்.'

உண்மையில் விதி என்பது என்ன?

ஒரு சாலையில் இப்படித்தான் செல்லவேண்டும் என்பதில் இருந்து, ஒரு மேடையில் இப்படித்தான் பேசவேண்டும் என்பதுவரை மனிதன் உருவாக்கி யிருக்கும் ஒழுங்குகளுக்கு இன்னொரு பேர்தானே விதி?

அது ஒரு நன்மை கருதி உருவாக்கப்பட்டது தானே? அப்படிப்பட்ட விதிகள் எப்படித் தீமை தருகின்ற ஒன்றாக இருக்கமுடியும்?

ஒழுக்க விதிகளை மீறும் போதுதான் தீமை உருவாகிறது.. வாழ்விலும் அப்படித்தான் நமது விதி பழுதாக இருந்தால் அது எப்பொழுதோ நாம் மீறியதன் எதிரொலி என்று புரிந்து கொள்ள வேண்டும். பழுதான விதியைத் திரும்ப நேர் செய்து கொள்ள பல நூறு சந்தர்ப்பங்கள் உள்ளன.

அதில் பாரபட்சமில்லாதபடி மானிடர்களுக்கு சந்தர்ப்பங்களைத் தருபவைதான் ஆலயங்கள். எனவே தான் இப்படி சந்தர்ப்பங்கள் பெற இட மில்லாத, அதாவது ஆலயங்கள் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றாள் ஔவைக் கிழவி. ஒவ்வொரு ஆலயமும் ஒரு நீர்ச்சுனை போன்றது. சுனையைப் பயன்படுத்தி மேம்படுவதுதான் உண்மையான பகுத்தறிவு. ஆலயச் சுனையில் ஒருவர் நீராடலாம். ஒருவர் கூடவே தங்கள் ஆசை அழுக்கை துவைத்துப் போக்கிக் கொள்ளலாம். அத் துடன் தாக சாந்திக்கு ஒரு குடத்தில் நீரும் எடுத்துக் கொள்ளலாம்...

இது எதுவும் செய்யாமல் சுனையைப் பார்த்து அச்சப்பட்டு அதில் இறங்கினால் இறந்து விடுவோம் என்று நினைத்துக் கொண்டு ஒதுங்கியும் போகலாம்.

சுனை யாரையும் அழைப்பதில்லை. யாரையும் தடுப்பதுமில்லை. உத்தமன்- தீயவன் என்று பாகு பாடும் பார்ப்பதுமில்லை.

சுனையைப் பயன்படுத்தத் தெரிவதில்தான் எல்லாமே உள்ளது. சுனையும் இறையும் இங்கே ஒன்றே! ஆலயம் சென்று இறைவனிடம் அவனது அன்பை, சக்தியை யாசித்துப் பெறத் தெரிய வேண்டும்.

'எதற்காக வருகிறது ப்ரதோஷ காலம்? விஷத்தை அமிர்தமாக்கிக் கொள்ளத்தானே?

அந்தக் கறுப்பு நிற செவ்வாய் தோஷப் பெண்ணை ப்ரதோஷ காலத்தில் வந்து தேனாபிஷேகம் செய்து வணங்கி வழிபடச் சொல். கறுப்பே திருப்பம் தரும் ஒன்றாக ஆகும். செவ்வாய் தோஷமே அடிப்படை பலமாகி விடும்....

-என்று எனக்குள் யாரோ அமர்ந்து கேள்விகள் கேட்டு, பதிலும் செல்வதுபோலத் தோன்றியது. அதன்பின் நானே அப்பெண்ணை ப்ரதோஷ காலத்தில் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றேன். அவள் கைகளால் தேன் வழங்கச் செய்தேன்.. அவள் கைகளால் அவள் பலருக்கு கசப்பானதையே முற்பிறவியில் தந்திருக்கிறாள். அது அவளக்குள் பதிவாகியே அவளை தோஷ காலத்தில் பிறக்க வைத்து, அதிலேயே வழியும் நடத்திற்று. இப்பொழுது இறைவனுக்கே தேன் என்னும் இயற்கையின் அமிர்தத்தை தந்ததால் அதன் காரணமாய் அவள் கணக்கில் வரவு வைக்கப்பட்ட அதற்கான பலன், ஒரு மாப்பிள்ளையையும் இழுத்து வந்தது. அவருக்கு கறுப்பு நிறம்தான் அதிகம் பிடிக்குமாம். அவருக்கும் செவ்வாய் தோஷமிருப்பதால் தோஷத்திற்கு தோஷம்தான் தாங்குமாம் என்று சில நியாயங்களின் பேரில் அவள் திருமணமும் முடிந்தது. என்னே என் சிவத்தின் கருணை? அந்த நொடிப் பொழுதில் 'ப்ரதோஷ வேளை, விஷமெல்லாம் அமிர்தமாகும். ஆக்கிக் கொள்ளத் தெரிய வேண்டும். இதுதான் மகாதேவ ரகசியம் இரண்டு' என்று ஒரு குரல்!

-ரசமணி வித்தகர் பெரியய்

சண்முகாவின் கண்கள் அந்த கல்லைப் பார்த்து அப்படியே அகண்டுவிரிய, அதன் செய்தியோ அவரை முட்டித் தள்ளிற்று.

'மகா ஸ்ரீஸ்ரீஸ்ரீ சுந்தர பாண்டியனாலே நிர்மாணிக்கப்பட்ட சொக்கநாதர் மீனாட்சியம்மை ஆலய வடவெல்லை தொடக்கம்' என்று அதில் செய்தி!

"அனந்தாச்சாரிஈ.ஈ.ஈ...!" -சண்முகா தன்னை மறந்து உடனேயே ஓங்கலாகக் குரல் கொடுத்தார்.

"யெஸ் சார்... வந்துட்டேன்" -என்றபடியே அனந்தாவும் சற்றே தடுமாறி அந்த முள்காட்டில் அவரை நோக்கி வர, சண்முகா அந்த கல்லைத்தான் முதலில் காட்டினார். அனந்தாவும் அதிர்ந்துவிட்டார்.

"ஜோதிடர் நாகபூஷணத்தோட பிரசன்னம் நிஜம்தான் போல இருக்கு!" என்றார் உடனேயே. கூர்மையாகக் கவனித்த க்ளாரா, இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"மேடம்! இந்தக் கல்வெட்டு, ஒரு ஹிஸ்டாரிகல் டென்டிஃபிகேஷன். அதான்..." சண்முகா விளக்க ஆரம்பித்தார்.

"வாட் ஈஸ் த மெஸ்ஸேஜ்...?"

"சொல்றேன். இந்த சொக்கம்பட்டி வில்லேஜ்ல ஒரு சிவன் கோயில் இருந்து, அதைக் காலப்போக்குல மண் மூடிட்டதா ஜோதிடர் நாகபூஷணம் சொன்னார். அதைத் திரும்ப கண்டுபிடிச்சு ரெனவேட் பண்ணினா ரொம்ப நல்லதுங்கறதும் அவர் சொன்னதுதான். ஆனா நாங்க பார்த்த அளவுல அப்படி ஒரு கோயில் இருந்த சுவடே இல்லை. சக்கரவர்த்தி மோட்டார்ஸ் ஒண்ணும் தொல்பொருள் இலாகா இல்லை. ஐ மீன், நாம ஒண்ணும் ஆர்கியாலஜிஸ்ட் இல்லேன்னு சொல்ல வந்தேன். நமக்கு நம்ம ஃபேக்டரி கன்ஸ்ட்ரக்ஷன்தான் பெருசு. ஆகையால மிஸ்டர் சரண்யன் இதை மைண்ட் பண்ணலைன்னுதான் சொல்வேன். ஆனா பழைய பாஸ் மிஸ்டர் சக்கரவர்த்தி, ரொம்பவே மைண்ட் பண்ணினார். பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் சுந்தர பாண்டியன் என்கிற பாண்டிய

ராஜா கட்டின கோயிலை நான் ரெனவேட் பண்றதுக்குக் கொடுத்து வெச்சுருக்கணும்னு கூட சொன்னார்."

"அப்போ இப்ப கோயில் இருக்குன்னு இந்தக் கல்வெட்டு சொல்லுதா?"

"செர்ட்டன்லி. கோயிலோட வடக்கு எல்லைல நடப் பட்ட நடு கல் இது. இதை ரெஃபரன்ஸா எடுத்துண்டு நாலு பக்கமும் செர்ச் பண்ணா டெஃபனட்டா அதைக் கண்டுபிடிச்சுடலாம்."

-சண்முகா மிக ஆர்வமாகச் சொன்னது க்ளாராவை யோசிக்க வைத்தது.

இரண்டு நாள்களுக்கு முன் ஃபேக்டரியில் நடப்பதை எல்லாம் மேன்-மேடாகக் கூட இருக்கலாம் என்றவர், இப்பொழுது நம்பிக்கையோடு பேசுவது அவளை கொஞ்சம் சிரிக்கக் கூட வைத்தது.

ஒரு குயில் கூவப்போய் அதைத் தேடி வந்த இடத்தில் அப்பட்டமாய் ஒரு திருப்பம்!

❑ ❑ ❑

மெயின் கேட்டை பூட்டி விட்டு, கூர்க்காவிடம் கவன மாக இருக்கச் சொல்லி விட்டு புல்வெளியில் நடந்து பங்களாவின் பின்பக்கம் உள்ள கிணறு நோக்கி நடந்து கொண்டிருந்த தோட்டக்காரன் நாடிமுத்து, எப்பொழுதும் இல்லாதபடி தோட்டம் பசுமையாக இருப்பது போல ஒரு பார்வை பார்த்தான். புல்லெல்லாம் புத்துணர்ச்சியுடன் புடைத்துக் கொண்டு போர் வீரன்போல நிற்பதாக அவனுக்குள் ஒரு எண்ணம். கல்வாழை ஒன்று... சதா துவண்டே கிடக்கும்! அதுவும் மிடுக்காகத் தெரிந்தது.

'இனிமேல் இது வளராது.. பிடுங்கி எரிய வேண்டியது தான்' என்று அவனால் தீர்மானிக்கப்பட்டிருந்த, ஊட்டி மற்றும் கொடைக்கானலில் மட்டுமே வளரும் ஒருவித

செவ்விலைக் கொடி, அவசர கதியில் ஐந்தாறு இலைத் துளிர்களை விட்டிருந்தது. எல்லாமே மாறிவிட்டது போலத் தோன்றியது. பைப் மூக்குக்குள் ட்யூபை செருகி தண்ணீர் பீய்ச்ச முற்படும்போது தண்ணீரில் கூட ஒருவித இன்னதென்று தெரியாத வாசம். முகம் கழுவும் போது நாவில் பட்டு, மினரல் வாட்டர்போல ஒரு புதுச்சுவையை காட்டியது. நாடிமுத்து தீவிரமாக யோசித்தான்.

அப்பொழுது பார்த்து அவன்மேல் ஒரு நிழல்! நிமிர்ந்துப் பார்த்தான். கழுத்து, தலை, கைகளில் எல்லாம் கட்டுடன் மாடியில் சரண்யன். 'படுத்தே ஜாகிங் போவ தாக நினைத்துக் கொண்டு சுற்றிச்சுற்றி வாருங்கள்' என்று சொன்னதைச் செயல்படுத்திக் கொண்டிருந்தவன், நாடிமுத்து தண்ணீரை முகர்ந்து பார்ப்பதை பார்த்து விட்டுத்தான் நின்றான்.

"என்னய்யா... என்ன பண்ணிகிட்டிருக்கே?"

"ஐயா... ஒண்ணும் பண்ணலீங்க. நம்ம கிணத்துத் தண்ணி ஒரு இரண்டு நாளா பெருமாள் கோயில் தீர்த்தம் மாதிரி கும்முன்னு வாசமடிக்குதுங்க. அதான்..."

அவன் பதிலால் சரண்யன் முகத்திலும் ஒரு சின்னத் திடுக்கிடல்.

பொதேல் என்று தூக்கிப்போட்ட அந்த சிவலிங்கம் ஞாபகம்தான் அடுத்த நொடி அவனுக்குள் வந்தது. ஒரு வேளை அதன் வேலையாக இருக்குமா? மூலிகை நவ பாஷாணம் என்றெல்லாம் அந்தப் பிச்சைக்கார சாமியார் சொன்னாரே? "செடி கொடிங்கல்லாமும் சும்மா தள தளன்னு கண்ணுக்குத் தெரியுதுங்க. குடிச்சா தண்ணி கல்கண்டா இனிக்குது. எப்படி நம்ம கிணறு இப்படி மாறுனுச்சுன்னே தெரியலை!"

நாடிமுத்துதான் தொடர்ந்தான்.

அதேசமயம் அருகாமை மாமரக்கிளையில் ஒரு காகம் நெடு நேரமாக ஒரு மௌனச் சாமியாரைப் போல அது

அமர்ந்திருப்பதாக சரண்யனுக்குக் கூட தோன்றியது. மரம் என்றால் காக்கை, குருவிகள் வந்து அமர்ந்து கொண்டிருப்பது சகஜமான ஒரு விஷயம்தான். ஆனால் இந்த காக்கை அப்படி வந்து அமர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு காக்கையாக ஏனோ சரண்யனால் உணர முடிய வில்லை. அதை ஒரு முறை முறைத்தவன், மேலே தடு மாறி நடந்தது போதும் என்கிற மாதிரி, மாடியைவிட்டு கீழ் இறங்கினான். சென்ட்ரலைஸ்டு ஏ.சி. பெர்ஃப்யூம் வாசமுடன் மாடி ஹாலில் வந்து சோஃபாவில் விழுந்த அவனை வரவேற்றது.

மிகக் கவனமாக சற்றே வலியோடு அமர்ந்தான். ஆஸ்பத்திரியில் 15 நாளாவது இருக்க வேண்டும் என்றுதான் டாக்டர் சொல்லியிருந்தார். அப்படிப்பட்டவர் 'ரிமார்க்கபிள் இம்ப்ரூவ்மெண்ட்' என்று சொல்லி, நேற்றுதான் டிஸ்சார்ஜும் செய்திருந்தார்.

அடிபட்டது... அட்மிட்டானது... திரும்ப வந்திருப்பது என்று ஒரு விஷயம் கூட அவன் நினைத்தபடி இல்லை. எல்லாமே அப்நார்மல்! அவனைச் செலுத்தும் விஷயங் களாக அவனுக்குள் ஒரு புது எண்ணம். இடையில் க்ளாரா வின் சிரிப்புச் சப்தம் அவனது செல்ஃபோனில் இருந்து கேட்கவே, மிக உற்சாகமான மனநிலைக்கு வேகமாக மாறி ஃபோனை கையில் எடுத்தான். காதையும் கொடுத் தான்.

"சரண்..."

"ஹலோ க்ளா... வேர் ஆர் யூ நௌ?"

"உங்க ஃபேக்டரி லேண்டோட கன்ஸ்ட்ரக்ஷன் ஏரியாவுல இருந்துதான் பேசறேன்."

"ஏன்... நம்ம ஃபேக்டரின்னு சொல்லக் கூடாதா?"

"குட்... நல்லா மடக்கிட்டியே. எப்படி இருக்கே இப்போ?"

"நான் இப்ப எங்க இருக்கேன், சொல்லு பார்ப்போம்."

"ஐ.சி.யில இருந்து ஆர்டினரி வார்டுக்கு மாறி யிருப்பே... ஈஸ் இட்!"

"அதான் கிடையாது... நான் இப்ப வீட்ல இருந்து பேசறேன். ஐ ஃபீல் வெரிவெரி எனர்ஜெடிக்"

"ரியலி...?"

"ஆமாம். அது சரி... எதுக்கு இப்ப போய் அந்தக் காஞ்ச பய ஊருக்கு போயிருக்கே...?"

"வாட் டு யூ மீன்... காஞ்ச பய ஊர்னா?"

"ஐ ஆம் ஸாரி... ஐ ஆம் ஸாரி... அப்படின்னா வெரி வெரி ட்ரைப்ளேஸ். லைக் டெசர்ட்டுன்னு அர்த்தம்."

"எதுக்குப்பா அப்ப டெசர்ட்டுலல்லாம் கன்ஸ்ட்ரக்ஷன் பண்றீங்க?"

"நான் எங்க பண்ணேன்? அது அப்பாவோட முடிவு. என்னைக் கேட்டா அந்த கன்ஸ்ட்ரக்ஷனை நிறுத்திக் கூட வைக்கலாம். இங்க சென்னை ஃபேக்டரியை மெயின்டைன் பண்றதே பெரும்பாடா இருக்கு..."

"இது என்ன அபிப்ராயமா... இல்லை, தீர்மானமா?"

"இப்போதைக்கு அபிப்ராயம்தான். நீ கிளம்பி வா, தீர்மானமே பண்ணிட்றேன்."

"நோ... இந்த ஊர்ல எனக்கு நிறைய வேலை இருக் கற மாதிரி ஒரு ஃபீலிங். ஐ லைக் இட் வெரி மச். எக்ஸ்பான்ஷனை தப்புங்கற மாதிரி சிந்திக்கறதே தப்பு சரண்..."

"ஓ.கே... நீ முதல்ல புறப்பட்டு வா. கூட யாரெல்லாம் இருக்கா?"

"உன் ஆபீஸ் இ.சி. மெம்பர்ஸ் அவ்வளவு பேரும் வந்துருக்காங்க."

"அப்படியா?"

-அவன் ஆச்சரியமானான். அப்படியே நடந்து ஜன்னல் அருகே வந்து கர்ட்டனை விலக்கினான். கண்ணாடிக்குப் பின்னாலே உள்ள ஜன்னல் திட்டில் அவனையே வெறித்தபடி அந்தக் காக்கை!

13

'ஒரு முறை அரசியல்வாதியை சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். துளியும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர் அவர். மனிதன் குரங்கில் இருந்து வந்தவன் என்னும் டார்வின் தத்துவம்தான் மெய் என்றார். விதி, பாவம், புண்ணியம் எல்லாமே பொய் என்றவர் மனிதனின் அறிவுத்திறம்தான் உண்மையான கடவுள் என்றார். அதாவது புத்தி சாலிக்கு உலகம் சொந்தம். முட்டாள்களோ உலகத் துக்கு சொந்தம் என்று பகுத்தறிவு பேசினார்.

"அப்படி எல்லாம் சொல்லதீர்கள். இந்த உலகத் தில் நுற்றுக்கு தொண்ணூறு பேர் கடவுள் நம்பிக்கை உள்வர்களே... பத்து பேர்தான் உங்களைப் போல் சிந்திப்பவர்கள். நம்பிக்கை மிகுந்த அந்த தொண் ணூறு பேரையும் முட்டாள்களாக நினைப்பதுதான் மடத்தனம்" என்றேன் நான்.

அவருக்கு கோபம் வந்துவிட்டது.

"மக்கள் அவ்வளவு பேரும் செம்மறி ஆடுகளைப் போன்றவர்கள். தொப்பியை தூக்கிக் கொண்டு போன குரங்குகளைப் போன்றவர்கள். புத்திசாலிகள் எப்பொழுதும் குறைவாகவே இருப்பார்கள். பக்தி என்பது ஒருவித மன பலவீனம். அதற்கு எப்பொழு தும் ஒரு துணை அவசியம். அதனால்தான் எதை யாவது எழுதும்போது கூட பிள்ளையார் சுழிபோட்டு, 'முருகன் துணை' என்றோ 'சக்தி துணை' என்றோ எழுதினால்தான் அவர்களுக்குத் தெம்பாக இருக்

கும்" என்று அவர் தரப்பு நியாயங்களை அடுக்கிக் கொண்டே போனவர், இறுதியாக ஒரு கேள்வியைக் கேட்டார்.

"கடவுள் இருப்பது உண்மையானால், அவர்தான் நம்மை எல்லாம் படைத்தார் என்றால் எல்லோரையும் பணக்காரர்களாக, ஆரோக்கியமானவர்களாக, நல்லவங்களாகப் படைக்க வேண்டியதுதானே? அப்படிப் படைத்துவிட்டால் எங்காவது யாராவது அடித்துக் கொள்ள முடியுமா? ஒரு பிச்சைக்கார னாவது இந்தப் பூமியில் இருப்பானா? நோய் நொடிதான் இருக்குமா? அவருக்கும் நல்லவர்களைப் பாதுகாப்பது, கெட்டவர்களை அழிப்பது போன்ற எவ்வளவோ வேலைகள் மிச்சமாகுமல்லவா?" என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

"உண்மையில் நாமாக இருந்தால் என்ன செய் வோம்? காலத்துக்கு பிரச்சினை இல்லாதபடி எல்லாமே அமையத்தானே சிந்திப்போம்? ஒரு பொருளையே அது நெடுங்காலம் தேய்மானமின்றி உழைக்க வேண்டும் என்று வாங்கும் நாம். மனிதர் கூட்டத்தைப் படைக்கும் பொறுப்பை பெற்றால் என்ன செய்வோம்?

'அவர்களால் நமக்கு பிரச்சினை வராதபடி அவர் களும் மகிழ்ச்சியாக, நாமும் மகிழ்ச்சியோடு காலம் கழிக்க என்ன உண்டோ அதைத்தானே செய்வோம்... இப்படியா முட்டாள்தனமாக நடப்போம்?

'புராணங்களையே பாருங்கள். அசுரர், தேவர் என்று இரண்டு ஜாதி. இதில் அசுரர்களுக்கு வரம் கொடுத்துவிட்டு அவர்களால் அல்லல்படாத தெய்வம்தான் உண்டா? சர்வ சக்தி படைத்தது தெய்வம் என்றால் அது சராசரி மனிதனைப் போலவா சிரமப்படும்? எப்படி கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் இந்த உலகை, நம்மை ஒரு தெய்வம் தான் படைத்திருக்கும் என்பதை நம்ப முடிய வில்லை... அதைவிடக் கொடுமை... எல்லோருக்கும்

ஒரு தலை எழுத்து... அதன்படிதான் அவன் வாழ்க்கை அமையும் என்னும் இன்னொரு அபத்தம்.

'இந்த உலகம் என்ன ஃபேக்டரியா?

'ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையையும் ஒரு கடவுள் கண்காணித்து அவர்களுக்கேற்ப தலை எழுத்து என்ற ஒன்றை எழுதி, அதன்படியே அவர்களுக்கு பலாபலன்கள் கிடைக்க மற்ற விஷயங்களையும் அதற்கேற்ப டைரக்ட் செய்வது என்பதெல்லாம் துளியாவது சாத்யமா?

'கடவுள் சித்தாந்தம் போல் ஒரு கற்பனை, ஒரு புருடா, ஒரு அபத்தம், இருக்க முடியுமா?" என்றெல்லாம் கேட்டு என்னை உலுக்கி எடுத்துவிட்டார்.

உண்மையில் அந்தக் கேள்விகள் என்னையும் கூட சிந்திக்கத்தான் வைத்தன.

ஆனால் பதிலுக்கு என்னுள் யாரோ அதற்கு எதிராக சிந்தித்து, மிகப் பலமாகச் சிரிப்பது போல் தோன்றியது.

'அடப்பாவி! மகாதேவ ரசசியத்தின் அரிச்சுவடி விஷயங்கள்தான் இந்தக் கேள்விகள். விதி, தலை எழுத்து எல்லாம் சாராரண பால பாடங்கள். விளக்கமாகச் சொல்கிறேன், கேள்' என்று எனக்குள் யாரோ பேச ஆரம்பித்தார்கள்.

-ரசமணி வித்தகர் பெரியய்யா

அந்தக் காகம், சரண்யனையே வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தது. கொஞ்சம் புஷ்டியான காகம். கழுத்துப் பக்கம் கொஞ்சம் போல தென்படும் சாம்பல் நிறத்தை அந்த காகத்திடம் பார்க்க முடியவில்லை.

சரண்யனுக்கு எதனாலோ இதயப் பரப்பில் 'ஜிலீர்' என்று ஒரு ஜில்லிப்பு... சீராகப் பேசிக் கொண்டிருந்தவன், தடுமாற ஆரம்பித்தான்.

"க்ளா... நீ இப்ப எங்கே இருக்கே? இங்க ஒரு க்ரோ... நோ நோ.. நத்திங்... நீ உன் விருப்பப்படியே செய்... உடம்பைப் பார்த்துக்கோ ஐ ஆம் ஆல் ரைட்!"

-உளறிக் கொட்டினான். பார்வை என்னவோ காகத்தின் மேலேயே இருந்தது.

க்ளாரா அவன் உளறுவதை உணர்ந்து, "சரண்... என்னாச்சு மேன்?' என்று கேட்க, அவன் கைகள் செல்லை காதருகே இருந்து விடுவித்து அப்படியே பக்கத்தில் உள்ள படுக்கையில் வைத்தன.

அந்தக் காகமோ அங்கிருந்து மெல்லப் பறந்து, கிணற்றுத் திட்டின்மேல் சென்று அமர்ந்தது. 'கா... கா...' என்று யாரோ அழைக்கும் குரலும் காதில் விழ அந்தக் காகம், அமர்ந்த நிலையில் இருந்து எழும்பிப் பறந்து அப்படியே கிணற்று நீருக்குள் ஒரு அம்பைப் போல செருகியபடி நுழைந்து உடம்பை நனைத்துக் கொண்டு மேலெழும்பிப் பறந்தது.

சரண்யனுக்கு வியப்பான வியப்பு. ஜாக்ரஃபி சேனலிலும், அனிமல் பிளானட்டிலும் இதைவிட அரிதான காட்சிகளைப் பார்த்திருக்கிறான். இருந்தாலும் நேரடி அனுபவங்கள் எப்பொழுதும் மயிர்க் கூச்சம் தருபவை என்பது நிதர்சனமாகிக் கொண்டிருந்தது.

அப்படியே அந்தக் காகம், கிணற்றுத் திட்டின்மேல் சமையல்கார புஷ்பா மாமி கொண்டு வந்து வைத்த கைப்பிடி சாதத்தை அப்படியே அள்ளி விழுங்கத் தொடங்கியது.

அப்படியானானல் பழகிய, தினம் வரும் காக்கை காகத்தான் இருக்க வேண்டும். ஆனால் நம் மனதுதான் தேவையற்ற பீதிக்குள்ளாகிவிட்டது என்பதுபோல சமாதானமானவன், திரும்பிச் சென்று செல்ஃபோனை எடுத்து 'ஹலோ' என்றான்.

"என்னாச்சு சரண்... சிக்னல் சரியா கிடைக்கலயா?" -க்ளாரா எரிச்சலோடு கேட்டாள்.

"நோ... நீ இப்ப பேசும்போது ஒரு காக்கா... ஐ மீன் க்ரோ, என்னையே பார்த்துகிட்டிருந்துச்சு, நான் நெர்வஸா யிட்டேன். அது அப்படியே போய் கிணத்துல இறங்கிக் குளிச்சுட்டு, நம்ம சமையல்கார மாமி வெச்ச சாதத்தையும் சாப்டுச்சு. எனக்கு ஒரே ஒண்டர்."

"என்ன சரண்... நான் எக்ஸ்பேன்ஷன் பத்தி சீரியஸான திங்கிங்ல இருக்கேன். நீ காக்கா குளியல்னு டைவர்ட் ஆயிட்டியே?"

"சாரி... சாரி... வெரி சாரி. இப்ப நான் என்ன பண்ண ணும்கறே? சொல்."

"இங்க ஒரு சிவன் கோயில் இருக்குதாமே? அதைக் கண்டுபிடிச்சு ரெனவேட் பண்ணனும்னு ஜி.எம். சண்முகம் சொன்னார்..."

"நோ க்ளாரா... நோ... அதெல்லாம் சும்மா! இந்தக் கோயில் ரெனவேஷன்கற பேச்சை எல்லாம் தயவு செய்து விட்டுடு. அதெல்லாம் வேலை வெட்டி இல்லாதவங்க செய்யறது. அண்டர் ஸ்டாண்ட்."

"ஓ.கே. லீவ் இட், நான் நேரிலே பேசறேன். வை." -அவள் இணைப்பை சட்டென்று முறித்துக் கொண்டாள்.

அவனுக்குக்கூட அது சோர்வைத் தந்தது. செல் ஃபோனைத் தூக்கி எறிந்துவிட்டுத் திரும்ப ஜன்னல் அருகே சென்று நின்றான்.

இப்பொழுது கிணற்றுத் திட்டில் ஒன்றுக்குப் பத்தாக காகங்கள்.

'என்ன இது.. எதற்காக இவை இப்படிக் கூடியிருக் கின்றன?' கேள்வி கொத்தியது. கெத்திக் கெத்தி நடந்து வந்த புஷ்பா மாமியிடம் கேட்டபோது, "என்னன்னே தெரியல... ஒரு நாலு நாளாவே இப்படி காக்காக்கள்

கிணத்தடிக்கு வர ஆரம்பிச்சுடுத்துகள். அடிச்சுத் துரத்த வும் மனசு வரமாட்டேங்கறது, ஏன்னா பித்ருக்கள். காக்கா ரூபத்துலன்னா வருவா!"

-புஷ்பா மாமி அவன் வரையில் ஒரு புதிய தகவலைச் சொன்னாள். அவனுக்கு ஏன் கேட்டோம் என்றிருந்தது!

❑ ❑ ❑

'சக்கரவர்த்தி மோட்டார்ஸ் என்கிற பெயர்ப் பலகைக் குக் கீழே கூட்டமாக நின்று ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்ட க்ளாரா, அப்படியே பார்வையை ஓடவிட்டாள். ஆங்காங்கே ராட்சஸ பொக்லைனர்கள் மண் கவளங்களை அள்ளிக்குவித்துக் கொண்டிருக்க, கண்ணுக்கு எட்டிய தூரம் ஒரே செம்மண் வெளி!

ஒரு சில இடங்களில் இஞ்ச் டேப்பும் கையுமாய் சிவில் என்ஜினியர்கள் அளப்பதும், நோட்டமிடுவதுமாய் இருக்க... சைக்கிளை உருட்டிக் கொண்டு அவர்கள் எதிரில் வந்து கொண்டிருந்தான் தபால்காரன் வேலாயுதம்!

சீஃப் சிவில் என்ஜினியர் அவனைப் பார்த்து அருகில் அழைத்துக் கடிதங்களை வாங்கிக் கொண்டார். அவன் பார்வை, அந்தக் கூட்டத்திலேயே தனியாகத் தெரிந்த க்ளாராவையும் கவனித்தது.

"சார் அவுங்க யார் சார்...?" சீஃப் என்ஜினியரிடம் கேட்டான்.

"யாருய்யா....?"

"அதான் சார் அந்த வெள்ளக்காரி..."

"யோவ்... மெல்லப் பேசு. காதுல விழுந்துடப்போகுது."

"ஏன் சார்?"

"அவங்கதான் இங்க வரப்போற கம்பெனியோட ஓனரம்மா."

"சார்ர்ர்...!"

"என்ன சார்ர்! வெள்ளைக்காரி எப்படி எஜமானியாக முடியும்னு பாக்கறியா...? எல்லாம் காதல் படுத்தறபாடு."

'ஓ... அப்படியா சங்கதி?'

-அவன் புரிந்து கொண்டு திரும்ப க்ளாராவின் மேல் பார்வையைச் செலுத்த, அவளும் அவன் பார்ப்பதை அறிந்து அருகில் அழைத்தாள்.

"சார்... கூப்பிட்றாங்க சார்..."

"போ... நல்லா தமிழ் பேசுவாங்க."

"குட் மார்னிங் மேடம்..."

"நீங்க யார்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

-அவளது மரியாதையான விசாரிப்பு, அவனை பரவசப்படுத்தியது.

"நான்தாம்மா இந்தக் கிராமத்து போஸ்ட்மேன்."

"ஐ ஸீ... நீங்க இதே ஊரேவா?"

"இல்லம்மா.. ஆனா எனக்கு இந்த ஊரும், சுற்று வட்டாரமும் அத்துபடி,"

"வெரிகுட்... ஒரு நிமிஷம் இருங்க" என்றவள் ஜி.எம். சண்முகாவோடு ஒதுங்கி அவர் காதைக் கடிக்க தொடங்கினாள்.

"மிஸ்டர் சண்முகா, இவன்கிட்ட இந்த ஊர்ல எதாவது கோயில் இருக்கான்னு கேக்கலாமா?"

"கோயிலா.. யூ மீன் நம்ம சக்கரவர்த்தி சார் ரெனவேஷன் பண்ண ஆசைப்பட்ட அந்தக் கோயிலைப் பத்தி கேக்கறீங்க."

"எக்ஸாக்ட்லி!"

"அப்போ..."

"கோயில்ங்கறது ரொம்ப நல்ல விஷயம் மிஸ்டர் சண்முகா. அது சர்ச்சோ, மாஸ்க்கோ, இல்லை கோபுரமோ

அதைக் கொண்டுவர முயற்சி செய்யறது ஒரு நல்ல விஷயம்."

"அப்ப நீங்க நம்ம ஜோதிடர் நாகபூஷணம் சொன்ன விஷயத்தை நம்பறீங்கன்னு சொல்லுங்க...?"

"முதல்ல பாழடைஞ்ச கோயில் இருக்கான்னு கேட்போமே..."

"ஓ யெஸ்... தாராளமா கேட்கலாம். ஏய் மிஸ்டர்..."

-சண்முகாவும் அவனை அழைத்தார்.

அவனும் நெருங்கினான்.

"ஆமா... இங்க எதாவது கோயில் இருக்காய்யா..?"

"கோயிலா?"

"ஆமாம்... சிவன் கோயில்."

"எனக்குத் தெரிஞ்சு இல்லீங்களே..."

"நல்லாத் தெரியுமா?"

"நல்லாத் தெரியுங்க, கருப்பசாமி கோயில் ஒண்ணு இருக்கு. பாண்டி முனி கோயில் ஒண்ணு இருக்கு. சிவன் கோயில் இல்லீங்களே... ஆமா, எதுக்கு சார் கேக்கறீங்க?"

-வேலாயுதம் நிஜமான ஆவலோடு பதிலுக்குத் திருப்பிக் கேட்கையில், பொக்லைனரின் மண் கெல்லி எடுத்தில் அப்படியே மண் கவளங்களை அள்ளும்போது அதில் ஒரு நந்திச் சிலை உருவம்!

14

'வட்டத்தில் எது ஆரம்பம்? எது முடிவு? ஆரம்பமும் முடிவும் தெரிய வேண்டுமாயின் அது நேர்கோடாக இருந்து விடுவதுதான் உத்தமம். இரண்டும் தெரியத் தேவையில்லையேல் ஆரம்பமும்

முடிவும் ஒன்றுபட நேர்கோடே அதன் நீளத்திற்கு ஏற்ற வட்டமாய் உருக்கொண்டு விடும்.'

இந்தக் கணக்கு இப்பொழுது இங்கே எதற்கு?

'கடவுள் மனிதனைப் படைக்கவில்லை, மனிதன் தான் கடவுளைப் படைத்தான் என்கிற கருத்துக்கும் இந்தக் கணக்குக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வி எழுகிறதா?' கூர்ந்து பாருங்கள். கடவுள் மனிதனைப் படைக்கவில்லை என்கிற சிந்தனை ஒரு வட்டத்தைப் போன்றது. ஏன் என்றால் ஒரு கேள்விக்கான பதில், ஒன்றில் தொடங்கி இன்னொன்றில் முடிவது. தொடக்கமும் முடிவும் அற்ற ஒரு வட்டத்தைக் காண்கையில் கடவுள் மனிதனைப் படைத்திருக்க வாய்ப்பில்லை என்கிற எண்ணப்பாடே நம்மை ஆட்சி செய்யும்.

ஆரம்பமும் தெரியாததால், முடிவும் தெரியாததால் இல்லை என்கிற முடிவுக்கு வருவது புலனறிவுக்கு மிகச் சரி. ஆரம்பித்த இடத்திலேயே முடிவைப் பெற்றதாலேயே இது வட்டமாகத் தெரிகிறது. முடிவில்லாததாக நீண்டு கொண்டே போயிருந்தால் இது ஒரு நேர்கோடாகத்தான் இருக்கும் என்றும் யூகிக்க முடிந்தால் அதுதான் சூட்சம அறிவு.

மகாதேவ ரகசியங்கள் புரிய சூட்சம அறிவே தேவை. புலனறிவு அதன்முன் அல்பம்! விஞ்ஞானம் முழுக்க முழுக்கப் புலனறிவால் இயங்குவது. புலன்களின் சக்திக்கு உட்பட்டதைக் கண்டு, புலன்களின் உணர்வுக்கு ஆட்பட்டதை உணர்ந்து அதற்கேற்ப செயல்படுவது. கிணற்றுத் தவளையின் நிலைப்பாடும் இதுவும் ஒன்றே.

கிணற்றின் அடிப்படுகையில் வாழும் ஒரு தவளை, உலகம் என்பது நீரால் மட்டுமே ஆனதாகவே கருதும். அந்த உலகமும்கூட அந்த கிணற்றின் ஆழவட்ட அளவு கொண்டதாக மட்டுமே உணரும்.

அதற்குமேல் உணர அதற்கு வாய்ப்புமில்லை; வழியுமில்லை. அப்படி அது சிந்தித்தால் அதில் அணுவளவு தவறுமில்லை.

அதேசமயம் அது உண்மையுமில்லையல்லவா?

கிணற்றுக்கு வெளியே ஒரு பூமி, பூமியில் கோடிக்கணக்கில் உயிரினங்கள், இந்த பூமிக்குமேல் வானம், வானத்தில் எண்ண முடியாத நட்சத்திரங்கள் என்று எவ்வளவு இருக்கிறது?

இதெல்லாம் எப்பொழுது தெரிய வரும்?

கிணற்றைவிட்டு அந்தத் தவளை வெளியில் வந்து பூமியில் நடமாடினால்தானே அதற்கு இந்த உண்மை விளங்கும்?

ஆன்மீகம் என்பதும் இப்படித்தான் புலனறிவுக்கு அப்பாற்பட்டதாய் உள்ளது.

புலனறிவுதான் கேள்விகள் எழுப்புகிறது. மனிதர்களை நல்லவர்களாகப் படைப்பதற்கென்ன? எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கும்படி செய்வதற்கென்ன? ஏன் ஏற்ற தாழ்வு... எதற்கு தலைவிதி? எதற்கு இன்பம், துன்பம் என்று...

உலகமென்றால் என்னவென்றே தெரியாத குழந்தைகளுக்குக் கூட மிக விருப்பமானது விளையாட்டுதான். விளையாட்டுக்குள் அப்படி என்ன இருக்கிறது? வெற்றியும் தோல்வியும்தானே? வெற்றி என்றால் என்ன, தோல்வி என்றால் என்ன என்றே விளங்காத குழந்தைக்குக் கூட வெற்றி உணர்வின் கலை புரிந்திருப்பதால் அதை வேண்டி அது விளையாட்டில் ஜெயிக்க முயல்கிறது. தோற்றால் அழுகிறது. அழுவதைத் தவிர்க்க மீண்டும் வெற்றிக்காக அது தொடர்ந்து விளையாடுகிறது. ஒருமுறை வெற்றி, ஒரு முறை தோல்வி... இதில் அது தன்னை மறக்கிறது. இதற்கு உட்படாத கல்லைப்போல அமர்ந்திருக்கும் ஒரு குழந்தையைப் பார்த்து அதன் தாயோ அஞ்சுகிறாள். இந்தக் குழந்தைக்கு உடம்பு, மனது இரண்டிலும் கேடு என்று

எண்ணிக் கலங்குகிறாள். வெற்றியும் தோல்வியுமான விளையாட்டில்தான் ஆரோக்கியம் இருப்பதால் அவள் அப்படி எண்ணிக் கலங்குகிறாள்.

வாழ்க்கையும் ஒரு விளையாட்டுதான். இதில் தோல்வியைத் தவிர்த்தால்தான் வெற்றி. தோல்வி இல்லாத வெற்றியும் அர்த்தமற்றது.

இந்த வெற்றி எப்பொழுது கிடைக்கும்? தோல்வி என்று ஒன்று இருந்து, அதோடு போராடி அதை வீழ்த்தினால்தானே?

அப்படிப் பெறுகின்ற வெற்றிதானே ருசியையும் உடையதாக இருக்கும்? வெற்றிதான் இன்பம். தோல்விதான் துன்பம். இரண்டுக்கும் நடுவில் புத்தியால் வெற்றியை அடைய முயலுவதே வாழ்க்கைப்பாடு. இந்த புத்திக்கு சக்தி தருவது பக்தி.

இது புரியாமல், 'எங்கு பார் ஒரே மேடு பள்ளம், ஏற்ற தாழ்வு... இப்படி ஒரு உலகையா கடவுள் படைத்திருப்பார்?' என்று கேட்பது முட்டாள்தனம். தவளைத்தனம்!

இந்த வாழ்க்கை விளையாட்டில் வெற்றிகளை மட்டுமே குவிக்க மகாதேவ ரகசியம் மிக உதவும். இதில் தலையானது இரவும் பகலுமாய் உள்ள பொழுதுகளை அதாவது காலத்தை அந்தக் காலத்தே கரையும் நேரத்தை தன் வசப்படுத்துவது... இதுவே மூன்றாம் ரகசியம். எல்லாம் சரி... காலநேரத்தை எப்படி வசப்படுத்துவதாம்?

-ரசமணி வித்தகர் பெரியய்யா

அந்த நந்தி உருவச்சிலை, பார்த்துக் கொண்டிருந்த அவ்வளவு பேரையும் வாயைப் பிளக்க வைத்தது. ஐந்தடி உயரம், பன்னிரண்டடி அகலம்! மாசு மருவில்லாத செதுக்கலில் நுட்பமான வேலைப்பாடு ஒரு வித துல்லியத்தோடு விளங்கியது.

போஸ்ட்மேன் வேலாயுதத்திடம் சிவன் கோயில் பற்றி கேட்டுக் கொண்டிருக்கும்போதே அது தொடர்பாய் வெளிப்பட்ட அந்த நந்தி சிலை; அவ்வளவு பேரையும் தன் பக்கமாய் இழுத்தது.

ஓடினார்கள்!

க்ளாரா சிலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். ஏ.ஜி.எம். சண்முகாவோ, "ஒண்டர்ஃபுல், பிரசன்ன ஜோதிடம் திரும்பவும் கன்ஃபார்ம் ஆகுது" என்றார்.

"இது என்ன... திஸ் ஈஸ் கவ்?" க்ளாரா அதை ஒரு மாடு என நினைத்துக் கேள்வி எழுப்ப.. "நோ மேடம். இது சிவனோட வாகனமான நந்தி. ரொம்ப விசேஷமான ஸ்டேச்சு இது. இது இங்க கிடைச்சுருக்குன்னா இந்த இடத்துல இருந்து நேர் கிழக்குல அதிகபட்சம் நூற்றி எட்டு அடிக்குள்ள சிவன் சந்நிதி இருக்கணும்" -சண்முகா ஒரே தாவாக சந்நிதிவரை போய்விட்டார்.

"ஐ டோன்ட் அண்டர்ஸ்டாண்ட், நந்திங்கறதுதான் இங்க பசுவோட பேரா? இது சிவனோட வாகனம்னா... என்ன அர்த்தம்...?"

க்ளாரா எங்கே வருகிறாள் என்பது ஏ.ஜி.எம், அனந்தாச்சாரிக்கு புரிந்தது.

"மேடம்! வாகனம்னா நாம யூஸ் பண்ற கார், பைக், ஸ்கூட்டர் மாதிரி கிடையாது, இங்க வாகனம்கறது கடவுளோட பீடம், அதன்படி லார்ட் சிவா, காளை மாட்டு முதுகை தன் பீடமா வெச்சுகிட்டிருக்கார். இந்த மாதிரி விஷயங்களை டைரக்டா புரிஞ்சுக்கக் கூடாது. சூட்சும காரணங்கள் நிறைய இருக்கு. சைலாதிங்கற பேர்ல பிறந்த ஒரு குழந்தைதான் சிவபக்தியால் ருத்ர ஜபம் செய்து சிவபெருமானோட வாகனமா மாறினதா புராணக் கதை எல்லாம் சொல்லுது. எப்படி ஒரு கிறிஸ்டியனை ஒரே மாத்திரத்துல தெரிஞ்சுக்க சிலுவை ஒரு ஐக்கான் (icon) மாதிரி இருக்குதோ அப்படி சிவத்துக்கு நந்தி!"

அனந்தா சொன்னது க்ளாராவுக்கு ஓரளவு புரிந்தது.

"ரியலி இட் ஈஸ் ஏ ஒண்டர். ஒவ்வொரு விஷயத்துக்குப் பின்னாலயும் ஒரு புராணக்கதை. அதுல ஒரு ஜஸ்டிஸ். பட் எங்க அமெரிக்காவோட வயசே நானூறோ, ஐந்நூறோதான்...

ஆனா இந்த மண்தான் என்ன ஒரு ஏன்ஷியன்ட்!"

க்ளாராவின் வியப்பில் ஒரு நியாயமான உணர்ச்சி பரவிக்கிடந்தது. அதை பளிச்சென்று அமெரிக்காவோடு தொடர்புபடுத்தி அவள் சொன்னதில் அவளுக்கு எதிலும் விஷயம்தான் கணக்கு என்பது அனந்தாச்சாரிக்கு புரிந்து போயிற்று.

"அப்ப இங்கதான் கோயில் இருக்கணும்கறது உங்க யூகமா?" -அடுத்து அவள் கேட்ட கேள்விக்கு சண்முகமும், அனந்தாச்சாரியும் பலமாகத் தலையை ஆட்டினர்.

இதற்குள் நந்தி சிலை மீதிருந்த மண் திப்பிகள் முழுவதையும் உதிர்த்து அதை கழுவிக் குளிப்பாட்டவே தயாராகிவிட்டான் ஒருவன்.

வேலாயுதம் எல்லாவற்றையும் காதில் வாங்கிக் கொண்டவனாய் அந்த நந்தியைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டு கெடிகாரத்தைப் பார்த்தான். மணி உச்சிப் பொழுதிற்கான பன்னிரண்டு. ஐயையோ என்கிற பதைப்புடன் போஸ்ட் மாஸ்டர் குருமூர்த்தியின் ஞாபகம் வந்தவனாக அங்கிருந்து வேகமாகக் கிளம்பத் தொடங்கினான்.

❑ ❑ ❑

தும்தும் என்று முத்திரை குத்தி தூக்கிப் போட்டிருந்த கடிதங்களை அந்தக் காக்கி நிற பைக்குள் போட்டு அறுக்கு சீல் வைத்துக் கொண்டிருந்த குருமூர்த்தி, சைக்கிள் சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தார்.

வேலாயுதம்!

அவன் உள்ளே நுழைவதில் ஒரு புயலின்தன்மை.

"சாமி... சாமி... நம்ம ஊர்ல ஒரு அதிசயம் சாமி" என்று வேகமாக ஆரம்பித்தான்.

"என்ன.... விருமாண்டி பத்தி இன்னிக்குப் புதுசா ஏதுனா வம்பா?"

"ஐய... அதில்ல சாமி, நம்ம புதுக்கம்பெனியோட நிலத்துல மராமத்து நடக்குதுல்ல...?"

"ஆமாம்..."

"அப்ப ஒரு நந்தி சிலை ஒண்ணு கிடைக்சிருக்குது. அங்கன ஒரு சிவன் கோயிலும் உள்ளுக்குள்ளாரப் புதைஞ்சு கிடக்குதான்... பேசிக்கிட்டாங்க."

-வேலாயுதம் சொன்னது குருமூர்த்தியை நிமிர்ந்து உட்கார வைத்து கேள்வி கேட்க வைத்தது.

"ஆமா... நீ அந்த நந்தி சிலையைப் பார்த்தியா?"

"பின்ன...? நான் லெட்டர் கொடுக்கப்போன சந்தர்ப்பத்துலதானே டிராக்டரு மாதிரி இருக்கற ஒரு குழி தோண்டற வண்டி, அந்த நந்தியை அப்படியே தூக்கி டங்குன்னு போட்டுச்சு."

"நிஜமாவா சொல்றே?"

"அட நீங்க வேற... இப்பவே நீங்க கூட போய்ப் பாருங்க."

"அப்ப சரி, நீ இந்தப் பையை எடுத்துண்டு கிளம்பு, நான் அப்புறமா போய்ப் பார்த்துக்கறேன்" என்ற குருமூர்த்தியிடம் ஒரு பதற்றமும் படபடப்பும் தெரிந்தது. வேலாயுதம் கூட அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

"அப்புறம் இன்னொரு விஷயம் சாமி..." என்று பீடிகை போட்டான்.

"என்ன...?"

"புதுக்கம்பெனிக்கு இன்னிக்கு யார் யாரெல்லாமோ வந்துருந்தாங்க. அதுல ஒரு வெள்ளைக்காரம்மாவும் இருந்தாங்க. அவங்கதான் மொதலாளியம்மாவாம். என்னால நம்பவே முடியல."

வேலாயுதத்தின் அடுத்தகட்ட விளக்கம், குருமூர்த்தியை அப்படியே விதிர்க்க வைத்துவிட்டது.

"சாமி... என்னாச்சு உங்களுக்கு?"

"ஒண்ணுமில்ல... எதுக்கு இப்படி நம்ப முடியாததை எல்லாம் இன்னிக்கு நீ சொல்றியோ தெரியல."

"இதென்ன... இன்னொரு விஷயத்தையும் பார்த்தேன். கேட்டா ஆடிப்போயிடுவீங்க."

"என்ன அது... அதையும் சொல்லித்தொலை."

"எல்லாம் நம்ம விருமாண்டி விருயம்தான். வெளிய கிளிய வாய விட்றாதீங்க. அவன்தான் எதுக்கும் அஞ்சாதவன் ஆச்சே?"

"நீ விஷயத்தைச் சொல்லு முதல்ல..."

"யார்னு தெரியல ஒரு பொண்ணு. நம்ம ஊரு பொண்ணு இல்ல அது. விருமாண்டியோட புளியங்காட்டுல தூக்குல தொங்கிட்டா. அதை காதும் காதும் வெச்ச மாதிரி விருமாண்டி போட்டு அமுக்கிப்புட்டான்."

"சரி சரி... என்னோட நிறுத்திக்கோ. நீ சொன்ன மாதிரி அவன் எதுக்கும் அஞ்சாதவன். எதாவது ஒண்ணுண்ணா உன்னையும் என்னையும் கூட தொங்க உட்டுடுவான்."

குருமூர்த்தி ஒரு மாதிரி பேசி சமாளித்து அவனை அனுப்பிவிட்டு, தனது வீட்டின் இருண்ட பாகம் ஒன்றை நோக்கிச் சென்றார். அங்கே ஒரு கயிற்றுக் கட்டில். அதன்மேல் ஒரு முதிய உருவம் படுத்திருந்தது.

"அம்மா..." அழைத்தார்.

"யாரு..?" அதுவும் கேட்டது.

"நான்தாம்மா குரு பேசறேன்..."

"என்னடா கண்ணா?"

"ஒண்ணுமில்ல உங்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்."

குருமூர்த்தியின் எதிர்பார்ப்பறிந்து அந்த முதிய பெண்மணியும் எழுந்து அமர, அவரும் ஒத்தாசை செய்தார். சமையல் கட்டில் அப்பளம் பொறித்துக் கொண்டிருந்த குருமூர்த்தியின் மனைவி சிவகாமியும் என்னவோ ஏதோ என்று வந்து நின்றாள்.

"சின்னக் குழந்தையா நான் இருக்கச்சே நம்ம ஊர்ல ஒரு சிவன் கோயில் இருந்தது; அந்தக் கோயிலுக்குன்னு கூட ஒரு தங்கத்தேர் இருந்ததுன்னுல்லாம் சொல்லியே... ஞாபகம் இருக்கா?"

"அதுக்கென்ன இப்போ?"

"இல்ல... அதைப்பத்திதான் கொஞ்சம் உன்கிட்ட பேசணும்."

"அதெல்லாம் பழைய கதைன்னா...?"

"எதுக்குன்னா திடீர்ன்னு இப்ப சிவன் கோயில் பத்திக் கேக்கறேள்?"

"காரணம் இருக்கு சிவகாமி, இதே ஊர்ல பொறந்து வளர்ந்தவன் நான். ஐம்பத்து நாலு வயசாகறது. இத்தனை நாளா எனக்குத் தெரியாத ஒரு விஷயம். இன்னிக்கு ஊருக்கே தெரிய வந்துருக்கு."

"என்னன்னா அது?"

"புதுக்கம்பெனிக்குன்னு இடம் வாங்கியிருக்காளோல்லியோ?

"ஆமாம்..."

"அதுல ஒரு எடத்துல நந்தி சிலை ஒண்ணு கிடைச்சிருக்கு. நம்ம ஊர்ல சிவன் கோயில் இருந்த துங்கறதுக்கு அது ஒரு அசைக்க முடியாத ஆதாரம்."

"அப்படியா?"

"ஆமாம்... நம்ம ஆத்துலயே என் பாட்டன் முப்பாட்டன்கள் சிலர், அந்தக் கோயில்ல ஊழியம் பார்த்துருக்கா. அதுக்கா இந்த ஊருக்கு வந்து குடியேறின பிராம்மண குடும்பம்தான் நம்ம குடும்பம்."

"சரி, அதுக்கென்ன இப்போ?"

"அதுக்கென்னவா? இந்த சொக்கம்பட்டிலதான் பாண்டியராஜா சுந்தரபாண்டியன் தன்னோட சாபவிமோசனத்துக்காக மீனாட்சி சுந்தரேஸ்வரருக்கு கோயில் கட்டினான்கறது ஒரு வரலாறு. ஆனா அந்த சொக்கம்பட்டி இது கிடையாது. இது வேறன்னு சொல்லி ஒரு கூட்டம் ஊரை ஏமாத்திண்டு வந்தது."

"அதுல அவாளுக்கு என்ன லாபம்?"

"என்ன லாபமா? சுந்தரபாண்டியன், கோயிலை மட்டுமா கட்டினான்? ஸ்வாமிக்கு ஒரு தங்க ரதம்... அதுல உற்சவ மூர்த்தியா அம்பாளும் சிவனுமே கூட தங்கத்தில.... இதுக்காக ஒரு யானையோட எடைக்கு அவன் தங்கம் வாங்கினதா ஒரு குறிப்பு நம்ம ஊர் கண்மாய் கரைல இருக்கு. நீ பாக்கிலியா?"

"அப்படின்னா?"

"அப்படின்னா என்ன... அந்தக் குறிப்பை பார்த்துட்டு எங்க கோயில்னு யாராவது வந்துட்டா என்ன பண்றதுன்னு அந்தக் குறிப்பு உள்ள பட்டயக் கல்லை அந்தக் கூட்டம் அப்படியே பேத்து எடுத்துண்டுன்னா போய்டுங்க..."

"கல்லை மறைச்சுட்டா எல்லாம் மறைஞ்சுடுமோ என்ன?"

"இவ்வளவு நாளா எல்லாம் மறைஞ்சுதானே இருக்கு? அதோட ஒரு கூட்டம் அப்பப்ப இங்கே எதையாவது தோண்டறதும் புதைக்கறதுமான்னா இருக்கு..."

"என்னன்னா சொல்றேள்?"

"இனி நம்ம ஊர்ல நிறைய நல்லது கெட்டது நடக்கப் போறதுடி, தினம்கூட நம்ம ஊர் பேர், டி.வி.யில் அடிப்பட்டா ஆச்சரியப் படறதுக்கில்ல..."

குருமூர்த்தி பீடிகை போட்டபடியே அவரது அம்மாவிடம் திரும்பவும் நெருங்கத் தொடங்கினார்.

15

கால நேரங்களுக்கென்று ஒரு சக்தியும், குணமும் இருப்பதாக என்னுள் ஒலித்த குரல்- அது எது என்றும், எப்படி என்றும் கூட வழி காட்டத் தொடங்கியது.

பூமியில்தான் இரவும் பகலும் என்கிற இரண்டு நிலைப்பாடு. பூமிக்கு மேல் காற்றுப்படுக்கைக்கும் அப்பால் இரவென்று ஒன்றோ, பகலென்று ஒன்றோ, கிடையாது. இதனால் நாள் என்று ஒன்றோ, பொழுதென்று ஒன்றோ, அதில் நேரமென்று ஒன்றோ கிடையாது. நேரமும் காலமும் இல்லாத இடம், அல்லது நின்றுவிட்ட இடம், அல்லது ஓடாத இடம், அதுவுமல்லாது முன் எது, பின் எது, நடு எது என்றே தெரியாத இடம் அது என்றும் கூட கூறலாம்.

இதிலிருந்து இதெல்லாம் உள்ள ஓர் இடமாக பூமி இருக்கிறது என்னும் பொழுதே இங்கே இவை ஏன் உருவாக்கப்பட்டன என்கிற கேள்வி எழுகிறதல்வா?

அந்த காலநேரப் பொழுதுகளிலும் கூட அதிகாலை, மதியம், மாலை, முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு என்றெல்லாம் பகுதிகளில் அதற்கேற்ப வெப்பமும், குளிர்வும் அமைந்திருக்கும் விதங்கள்... எல்லாம் எதனால்...?

இங்கேதான் மனிதன் ஜீவிக்கிறான். அவனது ஜீவிதம் எண்ணங்களாலும், அது சார்ந்த முறைகளாலும் ஆனது. அது இந்தக் காலநேர விகிதங்களால் தான் அமைகிறது.

இந்த காலநேர விகிதங்களுக்கென்று ஒரு தன்மை இருக்கிறது. ஒரு குணம் இருக்கிறது. அந்தக் குணம் எப்படிப்பட்டது என்பதை மகாதேவனின் அருளால் அவனது பிரதிநிதிகள் கண்டறிந்து வைத்திருக்கிறார்கள்.

அதன்படி ஒரு ஞாயிறின் காலை 6 மணிக்கு அந்த நொடிப் பொழுதில் பூமிப்பந்தின்மேல் விழும் பூமிக்கு அப்பாலான கிரகங்களின் கதிர்வீச்சைப் பொறுத்து ஒரு சக்தி உண்டு.

இது நொடிக்கு நொடி கூடிக் கொண்டோ அல்லது குறைந்து கொண்டோ செல்வது. அதே ஞாயிற்றுக்கிழமைக்கு ஒரு நட்சத்திராதிபதி இருக்கிறான். அவனை, அவன் சக்தியை ஒரு மனிதனுக்குப் பெற்றுத்தர அவன் பிறக்கும் நேரத்திற்கு ஏற்ப லக்னாதிபதி என்றும் ஒருவன் இருக்கிறான்.

இவர்கள் யார்... இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை எல்லாம் தெரிந்து கொண்டால் சுழன்று கொண்டே இருக்கும் காலச்சக்கரத்தில் நமக்கான நொடிப்புள்ளியின் சக்தியை நாம் உணர முடியும்.

அது குறைவானதாக இருந்தால் கூட்டிக் கொள்ளும் வழியும், கூடுதலாக இருந்தால் நெறிப்படுத்திக் கொள்ளும் வகையும் ஜாதக சாஸ்த்ரம் என்னும் கணிதச் செல்வமாய் அருளப்பட்டுள்ளது.

ஒரு நாளில் ஒவ்வொரு நொடிக்கும் ஒரு குணமுண்டு, ஒரு சக்தியுண்டு, இதை அறிந்தவன் மகாதேவ ரகசியத்தின் நான்காம் ரகசியத்தை அறிந்தவனாவான்.

இவன் அதிகாலை துயில் எழுவான். குளுமை விலகி வெப்பம் கலக்கத் தொடங்கும் இதமான அதிகாலை வேளையினை பிரம்ம முகூர்த்த காலமாய்

கண்டு கொண்டு அதில் தனது அன்றைய செயலைத் தொடங்குவான்.

உரக்கச் சொல்கிறேன்... கேட்டுக்கொள்.

'அதிகாலை எழுபவனை வெல்வது கடினம்!'

இப்படி பல எழுத்துக்கள் என்னுள் தானாக உருவாகி என்னுள் ஓடியபடியே இருந்தன.

இன்னும் சொல்கிறேன் கேள்... சிவராத்திரியின் கால நேர சக்தி பற்றி தெரிந்தால் அயர்ந்துபோவாய் என்றது அந்தக் குரல்!

-ரசமணி வித்தகர் பெரியய்யா

குருமூர்த்தியின் தாயான அந்த வயதான கிழவிக்கு தள்ளாமை காரணமாக எதுவும் பெரிதாக ஞாபகத்தில் இருப்பதில்லை. பேசிக் கொண்டிருக்கும் போதே இடையில் தடை ஏற்பட்டு பேச்சு அறுந்துபோனால் எங்கே பேச்சை விட்டோம் என்பதே தெரியாமல் போய்விடும் அளவு தள்ளாமை.

ஆனாலும் பழைய சம்பவங்கள், அந்தக்கால ஞபாகங்கள் அவளுக்குள் அழிந்துபோய் விட்டதாகக் கூற முடியாது. குருமூர்த்தி அந்த ஞாபகங்களைத்தான் தூண்டிவிடத் தொடங்கினார்.

"அம்மா... படுத்துட்டியா?"

"ஏம்ப்பா... என்ன விஷயம்?"

"இல்ல, இப்ப கேட்டேனே.. சிவன் கோயில் பத்தி..."

"எப்ப கேட்டே... எந்த சிவன் கோயில்?"

"என்னம்மா... அதுக்குள்ள மறந்துட்டியே! நம்ம ஊர் சிவன் கோயிலைப் பத்திதான்மா கேட்டேன்."

"ஓ அதுவா... அதைப்பத்தி இப்ப பேச என்னடா இருக்கு?"

குருமூர்த்திக்கு அவர் தாயான அந்தக் கிழவியின் பதில், சற்று எரிச்சலைத் தந்தது. குருமூர்த்தியின் மனைவியான சிவகாமியோ இவர் எதற்கு இப்படி நோண்டுகிறார் என்கிற மாதிரியே நடப்பதைக் கவனிக்கலானாள்.

"அம்மா... நம்ம குடும்பம் கோயில் ஊழியம் பார்க்க வந்த குடும்பம்தானே?"

"அட ஆமாண்டா.. ஆனா அது இந்த சொக்கம்பட்டி, ஒரு பள்ளத்து சொக்கம்பட்டியா இருந்த வரைன்னா..."

"அப்படின்னா?"

"நூறு நூத்தி அம்பது வருஷத்துக்கு முந்திவரை இந்த ஊர்பேர், பள்ளத்து சொக்கம்பட்டி. ஒரு சமயம் வந்த மழைக்காத்துல பள்ளமெல்லாம் மேடாகி, கோயிலேன்னா மூடிப்போயிடுத்து?"

"மூடிப்போன கோயிலை ஏன் தோண்டி வெளியே எடுக்கலை?"

"என்னைக் கேட்டா... என்னைத் தோண்டி வெளிய எடுக்க வேண்டாம். எனக்கு எப்ப வெளிய வரணும்னு தெரியும்னு ஒரு அசரீரி கேட்டுதாம். அதனால அந்த முயற்சியில் யாரும் ஈடுபடலைன்னு என் தாத்தா சொன்னதா ஞாபகம்."

"அப்ப அந்த தங்கரதம்.. தங்க உற்சவ விக்ரகங்களாம்..?"

"யாருக்குத் தெரியும்?"

மண்ணுக்குள்ளேயே கிடக்கோ என்னவோ? இந்த ஊரு அந்த சிவனுக்குன்னா சொந்தம்?

"இது என்ன புதுசா இருக்கே..."

"ஆமாண்டா... பாண்டிய ராஜா பன்னெண்டு பிராம்மண குடும்பத்துக்கும், அறுபத்து நாலு விவசாய குடும்பத்துக்கும் இங்க அனுபவ பாத்யதையை கொடுத்துட்டு, மொத்த ஊருமே சொக்கம்பட்டி சொக்

நாதர் கோயிலுக்குத்தான் சொந்தம்னு ஒரு சாசனமே எழுதிட்டதா சொல்வா..."

"அந்த சாஸனம்?"

"நொய்யு நொய்யுன்னு இப்ப எதுக்கு பழைய கதையைக் கேக்கறே? எனக்குத் தூக்கம் வர்றது.. ஆளை விடு."

பாட்டி புரண்டு படுத்துக் கொண்டாள். குருமூர்த்திக்கு சற்று ஏமாற்றமாக இருந்தாலும் இன்னொரு பக்கம் மிதாக ஒரு கடமை வந்துவிட்டதாகத் தோன்றியது."

"ஆமா எதுக்கு இப்படி பழைய குப்பையை இந்தக் கிளறு கிளர்றேள்?" என்று சிவகாமியும் கேட்டாள்.

"காரணம் இருக்கு சிவகாமி. நீ போகப்போக தெரிஞ்சிப்பே" என்றார் சற்றே ரகசியக் குரலோடு!

❑ ❑ ❑

முத்தம் கொடுத்தால் உதடு கிழிந்துபோகும். அப்படி ரு சொரசொரப்பான தாடை விருமாண்டிக்கு... அதை வன் தேய்த்துக்கொள்ளும் விதமே அலாதியாக இருக்கும். கோபமோ, சிந்தனையோ வலது கையின் கட்டை விரலும் ஆள்காட்டி விரலும் தாடையை தேய்ப்பதில்தான் நிற்கும். நந்தி சிலையும், கல்வெட்டுப் பெயர் பலகையும் கிடைத்திருக்கிறது என்கிற தகவல், அவனை தாடையைத் தேய்க்க விட்டுக் கொண்டிருந்தது.

"அண்ணே... புது கம்பெனிக்காரங்க கம்பெனி கட்டுங்களோ மாட்டாங்களோ, கோயில் கட்டாம உடமாட்டங்களாம். காதுல விழுந்ததைச் சொல்லிப் புட்டேன். மேற்கறம் உங்க பாடு."

அடி வருடி ஒருவன் தூபம் போட்டுக் கொண்டிருந்

"கிட்டானையும் செக்கையும் கூப்பிட்டு அந்த ஹிந்திக் காரியை எங்க பொதைச்சீங்கடான்னு கேளுங்கண்ணே. கம்பேனிக்காரங்க பொக்லைனைர வெச்சுகிட்டு தோண்ட ஏதாத இடம் இல்லை. அவுக பாட்டும் இவனுங்க பொதைச்ச இடத்துல தோண்டி பொணத்தை வெளிய எடுத்துப்போட்டு போலீஸ்காரனுங்க நம்மகிட்ட வந்து மண்டை உரிக்கப் போறானுவ..."

"கிழிச்சானுங்க.. போலீசுக்கு பயந்தால்லாம் நம்ப பொழைப்பு ஒரு நா ஒருமணி நேரம் நடக்குமாடா வெட்டிப் பயலே..."

"இல்லண்ணே... எதுக்கும் சூதானமா இருக்கறது நல்லதுதானேண்ணே. அப்பப்ப சினிமாவுல வர்ற விஜய் காந்து, ரஜினிகாந்து மாதிரி தஸ்ஸு புஸ்ஸுன்னு சட்டம் பேசற இன்ஸ்பெக்டருங்களும் வந்துட்றானுவளே?

'இப்பக்கூட சார்லஸ் பண்டியன்னு ஒரு இன்ஸ்பெக்டரு, உங்க கொட்டத்தை அடக்காம போவமாட்டாராம் உதாரா நம்ம ஆளுங்க காதுபட பேசியிருக்காரு அவரு நான் என்னத்தச் சொல்ல?"

தூபம் போட்டவன் கவலையும் பட, விருமாண்டி ஸ்டைலாக ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்தான். எப்பொழுது எப்படி இழுத்தான் என்றே தெரியவில்லை. வாய் கொள்ளாத புகை, உதடுகளில் இருந்து கசிந்தது.

திரும்பவும் தாடைச் சொரியல்!

❑ ❑ ❑

பரந்த மைதானம் போன்ற அந்த நிலப்பரப்பில் இருந்து பார்த்த போது சூரியன் போய் வருகிறேன் என்றபடி மேற்கில் இறங்கிக் கொண்டிருப்பது துல்லியமாகத் தெரிந்தது.

க்ளாரா அந்தக் காட்சியை நன்றாகவே ரசித்தாள். அப்படி ஒரு வெளிச்சம், ஃபோட்டோகிராபருக்கு ஏற்ற

விஷயம். அதை உணர்ந்தவள் போல் ஜி.எம். சண்முகா கையில் கேமராவைக் கொடுத்து விட்டு, அந்த மேற்குச் சூரியனின் பொன்னிற வெளிச்சம் மேலே பூசினதுபோல படும் வண்ணம் அந்த நந்தி அருகே போய் நின்று கொண்டாள்.

அவரும் அவள் விரும்பியபடி புகைப்படம் எடுத்தார். பின், "மேடம்! ஏழு மணிக்கு ஃப்ளைட், இப்ப கிளம்பினாதான் மதுரைக்குப் போய் ஏர்போர்ட் போகச் சரியா இருக்கும்" என்றார்.

"ஐ நோ... நாம இப்பவே கூட கிளம்பலாம்" என்றவள், சீஃப் எஞ்ஜினியர் சங்கரதாஸை கூப்பிட்டு, "நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும்" என்றாள். அவரும் மிகப் பணிவாக, "யெஸ் மேடம்" என்றார்.

அதன்பின் அவர்கள் ஏறிக் கொண்ட அந்தக் கார்கள் புழுதியை கிளப்பிக் கொண்டு சொக்கம்பட்டியை விட்டு வெளியேறத் தொடங்கின.

வளைந்தும் நெளிந்தும் சென்ற மண்பாதை கண்மாய்க்கரையைத் தொட்டு திரும்பவும் வளைந்தது. அப்படி வளையும் இடத்தில் ஒரு சிறு பாலம். பாலத்திற்குக் கீழே கண்மாய்த் தண்ணீர், வயலுக்கென திறந்து விடப்பட்டு மெல்லிய சலசலப்போடு ஓடிக் கொண்டிருந்தது.

ஆங்காங்கே பட்டய கற்கள், துணி துவைக்கும் கற்களாகிவிட்டிருந்தன. அதில் ஒரு இடத்தில் மேற்குச் சூரியனைப் பார்த்த வண்ணம் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தார் போஸ்ட் மாஸ்டர் குருமூர்த்தி. காலடியில் ஓடும் நீரை அள்ளிக் கீழே விட்டபடி அவர் செய்யும் சூரிய நமஸ்காரமும், காருக்குள் இருந்த க்ளாராவை வெகுவாகக் கவர்ந்து காரை நிறுத்தச் சொன்னது.

முன் ஸீட்டில் அமர்ந்திருந்த சண்முகா, வேகமாகத் திரும்பி அவளைப் பார்த்தார்.

"மிஸ்டர் சண்முகா.. அந்த நபர் அங்க என்ன பண்றார்?"

"ஓ... அதுவா மேடம்.... அதுக்குப் பேர் சந்தியா வந்தனம். தட் மீன்ஸ், அது ஒரு டைப்பான ப்ரேயர்."

"இங்க ப்ரேயரை சன்னைப் பார்த்துதான் செய்வாங்களா?"

"அப்படி இல்ல. ஆனா சந்தியா வந்தனத்துல சன்னோட பார்ட், ரொம்ப முக்கியமானது. இன்ஃபாக்ட் கண்ணுக்குத் தெரியற ஒரே கடவுள்னு சன்னைப் பத்தி எங்க ஞானிகள் சொல்வாங்க."

"ஃபான்டாஸ்டிக். அவர் ஏன் இப்படி ஒரு ரிவர்பெட்ல நின்னுகிட்டு இப்படி பண்றார்?"

"அங்கதான் செய்யணும். கால்கள் ஜலத்தில் இருக்க, கண்ணில் சூரியன் மின்ன, மார்பு காற்றில் நிரம்பி கிடக்க, மனமாகிய வெளியில் மந்திர அலையை பரப்பி, நிலமாகிய உடம்பில் உண்மையைத் தேடுவதே சந்தியின் நோக்கம்னு ஒரு உபன்யாசகர் சொல்லியிருக்கார். நான் சொன்னதுல பஞ்ச பூதம்கற அஞ்சு விஷயம் இருக்கு. எல்லாமே ஒருவித மெடஃபரா தெரியும்."

காருக்குள் அவர்களுக்குள் நடக்கும் பரிவர்த்தனை குருமூர்த்தியையும் பாதிக்க, அவர் அவசரம் அவசரமாக சந்தியா வந்தனத்தை முடித்து விட்டு மேலேறி வந்தார். அதற்குள் க்ளாராவே காரைத் திறந்துக் கொண்டு இறங்கினாள்.

"குட் ஈவினிங். மை நேம் ஈஸ் க்ளாரா. ஐ ஆம் ஃப்ரம் யூ.எஸ். கிளாட் டு மீட் யூ"

- என்று குருமூர்த்தியை நோக்கி மிகுந்த உற்சாகமாக கையை நீட்டினாள்.

குருமூர்த்திக்குள் ஒரே ஆச்சரியம். பதிலுக்கு, "கிளாட் டு மீட் யூ மேடம். வெரி கிளாட் டு மீட் யூ" என்றவர்,

"நீங்கதான் அந்த புதுக்கம்பெனியோட எம்.டி.யா?" என்றார் எடுத்த எடுப்பில்.

சண்முகாவும், அனந்தாச்சாரியும் பாய்ந்து வந்து ஸ்கார்ட் போல நின்று கொண்டு, "ஆமாம், அப்படித்தான்... நீங்க கிளம்புங்கோ. மேடம் ஃப்ளைட்டுக்கு டயமாச்சு" என்றனர்.

க்ளாராவுக்கும் புரிந்துவிட்டது.

அவர்கள் டாப் லெவல்களுக்கே உரிய சில இடைவெளிகளை எப்பாடுபட்டாவது மெய்ன்டெய்ன் பண்ண விரும்புகிறார்கள் என்று.

"ஓ.கே... ஸீ யூ" என்றவள், சட்டென்று ஒரு புதிய நினைப்புடன், மிஸ்டர் சண்முகா... இவரை நான் சந்தியா வந்தனம் பண்ற கோலத்துல ஒரு ஸ்டில் எடுக்க விரும்பறேன்..." என்றாள்.

அதற்குமேல் அவர்கள் தடை சொல்லவில்லை. அவரும் அவள் விருப்பமறிந்து போஸ் கொடுத்தார். அவள் கேமரா கோணம் பார்த்து 'அங்கே... அங்கே...' என்று தள்ளி நிற்கச் சொல்லி, இறுதியாக மதகை ஒட்டி தண்ணீர் கசியும் ஒரு இடத்தில் நிறுத்தி காமிரா ஜூம் வழியாக அவரைப் பார்த்தாள். பக்கத்திலேயே பல மதகுக்கள். அதில் ஒன்றில் சொர்ணலிங்க பீடம் என்கிற தேய்ந்த எழுத்துக்கள்!

16

இந்த உலகத்தில் அரிதான விஷயங்கள் யாரும் பார்க்காத நிலையில் ஒரு தனித்த அனுபவமாக ஏற்படுவதே நல்லது.

பத்துபேரை அழைத்து அவர்கள் எதிரில் அரிதான விஷயங்களை நிகழ்த்திக் காட்டுவது மிக ஆபத்தானது; முட்டாள்தனமானது.

சுருக்கமாகச் சொல்வதானால் வித்யாசமான பேராற்றல் உடையவர்கள் எந்த நிலையிலும் அதை வைத்து பிறர் கவனத்தைக் கவர்ந்து, அவர்கள் முன் நான் ஒரு ஜாம்பவானாக்கும் என்று காட்டிக் கொள்ளக்கூடாது...

இதுவும் மகாதேவ ரகசியங்களில் ஒன்று ஏன் அப்படி என்கிற வேள்வியில் விழுந்து நான் புரண்டு நெளிந்தேன்.

பதில் எனக்குத் தொழிலதிபர் வேடத்தில் வந்தது.

சாதாரணமாக வேலியோரம் முளைக்கும் நேத்ர மூலி என்னும் மூலிகைச் சாற்றை நான் கண்களில் விட, மாலைக்கண் நோயில் இருந்து அவர் குண மடைந்தாரல்லவா?

அது அமெரிக்கா வரை பேசப்படும் ஒரு பெரிய விஷயமாகிவிட்டது. குறிப்பாக, 'உங்கள் கண் பார்வை திரும்புவது என்பது நூறு சதவிகிதம் சாத்தியமில்லை' என்று சொல்லியிருந்த ஒரு வெள்ளைக்கார டாக்டர், அந்தத் தொழிலதிபர் குணமானது அறிந்து என்னைச் சந்திக்க வீட்டுக்கே வந்துவிட்டார். 'எந்த மூலிகையால் குணப்படுத்தி னீர்கள்...? அதன் பெயர் என்ன?' என்று கேட்டு என்னைப் பிழிந்தெடுத்துவிட்டார். நானும், 'அதெல் லாம் தொழில் ரகசியம்.. வெளியே கூறமுடியாது' என்றே கடைசிவரை சமாளித்தேன்.

முதலில், 'எவ்வளவு டாலர்கள் வேண்டுமானாலும் தருகிறேன்' என்று ஆசை காட்டியவர், நான் அசைய மறுத்ததால் இறுதியாக ஒரே ஒரு உதவியாவது செய்யுங்கள் என்றார். 'என்ன?' என்று கேட்டேன்.

'எனக்கொரு மகள் இருக்கிறாள். அவள் ஒரு செவிடு. இதனால் அவள் படும்பாடு கொஞ்ச நஞ்ச மல்ல. தயவு செய்து உங்கள் மூலிகையின் ஆற்ற லால் அவள் காதுகளையாவது கேட்கச் செய்யுங்கள்' என்றார்.

வசமாக மாட்டிக் கொள்வது என்பது இதுதானோ?

என்ன செய்வது என்று புரியாமல் நான் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றபோது காதில் மீண்டும் ஒரு குரல்.

'ஒரு சப்தம் நிசப்தமானதற்குக் காரணமே கரும வினைதான். அந்த வினையை சீர் செய்தால் நிசப்தமும் சப்தமாகும்.. கவலைப்படாதே!' என்றது அந்தக் குரல்.

'எப்படி.. எப்படிச் செய்யப்போகிறேன் இதை?' என்று நான் தவிக்கத் தொடங்க, எனக்குள் ஒலித்த அந்தக் குரல், 'ஓம்' என்னும் ப்ரணவ மந்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தது.

நடுவில் சட்டென்று நிறுத்தி, "இந்த 'ஓம்' என்னும் ஒலியை உருவகப்படுத்தி ஒரு கற்பனை செய்து பார். தெளிவான நீர்ப்பரப்பின்மேல் ஒரு புள்ளியில் கல் ஒன்று விழ உடனே அந்த மையத்தி லிருந்து பல நூறு அதிர்வு நீர்வட்டங்கள் உருவாகி, அவையும் கூட குறிப்பிட்ட தூரம் வரை சென்று கண்களை விட்டு மறைந்துவிடுவது போலத் தோன்றும்.

'இந்த 'ஓம்' என்னும் பிரணவத்துக்கு, அதாவது பிரணவ ஒலிக்குள்தான் பிரபஞ்ச ரகசியமே உள்ளது. நீ, நான் என்று எல்லோருமே இதனுள் தான் அடக்கம்" என்றது அந்தக் குரல்!

எனக்குள் பெருங்குழப்பம். 'ஓம்' என்பது ஒரு எழுத்து... உச்சரித்தால் சப்தம் கண்ணுக்குத் தெரி யாத, வடிவமே இல்லாத சப்தம். இந்த சப்தத்துக்குள் எப்படி திட ஸ்வரூபிகளான நானும் பிறரும் அடங்கமுடியும்?

குழம்பத் தொடங்கிவிட்டேன்.

ஆனால்..?

-ரசமணி வித்தகர் பெரியய்யா

க்ளிக்!

வாய்க்கால் கல்வெட்டின் புதிய செய்தியுடன் குருமூர்த்தி க்ளாராவின் கேமராவுக்குள் அடங்க... அடுத்த நொடி, "தேங்க் யூ... தேங்க் யூ வெரிமச்" என்று கூறிய வளாக க்ளாரா காருக்குள் ஏறிக்கொள்ள, கார்கள் மீண்டும் சீற ஆரம்பித்தன.

குருமூர்த்திக்கு இருப்பே கொள்ளவில்லை. அங் கிருந்து கிளம்புகையில் ஈரத் துண்டு தோளில் காய்வ தற்காக விரிந்திருக்க, நேராக பொக்லைனர்கள் ஓடிக் கொண்டிருந்த இடத்திற்குதான் சென்றார்.

ஒரு அரிய பொக்கிஷம் ஒன்று வெளிப்பட்டிருக்கிறது. அதை குறித்து, சந்தி முடித்து, காயத்ரி ஜெபித்த மந்திர பலத்தோடு பார்ப்பதுதான் சிறந்தது என்பது அவரது எண்ணமாக இருந்ததால் அவருக்குள் கோயிலுக்குச் செல்லும் ஒரு உணர்வு.

அந்த நந்தியும் புதிதாகக் கழுத்தில் விழுந்த மாலை ஒன்றுடன் அவரை வரவேற்றது. சுற்றிலும் சில கூலி வேலையாட்கள்.

சிலர் தொட்டு வருடியெல்லாம் பார்த்தனர். நல்ல ஆகிருதியான நந்திதான். குருமூர்த்தியின் கைகள், அவரையுமறியாமல் கும்பின. ஒரு பிரதட்சணமும் வந்தவர், அப்படியே பார்த்துக்கொண்டே நடந்தார். மனதில் தீவிரமாய் ஏதேதோ எண்ணங்கள்!

❑ ❑ ❑

சீறிக் கொண்டு வந்து போர்ட்டிகோவில் தேங்கிய காருக்குள் இருந்து உதிர்ந்தாள் க்ளாரா!

சப்தம், மேலே மாடியில் கிரிக்கெட் மேட்ச் ஒன்றில் கவனமாய் இருந்த சரண்யன் காதுவரை கேட்டது.

ரிமோட்டை எடுத்து கிரிக்கெட் விளையாட்டு தெரிந்த திரையை வெண்மையாக்கிவிட்டு , அமர்ந்த நிலையில் இருந்து வேகமாக எழுந்தான். கெந்திக் கெந்தி நடந்து மெயின்டோரை திறக்க அவன் கை நீளுமுன் அதுவாகத் திறந்து கொள்ள... எதிரே க்ளாரா.

"க்ளா...!"

"சரண்யன்... ஐ டு நாட் பிலீவ் மேன்... நீயா இங்க இப்படி என் எதிர்க்க நின்னுக்கிட்டிருக்கே...?"

"எக்ஸாக்ட்லி, நௌ ஐ ஃபீல் வெரி ரிச் க்ளா. கம்.. கம் இன் சைட்."

என்றபடி அவளை உள்ளே அழைத்தான். அவளும் உள்ளே வந்து ஆசுவாசத்துடன் அமர்ந்தாள்.

"என்ன க்ளாரா... எதுக்காக இப்ப அந்த வில்லேஜுக்குப் போனே?" எடுத்த எடுப்பிலேயே அவன் விஷயத்தை ஆரம்பித்துவிட்டான்.

"ஏன் சரண்... நான் போனதால் எவ்வளவு நல்ல காரிய மெல்லாம் நடக்கப்போகுது தெரியுமா?"

"ஸ்டுப்பிட் மாதிரி பேசாதே. கல் கிடைச்சது, சிலை கிடைச்சதுன்னு எஞ்ஜினியர் மூலமா நானும் எல்லா விஷயத்தையும் கேள்விப்பட்டேன். ஒரு இடத்தைத் தோண்டும்போது இந்த மாதிரி கண்டதும் கிடைக்கத் தான் செய்யும். இதுல எக்ஸைட் ஆயிடக்கூடாது."

"முடிவா நீ என்ன சொல்ல வர்றே...?"

"நத்திங் நீ சொல்லு... நீ போய் பார்த்ததுல என்ன தெரிஞ்சுக்கிட்டே? அங்கே ஃபேக்டரி ஸ்டார்ட் பண்ணா லாம் போகுமா?"

"இதை என்கிட்ட கேட்டா? நான் என்ன இந்த ஊர் பெண்ணா... இல்ல இண்டியாவோட இண்டஸ்ட்ரியல் மினிஸ்டர் பத்திதான் எனக்கு எதாவது தெரியுமா?"

க்ளாரா சட்டென்று வெட்டிக்கொண்டது போலப் பேசியது சரண்யனை திக்கு முக்காட வைத்துவிட்டது.

அவள் கேட்டதும் சரிதானே?

சரண்யன் அவள் பதிலால் தடுமாறுவதை கண்கள் அப்பட்டமாக காட்டிக் கொடுத்தன.

"என்ன சரண்.. எனிதிங் ராங்....?"

"அஃப்கோர்ஸ், உன்னை நான் எங்க ஃபேக்டரியோட ஒரு சீனியர் லெவல்ல நினைச்சுட்டேன். நீ இண்டியா வந்தே அதிகபட்சம் ஒரு வாரம்தான் ஆகுது. அதை மறந்துட்டேன்."

"அதை மட்டுமா?" அவள் கொக்கி மாட்டினாள்.

"வாட் டு யூ மீன் க்ளா....?"

"வாட் அபௌட் அவர் மேரேஜ் ப்ரபோசல்..."

"யா... நமக்கு இன்னும் கல்யாணம் ஆகலை இல்ல?"

"இந்த விஷயத்துலயும் ஆயிட்ட மாதிரி ஒரு ஃபீலிங்கா?"

"ஆமாம் க்ளாரா. எனக்கு நடந்த ஆக்சிடெண்ட், அதைத் தொடர்ந்து உன்னோட கேர், ஃபேக்டரி விசிட், டெசிஷன்ஸ் எல்லாமே உன்னை இங்க ஸ்ட்ரேஞ்சர் மாதிரியே காட்டலை. காலங்காலமா நீ இங்கேயே பிறந்து பழகிட்ட மாதிரி ஒரு ஃபீலிங்கை எனக்குள்ளே உருவாக்கிடிச்சு. எப்படி இப்படி ஆச்சுன்னு எனக்கு சொல்லத் தெரியல..."

அவன் பதில், அதன் பிறகான அவளது ஆழமான பார்வை இரண்டிலும் ஏகப்பட்ட பொருள். அதன்பின் அவள் எதுவும் பேசவில்லை. எழுந்தாள். லக்கேஜ் பேக்கையும், கேமராவையும் வேலைக்காரன் உள்ளே கொண்டு வந்து வைத்திருந்தான். அவைகளை எடுத்துக்கொண்டு அவளுக்கு அவன் ஒதுக்கிக் கொடுத்திருந்த அறையை நோக்கி நடந்தாள்.

❑ ❑ ❑

அதுவும் ஒரு ஏ.சி. அறைதான். அறையில் சுவர் பாகத்தையே பார்க்க முடியவில்லை. ரூம் டெம்ப்ரேச்சரும் 16 டிகிரியில் இருந்து அவளை வரவேற்றது. மிக இதமாக இருந்தது. வியர்வை என்றால் என்ன வென்றே தெரியாமல் வளர்ந்த உடம்பு. அமெரிக்காவில் க்ளப்புகளில் ஏரோபிக்ஸ் பயிற்சியின் போது மட்டும் சில சமயங்களில் எண்ணெய் பூசினாற்போல வியர்த்திருக்கும். அதுவும் கூட ஆடுவதை நிறுத்திய ஐந்தாவது நிமிடம் அடங்கி உடம்பு பழையபடி ஜில்லென்றாகிவிடும்.

அப்படிப்பட்ட அவள் உடம்புக்கு இந்திய வெப்பம் மிகவும் புதிது. இந்த வெப்பத்தை லட்சியம் செய்யாமல் வாழும் மக்கள் புதிது. மொத்தத்தில் எல்லாமே புதிதாக இருந்தாலும் சரண்யன் சொன்ன மாதிரி ஒரு அன்னியத் தன்மையே ஏனோ ஏற்படவில்லை.

அவளுக்குள் ஜி.எம். சண்முகாவிலிருந்து அனந்தாச்சாரி வரை எல்லோரும் ஒரு முறை மனதுக்குள் வலம் வந்தார்கள்.

பல வருடங்கள் அவர்களோடு பழகினது போல்தான் இருந்தது.

எல்லாவற்றையும் அசைபோட்டபடியே அறையின் ஜன்னல் திரைச்சீலையை சற்றே விலக்கி, வெளியே கண்ணாடி வழியாகப் பார்த்தாள்.

திறந்த நொடி அந்த இடத்தில் அவளையே வெறித்துக் கொண்டு அந்த அண்டங்காக்கை!

நடு நெஞ்சில் நல்ல நீளமான ஊசி எதிர்பாராமல் ஏறினால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது.

விருட்டென்று திரைச் சீலையை விலக்கிய நொடி, மொழுக்கென்று அது கண்ணில் பட்டதில் ஹார்ட் பீட்டிலும் ஒரு தாறுமாறு.

அது உடம்பைத் துளியும் அசைக்காமல் கொள்ளாமல் கண்களை மட்டும் ஒரு சுழற்று சுழற்றியது. பின் சரே

லென்று சிறகுகளை விரித்துக் கொண்டு வானில் ஏறியது. அதன் மேல் இருந்து க்ளாராவால் பார்வையை விலக் முடியவில்லை. அதையே உற்றுப் பார்த்தாள். அது மேலே மேலே என்று போய்க் கொண்டேயிருந்தது. அப்படி அது மேலே செல்வதில் ஒரு செய்தி இருக்கிற மாதிரியும் அவளுக்குத் தோன்றியது. சாதாரணமாக காக்கைகள் அதிக உயரத்தில் எல்லாம் பறக்காது. பக்கவாட்டில் மரங்கள் இருந்தால் அங்கு சென்று அமரப் பார்க்கும். ஆனால் இந்த காக்கை மட்டும் ஏன் இப்படி ஆகாயம் நோக்கியே சென்று கொண்டிருக்கிறது?

அவளுக்கு அது பெரிய வியப்பாகவும் அசாதாரணமான ஒன்றாகவும் தோன்றியது.

"க்ளா..." இடையிட்டது சரண்யன் குரல். திரும்பினாள். அவன்தான் ஒரு ஊன்றுகோலுடன் அவளை நோக்கி...

"என்ன பண்ணிட்டிருக்கே, ஜன்னல் கிட்ட நின்னு கிட்டு?"

"நத்திங்... சரண், இப்ப இங்க ஒரு க்ரோவை பார்த்தேன்."

-அவள் சொன்ன நொடி அவனும் அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்.

"ஐ திங்க்... நீ கூட என் கூட ஃபோன்ல பேசும்போது இந்த க்ரோ பத்திதான் ஏதோ சொன்னேன்னு நினைக்கறேன்."

"ஆமாம்... இங்கேயே சுத்தி சுத்தி வந்துகிட்டு இருக்கு. சம்திங் டிஃப்ரன்ட். சம்திங்க மித்திகல். ஐ டோன்ட் அண்டர்ஸ்டாண்ட்."

"அஃப்கோர்ஸ்... அது இப்ப எங்க போச்சு தெரியுமா?"

"என்ன சொல்றே...?"

"வெயிட் ஏ மினிட்..." அவள் படு வேகமாக அவளது சூட்கேஸை திறந்து அதனுள் கிடந்த மிகவும் பவர்ஃபுல்லான டெலஸ்கோப் ஒன்றை வெளியே எடுத்தாள்.

அதன் வழியாக காகம் மேலேறிச் சென்ற அந்த வானத்தையே பார்த்தாள். ஒரு நெற்றிப் பொட்டு அளவிற்கு சுருங்கி விட்டிருந்த அந்தக் காகம் இப்பொழுது முழுவது பெரிதாகத் தெரிந்தது. அதேசமயம் சிறகுகள் படபடப்பதில் ஒருவித சிரமம் தெரிய அது மேலேயே போய்க் கொண்டிருந்தது.

"யூ ஸீ சரண்யன்... என்னன்னு தெரியல மேலேயே போய்கிட்டு இருக்கு; ஈகிள்ஸ் கூட இவ்வளவு ஹைட்டுக்குப் போகாது. போக வேண்டிய அவசியமும் அதுக்குக் கிடையாது."

அவனும் வாங்கிப் பார்த்துவிட்டு ஆமோதிப்புடன் டெலஸ்கோப்பை அருகில் மேஜை மேல் வைத்தான். அந்தக் காட்சி அவனையும் யோசிக்க வைத்துவிட்டது அவளுக்குப் புரிந்தது.

"க்ளா... நம்பளைச் சுத்தி நடக்கற எந்த ஒரு விஷயமும் கொஞ்சம் கூட நார்மலான ஒண்ணாவே இல்லன்னு நான் நினைக்கறேன். நீ என்ன நினைக்கறே?"

"ஐ ஆல்ஸோ திங்க் ஸோ..."

"எல்லாம் அந்த ஜோசியரால வந்தது. இடியட்!" அவன் பற்களில் நர நரப்பு.

"யார் அது சரண்யன்? நம்ம ஜி.எம். சண்முகா, அனந்தாச்சாரி இவங்கல்லாம் சொன்ன அந்த நாக பூஷணமா?"

"அவனேதான்... ஆபீஸ்ல என்னை மீட் பண்ணி கிறய உளறிக் கொட்டினான்."

"கொஞ்சம் நிதானமாப் பேசு. என்ன சொன்னார் அந்த ஜோசியர்?"

"வேண்டாம்... உனக்கும் இந்தக் கோயில், குளம்னா ஒரு க்ரேஸ் இருக்கு. ஸோ... உங்கிட்ட அவர் சொன்னதைச் சொல்றது சரியா வராது."

"இப்படி எல்லாம் தப்புத்தப்பா பர்சப்ஷன்ஸை வெச்சுகிட்டு ஃபூலிஷ்ஷா பிஹேவ் பண்ணாம, அவர் சொன்னதைச் சொல்."

"லுக்... இந்த இண்டியால, பர்ட்டிகுலரா தமிழ்நாட்டுல ஒரு கும்பல் இருக்கு. அவங்களுக்கெல்லாம் வேலையே ஜாதகம் பார்க்கறது; ஜோசியம் பார்க்கறதுதான். கண்டதை உளறிக் கொட்டி கடைசியில் பரிகாரம் அது, இதுன்னு ஒரு மிரட்டு மிரட்டுவாங்க. இதுல அந்த நாகபூஷணம் பெரிய கில்லாடி.

அந்த ஆள் அப்பாவோட டெத் டேட்டையே முன்னாடியே சொல்லிவிட்டானாம். அப்பாவும் அந்த டேட்லதான் செத்தாருங்கறது வேற விஷயம். அதுக்காக அவன் சொல்றதை எல்லாம் கேக்க முடியுமா?"

"என்ன சொன்னார்?"

"இன்னுமா அதை எல்லாம் நீ தெரிஞ்சுக்கலை...?"

"சண்முகாவும், அனந்தாசாரியும் நிறைய சொன்னாங்க. அவங்க பேச்சுல பல விஷயங்கள் மேன்மேடுங்கற மாதிரிகூட இருந்தது."

"பல விஷயங்கள் இல்ல... எல்லாமே மேன்மேட்தான்கறது என்னோட அபிப்ராயம், பிரசன்னமாம்... சிவன் கோயிலாம். அதைக் கட்டணுமாம், கட்டினா நல்லதாம். இல்லாட்டி கெட்டதாம், வேடிக்கையா இல்ல?"

"அதை விடு.. கொஞ்சம் முந்தி நீயே கூட சொன்னே. நம்மைச் சுத்தி நடக்கற எந்த ஒரு விஷயமும் நார்மலான ஒண்ணா தெரியலைன்னு சொன்னே... ஆனா அதை வெச்சு மேன்மேடுங்கறே..."

அவள் மடக்கியதில் அவனும் மடங்கிவிட்டது போலத்தான் இருந்தது. அவள் கேள்விக்கு அவனால் பளிச்சென்று ஒரு பதிலைச் சொல்ல முடியவில்லை.

"க்ளா.. எனக்கு ஒரே குழப்பமாயிருக்கு. எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல."

"வேண்டாம் சரண்யன். நீ எதுவும் சொல்லாதே. நான் சில ஸ்டெப் எடுக்க விரும்பறேன். அதுக்குத் தடையும் சொல்லாதே. பர்ட்டிகுலரா உன்னால நல்லபடியா நடக்க முடிஞ்சாலும் நீ நடக்கக் கூடாது. ஒரு டிஸேபிள்டு கண்டிஷனை தயவு செய்து ஃபாலோ பண்ணு. அதிகபட்சம் 15 நாள்ல நடக்கற விஷயங்கள் அமானுஷ்யமானதா, இல்ல யாராவது உள்நோக்கத்தோட சதி பண்றாங்களாங்கறது நான் கண்டுபிடிக்கறேன்."

"க்ளா..."

"டோன்ட் பீ எக்ஸைடட். நான் சொல்றத கேள்.."

"நீ என்ன ஸ்பை வேலை பார்க்கவா இங்க வந்தே...?"

"யெஸ்... அப்படித்தான்னு வெச்சுக்கயேன்..."

அவள் அழுத்தமாகச் சொன்னாள். "க்ளா..." என்றபடி அவளை கட்டிக் கொண்டான்.

வெளியேயும் இருட்டத் தொடங்கி விட்டிருந்தது.

"சரண்.. ஐ ஆம் ஸோ டயர்ட், குளிச்சுட்டு ரெஸ்ட் எடுக்கறேன். காலைல மீட்பண்றேன்" என்றவள், பாத்ரூம் நோக்கி நடந்தாள். சரண்யன் பெருமூச்சுடன் விடை கொடுத்தான்.

❑ ❑ ❑

என்னவோ தெரியவில்லை.

குளித்து விட்டு வந்த பிறகு மிகச் சுறுசுறுப்பாக இருந்தாள். எப்பொழும் இல்லாத அளவுக்கு ஒரு உற்சாகம்

வேறு. நார்மலாக க்ளாராவுக்கு குளித்து விட்டு வந்து படுத்தால் அடித்துப் போட்ட மாதிரி தூக்கம் வரும். ஆனால் இன்று நேர் எதிரான அனுபவம். ஆச்சரியமாக இருந்தது. ஒரு ஆங்கில நாவலை கொட்டாவி வரும் வரை படிக்கலாம் என்று விரித்தவள், கிட்டத்தட்ட பாதி படித்துவிட்டாள். எதேச்சையாக கைக்கெடிகாரத்தைப் பார்த்தாள். மணி பன்னிரண்டு. அதேசமயம் யாரோ எங்கோ குளிக்கும் சப்தம்... எங்கே...? கர்ட்டனை விலக்கி வெளியே பார்த்தாள், பகீரென்றது!

17

அந்த மேல்நாட்டு டாக்டர் என்னை விடவேயில்லை மாலைக்கண்நோயை குணப்படுத்திய நேத்ரமூலியை நான் அவரிடம் காட்டி இதன் சாற்றினைத்தான் தொழிலதிபர் கண்களில் விட்டேன் என்றேன். அவர் அந்த நேத்ரமூலியை பத்திரப் படுத்திக் கொண்டார்.

தொடர்ந்து, 'பிறந்தது முதல் காது கேளாத ஒரு வருக்கு எப்படியாவது காது கேட்கச் செய்ய வேண்டும். உங்கள் மூலிகை மருத்துவத்தில் வழி உள்ளதா?' என்று கேட்டார்.

எனக்கு ஒருபக்கம், நான் வசமாக மாட்டிக் கொண்டது போல்தான் தோன்றியது. இருந்தும் அதற்கென உள்ள பிரத்யேகமான சில மூலிகைகள் ஞாபகத்தில் வர, தலையை அசைத்து வைத்தேன்.

'கண் பார்வை கிடைத்தது போல் காது கேட்டு விடாதா என்ன?' என்கிற ஒரு அசட்டு நம்பிக்கை அது என்றே கூறவேண்டும்.

அதே சமயம், காதுக்குள் தான் யாரோ ஒருவர் வயணமாய் சப்பணமிட்டு அமர்ந்து கொண்டு,

வரிசையாக மகாதேவ ரகசியங்களைக் கூறியபடி உள்ளாரே.. அந்தத் தெம்பும் ஒரு காரணம்.

இந்த நிலையில்தான் நேத்ர மூலிகையைப் பயன்படுத்தி அந்த வெளிநாட்டு மருத்துவர் ஒரு மாலைக் கண் நோய்க்காரருக்குச் சிகிச்சையளித்தார்.

ஆனால் தொழிலதிபருக்கு ஏற்பட்டது போல பெரிய அளவில் பளிச்சென்று ஒரு மாற்றம் ஏற்பட வில்லை. என் கையால் அவருக்கு நான் நேத்ரமூலி சாற்றினை விட்டபோது அந்த நபருக்கு மாலைக் கண் குணமாகிவிட்டது.

அந்த மருத்துவர் மட்டுமா வியந்தார்?

நானும்தான்.

அப்போதுதான் இதுதான் ஐந்தாவது மகாதேவ ரகசியம்; இதை உணர்ந்து கொள் என்று ஒரு அலை வரிசைக் குரல் என்னுள் மீண்டும் ஒலிக்க ஆரம்பித் தது. அது மருந்தில் மட்டும் அதிசய மில்லை, அதைத் தரும் கைகளிலும் விஷயமிருக்கிறது! என் றது 'கைகளில் என்ன இருக்கமுடியும்? விரல்களைத் தவிர! விரல்களைத் தவிர!' இது நான்.

-ரசமணி வித்தகர் பெரியய்யா

நள்ளிரவு நேரம்! சலசலவென்ற நீர்த்தாரைகள் [illegible]ப் புரண்டோடும் சப்தம்.

க்ளாராவை அவளது அறையை விட்டு வெளியே [illegible] கொண்டு வந்து சப்தம் வந்த திக்கைப் பார்க்க [illegible]த்தது. பார்த்த கண்ணிரண்டும் அப்படியே நிலைகுத்தி [illegible]விட்டன.

[illegible]திரே அந்த பங்களாவின் கிணற்றடியில் வரிசையாய் [illegible]யதானவர்கள் கிணற்றுக்குள் சுரைக்குடுக்கைகளை [illegible]ல் கட்டி விட்டு, நீர் நிரம்பிய குடுவைகளை [illegible] இழுத்து அப்படியே தலைக்கு மேல் கவிழ்த்த [illegible] குளித்துக் கொண்டிருந்தார்கள்!

க்ளாராவுக்குள் வியப்பான வியப்பு.

பக்கமாய் தோட்டத்து சப்போட்டா மரம், தன் கிளைகளில் ஒன்றை அந்தப் பக்கமாய் பரவ விட்டிருந்தது. அதில் ஒரு தீப்பந்தம் தொங்கியபடி, எரிந்து கொண்டிருந்தது. அதன் மஞ்சள் வெளிச்சத்தில் அந்த வயதானவர்கள், ஒருவிதமாய் மஞ்சள் பூசிக் கொண்டது போல் தெரிந்தார்கள். ஒருவருக்கு வெகு நீளமாய் தலைமுடி. அதில் ஏகத்துக்கும் சடைத்திப்பிகள். இன்னொருவருக்கு தொப்பிளைத் தொடுமளவுக்கு தாடி.. ஒரு பெரியவரோ தலைமுடியை ஏதோ ஈர வேட்டியைப் பிழிவது போல் பிழிந்து கொண்டிருந்தார்!

யார் இவர்கள்?

மெயின்கேட் பூட்டியிருக்கும் பங்களாவுக்குள் இவர்கள் எப்படி வந்தார்கள்...?

யாராவது இப்படி நடு ராத்திரியில் குளிப்பார்களா?

க்ளாராவுக்குள் கேள்விக் குதிரைகள் குதிதாளமெடுத்துக் கொண்டு ஓடத்தொடங்கின. இப்படித் தொலைவில் நின்று பார்த்துக் கொண்டிருப்பதற்கு அவர்களிடமே நீங்கள் யார் என்று கேட்டு விடலாம் என்றும் தோன்றியது.

அதற்குமுன் இந்த கூர்க்கா என்ன செய்கிறான் என்று பார்ப்பதற்காகச் சென்றாள். அவன் குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருந்தான். அதுவும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்த நிலையில்... க்ளாராவுக்கு யார் கடமையை மறந்தாலும் கோபமான கோபம் வரும். அந்த நள்ளிரவிலும் வந்தது. கோபத்துடன் அந்த கூர்க்காவின் தோளை தொட்டாள். அவனும் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தான். க்ளாராவைப் பார்த்துவிட்டு விரைப்பான சல்யூட் எல்லாம் அடித்தான்.

"வாட் மேன்.. இப்படித்தான் ட்யூட்டி டயத்துல தூங்ுவியா?" அவளும் சீறினாள்.

"இல்ல மேடம்... ஸாரி மேடம்..." அவனிடம் தடுமாற்றம்."

"என்ன இல்ல... ஸாரி...? ஆமா யார் அந்த ஓல்டு ஏஜ் பீப்புள்ஸ்?"

அவன் புரியாமல் தலையைச் சொறிந்தான். உன்னைத்தான் கேக்கிறேன்... நௌ வாட் இஸ் த டைம்?"

அவள் கேள்விக்கு அவன் தன் குடியிருப்பான 'ஹட்'டைப் பார்த்தான். உடுப்பி ஹோட்டல் ஊத்தப்பம் சைஸுக்கு ஒரு கெடிகாரம்.. அதில் மணி 12.20 என்கிற தெளிவு.

"மணி பன்னிரண்டரைம்மா..." என்றான்.

"நோ... ட்வெல் ட்வென்ட்டி, ஏன் பத்து நிமிஷத்தைக் கூடுதலா சொல்றே...? இந்த டயத்துல கிணத்தடியில ஒரு கூட்டம் குளிச்சுகிட்டிருக்கு... அவங்கள்லாம் யார்..? எனக்குத் தெரிஞ்சுதான் வந்தாங்களா... இல்லை தெரியாம வந்தாங்களா...?"

அவள் சூடானாள்... அவனுக்கு குழப்பமான குழப்பமாக இருந்தது.

"எங்க மேடம்...? எனக்குத் தெரியாம யாரும் உள்ளே வர வாய்ப்பே இல்லையே! மெயின் கேட்டைப் பூட்டின சாவி என் பாக்கெட்டில் இல்ல இருக்கு.. அவன் சாவிக் கொத்தை தூக்கிக் காட்ட அவளுக்கும் அது திகைப்பாகி விட்டது.

"அப்ப அவங்க எப்படி உள்ளாற வந்தாங்க?"

அவள் கேள்வியைத் தொடர்ந்து கிணற்றடி நோக்கி நடந்தாள்.

ஆனால் அங்கே யாருமில்லை!

சில் வண்டுகள் சிலது மட்டும் கிணற்று உள்சுவருக்குள் இருந்து சப்தமெழுப்பியபடி இருக்க, படு திகிலான ஒரு சூழல்.

ஆனால் கிணற்றைச் சுற்றிலும் ஒரே ஈரப்பதம்.

அவனைப் பின் தொடர்ந்து க்ளாராவும் வந்து பார்த்தாள். யாருமில்லாத அதிர்ச்சியில் மருண்டேபோனாள்.

"எங்க மேடம்...? யாரோ குளிக்கறாங்கன்னு சொன்னீங்களே..."

"இங்க... இங்கதான் நின்று குளிச்சிகிட்டிருந்தாங்க... நான் என் இரண்டு கண்ணால பார்த்தேன்."

"அப்படின்னா.. இப்ப இருக்கணுமே..?"

-அந்தக் கேள்வியைத் தொடர்ந்து மளமளவென்று விளக்குகள் அந்த மாளிகையில் எரியத்தொடங்கி சரண்யன் தலை, மாடி ஜன்னலில் விலகிய கர்ட்டன் பின்னால் இருந்து தெரிந்தது.

"க்ளா.. வாட்ஸ் ஹேப்பண்ட்? வாட் ஆர் யூ டுயிங் தேர்..?"

அவள் அவன் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணற... புஷ்பா மாமி வேறு, ஒரு ஷாலைப் போர்த்திக் கொண்டு அந்த கிணற்றடிக்கு வந்தாள். க்ளாராவை அந்த நேரத்தில் அங்கே பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

"அடடா... என்ன இது இந்த நேரத்துல நீங்க இங்க...? திருடன் கிருடன் வந்துட்டானா?"

"இல்ல மாமி, ஒரு அஞ்சாறு வயசானவங்க இந்த நேரத்துல நம்ம கிணத்தடியில குளிச்சிட்டிருந் தாங்களாம்... மேடம் பார்த்ததாச் சொல்றாங்க. ஆனா இங்க யாரையும் காணோம். எனக்குத் தெரிஞ்சு யாரும் வந்த மாதிரியும் தெரியல..."

"அப்படியா... ஆனா யாரோ குளிக்கிற மாதிரி சலசலங்கற தண்ணி சப்தம் சமையல்கட்டுல படுத்திருந்த என் காதுலையும் விழுந்தது.."

புஷ்பா மாமி சொன்ன பதிலால் ஒரு மெல்லிய வெளிச்சம், கிளாரா முகத்தில் க்ஷணத்தில் பரவியது.

எக்ஸாக்ட்லி ஆண்ட்டி... த சேம் சவுண்ட் ஐ ஹேர்ட், ஆனா இப் அவங்கள காணோம்...

"ஒரே குழப்பமா இருக்கே?"

"தொடர்ந்து கூர்க்கா, டார்ச்லைட் வெளிச்சத்தை உருட்டிக் கொண்டு பங்களாவை ஒரு சுற்று சுற்றி வந்தான். யாரும் வந்து போனதற்கான அறிகுறிகளே இல்லை.

சற்றே நிமிர்ந்த மார்புடன் திரும்பி வந்து, யாரும் எங்கேயும் இல்லை..."

-என்று கூறிவிட்டு நின்றான்.

க்ளாரா யோசிக்க ஆரம்பிக்க, மீண்டும் சரண்யன் குரல்.

"க்ளாரா.. வாட் நான்சென்ஸ் இஸ் கோயிங் ஆன் தேர்?" அலறினான்.

❑ ❑ ❑

சரண்யனுடைய அறை!

மூக்கு சிவந்து விட்டிருந்தது.

"கனவு ஏதாவது கண்டியா" என்று ஏழாவது முறையாக கேட்க, பதில் சொல்லாமல் பதிலுக்கு முறைத்தாள் க்ளாரா!

"முறைக்காதே... நீ சொல்றதை யாரும் நம்ப மாட்டாங்க. இதெல்லாம் கனவுல மட்டும்தான் நடக்கும்.. வயசானவங்க... சுரைக்குடுக்கை இழுத்துக்கட்டி குளிச்சாங்கன்னா சிரிப்புதான் வருது. யு நோ ஒன் திங்..? சுரைக்குடுக்கை தண்ணியில மூழ்கவே மூழ்காது. அதுல தண்ணியை மொண்டு குளிக்கறதெல்லாம் பயங்கர மேஜிக்..."

"எக்ஸாக்ட்லி... நடந்தது மேஜிக்தான்!"

"மேஜிக்காவது, கீஜிக்காவது.. க்ளா! உனக்கு என்ன ஆச்சு? நல்லதானே இருந்தே?"

"இதே கேள்வியை நானும் எனக்குள்ளே கேட்டுக்கறேன் சரண்யன். நம்மைச் சுத்தி நடக்கற ஒவ்வொரு விஷ மும்மே சம்திங்க வெரி இண்ட்ரஸ்ட்டிங் அண்ட் வெ இன்வெஸ்டிகேடிங்..."

"போதும். போய்ப் படு, காலைல பார்ப்போம்."

"சரண்யன்... ஒண்ணுமட்டும் சொல்லிக்கறேன். நா என் கண்ணால பார்த்தது சத்யம்..."

-அவளது அழுத்தமான பேச்சு, அவனை பெருமூச்சி தான் பிடித்துத் தள்ளியது.

திரும்பவும் அமைதியான கிணற்றை மேலிருந்து ஒ பார்வை பார்த்துவிட்டு பெருமூச்சைவிட்டான்.

❑ ❑ ❑

மறு நாள்!

ஆபீசில் சரண்யனின் சீட்டில் க்ளாரா!

அவளது அழைப்பிற்கு ஏற்ப ஜி.எம். சண்முகாவு அனந்தாச்சாரியும் ஒன்றாக கதவைத் திறந்து கொண் வந்து அவள் எதிரில் குட்மார்னிங்குடன் அமர்ந்தன அவள் அவர்களிடம் ஃபோனிலேயே இரவில் நடந்ததை கூறியிருந்தாள்.

அதற்கான அவர்கள் கருத்தை அறியத்தா அவர்களையும் அழைத்திருந்தாள்.

"எனக்கென்னவோ நீங்க கனவுதான் கண்டுரு கணும்னு தோன்றது" என்றார் சண்முகா.

"அஃப்கோர்ஸ் நானும் அப்படித்தான் நினைக்கறேன் இதே ஒரு கோயில் குளத்துல இப்படி நாலைஞ்சு சா யார்கள் குளிக்கறதைப் பார்த்தேன்னு சொல்லி யிருந்த நான் கொஞ்சம் கன்சிடர் பண்ணியிருப்பேன். ஏன் கோயில் குளம்கறது ஹோலி டேங்க். ஆனா உங்காத்

கிணறு அப்படி கிடையாது. ஸோ மை கன்க்ளுஷன் ஆல்ஸோ. தட் வாஸ் எ ட்ரீம்!" என்றார் அனந்தாச் சாரியும்.

க்ளாரா மௌனமாக அதைக் கேட்டு சிரித்தாள்.

"ஆமாம் மேடம்.. இந்தமாதிரி சில விஷயங்களை விட்டுத்தள்ளுங்கோ. அப்புறமா ஒரு முக்கியமான விஷயம்..."

"யெஸ்..."

"ஆர்க்கியாலஜிஸ்ட் அனந்தநாராயணன்கறவர்க்கு இன்னைக்கு 11 மணிக்கு அப்பாய்ண்ட்மென்ட் கொடுத் திருக்கோம். இவர் ஆர்க்கியாலஜில புலி. காவேரி ரிவர் பெட்ல மூழ்கிப் போய்ட்ட இரண்டு கோயில்களை அப்ப டியே மீட்டு எடுத்து, வேற ஒரு இடத்துல ஸ்தாபிச்சுக் கொடுத்தவர். இவர் ஒரு ரிடயர்ட் ஆபீஸர் ஃப்ரம் இண்டியன் ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்."

அனந்தாச்சாரி தொடர்ந்து சொன்ன அந்த அனந்த நாராயணனும் கோட், டை என்று தர்பாரான தோற்றமுடன் க்ளாராவை வந்து சரியாக 11 மணிக்குச் சந்தித்தார்.

க்ளாராவும் ஆரம்பித்தாள். சொக்கம்பட்டி கோயிலை அப்படியே எந்தவித டேமேஜும் இல்லாம உங்களால மீட்டு எடுக்க முடியுமா?

"டெஃபனட்டா... நான் ஹைலி பொட்டன்ஷியல் இன்ஸ்ட்ரு மென்ட்ஸை யூஸ் பண்றவன் மேடம். அட் தி சேம் டைம், அதோட ஹிஸ்டரி தெரிஞ்சா இன்னும் கொஞ்சம் சௌகர்யமா இருக்கும்."

"எனக்கு அதைப்பத்தி எதுவும் தெரியாது. அதையும் நீங்கதான் கண்டுபிடிக்கணும். ஒரு கல்வெட்டு மட்டும் இருக்கு. பாருங்க..."

-க்ளாரா அந்தப் புதைகுழியில் அகப்பட்ட ஆர்ச் வடிவ பட்டயக் கல்லின் புகைப்படத்தைக் காட்டினாள்.

அதைப் பார்த்த அனந்த நாராயணன் முகத்தில் ஒருவித நம்பிக்கை ஒளி!

"இது கிடைச்ச இடம் எங்கேன்னு சொல்ல முடியுமா?"

"தாராளமா.. நீங்க உங்க டீமோட சொக்கம்பட்டி போங்க. அங்க சீஃப் சிவில் என்ஜினியர் சங்கரதாஸ்ங்கறவர் உங்களுக்கு எல்லாவித உதவியும் செய்வார்!"

அனந்தநாராயணனும் பதிலுக்கு கை குலுக்கிவிட்டு விடை பெற்றுக் கொண்டார்.

❑ ❑ ❑

சொக்கம்பட்டிக்குள் நுழைந்த வாகனங்களைப் பார்த்து ஊரே மூக்கின் மேல் விரலை வைக்க, ஒரு பொக்லைனர் மட்டும் கிட்டானும் செக்குவும் எங்கே குழியைத் தோண்டி ஒரு பெண் சடலத்தைப் போட்டு புதைத்தார்களோ, மிகச் சரியாக அங்கே போய் நின்றது!

18

மருந்தில் மட்டும் விஷயமில்லை. அதைத் தரும் கைகளிலும் விஷயமிருக்கிறது என்று எனக்குள் கேட்ட குரல், என்னைத் தீவிரமாகச் சிந்திக்க வைத்தது. முன்பு ஓம் என்னும் பிரணவத்துக்குள்தான் இந்தப் பிரபஞ்சமே இருப்பதாக என்னுள் ஒலித்த குரலும் இப்பொழுது ஞாபகத்தில் வந்தது.

'ஓம்' என்பது ஒரு வித சப்தம். இதற்குள் பிரபஞ்ச ரகசியம் இருக்கிறது என்றால் எப்படி?

அதேபோல மருந்தைத் தரும் கைகளிலும் மகத்துவம் இருக்கிறது என்றால் எப்படி?

என்னுள் யார் இருந்து கொண்டு இப்படி என்னைக் குழப்புவது? ஒரு மனிதனைக் கெட்ட ஆவிகள் ஆக்ரமிக்கும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். கதைகளிலும் வாசித்துமிருக்கிறேன்.

அப்படி யாராவது என்னை ஆக்ரமித்து என்னுள் இருந்து கொண்டே என்னோடு பேசுகின்றார்களா? அப்படி அவர்கள் பேசவேண்டிய அவசியம்தான் என்ன?

கேள்விகள்

கேள்விகள்..

கேள்விகள்...

மொத்தத்தில் நானே ஒரு கேள்விகளின் தொட்டில் ஆனேன். ஆனால் என்னையோ ஊர் வணங்க ஆரம்பித்துவிட்டது. என் முகத்தில் விழித்து விட்டுப் போன ஒருவருக்கு அனைத்துக் காரியமும் சித்தியாயிற்றாம்!

இன்னொருவரோ என்னைப் பார்க்கையில் அந்தப் பரமனையே பார்ப்பது போல் இருப்பதாகக் கூறினார். என் மனைவியே என்னைப் பார்த்து மிக அதிகபட்சம் வியந்து போனாள். உறக்கத்தில் என் குறட்டைக்கு அஞ்சாதவர்களே இல்லை. அப்படிப்பட்ட நான் குறட்டை விடாமல் தூங்குவது ஒரு அதிசயம் என்று என் குடும்பத்தவர்கள் குறிப்பிட்டனர்.

எனக்குப் புரிந்துவிட்டது.

மூலிகை தேடி நான் சென்ற அந்த மலைத்தலம் தான் அனைத்துக்கும் காரணம். அங்கு நான் சாப்பிட்ட அந்த அமிர்தமணிப் பழங்கள், அதனால் ஏற்பட்ட சுரூபமும், பின்பு கிட்டிய ரூபமும் ஜோதிடர் நாகபூஷணம் கூறியது போல என் பிறப்பின் போக்கையே மாற்றிவிட்டன.

ஒரு வைத்தியனான நான் ரசமணிகளை உருவாக்குவதில் ஜித்தன். பாதரச மணிகளை என்னைப்

போல புடம் போட்டு கட்டுபவர்களைக் காண முடியாது. அதை முன் இடுப்பில் கட்டிக் கொண்டால் உடம்பின் வெப்ப நிலையிலேயே ஒரு மாற்றம் உருவாகத் தொடங்கி விடும். அதேபோல ரத்த ஓட்டத்திலும் அந்த ரசமணியின் கதிர்கள் ஊடுருவி அந்த ரத்தத்தில் பல ஜாலங்களைச் செய்யத் தொடங்கிவிடும்.

எவ்வளவோ தூங்கு மூஞ்சிகள், சோம்பேறிகள், ஞாபகமறதிக்காரர்கள், சீதள உடம்புக்காரர்கள், திருஷ்டிக்கு ஆட்படுபவர்கள் எனது ரசமணியால் பெரிய விடிவு கண்டிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ரசமணித் தயாரிப்பாளரான என்னையும் பலர் 'ரசமணி வித்தகர்' என்றே கூப்பிடுவார்கள்.

'ரசமணி வித்தகன் பெரியய்யா' என்றால் சித்த மருத்துவ வட்டாரத்திலே எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட நான் இப்பொழுது சித்தர் மலைக் காட்டுக்குள் சென்று திரும்பியதாலே ஒரு சித்தனாகவும் ஆகத் தொடங்கிவிட்டேன் என்பது புரிந்தது. சித்தம் தெளிந்தவர்களே சித்தர்கள் என்பார்கள். எனக்கும் அந்தத் தெளிவு வேண்டும் என்றுதான் என்னுள் மகாதேவ ரகசியங்களும் ஒவ்வொன்றாய் அவிழ்கிறதோ? அதுதான் உண்மை என்று நம்பிய நான், ஓம் எனும் பிரணவத்தில் எப்படி பிரபஞ்ச ரகசியம் இருக்க முடியும் என்றும் சிந்திக்கிறேன். பிரபஞ்சமோ, இல்லை நானோ, நாமோ திடமான வடிவங்கள். சப்தமோ உடம்பற்ற ஒருவித காற்றலை. கண்ணுக்குத் தெரியாததும் கூட கண்ணுக்குத் தெரியாத ஒன்றில் கண்ணுக்குப் புலனாகின்ற விஷயங்கள் எப்படி இருக்க முடியும்?

கேள்வித் தொட்டில் ஆடினேன். பதில் காதில் ஒலிக்கத் தொடங்கியது.

-ரசமணி வித்தகர் பெரியய்யா

சுற்றிலுமுள்ள கருவேல மரங்களை எல்லாம் துச்சமாகக் கருதி கெல்லி எறிந்தபடி முன்னேறிய அந்த பொக்லைன், கச்சிதமான எல்லைக் குறிப்போடு கல்பலகை கிடைத்த அந்த இடத்தில் நிற்க, அதன் கொடுக்குக் கைகள் ஆகாயத்தில் மேலெழும்பின.

அடுத்து அப்படியே மண்ணுக்குள் அதன் இரும்புக் கரங்கள் நுழைந்து மண் கவளங்களை அள்ளி எறிய வேண்டியதுதான் பாக்கி.

அனந்த நாராயணன் ஆர்கியாலஜிஸ்டுகளுக்கே உரிய இரும்புத் தொப்பி ஒன்றுடன் கைவசம் ஒரு விசிலையும் பிடித்தபடி நின்று கொண்டிருந்தார்.

அருகில் அவரது உதவியாளர்கள். குறிப்பாக அதில் சாகம்பரி என்கிற அவரது பிரதான உதவியாளப் பெண், ஆண் வர்கத்தைச் சொக்க வைத்தே தீருவது என்று சபதம் எடுத்துவிட்ட ஒரு பெண்ணைப் போலத்தான் தெரிந்தாள். அவளது ஜீன்ஸ் பேன்ட்டின் பின்பாக்கெட்டில் ஒரு லைட்டர் இருந்தது. அவளது காய்ந்த உதட்டைப் பார்த்தபோது அன்றாடம் பாக்கெட் கணக்கில் தம் அடிப்பவளாக அவள் இருக்கலாம் என்றும் தோன்றியது. முன்மார்பின் நடுவில் டி ஷர்ட்டின் 'வி' பிரிவில் செல்ஃபோன் ஒன்றை பார்க்கும்படி செருகியிருந்தாள். அதைப் பார்க்கும் போது அரை மார்பும் தெரிந்து, கண்களுக்கான அசைவப் பசியைத் தூண்டிவிட்டது.

ஆனால் அவளது பாஸான அந்த அனந்த நாராயணன் என்பவரோ அவளை ஒரு கொசுவைப் பார்க்கிற மாதிரிதான் பார்த்தார்.

அவளை அருகில் அழைத்தார். காதருகே ஏதோ சொன்னார். அவளும் தலையாட்டிவிட்டு பொக்லைன் டிரைவர் சீட்டுக்குத் தாவி ஏறினாள். அவன் அருகேயே அமர்ந்து கொண்டு அவனிடம் ஏதோ சொல்ல ஆகாயத்தில் பிரார்த்தனைக்காரர்கள் கைகளைத் தூக்கிக் கொண்டு

நிற்பதுபோல நின்ற பொக்லைனரின் கரம், இயங்க ஆரம்பித்து மண்ணை அள்ள ஆரம்பித்தது.

அந்த இரும்புக்கரம் மண்ணுக்குள் நுழைந்த சமயம் மூச்சிரைக்க அங்கே ஓடிவந்து சேர்ந்திருந்தனர் கிட்டானும், செக்குவும்.

இருவர் முகத்திலும் ஏகத்துக்கும் பரபரப்பு.

அந்த இரும்புக்கரங்கள் தோண்டும் வேகத்தைப் பார்த்தால் ஐந்தாவது ஆறாவது பிடியில் அந்தப் பெண் சடலம் வெளியே வந்து விழும் என்றுதான் தோன்றிற்று.

ஆபத்தை அதிகரிக்கிற மாதிரி பக்கத்து டவுன் சப் இன்ஸ்பெக்டர் சுகுமார் வேறு ஒரு புல்லட் பைக்கில் அங்கு வந்து சேர்ந்திருந்தார்.

செக்குவும் கிட்டானும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஓடிவிட்டால் நல்லது என்றது உள்ளுணர்வு. போலீஸ், பொக்லைனர் எல்லாம் கோயிலைத் தோண்டாமல் அவர்கள் புதைத்த அந்தப் பெண்ணுக்காகவே வந்த மாதிரி எல்லாம் அவர்கள் கற்பனை செய்து பார்க்கத் தொடங்கி விட்டனர்.

ஊர்க்கூட்டமும் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தபடி இருந்தது.

ஆளரவமே இல்லாதபடி கிடந்த ஊர்!

இன்று ஒரே இரைச்சலுடன் அதீதப் பரபரப்புக்கு மாறி விட்டது விசித்திரம்தான்!

பொக்லைனரும் மண்ணை அள்ளி அள்ளிப் போட்டது. ஒரு யானையைப் போட்டு மூடலாம். அந்த அளவுக்கு அங்கே குழி உருவாகிவிட்டது. அந்தக் குழியில் கல்தொட்டி இருந்ததற்கான அடையாளம்!

சாகம்பரி அதைப் பார்த்துவிட்டு 'ஸ்டாப்' என்று குரல் கொடுக்க பொக்லைனர் நின்றது.

அனந்த நாராயணனும் ஓடி வந்து எட்டிப் பார்த்தார். கல் தொட்டி அவர் கண்களில் வெளிச்சத்தைக் கூட்டியது.

செக்குவும் கிட்டானும் நடுங்க ஆரம்பித்துவிட்டனர். அனந்த நாராயணன் குழிக்குள் அந்தப் பெண் சடலத்தைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று நினைத்தவர்களை நோக்கி சப் இன்ஸ்பெக்டரும் வந்தார்.

இருவரையும் ஒரு குத்துப் பார்வை பார்த்தார். மிக நேர்மையான, விருமாண்டியை ஒருபிடி பிடித்தே தீருவது என்கிற வைராக்கியமுள்ளவராக அவர் பற்றி பேசப்பட்டிருந்ததால் செக்குவுக்கும் கிட்டானுக்கும் லேசாக கிடுகிடுப்பு நடுங்கியது.

"என்னங்கடா... இங்க என்ன நோட்டம்?"

"அது... அது... சும்மா..."

"என்ன சும்மா வந்து போயின்னுகிட்டு... எப்படி இருக்கான் உங்க தலைவன்?"

"நீங்க... நீங்க யாரைச் சொல்றீங்க?"

"அடேங்கப்பா... ஒண்ணும் தெரியாத மாதிரி நடிப்பா? எப்படி இருக்கான் அந்த விருமாண்டி?"

"அவுரு... அவுரை நாங்க பார்த்தே பலநாள் ஆவுதுங்க."

"ஒரு பொட்டச்சி அவன்மேல கம்ப்ளைண்ட் கொடுக்க ஸ்டேஷனுக்கு வந்துருக்குறா... அப்ப போயிட்டா... இங்க இந்த ஊருக்குதான் வந்தானுல்லாம் கேள்விப்பட்டேன். வந்தாளா?"

சப் இன்ஸ்பெக்டரின் அதட்டலான கேள்வி, இருவரையும் ஒரு குதறு குதறிவிட்டது. உயிருடன் அவர் எதிரில் நின்றபடியே செத்துவிட்டதாகக் கூட ஒரு பிரமை தட்டியது.

இதற்குள் அனந்த நாராயணனிலிருந்து அந்தப் பெண் சாகம்பரிவரை அனைவரும் குழிக்குள் இறங்கி விட்டிருந்தனர். சப் இன்ஸ்பெக்டர் சுகுமாரையும் ஆர்வம் விடவில்லை. பேந்தப் பேந்த நிற்கும் அந்த இருவரையும் தற்காலிகமாகத் தவிர்த்துவிட்டு, அவரும் தோண்டிய குழியருகே சென்று பார்த்தார்.

எந்தப் பதற்றமும் இன்றி அனந்த நாராயணன் அவருக்கு குட்மார்னிங் சொல்ல, செக்குவுக்கும் கிட்டானுக்கும் மெல்ல உயிர்வர ஆரம்பித்தது.

அவர்களும் குழியருகே சென்று எட்டிப் பார்த்தனர். பிணம் கண்ணில் படவில்லை. கல் தொட்டிதான் கண்ணில் பட்டது. நிச்சயம் அந்த அளவு ஆழத்துக்கு அவர்கள் அன்று குழி தோண்டவில்லை. அப்டியானால் அந்தப் பெண் சடலம்?

இருவருக்குள்ளும் ஏராளமாய் வெட்டுக் கிளிகள் பறக்கத் தொடங்கின!

❑ ❑ ❑

பட்டைச் சாராயத்தில் கொஞ்சம் போல இளநீரைக் கலந்து குடிப்பது விருமாண்டிக்கு வாடிக்கை. அப்படியே பொரித்த நெத்திலிக் கருவாட்டை ஒரு கடி கடித்துக் கொள்வான். அதன் பிறகு, குளத்தில் மூழ்கிய குருவி போல தலையை ஒரு உதறு உதறுவான். மூளைக்கு ஏற மறுத்த போதை, தடை நீங்கப் பெற்ற மாதிரி அதன் பிறகுதான் ஜிவு ஜிவு என்று ஏறும்.

அப்படி ஏறும் சமயம் செக்குவும் கிட்டானும் எதிரில் நின்றனர். சுற்றத்தில் அடர்வான அவனது புளியந் தோப்பு.

விருமாண்டியின் பார்வையே என்ன விஷயம் என்று கேட்டது.

"ஊருக்குள்ள என்னென்மோ நடக்க ஆரம்பிச்சிடிச்சு அண்ணே..." மெல்ல ஆரம்பித்தான் செக்கு.

"என்னாடா... புதுக்கம்பேனிக்காரங்க கோயிலைத் தோண்டுறாங்களா?"

"ஆமாண்ணே... நாம இரண்டு நா முந்தி அந்த பொட்டச்சியைப் பொதைச்ச இடத்துலயே குழி தோண்ட வந்துட்டாங்க..."

"பொறவு...?" விருமாண்டி மீண்டும் ஒருமுறை உதறிக் கொண்டான்.

"சொன்னா நம்பமாட்டீங்க.. பாடியைக் காணோம்?"

"என்னாடா உளர்றே?"

"ஆமாண்ணே.. வசமா மாட்டப் போறோம்னு நினைச்சேன். கச்சிதமா சப் இன்ஸ்பெக்டரு வேற திபுதிபுன்னு வந்துட்டார் பைக்குல அங்கன வந்துட்டாரு. அம்புட்டுதான்... ஆறேழு வருஷத்துக்கு மதுரை ஜெயில் களி தின்னு முடிவே பண்ணிட்டேன். ஆனா சுத்தமா அந்தக் குழியில உடம்பு இல்லை."

"அது சரி... அங்கதான் புதைச்சீங்களா?"

"தெரியும்ணே... இப்படித்தான் கேப்பீங்கன்னு தெரியும். ஆனா அந்த இடத்தைக்கூட தெரிஞ்சுக்காத அளவுக்கா பார்ட்டியாண்ணே நாங்க?"

"எப்படிடா... எப்படி?"

"அதான் தெரியல... புதைச்ச குழிக்குக் கீழே ஒரு சுரங்கம்... சிவகாமி கோயில் ஒண்ணு நம்ம ஊர்ல இருந்து காணாமப் போச்சுன்னு சொல்வாங்களே... அது மாதிரி..."

விருமாண்டி அவர்கள் சொன்ன செய்திகளால் அப்படியே போதை இறங்கி, தீவிர சிந்தனைக்குள் விழுந்திருந்தான்!

❑ ❑ ❑

தொழிற்சாலையின் எம்.டி. அறை! க்ளாரா, சரண்யன் சீட்டுக்கு எதிரில் புதிதாக ஒரு சீட்டைப் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தாள். எதிரில் சரண்யன் சார்பில் அவள் இடவேண்டிய கையெழுத்துக்கான ஃபைல்கள்!

அதற்குமுன் அவளை ஜே.எம்.டி.யாய் டிஸைடு செய்த போர்டு ஆஃப் டைரக்டர்ஸின் ஒப்புதல் கடிதமும், கூடவே ஹெச்.ஆர்.டி.யின் அலுவலக ரீதியிலான ஆர்டரையும் எடுத்துக் கொண்டு ஜி.எம். சண்முகா அவளைப் பார்க்க வந்திருந்தார். கங்கராஜுலேஷன்ஸ் என்றபடியே கடிதத்தையும் தந்தார்.

-வாங்கிப் பிரித்துப் பார்த்தவள் முகத்தில் சற்றே இன்ப அதிர்ச்சி.

"மிஸ்டர் சரண்யன்தான் இதுக்கெல்லாம் காரணம். அஃபீஷியலா இது ரொம்ப அவசியமும் கூட. ஏன்னா இந்த மாச ஆர்டர் புக்குல எனக்கு மேலே உங்க அப்ரூவல் ரொம்ப முக்கியம். ஃபார் சரண்யன்னு நீங்க டெம்பரவரியா ஆபரேட் பண்ணலாம்! ஆனா அதனால ஆடிட்டிங்ல சிக்கல் வரதுக்கு வாய்ப்பு இருக்கு. ஸோ..."

"ஐ அண்டர்ஸ்டுட் மிஸ்டர் சண்முகா. ஆனா இவ்வளவு பெரிய பொறுப்புக்கு நான் தகுதி யானவளான்னு தான் யோசிக்கறேன்."

"நான் ஜால்ரா தட்றதா நினைக்க வேண்டாம். மிஸ்டர் சரண்யனை விடவும் நீங்கதான் இந்த சீட்டுக்கு லாயக்கு. இது என்னோட அசெம்ஷன்."

"தேங்க்யூ... இதை நான் சரண்கிட்டே சொல்லவா?"

"சத்யமா சொல்லமாட்டேள்... உங்களுக்கு இங்கிதம் அதிகம். அந்த தைரியத்துலதான் நான் கருத்தே சொன்னேன்..."

க்ளாரா பதிலுக்கு அவரைப் பார்த்து புன்னகைத்தாள்.

"சரி... கொஞ்சம் உக்காருங்க. சில ஃபைல்ல எனக்குப் புரியாத விஷயங்கள் நிறைய இருக்கு. கொஞ்சம் க்ளாரிஃபை பண்ணுங்களேன்..."

"வித் ப்ளெஷர்..."

அவர் அமர, அவள் ஃபைலைத் திறந்தாள். விறுவிறுவென்று வேலை ஓடியது. ஆங்காங்கே மளமளவென்று கையெழுத்தும் போட்டாள்.

ஒரு தாளில் இங்க் உறைந்து பரவியது. அதைத் தடுக்க ட்ராயரைத் திறந்து ப்ளாட்டிங் பேடைத் தேடினாள். பதிலுக்கு ஒரு இன்லாண்ட் லெட்டர்தான் கையில் சிக்கியது. அதன் முகவரிப் பகுதியில் கோணல் எழுத்தில் சக்கரவர்த்தி பெயர். மேலே ஒரு மண்டை ஓட்டை வரைந்து, கீழே 'அபாயம்' என்றும் எழுதியிருந்தது.

எழுதிய விவரம் க்ளாராவுக்குப் பிடிபடவில்லை. ஆனால் மண்டை ஓடு நெருடலைத் தந்தது.

19

ஏது பிரணவ ரகசியம்...? அதைத் தெரிந்து கொள்வதால் எனக்கு என்ன பயன்...? இப்படி ஒரு கேள்வியும் என்னுள் ஓடியது.

அடுத்து கைராசி.. பொதுவில் நமது இந்து மதத்தில் மட்டுமே இந்த ராசி பற்றி எல்லாம் பெரிதும் பேசப்படுகிறது. கைராசி, முகராசி, ஜாதக ராசி என்று இங்கே பலரும் பேசக் கேட்கிறோமே...?

இதெல்லாம் என்ன? இவை எல்லாம் மனிதன் தன் சௌகர்யத்துக்கு உருவாக்கிச் சொன்ன வெறும் வார்த்தைகளா...? இல்லை, இதன் பின்னே உண்மையில் ஏதாவது பொருள் இருக்கிறது?

என்னுள் இப்படி பல கேள்விகள்... நான்தான் எவ்வளவு மாறிவிட்டேன்! என்னுள்தான் எவ்வளவு விசாரங்கள்..

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைக்கும் என்றும் நம்பினேன். அதுதான் உள்ளே ஒரு குரல் அடிக்கடி ஒலிக்கத் தொடங்கிவிடுகிறதே..?

இதற்கிடையே அந்த செவிடரைப் பேசவைப்பது தொடர்பான மூலிகையைத் தேடிக் கொண்டு திரும்பவும் சித்தவனத்துக்கு போனால் என்ன என்று தோன்றியது.

சற்று பயமாகவும் இருந்தது... சென்ற முறை ஏற்பட்டது போன்ற விபரீத அனுபவங்கள் எதுவும் ஏற்பட்டால் என்னாவது என்கிற அச்சமும் கூட ஏற்பட்டது. ஆனால் அன்று எனக்கு சித்தவனத்தில் ஏற்பட்டது விபரீத அனுபவமாக இருந்தாலும் இன்று அதனால் நானுமல்லவா ஒரு சித்தன் போல மாறியிருக்கிறேன்?

முன்பு வைத்தியனாக அந்த வனத்திற்குச் சென்றேன். இந்த முறை சித்தனாகச் சென்றால் என்ன நடக்கும் என்ற கேள்வி எழும்ப, அதையும் தான் பார்த்து விடுவோமே என்று புறப்பட்டு விட்டேன்.

மீண்டும் சித்தவனம்?

நான் உள்ளே நுழையும் போதே என் நாசிகள் புதுவிதமான சில மூலிகைகளை வாசம் பிடிக்கத் தொடங்கிவிட்டன. அடுத்து என் கண்களும் சில அதிசயங்களைப் பார்த்தன. வனத்தில் உள்ள மரங்களுக்கு மேல், வெளிர் கறுப்பு நிறத்தில், வெளிர் அரக்கு நிறத்தில் எல்லாம் பாலிதீன் தாள் சடசடக்கும்போது அதன் மடிப்புகளால் தெரிய வருமே அதுபோல் பல வண்ணக் காட்சிகள் தெரிந்தன.

சுருக்கமாகச் சொல்வதானால் மரங்கள் தங்கள் குணாதிசயத்திற்கு ஏற்ப காற்றை உமிழ்வதுபோலத் தோன்றியது. சராசரி மனிதக் கண்களுக்குப்

புலனாகாத இந்த வண்ணங்கள் என் கண்களுக்குப் புலனானதில் ஒரு உண்மை தெளிவாகப் புரிந்தது.

மரங்களுக்கும், அதற்கு மேலான அந்தரத்துக்கும் அதாவது வானத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. அதை வாயுவாகிய காற்று உருவாக்கித் தருகிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். அதேசமயம் வானம் என்று நாம் பார்க்கும் ஒன்று, நம்மால் பார்க்க முடிந்த ஒன்று எதுவுமே இல்லாதது தெரியுமா....?

இல்லாத ஒன்றைப் பார்க்க முடியுமா என்று கேட்பார்கள்... வானம் என்பது இல்லாத ஒன்றுதான். பார்க்கிறாயே எப்படி? என்னுள் ஒரு குரல் ஒலித்தது. திக்கு முக்காடி விட்டேன்.

ஆம்... மேகமில்லாத நீல வானத்தைப் பார்த்து நீல வானம் என்கிறோம்... அது ஒரு அந்தரம். அங்கே திட வடிவில் எதுவுமேயில்லை. அட... நுட்பமான, கண்ணுக்குப் புலனாகாத தூசு, தும்பு கூட இல்லை.. இப்படி எதுவுமே இல்லாத ஒன்றை எப்படிப் பார்க்க முடிகிறது...? இது புரிந்தால் சிதம்பர ரகசியமும் புரிந்து விடும் என்றது என்னுள் அந்தக் குரல்!

-ரசமணி வித்தகர் பெரியய்யா

அந்த மண்டை ஓட்டு முத்திரை வடிவிலான கடிதம், க்ளாராவை கவ்வி இழுத்தது. ஆர்வமாக ஜி.எம். சண்முகா முன்னிலையே விரித்தாள்.

உள்ளே தமிழில் எழுதப்பட்ட வரிகள்!

சண்முகாவும் க்ளாரா புருவம் இடுங்கக் கடிதத்தைப் படிப்பதைக் கவனித்தார்.

"மிஸ்டர் சண்முகா..."

"யெஸ் மேடம்..."

"ஐ திங்க் திஸ் ஈஸ் இன் டமில் லாங்வேஜ்..."

-சண்முகாவிடம் நீட்டினாள். அவரும் வாங்கிப் பார்த்தார். பின் படிக்க ஆரம்பித்தார்.

'சக்கரவர்த்தி முதலாளி அவர்களுக்கு!'

இப்பவும் சொக்கம்பட்டி கிராமவாசிகள் எழுதிக் கொள்வது. நீங்கள் தொழிற்சாலை கட்டுவதற்காக சொக்கம்பட்டியில் இடம் வாங்கப் போவதாகக் கேள்விப்பட்டோம். சொக்கம்பட்டி நல்ல ஊரல்ல... ஒரு காலத்தில் அந்த ஊரே சுடுகாடாக இருந்தது. அங்கே நீங்கள் தொழிற்சாலை கட்டினால் அது உருப்படவே உருப்படாது. அதற்குப் பதிலாக நீங்கள், பக்கத்துக் கிராமமான சக்திவேலன் புதூரில் தொழிற்சாலை கட்டினால் அது உங்களுக்கும் நல்லது; உங்கள் தொழிற்சாலைக்கும் நல்லது; யோசித்து நல்ல முடிவெடுக்கவும்.

ஒரு முக்கியமான விஷயம்... எங்கள் ஊரில் யார் இடம் வாங்கினாலும் அவர்கள் அதிகபட்சம் ஒரு மாதம் கூட உயிரோடு இருப்பதில்லை! எவ்வளவோ பேர் அப்படி இறந்து போய், அவர்கள் வாங்கிய இடங்கள் பொட்டலாய் கிடக்கின்றன. அந்த இடத்தில் ஆடு மாடு மேய்க்கக் கூட மற்றவர்கள் பயப்படும் நிலைதான் உள்ளது.

ஒரு வகையில் எங்கள் ஊரின் சொந்தக்காரர் அந்த பரமசிவன்தான். ஊரே அவரது சொத்து... அதனால்தான் அதை வாங்குபவர்களும் சரி, விற்பவர்களும் சரி இறந்து விடுகிறார்கள். உங்களையும் எச்சரிக்கை செய்கிறோம் கவனம்.

இப்படிக்கு
பொதுமக்கள்

கடிதத்தைப் படித்த சண்முகா முகத்தில் பயங்கர சலனம். நெற்றியில் பட்டை தீட்டியது போல மடிப்பு விழுந்தது.

"என்ன மிஸ்டர் சண்முகா?"

"இந்த லெட்டர் எங்கே இருந்தது மேடம்?"

"இந்த டிராயர்ல... இது சரண்யன் டேபிள்தானே?"

"இல்லை மேடம்... இதை சக்கரவர்த்தி பாஸ் பயன்படுத்தினார்."

"அப்ப இந்த லெட்டர் அவருக்கு வந்ததா?"

"ஆமாம்... ஆனா எனக்கே இதோட கண்டென்ட் ரொம்பப் புதுசா இருக்கு..."

"அதுல அப்படி என்ன இருக்கு?"

"கிட்டத்தட்ட இது ஒரு மொட்டைக் கடிதம். சொக்கம்பட்டில இடம் வாங்கி கம்பெனியை அங்க உருவாக்காதீங்க. அது ஒரு ராசி இல்லாத இடம். அங்க யார் இடம் வாங்கினாலும் சரி, வித்தாலும் சரி, அவங்க ஒரு மாசத்துல இறந்துடுவாங்க. நீங்க பக்கத்துக் கிராமமான சக்திவேலன் புதூர்ல இடம் வாங்குங்க. அதுதான் உங்களுக்கு நல்லதுன்னு யாரோ அட்வைஸ் பண்ணி, பப்ளிக் பேர்ல எழுதியிருக்காங்க."

"அதான் அந்த டேஞ்சர் சிம்பலா?"

"ஆம்..."

"அப்ப சொக்கம்பட்டில இடம் வாங்க எதிர்ப்பு இருந்துருக்கு... அப்படித்தானே?"

"ஆமாம்... இதுல இருந்து அது புரூவ் ஆகுது."

"அவர் இடம் வாங்கின ஒரு மாசத்துலதான் இறந்தாரா?"

"ஆமாம் மேடம்.."

"அப்ப அந்த இடத்தை வித்தவர்..?"

"வித்தவர்... வித்தவர்... தெரியல மேடம். இது விஷயமா அக்கவுண்ட்ஸ்ல ஸ்பெஷல் ஆபீசரை கேட்டாதான் தெரியும். லேண்ட் பர்ச்சேஸ்- அதுக்கான நெகோஷியேஷன்ஸ் எல்லாத்துக்கும் அவர் ரெஸ்பான்ஸிபிள். சேர்மன்

சைன் மட்டும் பண்ணினார்னு நினைக்கறேன். ஒன் மினிட்..."

-சண்முகா அப்படியே இன்ட்டர்காமை தொட்டு எடுத்து, குறிப்பிட்ட எண்களைத் தட்டி ஸ்பெஷல் ஆபீசர் ஸ்ரீதரனைப் பிடித்தார்.

"ஸ்ரீதரன்.. கொஞ்சம் வர்றீங்களா?"

"யெஸ் சார்..."

-அதன்பின் க்ளாராவை ஏறிட்டபோது அவள் முகத்தில் தீவிர சிந்தனை.

"என்ன மேடம்... இந்த லெட்டர்ஸ் இருக்கற விஷயம் உண்மையா இருக்குமான்னு யோசிக்கிறீங்களா?"

"ஒரு பாதி உண்மையாக இருக்கே...?"

"ஆனா இதை நான் கன்சிடர் பண்ணத் தயாரில்லை. அந்த ஊர்ல ஃபேக்டரி வர்றது பிடிக்காம பொறாமைல யாரோ எழுதினது மாதிரிதான் இருக்கு..."

"அஃப்கோர்ஸ்... அதுவும் ஒரு கோணம். போகட்டும் இந்த ஊர்ல ஃபேக்டரி போட சக்கரவர்த்தி சார் ஏன் நினைச்சார்... அவருக்கு அந்த தாட் எப்படி வந்ததுன்னு தெரியுமா?"

"அது ரொம்ப சிம்ப்பிள் மேடம்... இங்க நம்ம ஃபேக்டரில ஒரு அளவுக்கு மேல் டர்ன் ஓவர் பண்ண முடியாத நிலை. இங்க புரொடக்ஷன் காஸ்ட்டும் அதிகம். ஆனா சொக்கம்பட்டி இருக்கற மாவட்டம், ரொம்பப் பின்தங்கின மாவட்டம். கவர்மென்ட்ல முதல் அஞ்சு வருஷத்துக்கு நிறைய சலுகைகள் தர்றதாச் சொன்னாங்க. அந்த லேண்ட் காஸ்ட்டும் ரொம்ப சீப்பா இருந்தது. இன்ஃப்ரா பாக்ட் ஒரு ஏக்கர் நிலமே ஜஸ்ட் ட்வெண்ட்டி தௌசண்ட் தான்னா பார்த்துக்குங்களேன்.. ஐமீன் யு.எஸ். வேல்யூவுல ஒன் ஏக்கர் லேண்ட் காஸ்ட் ஜஸ்ட் ஃபோர் ஹண்ட்ரட் டாலர்ஸ் சம்திங்...!"

"ஐ ஸீ..." ஒரு பால்பாய்ன்ட் பேனாவைச் சுழற்றியபடியே க்ளாரா சண்முகா கருத்தைக் கூர்மையாகக் கேட்டுக் கொள்ள, ஸ்பெஷல் ஆபீசர் ஸ்ரீதரும் எட்டிப் பார்த்தார்.

"குட்மார்னிங் சார்... குட்மார்னிங் மேடம்..."

"உட்காருங்க ஸ்ரீதர்... ப்ளீஸ் பீ சிட்டட்..."

"சொல்லுங்க சார்.. இஃப் யூ நீட் எனி இன்ஃபர்மேஷன் ஃப்ரம் மை சைட்..."

"அஃப்கோர்ஸ்... சொக்கம்பட்டில நாம வாங்கியிருக்கற லேண்டோட ஓனர் யார் தெரியுமா?"

"அது தாமோதர முதலியார்னு ஒருத்தர்... அப்புறம் சிதம்பரங்கறவர்."

"இப்ப அவங்க என்ன பண்ணிகிட்டிருக்காங்க...?"

"தாமோதர முதலியார் இப்ப உயிரோடு இல்ல சார். சிதம்பரம்.. ஊர்லதான் இருக்கார். ஏன் சார்?"

'தாமோதர முதலியார் உயிரோடு இல்லை' என்கிற இடத்திலே சண்முகா, க்ளாரா முகத்தில் ஒரு குத்து குத்தியது.

"முதலியார் எப்ப செத்துப் போனார்?"

"இந்த லேண்டை நாம பர்ச்சேஸ் பண்ணின ஒரு டென் டேஸ்லன்னு நினைக்கறேன்..."

"ஐ ஸீ... மிஸ்டர் சிதம்பரம் இப்ப ஊர்லதான் இருக்கார்...?"

"ஆமாம் சார்... அவரைக் கூட பாம்பு கடிச்சு, எப்படியோ தப்பிப் பொழச்சார்னு கேள்விப்பட்டேன்..."

"இதெல்லாம் நம்ம பாஸ்க்கு தெரியுமா?"

"தெரியும்னுதான் நினைக்கறேன்.."

"ஓ.கே... நீங்க போகலாம்..."

ஸ்ரீதரை கத்தரித்து அனுப்பிவிட்டு சண்முகா, க்ளாரா பக்கம் பார்த்தார். அவள் முகம் சும்பி விட்டிருந்தது.

"எதை நம்பறது.. எதை விட்றதுன்னு தெரியலையா மேடம்..."

"ஆமாம்... ஒரு பக்கம் யாராவது சதி பண்றாங்களோன்னு குழப்பமா இருக்கு... மறுபக்கம் ஏதாவது பவர் இருக்குகோன்னு டவுட்டா இருக்கு..."

"நான் ஒண்ணு சொன்னா நீங்க தப்பா எடுத்துக்க மாட்டீங்களே..."

"சொல்லுங்கோ..."

"இந்த மாதிரி விஷயங்கள்ல யோசிக்க யோசிக்கதான் ஏதாவது குழப்பம் தொடர்ந்துகிட்டே இருக்கும். பேசாம இந்த தாட்டையே மூட்டை கட்டிட்டு இருக்கறது பெட்டர்னு எனக்குத் தோணுது..."

-சண்முகா சொல்லும்போது ஃபோன் அலறியது. கையில் எடுத்தாள். ரிசப்ஷனிஸ்ட், சொக்கம்பட்டியில் இருந்து ஆர்கியாலாஜிஸ்ட் அனந்த நாராயணன் பேசுவதாகக் கூறினாள். க்ளாரா சம்மதிக்கவும் அனந்த நாராயணன் அவள் காதுகளில் பரவத் தொடங்கினார்.

"குட்மார்னிங் மேடம்..."

"சொல்லுங்க மிஸ்டர் அனந்த நாராயணன்..."

"மேடம்... கொஞ்சம் உங்களால இங்க வரமுடியுமா?"

"வாட் டு யூ மீன்..? நான் சொக்கம்பட்டிக்கு வரணுமா...? எதுக்கு?"

"ரொம்ப முக்கியமான விஷயத்துக்காகதான் சொல்றேன்."

"என்ன அது....?"

"இங்க ஒரு சுரங்கப்பாதை ஒண்ணு தெரியுது. அதுக்குள்ள போய் பார்த்தப்போ உள்ளே ஒரு கல்வெட்டு செய்தி... அது ரொம்ப கான்ஃபீடன்ஷியல் மேடம்...."

"சொல்லுங்க..."

"ஃபோன்ல சொல்ல முடிஞ்ச விஷயமில்ல... நீங்க நேர்ல வாங்க. நீங்க பக்கத்துல இக்கணும், அதுதான் நல்லது."

"சரி எப்ப வரட்டும்?"

"எனி டைம்..."

"ஓ.கே... ஐயம் கம்மிங் டுமாரோ..."

"தேங்க்யூ மேடம்..." ரிஸீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தாள். சண்முகாவின் முகத்தில் ஏராளமான எதிர்ப்பார்ப்பு.

"உங்க அனந்த நாராயணன் அங்க வரச் சொல்றார்..."

"அதான் நாளைக்கு வரேன்னு சொன்னீங்களே.."

"யெஸ் மிஸ்டர் சண்முகா.. ஏதோ அவசரமாம். நான் போய் பார்த்துட்டு வந்துட்றேன். ஆமா, எனக்கு யார் பி.ஏ...?"

-அப்பொழுதுதான் அந்தக் கேள்வியையே கேட்டாள்.

"ஓ... இன்னுமா அறிமுகம் செய்யலை? ஐ ஆம் சாரி... வெரி சாரி..." என்றவர், இன்ட்டர்காமில் "மிஸ்டர் வெங்கட்..." என்றார்.

அடுத்த நிமிடம் வந்து நின்றான்.

வணங்கி கைகுலுக்கினான். கல்யாணமாகி ஒரு பெண் குழந்தை இருப்பதாகச் சொன்னான்.

மறுநாள் சொக்கம்பட்டி செல்ல எல்லா ஏற்பாடுகளையும் செய்து விடுவதாகக் கூறிவிட்டு கிளம்பிச் சென்றான்.

க்ளாராவும் யோசித்தபடியே இருந்தாள்.

❑ ❑ ❑

கிட்டான் மேலும், செக்குவின் மேலும் ஆளுக்கொரு மூட்டை இருந்தது. உள்ளே மரத்தில் உலுக்கிய புளியங்கொட்டைகள்.

அதோடு புளியமர நிழல்களில் ஒரு பீடி புகைத்தபடி நடந்தவர்களுக்கு அந்தப் புளியங்காட்டுக்குள் யாரோ அழுவது போலத் தோன்றியது-

அப்படி ஒரு விசும்பல் சப்தம்.. குறிப்பாக அந்தப் பெண் தொங்கிய மரத்தடிக்கு வந்தபோது சப்தம் அதிகமாகக் கேட்டது.

20

சித்த வனத்துக்குள் புகுந்த எனக்குள் இப்பொழுது புதியதோர் கேள்வி. உண்மையில் ஏதுமில்லாத வானத்தை எதை வைத்துப் பார்க்க முடிகிறது?

விஞ்ஞான தத்துவப்படி இல்லாத ஒன்றை எவ்வளவுதான் முயன்றாலும் பார்க்க முடியாதே...?

என்னுள் எழும்பிய கேள்வி அடங்கிவிட்டது. விடை தேடி மனம் அலைபாயத் தொடங்கியது. கண் எதிரில் பசேல் என்று வனம். மலையகத்திற்கு எப்பொழுதுமே ஆண்மை அதிகம் என்கிற மாதிரி தோன்றியது. எங்கு பார் பசுந்தளிர்கள்! கொடிகள், வளை கிளைகள்!

என் புலன்களிடமும் ஒருவித அசாத்ய கூர்மை.

காலடியில் ஒரு புழு.. அது தரையை நிரடியபடி செல்லும் சப்தம்கூட என் காதில் கேட்டது. அதே சமயம் கிசுகிசு குரலில் ரகசியங்களைப் பேசிக் கொள்கிற மாதிரி யாரோ அருகில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

யாரென்று அறிய முடிந்தவரை பார்த்தேன்.

ஆனால் துல்லியமான விழிப்புலன்களுக்கு ஒருவர்கூட தென்படவில்லை. ஒருவேளை சித்த புருஷர்கள்தான் யாராவது என் விழிக்குத் தென்படாதபடி தங்களை ஒளித்துக் கொண்டு பேசுகிறார்களோ என்று கூட தோன்றியது-

என் கழுத்துவரை வளர்ந்திருக்கும் ஒரே மாதிரியான இரண்டு செடிகள்தான் பேசிக் கொண்டன.

அவைகளின் பாஷை எனக்குப் புரிவதில்லை. அது மனிதர்கள் காற்றைப் பயன்படுத்தி நாவு கொண்டு பேசுவது போலில்லாமல் வேறுவிதமாக இருந்தது.

அனேகமாக அவற்றின் பேச்சு என்னைப் பற்றியதாகத்தான் இருக்க வேண்டும்.

நான் அவைகளை 30 மூலிகையாக இனம் கண்டு கொண்டு பறிப்பேனா, இல்லையா என்பதாக இருக்கலாம். அனேகமாய் அவை நான் அவைகளைக் கொல்ல வந்ததாக கூட நினைத்திருக்கலாம்.

ஒன்று மட்டும் விளங்கியது.

தாவரங்களும் நம்மைப் போன்ற உயிரினங்கள் தான். அனைவர்களுக்கும் ஒரு இன்பமும் துன்பமுமான வாழ்க்கை இருக்கிறது என்பது.

அந்த நொடியில் விருட்ச சாஸ்திரம் தெரிந்தால் இப்பொழுது திகைப்பது போல நீ திகைக்கமாட்டாய் என்றது என்னுள் ஒரு குரல்.

விருட்ச சாஸ்திரமா... அப்படி என்றால்?

-ரசமணி வித்தகர் பெரியய்யா

செக்குவும் கிட்டானும் விசும்பல் சப்தத்தால் பெரிதும் தான் ஈர்க்கப்பட்டார்கள். அவர்கள் முகம் மெல்ல மாறத் தொடங்கியது.

சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள். வீசும் காற்றுக்கு ஏற்ப கிளைகளிடமும் இலைகளிடமும் ஆட்டம். அதுவும் மெல்லிசான சலசலப்போடு... ஆனால் யாரும் அங்கே இருக்கிற மாதிரியே தெரியவில்லை.

விசும்பல் சப்தமோ மெல்ல வலுக்க ஆரம்பித்தது.

அவர்கள் உடனே மரத்தைச் சுற்றி வந்தனர். கண்களை கசக்கிவிட்டுக் கொண்டும் பார்த்தனர். ஒருவருமில்லை! அண்ணாந்து கிளைகளை எல்லாம் ஊடுருவினர். ஒரு அணில் மட்டும் அவர்களை 'என்ன பார்க்கறீங்க?' என்று பார்த்தது.

"கிட்டான்... என்னாடாது? யாருடா அழுவறது."

"அதான் தெரியலியே... ஒருவேளை மோகினிப் பிசாசா இருக்குமோ...?"

"பிசாசா... இங்கேயா?"

-பதிலுக்கு செக்கு கேட்ட விதமே ஒரு மாதிரி இருந்தது. அப்பொழுது அவன் பின் முதுகுமேல் ஏதோ ஒன்று சொத்தென்று வந்து விழுந்தது. அலறியபடி திரும்பிப் பார்த்தான்.

துண்டிக்கப்பட்ட ஒரு கட்டை விரல் அது! சில சமயங்களில் காக்கை, குருவிகள் எங்கிருந்தாவது எலும்புக்களைக் கவ்விக் கொண்டு வந்து போடும். அது சகஜம்தான். ஆனால் இப்படி ஒரு மனிதக் கட்டை விரலையே அங்கு பார்க்கவும் செக்குவுக்கு இதயத்தில் படபடப்பு கூட ஆரம்பித்துவிட்டது.

குனிந்து அந்த விரலை துணிந்து எடுத்துப் பார்த்தான். வெட்டப்பட்ட இடத்தில் ரத்தத் திப்பிகள்! ஒரு வினாடி கண்ணில் முள் ஏறின மாதிரி கூட இருந்தது. அப்படியே விரலை விட்டெறிந்து விட்டு ஓட ஆரம்பித்தான். பின்னாலேயே ஓடினான் கிட்டான். ஒரு இடத்தில் அப்படியே தலைகுப்புற விழுந்தான். தடுமாறி எழுந்தபோது எதிர் சாரியில் உள்ள ஒரு மரத்தின் பின்னால் நின்றபடி ஒரு பெண்ணின் கருவிழிகள் அவனையே உற்று பார்க்கிறாற் போல் இருந்தது.

ஏறத்தாழ அந்தப் பெண்ணும் அன்று தூக்கில் தொங்கிய பெண்ணைப் போலத்தான் இருந்தாள்!

"ஐயோ... நீயா?" -கேள்வியோடு கிட்டான் ஓட்டத்தைத் தொடர்ந்தான்!

❑ ❑ ❑

சொக்கம்பட்டிக்கும் சக்திவேலன் புதூருக்கும் இடையேயான மெட்டல் பரத்தல் சாலையில் தார் ரோடு போட்டுக் கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட ஏழு கிலோமீட்டர் தார் சாலை. இருபத்து நான்கடிதான் அகலம். அதில் இருபதடி அகலத்துக்குதான் சாலையே. குண்டு குண்டாய் கருங்கற்கள். இரும்புச் சட்டிகளில் நிரப்பி, சாலை மேல் கொட்டிப் பரத்திக் கொண்டிருந்தார்கள்.

காண்ட்ராக்டை சக்திவேலன் புதூரைச் சேர்ந்த சங்கிலி யப்பன் என்பவர்தான் எடுத்திருந்தார். எப்பொழுதும் புல்லட் பைக்கில் தாம்புக் கயிறு போன்ற கழுத்துச் சங்கிலியோடு அவர் புல்லட்டில் வரும் அழகே தனி. பஞ்சாயத்து, கலெக்டர் அலுவலகம் இங்கெல்லாம் சகட்டு மேனிக்கு ஆட்களை வைத்துக் கொண்டிருப்பவர்.

"விட்டா ராமேஸ்வரத்துல இருந்து சிலோனுக்கு பாலம் கூட கட்டுவேன். கவருமெண்ட்டு என்னை நம்பி ஒப்பறுப்பைக் கொடுக்கமாட்டேங்குது" என்பார்.

அவருடன் பேசிக் கொண்டிருந்தான் விருமாண்டி.

எவ்வளவு டெண்டர்... எவ்வளவு செலவு... எவ்வளவு மிச்சம் என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான்.

"எப்படியும் பாதி நிற்கும் மாப்ளை.. சதுர அடிக்கு ஐம்பது கல்லு நிக்கணும். இருபது கல்லு வர்றா மாதிரி தான் போட்றேன். சொச்சத்தை மண்ணடிச்சு தேத்த வேண்டியதுதான். மழை பெய்ஞ்சா கரையும். போட்ட வேகத்தும் புடுங்கிக்கிட்டு வரும்."

"வரட்டும்கறேன். இது என்ன அமெரிக்காவா, ரஷ்யாவா? பட்டிக்காடுதானே...!"

-சங்கிலியப்பன் விருமாண்டியுடன் தனது கித்தாப்பை காட்டிக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அங்கேயே அவனைத் தேடிக் கொண்டு செக்குவும் கிட்டானும் ஓடி வந்தார்கள்.

துரத்தப்பட்ட அடுத்த தெரு நாய் போல் இளைப் பெடுத்தார்கள்.

"என்னாங்கடா... எதுக்குடா இப்படி ஓடியார்றீங்க?"

"அது வந்துண்ணே.. கொஞ்சம் அப்படி வர்ரீங்களா?"

"சும்மா சொல்லுங்கடா... சங்கிலியப்பன் ஒண்ணும் என் பகையாளியோ பொச்செரிச்சகாரனோ இல்லை... சும்மா சொல்லுங்க..."

"சும்மால்லாம் சொல்ற விஷயமில்லண்ணே... வாங்க அப்படி..."

-விருமாண்டியை தள்ளிக் கொண்டுபோய் விசும்பல் சப்தத்தைப் பற்றியும், அந்தப் பெண்ணின் முகம் தெரிந்தது பற்றியும் கூறினார்கள்.

விருமாண்டி தொடக்கத்தில் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் சிரித்தான்.

"அண்ணே நம்புங்கண்ணே... பொணம் காணாம போனப்பவே எங்களுக்கு டர்ர்ருதான்... இப்ப அது ஏன்னு விளங்கிடிச்சுண்ணே..."

"என்னாடா சங்கு சக்கரம் உட்றீங்க.. நம் கையாலவே எவ்வளவோ பேரைக் கொன்னுப் போட்டுக்கிறோமேடா... அப்பல்லாம் வராத ஆவி இப்ப வருதா...?"

"அது கொலை... இது தற்கொலைண்ணே."

"தற்கொலைன்னா... செத்த உசுரு திரும்பவருமா?"

"இது உசுரு இல்ல... ஆவி? இனி புளியங்காட்டுப் பக்கம் நீங்க முந்தி மாதிரில்லாம் போக முடியாது. போனா நிச்சயமா டர்ர்ருதான்..."

"அத தயும்தான் பார்க்கறேன்... கிளம்புங்கடா..." என்றான், அவர்களிடம் திரும்பவும் உதறல்!

❑ ❑ ❑

புதிய கம்பெனிக்கு வழக்கம் போல நிறைய கடிதங்கள். ஜங்கு ஜக்கு என்று ஒரு சீரான வேகத்தில் முத்திரையைக் குத்தி அவைகளை எடுத்துக் கொண்டு போஸ்ட் மாஸ்டர் குருமூர்த்தியைப் பார்த்தான் வேலாயுதம்.

"சரி நீ புறப்படு... நேரமாச்சு பார்" என்றார் அவரும்.

"இன்னிக்கு லெட்டருங்க சார்,. எல்லாம் புது கம்பெனிக்கு வேலைகேட்டு அப்ளிகேஷனுங்கன்னு நினைக்கிறேன்..."

-கடிதங்களை விரல்களால் எண்ணியபடியே சொன்னான் வேலாயுதம்.

"ஆமாமா... எனக்கும் அப்படித்தான் தோண்றது."

"அது சரி சார்... பம்பாய்ல இருக்கற உங்க பையனுக்கு வேலைக்கு சேக்கணும்னு சொன்னீங்களே... கேட்டீங்களா சார்?"

"இல்ல வேலாயுதம்.. பார்ப்போம், எங்க போய்டப் போறா..."

"அதுக்குன்னு எல்லாம் முடிஞ்சப்புறம் போய் நிக்காதீங்க சார். இப்பவே பிட்டை போட்டு வைங்க."

"உம்... உம்... பார்க்கலாம்."

குருமூர்த்தி எதனாலோ அவனிடம் சக்கரவர்த்தி ஹோட்டார்ஸ் பற்றி அவனிடம் பெரிதாகப் பேச பிரியப்படாதவர் போல விட்டேத்தியாகப் பேசினார்.

அதற்கு மேல் வேலாயுதத்துக்கும் இழுத்துப் பிடித்து வைக்க என்னவோ போல் இருந்தது.

"சரி சாமி... நான் கிளம்பறேன்..."

-அவனும் விலகினான். வாசலில் நிறுத்தப்பட்டிருந்த அவனது சைக்கிளில் அவன் ஏறிவிட்டதை ஒருவித 'க்ரீச்' சத்தம், குருமூர்த்திக்கு உணர்த்தியது.

போய்விட்டானா என்று திரும்ப ஒருமுறை நிமிர்ந்து பார்த்தவர் பெருமூச்சுடன் திரும்பி வந்தார். அப்பொழுது அந்த நாளைய அவரது சுழட்டும் தொலைபேசியிடம் சிணுங்கல் சப்தம்.

போய் காதைக் கொடுத்தார்.

"சொக்கம்பட்டி போஸ்ட் ஆபீஸ்..."

"சாமிங்களா?"

"யார் பேசறது... சாமியேதான்!"

"போஸ்ட்மேன் வேலாயுதம் இருக்காருங்களா?"

"இல்லையே... இப்பதானே லைனுக்கு போறான்."

"அவரைக் கூப்பிட முடியுமா சாமி..."

"என்ன விஷயம்?"

"ரொம்ப சோகமான ஒரு விஷயம் சாமி. வேலாயுதம் தங்கச்சியும், தங்கச்சியோட இரண்டு குழந்தைகளும் வெச்சுகிட்டு செத்துப் போய்ட்டாங்க சாமி..."

"என்னப்பா சொல்றே... நீ யாரு?"

"நான் வேலாயுதத்துக்கு மச்சினன் முறையாகனும் பெருமாள் என் பேரு. என்னைய உங்களுக்கு நல்ல தெரியும் சாமி..."

"ஆமா என்ன ஆச்சு அவளுக்கு?"

"கொடுமை சாமி... எல்லாம் பத்து பவுனு நகை பட்டு துன பாடு. வேலாயுதம் செஞ்சு போட்றேன்னு சொன்ன நகையைப் போட முடியல போல இருக்குது. அது இன்ன அளவு வந்து முடிஞ்சிடிச்சு. மூணு பேர் உடம்பும் மதுரை பெரிய ஆஸ்பத்திரியில கிடக்கு. கொஞ்சம் அவரை உடனே கிளம்பி வரச் சொல்றீங்களா சாமி..."

"இதோ இப்பவே..." ஃபோனை வைத்து விட்டு குருமூர்த்தியே அவனைப் பிடிக்கக் கிளம்பினார். அவரது சைக்கிளில் அரைக் காத்துதான் இருந்தது. இருந்தும் அதில் ஏறிப் பறந்தார்.

❑ ❑ ❑

அம்பாள் சன்னதியின் கோபுர கலசப் பாகம் நன்றாகவே தெரிந்து கொண்டிருந்தது. அங்கே பொக்லைனுக்கு வேலை கொடுக்காமல் சிறிய கடப்பாரைகள், இரும்புச் சட்டிகள் சகிதம் தோண்டுதல் வேலை நடந்தபடி இருக்க அனந்த நாராயணன் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

நல்ல முழு நீள பிரஷ்கள், ஏர் பம்ப்புகள், வாட்டர் ஸ்ப்ரேயர்கள், டஸ்ட் சக்கர்கள் என்று எவ்வளவு நவீன ஆயுதங்கள் உண்டோ அவ்வளவும் அங்கே இயங்கிக் கொண்டிருந்தன.

சாகம்பரிக்கு சிகரெட் பிடிக்க வேண்டும் போல இருந்ததால் ஒரு மரத்துக்குப் பின்னால் போய் நின்று பத்த வைத்துக் கொண்டிருந்தாள். புகையோடு நிமிரவும் எதிரே வேலாயுதம் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. வெகு தூரத்தில் சீஃப் எஞ்ஜினியர் சங்கரதாஸ், சக்கரவர்த்தி மோட்டார்ஸ்க்கான கட்டுமானத்தில் இருந்தார். கோயில் பக்கத்தை அவர் மொத்தமாய் அனந்த நாராயணனிடத்தில் விட்டு விட்ட மாதிரி இருந்தது.

வேலாயுதம் சிகரெட் பிடித்தபடி நிற்கும் சாகம்பரியைப் பார்த்தபடியே அவரிடம்தான் போய் நின்று கடிதங்களைக் கொடுத்தான்.

அதில் ஒரு இன்லாண்டு லெட்டரை அவன் எதிரிலேயே பிரித்தார் சங்கரதாஸ்.

உள்ளே செய்தியைப் படித்தவர் முகத்தில் பயங்கர மாறுதல்கள்!

21

'அந்த சித்த வனத்தில் ஒரு பெரிய ஞானப் பாடமே எனக்குள் நடக்க ஆரம்பித்துவிட்டது. அதில் தலையானதுதான் விருட்ச சாஸ்திரம் என்னும் அந்த விஷயம்.'

விருட்சம் என்றால் அழிவற்றது... காலத்தை எதிர்த்தும், கடந்தும், தொடர்ந்தும் வாழவல்லது! எல்லா வகையிலும் மேலானது. நன்மை மட்டுமே செய்யக் கூடியது என்று ஏகப்பட்ட பொருள் உண்டு.. அது உண்மையா, இல்லையா என்று இங்கிருக்கும் ஒவ்வொரு மரத்தையும் பார்த்து நீ உனக்குள் கேட்டுக் கொள். விடை தானாகத் தெரியும் என்றது அந்தக் குரல்.

நானும் மரங்களைப் பார்த்தேன்.

உண்மைதான்!

அங்கிருக்கும் ஒவ்வொரு மரங்களுமே பல நூற்றாண்டுகளாக இருப்பவை. வெயில், பனி, மழை எதற்கும் அஞ்சாதவை. அடிப்பாகத்தில் நிழல் தந்து மனிதனுக்கு உதவும் அந்த மரங்கள், கிளைகளில் பறவைகள் கூடு கட்டி வாழ இடமளிக்கின்றன.

இத்தனைக்கும் நடுவில் வெப்பம், காற்று இவற்றோடு க்ரியை புரிந்து மழை உருவாகக் காரணமான காரணியாகவும் திகழ்கிறது.

பருவம் தவறாமல் பூ விட்டு, பிஞ்சாகி, பின் காய் கனிகளைத் தரவும் தவறுவதில்லை. அப்படித் தருவதற்காக யாரிடமும் அது எதையும் பெறுவதும் இல்லை.

அதனிடம் எங்கும் துளிச் சுயநலம் கூட இல்லை. இத்தனைக்கும் நடுவில் அதை வெட்டினாலோ

வீழ்த்தினாலோ எதிர்த்துத் தாக்குவதுமில்லை. வெட்டுப்பட்ட பிறகும் கதவு, ஜன்னல் என்று மாறி ஒரு சிரஞ்ஜீவி வாழ்க்கையையே அது வாழ்கிறது.

உலகின் உன்னதப் பிறவி என்று தன்னை சொல்லிக் கொள்ளும் மனித இனம்கூட, உயிர் போனால் உளுத்து, அழுகி நாற்றமடிக்க ஆரம்பித்து விடுகிறது.

ஆனால் மரமோ அதன் பிறகும் துளியும் பழுதின்றி பயன்படுகிறது. சாம்பலாகும் வரை அது தருவதெல்லாம் பயன் ஒன்று மட்டும்தான்.

சாம்பலான பிறகும் அந்தச் சாம்பல், உரமாகி தாவர வளர்ச்சிக்கு வேறு வகையில் பயன்படுகிறது.

ஆஹா... உண்மையில் இந்த மரம்தான் எத்தனை மகத்தானது! இதன்முன் மனிதன் எந்த வகையில் உயர்ந்தவன்? அதன் நிழலில் நிற்கும் அருகதைகூட இல்லாதவன் மனிதன் என்பதுதானே உண்மை?

விருட்சம் பற்றிய சிந்தனைகள் என்னுள் இப்படி எல்லாம் விஸ்வரூபம் எடுத்தன.

இப்படி அழியாத்தன்மை படைத்த விருட்சங்களுக்கு மனித வாழ்க்கையையே மாற்றிக்காட்டும் சக்தி உண்டு என்பதைத் தெரிந்துகொள்.. என்றது அதன் தொடர்ச்சி!

எப்படி?

-ரசமணி வித்தகர் பெரியய்யா

சங்கரதாஸ் இன்லாண்ட் லெட்டரை பிரித்து விட்டு முகம் மாறுவதை வேலாயுதமும் கவனித்தான். அவரோ அவன் எதிரில் சற்று தடுமாறினாலும் மளமளவென்று கடிதத்தை மீண்டும் மடக்கி, கைக்குள் மற்ற கடிதங்களோடு வைத்துக் கொண்டார்.

"சார்... என்ன சார்? ஏதாவது மோசமான விஷயமா?"

-வேலாயுதம் விடவில்லை.

"போய்யா... போய் வேலையைப் பார்..."

-என்று மிடுக்காக சங்கரதாஸ் அவனை கத்தரித்தார். அவனுக்கும் தலையில் ஒரு கொட்டு விழுந்த மாதிரி தான் இருந்தது.

திரும்பினான்.

எதிரில் அரக்கப்பரக்க குருமூர்த்தி வருவது தெரிந்தது.

'என்ன இது... சாமி எங்க இங்க?' -அவன் நினைத்து முடிக்குமுன் அவர் அவனை நெருங்கினார். சைக்கிளையும் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியவராக, "வேலாயுதம் இப்படி வா..." என்று அழைத்தார்.

"என்ன சாமி...?"

"முக்கியமான விஷயம்ப்பா... நீ கிளம்பற நிமிஷம் உன் மச்சினன் பெருமாள்ங்கறவன் ஃபோன் பண்ணான்."

"பெருமாளா... என்ன விஷயம் சாமி?"

"அது... அது... நீ உடனே மதுரை ஜி.எச்.க்கு போ. அங்க உன் தங்கைக்கு ரொம்ப உடம்பு சரியில்லேன்னு அட்மிட் பண்ணியிருக்காங்களாம்..."

"என் தங்கச்சிக்கா.. பார்வதிக்கா...?"

"ஆமாம்ப்பா.. உன் மச்சினன்தான் ஃபோன் பண்ணான்."

"உடம்புக்கு என்னா சாமி..."

"போய்ப்பாரு... மார்ச்சுவரி பக்கம் போ. அங்க வெளியே எல்லாரும் நின்னுகிட்டிருப்பாங்க."

"அப்படின்னா?"

-வேலாயுதம் கொக்கி மாட்டவும், தான் உளறி விட்டது குருமூர்த்திக்கு புரிந்தது.

"அது... அது..."

"என்ன சாமி... பார்வதி இருக்காளா... இல்ல போய்ச் சேர்ந்துட்டாளா?"

"நீ... நீ போய்ப்பார்... ஏதோ பிரச்சினை... போயேன்..." அவனைப் பிடித்துத் தள்ளி விட்டார். அவனும் சீறிக் கொண்டு சைக்கிளில் ஏறினான். பார்த்துக் கொண்டே இருந்த சங்கரதாஸ் மெல்ல குருமூர்த்தியை நெருங்கி வந்தார்.

குருமூர்த்தி முகத்தில் ஏகத்துக்கும் வியர்வை வாய்க்கால்கள்.

"ஆமாம் சார்... மை நேம் ஈஸ் குருமூர்த்தி."

குருமூர்த்தி கொஞ்சம் ஆங்கில ஞானம் காட்டி, சங்கரதாசுடன் இடைவெளியைக் குறைக்கத் தயாரானார்.

"போஸ்ட்மேனுக்கு என்ன ஏதாவது பிரச்சினையா?"

"ஆமாம் சார்.. பாவம் அவன். அவன் தங்கை தன் இரண்டு குழந்தைகளோடு தீக்குளிச்சுட்டா!"

"அடக் கடவுளே...!"

"என் கேக்கறீங்க? எல்லாம் ஒரு பத்து பவுன் தங்கம் படுத்தின பாடுதான்..."

"ஓ... கல்யாணச் சிக்கலா?"

"அப்ப ஆரம்பிச்ச சிக்கல்னுதான் சொல்லணும்..."

"ஹூம்... இந்த மாதிரி விஷயத்துல இந்தியா எப்பதான் திருந்துமோ தெரியல..."

"எங்க சார்.. இனி திருந்தறதுக்கெல்லாம் சான்ஸே கிடையாது. கலியுக தர்மப்படி தப்பெல்லாம் ஜாஸ்தியாகி இதனால இந்தப் பூமி அழியணும்கறதுதான் விதி..."

குருமூர்த்தியின் கருத்துக்கு ஒரு சிரிப்பு சிரித்தார் சங்கரதாஸ். அது அவர் கருத்தை அவர் ஒப்புக் கொள்ளவில்லை என்கிற மாதிரிதான் தோன்றியது.

"என்ன சார்... நான் சொல்றதுல உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"பின்ன என்ன சார்... இந்தக் கலியுகம், கத்திரிக்கா யுகம்கறதெல்லாம் மனுஷக் கற்பனை. தப்பு பண்றவங்க அதைத் தட்டிக் கேட்க வக்கில்லாதவங்க தங்களுக்கு ரொம்ப சௌகரியமா இப்படி எல்லாம் சொல்லி வெச்சி ருக்காங்கன்னு தோணுது."

"இல்ல சார்... கலியுகத்துல கடவுளுக்கே கஷ்டம் வரும் கறதுதான் உண்மை. பாருங்க ஒரு புராதனமான கோயிலே மண்மூடிப்போச்சு. இன்னிக்கு உங்களை மாதிரி பெரிய பணக்கார கம்பெனிக்காரா வந்து தோண்டி வெளிய எடுக்கற நிலைமை..."

"ஓ... இதை பாசிட்டிவா பாருங்கறேன். மூடினது வெளிப்படப் போகுதுங்கறது ஒரு நல்ல விஷயம் தானே?"

"வெளிப்பட்டாதானே...?" -குருமூர்த்தி டக்கென்று கேட்ட விதம் யதார்த்தமாக இருந்தபோதிலும் அதில் சூட்சமமாக ஒரு பொருள் இருக்கிற மாதிரியும் தோன்றி யது.

சங்கரதாஸ் கூர்மையானார்.

"என்ன சொல்றீங்க மிஸ்டர் குருமூர்த்தி...கோயில் வெளிப்படாதுங்கறது உங்க எண்ணமா?"

"அப்படி இல்ல சார்... இது ஏற்கெனவே கொள்ளை போன கோயில்னு சொல்வா. தோண்டினாலும் பெருசா என்ன கிடைச்சுடப் போறது.. கல்லையும் மண்ணையும் தவிர?"

"ஏன் நந்திகேஸ்வரர், சகஸ்ரலிங்கம், தட்சிணாமூர்த் தின்னு எவ்வளவோ விக்ரகங்கள் கிடைச்சிருக்கே?"

"அப்படியா... நந்தி மட்டும்தானே கிடைச்சதுன்னு கேள்விப்பட்டேன்..."

"போய்ப்பாருங்க புரியும்..." கையைக் காட்டிவிட குரு மூர்த்தி நகரவும், திரும்ப அந்த இன்லாண்ட் லெட்டரை திறந்தார் சங்கரதாஸ்.

அதில் கொட்டை எழுத்தில் நான்கே வரிகள்!

'சக்கரவர்த்தி போன அதே வழியில் ஒவ்வொருவரும் போகப்போவது நிச்சயம்!'

-கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, மடக்கி திரும்பவும் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார்.

❑ ❑ ❑

அனந்த நாராயணனின் மேற்பார்வையில் வேலை ஜோராக நடந்து கொண்டிருந்தது. ஒரு சூயிங்கத்தை மென்றவளாக சாகம்பரி திரும்ப வந்திருந்தாள்.

கையில் ஒரு டைரி.

டி ஷர்ட்டின் புடைத்த மேடுகளுக்கு இடையில் பால் பாய்ன்ட். அதை வெளியே எடுத்து கட்டை விரலால் தலைப் பாகத்தை அழுத்த ரீஃபில் வெளிப்பட்டு எழுதத் தயாரானது.

"சாகா.. இந்த ஏரியாவோட லெங்த் அண்ட் ப்ரெட்த்தை கால்குலேட் பண்ணி, ஸ்கொயர் ஃபீட் எவ்வளவுன்னு கால்குலேட் பண்ணு. நான் வந்துட்றேன்" என்று திரும்பியவர் எதிரில் குருமூர்த்தி.

"நமஸ்காரம்..."

"யெஸ்... என்ன வேணும் உங்களுக்கு?"

"ஏதோ புதுசுப் புதுசா விக்ரகங்கள் கிடைச்சிருக்காமே. நான் பார்க்கலாமா?"

"நீங்க?"

"நான் இந்த ஊர் போஸ்ட் மாஸ்டர்..."

"ஐ ஸீ... அங்க அந்த ஹட்டுக்குள் இருக்கு. போய்ப் பாருங்க..."

அனந்த நாராயணன் கையைக் காண்பித்தார். குரு மூர்த்தியும் அங்கே தற்காலிகமாகக் கட்டப்பட்டிருக்கும் அந்தக் குடிசையை நோக்கி நடந்தார். நுழைமுகத்தில் ஒரு கர்ட்டன் தொங்கியபடி இருந்தது. விலக்கிவிட்டு உள்ளே எட்டிப் பார்த்தபோது விக்ரகங்கள் வரிசையாகத் தரையில் கிடந்தன. சற்று நெருங்கிச் சென்ற போது நன்றாகவே பார்க்க முடிந்தது.

எல்லா விக்ரகங்களிலும் ஏனோ கண் பாகம் மட்டும், சொல்லி வைத்த மாதிரி சிதைந்து போயிருந்தது ஆச்சரியமாக இருந்தது.

அப்பொழுது சாகம்பரியும் உள்ளே நுழைந்தாள். குரு மூர்த்தியை ஒரு மாதிரிப் பார்த்தாள்.

தலைக்குமேல் இருந்தது அவளது கூலிங்கிளாஸ். முகத்திலிருந்து குப்பென்ற சிகரெட் நாற்றம் வேறு... குருமூர்த்தியின் முகம், புரிந்தது போல சுணங்கியது.

"இங்கெல்லாம் வரக்கூடாது... வெளியே போங்க! கெட் அவுட்!" மீடியமாகக் கத்தினாள்.

"அங்க இருக்கற தொப்பிக்காரர் சொல்லித்தாம்மா வந்துருக்கேன்..."

"அவர் தொப்பிக்காரர் இல்ல... ஃபேமஸ் ஆர்க்கியாலஜிஸ்ட் மிஸ்டர் அனந்த நாராயணன். என்னோட பாஸ்..."

"ஓ.கே.. ஸோ வாட்?"

-குருமூர்த்தியும் ஆங்கிலத்தைத் தொட்டார். அவளும் அடங்கியவள் போல, "ஆர் யூ எஜிகேட்டட்?" என்று கேட்டாள்.

"நான் போஸ்ட் மாஸ்டர்மா.. படிக்கலேன்னா கவர்மெண்ட்ல வேல போட்டுக் கொடுப்பானா?"

-அவர் குரலில் வருத்தம், கேலி இரண்டும் இழை ஓடியது.

"ஆமாம்... ஏன் இப்படி இந்த விக்ரகங்களோட கண்கள் பாகம் டேமேஜ் ஆகியிருக்கு...?"

"தெரியல... யாரோ பிளான் பண்ணி சிதைச்ச மாதிரி தான் தெரியுது..."

"ஒரே ஆச்சரியமா இருக்கே... கோயில்ல விக்ரகங்களுக்கு நேத்ரம்தான் ரொம்ப முக்கியம்...

-குருமூர்த்தி சொல்லிக் கொண்டே அந்தக் குடிசையை விட்டு வெளியே வந்தார். அங்கிருந்து பார்க்கும்போது எழுக் கோயிலும் பாகம் பாகமாக வெளியே தலைகாட்ட ஆரம்பித்து, ஒரு இடுப்பளவு அவை எழும்பி நிற்பது போலத் தோன்றிற்று.

ஒருபுறம் அது பரவசத்தையும் கொடுத்தது.

பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்த அதே சமயம், சரேல் சரேலென்று கார்களின் பிரவேசம் அங்கே.

க்ளாராதான் மதுரை விமான நிலையத்தில் இருந்து வாடகை ஏ.சி கார் ஒன்றில் புடை சூழ வந்திருந்தாள்.

அனந்த நாராயணன் அவளை நோக்கி ஓடினார். அவர் நெருங்கவும், அவள் காரை விட்டு இறங்கவும் சரியாக இருந்தது.

"குட்மார்னிங்..."

"நௌ குட் ஆஃப்டர் நூன் மிஸ்டர் அனந்த நாராயணன்."

"அஃப்கோர்ஸ் வெல்கம் மேடம்..."

"ஓ... இவ்வளவு தூரம் வந்தாச்சா?" க்ளாரா அங்கே சுற்றபடி கோயில் பரப்பை ஒரு பார்வை பார்த்தாள். அப்படியே திரும்பி கம்பெனி கன்ஸ்ட்ரக்ஷனையும் பார்த்தாள். சங்கரதாஸ் அவளை நோக்கி வந்தபடி இருந்தார்.

சுற்றிலும் மளமளவென்று எல்லோரும் கூடிவிட, குரு மூர்த்தியும் க்ளாராவைப் பார்த்து கை கூப்பினார்....

"ஓ... நீங்களா..? உங்க ஃபோட்டோ பிரமாதமா வந்திருக்கு..." என்றாள்.

அப்பொழுது அவளது காரின் கூரைமேல், துளியும் பயமின்றி ஒரு காகம் வந்து அமர்ந்தது. அந்தக் காகத்தைப் பார்த்த நொடி, க்ளாராவுக்குள் துளித் திகைப்பு.

அன்று சென்னையில் வீட்டில் ஜன்னலுக்கு வெளியே பார்த்த அதே காக்கை!

'அதுதானா...? இல்லை, இது வேறா?'

அவள் அந்தக் காகத்தைப் பார்த்து கேள்வியில் விழுந்த நொடி, காகம் சரேலென்று மேலேறியது. 'அன்று வந்ததும் நான்தான்... இன்று வந்ததும் நான்தான்' என்கிறாற்போல மேலே மேலே போனபடியே இருந்தது.

க்ளாராவுக்கு புரிந்துவிட்டது!

"மேடம்... மேடம்..." அனந்த நாராயணன் உசுப்பினார். அவளும் மீண்டாள்...

"வாங்க போகலாம்..."

"எங்கே....?"

"அந்தச் சுரங்கப்பாதைக்குள்ளேதான்..."

"ஓ... அல்ரெடி யூ டோல்டு மீ..." என்றபடி நடந்தாள்.

❑ ❑ ❑

அந்தச் சுரங்கப்பாதை, ஒரு பலகையால் மூடப்பட்டிருந்தது.

விலக்கவும், உள்ளே வரிசையாய் படிகள். ஓரளவு வெளிச்சம்.

முதல் ஆளாக அனந்த நாராயணன் இறங்கத் தொடங்கினார்.

22

அந்தச் சித்த வனத்துக்குள் செவிப்புலனுக்கான சக்திக்கு மூலிகை தேடும் சமயம்தான் எனக்குள் எத்தனை எத்தனை ஞானோபதேசங்கள்!

நான் புத்தர் வரலாற்றை வாசித்திருக்கிறேன்.. புத்தர் ஒரு மகா சொகுசுப் பேர்வழியாகப் பிறந்து வளர்ந்தவர். தன் உடம்பு, சதையாலும் எலும்பாலும் ரத்த ஓட்டத்தாலும் இயங்குகிறது என்பதைக் கூட அறியாத அளவு அவ்வளவு சொகுசாக வளர்க்கப் பட்டவர்.

அவரது பார்வையில் புறா ஒன்றை புத்தரின் தோழன் அம்பால் அடித்து வீழ்த்த, அது ரத்தச் சிதறல்களுடன் அவன் கையை அடைகிறது.

அப்பொழுதுதான் உடலில் ரத்தம் என்ற ஒன்று செந்நிறத்தோடு இருப்பதே அவருக்குத் தெரிய வருகிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா?

அதுமட்டுமல்ல, அந்தப் புறாவின் துடிப்புதான் வலி... வலி என்றால் என்ன? அது எப்படிப் பட்டது...? என்றெல்லாம் கேள்விகள்.

அந்த ராஜபுத்திரன் கையைக் கிள்ளுகிறான் தோழன். வலி ஏற்படுகிறது. வலியை முதன் முதலாய் உணர்கிறார் புத்தர்.

'இந்த வலியை இதற்கு முன்வரை நான் எப்படி உணராமல் இருந்தேன்! இது என்னுள் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறதா?'

இப்படி புத்தருக்குள் கேள்விகளின் தாக்கம் ஏற்படத் தொடங்குகிறது.

அதன்பின் சாலையில் செல்லும் பிணம் ஒன்றை மாடத்தில் இருந்து பார்த்துவிட்டு, உயிர் பற்றிய கேள்வியில் விழுந்து அதற்கான விடையை இந்த

அரண்மனைக்குள் இருந்து அறிய முடியாது என்று நம்பி அரண்மனையை விட்டு வெளியேறுகிறார்.

அதன்பின் அவர் யாரைத்தான் சந்திக்க வில்லை...? வேசி முதல் வெட்டியான் வரை உலகின் ஏற்றத் தாழ்வுகளில் சிக்கியிருக்கும் அவ்வளவு பேரையும் பார்த்துவிடுகிறார்.

யாராலும் அவரது கேள்விகளுக்கு தெளிவான பதிலைக் கூறமுடியவில்லை. இறுதியில் போதி மரத்தடியில் அவருக்குள் ஒலிக்கத் தொடங்கிய குரல்தான் அவருக்கு ஞானத்தைத் தந்ததாம்.

'அது எப்படி ஒரு குரல் நமக்குள்ளேயே ஒலிக்கும்...? அது எப்படி தெளிவைத் தரும்?' என்றெல்லாம் நான் எண்ணியதுண்டு.

அதுவும் ஒரு போதி மரத்தடியில்... அந்தப் போதி மரத்துக்கு அப்படி என்ன சக்தி?.. என்று சிந்தித்ததுண்டு இப்பொழுதுதானே புரிகிறது... போதிமரம் மட்டுமல்ல, ஓதியமரம் கூட நமக்கு உயரிய உலக ஞானத்தைத் தரவல்லது என்று! எப்படி?

-ரசமணி வித்தகர் பெரியவர்

உச்சி வானத்திற்குச் சென்றுவிட்டது அந்தக் காக்கை. க்ளாராவுக்குள் ஆச்சரிய அதிர்வுகள். அந்தக் காக்கை ஏதாவது சொல்ல நினைக்கிறதோ? அவளுக்குள் அப்படி ஒரு கேள்விதான் எழும்பிற்று.

மனது க்ஷணத்தில் பாரமாகிவிட்டது. அனந்தநாராயணனும் அதைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

"மேடம்! இஃப் எனிதிங் ராங்?" கேட்டார்.

"நத்திங்... நத்திங்," அவளும் சுதாரித்தாள். அவர் சிரிக்க, சாகம்பரியும் அங்கு அவளை கூர்மையாகப் பார்த்தாள். அவள் என்னதான் சூயிங்கம் மென்றிருந்தாலும் சிகரெட் வாடை, க்ளாரா மூக்கை நெருங்கி உசுப்பியது.

உள்ளுக்குள் அதை உணர்ந்தவளாக நடக்கத் தொடங்கிவிட்ட அனந்தநாராயணனுடன் அந்தக் குகை போன்ற பகுதிக்குள் பிரவேசித்தாள்...

அனந்தநாராயணன் இடையில் சாகம்பரியைப் பார்த்து அளித்த சைகை, அவளை அப்படியே நிறுத்தியது.

பின்தொடர்ந்து வரப்பார்த்த போஸ்ட் மாஸ்டர் குரு மூர்த்தி முதல், வேறு சிலரையும் அப்படியே தடுத்து நிறுத்தியது.

க்ளாராவும் அதை உணர்ந்தாள்.

பிசுபிசுவென்று காலை அப்பிய மண் பரப்பில் சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி சென்றாள்.

"இங்கே இப்படி ஒரு குகையை நாங்க யாரும் எதிர்பார்க்கவேயில்லை மேடம்..." என்றார் அனந்த நாராயணன்.

"தட் மீண்ஸ்..."

"இது ஒரு வில்லேஜ் டெம்ப்பிள். நார்மலா வில்லேஜ் டெம்ப்புள்ங்கறது சிம்ப்பிளா இருக்கும். ஒரு சிவன் சன்னதி, ஒரு அம்பாள் சன்னதின்னு ரொம்ப சிம்ப்பிளா இருக்கும். பரிவாரத் தேவதைகள், அறுபத்திநான்கு நாயன்மார்கள், சப்தகன்னியர்கள் இவங்கள்லாம் இருக்க மாட்டாங்க."

அனந்தநாராயணன் கூறியதில் அவளுக்கு ஒரு விஷயம் புலனாயிற்று.

இங்கே சிவாலயம் என்றால் அதில் இத்தனை விக்ரகங்கள் இருக்க வேண்டும் என்பதுதான் அது.

"சரி... அப்படி என்ன இங்க கல்வெட்டு செய்தியைப் பார்த்தீங்க... ஐ வான்ட் டு நோ தட்..."

"டெஃபனட்லி மேடம். அந்த நியூஸ் எனக்கே புதுசு. நம்ப முடியாத ஒரு விஷயம் அது."

"என்ன..?"

"வாங்க... ஐ வில் ஷோ யூ!"

அனந்த நாராயணன் வளைந்து சென்ற குகைப்பாதையில் முன்னேறி, ஒரு சமதளத்தில் போய் நின்று எதிரில் தெரிந்த கல்வெட்டைக் காட்டினார்.

அதில் வட்டெழுத்தில் செய்தி!

க்ளாராவுக்கு மொழி தெரியாததால் புருவம் வளைந்தது.

"ஓ... இங்க இப்படித்தான் மெஸ்ஸேஜ் என்க்ரேவ் ஆகியிருக்குமா?" என்றாள்.

"ஆமாம்.. இந்தத் தகவல்படி இந்தச் சிவாலயத்துக்குன்னு சொர்ணத்துல, ஐ மீண் ப்யூர் கோல்டுல ஒரு லிங்கமும், நவ பாஷாணத்துல ஒரு லிங்கமும் இருந்துருக்கு. அதேபோல பியூர் கோல்டுல ஒரு அம்பாள் விக்ரகமும் இருந்துருக்கு.

அவைகளை ப்ரதோஷ காலத்துல மட்டும் வெளியே எடுத்து வழிபட்டுட்டு, மற்ற நேரத்துல உள்ளே வெச்சுடணும்னு ஒரு குறிப்பு இருக்கு..."

"உள்ளேன்னா.. எங்க?"

"அதுதான் தெரியல. ஒருவேளை இனி அந்த இடம் தெரியவரலாம். அதே சமயம், இந்தக் குகைல இப்படி ஒரு தகவலை யார் செதுக்கி வெச்சதுன்னும் தெரியல.

இன்னொரு முக்கிய விஷயம்..."

"என்ன மிஸ்டர் அனந்தநாராயணன்?"

"இங்க இருக்கற விக்ரகங்களை எழுப்பி நிறுத்தி வெச்சா அதன் எதிரொலியா பல உயிர்கள் பலியாகும். குறிப்பா இங்குள்ள பரிவார தேவதைகளுக்கு சக்தி அதிகம். அவங்க நேத்ரத்தை ஐ மீண் கண்களை நசித்துப் படுக்க வைத்த பிறகுதான் உயிர் இழப்பு நின்றதுன்னும் ஒரு குறிப்பு இருக்கு..."

க்ளாரா, அனந்த நாராயணன் சொன்னதில் சற்று குழப்பத்தை எதிரொலித்தாள். அனந்தநாராயணன் புரிந்தவர் போல, "அதாவது மேடம், எங்க இந்து மத ஐதீகப்படி சிலைகளுக்கு உயிர் உண்டு. அவைகளுக்கு 'ப்ராண ப்ரதிஷ்டை'ன்னு ஒண்ணு செய்துதான் நாங்க கோயில்ல வைப்போம். அவைகளுக்குப் படையலும் உண்டு.

'இதெல்லாம் பாவனைகள்னு சொல்வாங்க, ஆனா பாவனை இல்லை, இவைகளுக்குச் சக்தி உண்டுன்னு தெரியவருது. அதனாலதான் இங்க ஐதீகப்படி நடந்து விட்டு, பிறகு அதனால பாதிப்பு வரவும் அந்தச் சிலைகளைப் படுக்க வைத்து அதோட சக்தியை வாங்கிட்டாங்கன்னு தோணுது."

"வாட் ஈஸ் யுவர் ஃபைனல் கன்க்ளூஷன்?"

"குழப்பமாயிருக்கு... ஒரு பக்கம், தங்கவிக்ரகம் நவ பாஷாணம்னு சொல்லமுடியாத அளவு வேல்யூஸ் உள்ள விஷயங்கள். இன்னொருபுறம் அபரிமிதமான சக்தி, அதனால பாதிப்புங்கற தகவல்கள்.

மொத்தத்துல இந்தக் கோயில், இயற்கையா சேதம் அடைஞ்சிச்சா, இல்லை சதிவேலையான்னு எனக்குச் சந்தேகமா இருக்கு..."

அனந்த நாராயணன் சொன்னதைத் தொடர்ந்து க்ளாரா, இதுல நான் செய்ய என்ன இருக்கு?" என்று கேட்டாள்.

"இந்தத் தகவலை நான் இதுவரை யாருக்கும் சொல்லலை. இந்தக் கல்வெட்டுத் தமிழ், எனக்கு மட்டும்தான் படிக்கத் தெரியும். ஒருவேளை இந்தத் தகவல் உண்மையா இருந்து, நீங்க கோயில் விக்ரகங்களை திரும்ப ப்ரதிஷ்டை பண்ணும் போது ஏதாவது கெடுதல் வருமோன்னு ஒரு பயம்!

'அப்படி எல்லாம் நடக்க ஆரம்பிச்சா, அதன் பிறகு அது பெரிய எதிர்ப்புலதான் போய் நிற்கும். நீங்க கோயி

லையும் ரெனவேட் பண்ணமுடியாது; கம்பெனியையும் ஸ்டார்ட் பண்ண முடியாது!

-அனந்தநாராயணன் கோடுதான் காட்டினார். க்ளாஸ் வுக்குள் அது பற்றிக் கொண்டு எரியவே ஆரம்பித்தது.

வெளியே காகம் வேறு, ஏதோ ஒரு செய்தி ஊர் அலைகிறது.

ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இருக்கிறதா? இல்லை, இந்தக் கல்வெட்டே தன்னை மிரட்டுவதற்காக இப்பொ ழுது யாராவது செய்த தில்லுமுல்லா?

முண்டி எழுந்த கேள்வியோடு திரும்ப அந்தக் கல் வெட்டுச் செய்தியைப் பார்த்தாள். ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ள மூளை ஆணையிட்டது.

தயாரானாள்!

❑ ❑ ❑

புளியங்காடு!

விருமாண்டி செக்குவோடும் கிட்டானோடும் ஆலோ மாகப் பிரவேசித்திருந்தான். 'பம்' என்று ஒருவித அமைதி... விருமாண்டி சுற்றிச்சுற்றி பார்த்தபடி நடந்தான். எங்கும் எந்தச் சப்தமும் இல்லை. அழுகுரல், சதங்கை சப்தமும் இல்லை.

செக்கு, கிட்டானுக்கே ஆச்சரியமாகவும் ஏமாற்றமா வும் இருந்தது.

ஆனால் அந்தப் பெண், எந்தப் புளிய மரக்கிளையில் தொங்கினாளோ அங்கே...

23

விருட்சங்கள் பற்றிய என்னுடைய சிந்தனை களோடு, புத்தர் போதி மரத்தடியில் ஞானம் பெற்றது ஏன் என்பதோடு, விருட்சங்களுக்கும் மனித மனத்துக்கும் (அ) வாழ்க்கைக்கும் அப்படி என்ன ஒரு தொடர்பு இருக்க முடியும் என்று எனக்கு நானே முட்டிமோதிக் கொண்டபோது, ஏகாந்தமாய் நடந்துசென்று கொண்டிருந்த சித்த புருஷர் ஒருவர் என் கண்ணில் பட்டார்.

என் மனக்கேள்விகளை அறிந்தவர் போல அவர் வாய் திறந்தார். விருட்சத்தைப் போஷிப்பவர்களின் பாவ கர்மங்கள், விருட்சங்களுக்கு அவன் விடும் நீரோடு சேர்ந்து கரைகிறது என்பது உனக்குத் தெரியுமா? என்று கேட்டார். நான் அதிர்ந்தேன்.

'ஒரு புல்லுக்கு நீ உன் முயற்சியால் விடும் ஒரு சொட்டு நீர், உனக்காக ஒரு வேளைப் பசிக்கு உணவாக திரும்பப் போகிறது.. தெரிந்து கொள்' என்றவர், கோடீஸ்வரனாக வேண்டுமா..? தங்கம், வெள்ளியிலேயே புரள வேண்டுமா..? சுலபம்..! மிகச் சுலபம்! ஒரு சேர நூற்றி எட்டு வில்வ மரங்களை நட்டு வளர்த்து அதன் தழைகளால் அந்த மகா லிங்கத்துக்கும் அர்ச்சனை செய்.. மரங்கள் வளர ஆரம்பிக்கும் போதே உன்னிடம் செல்வமும் வளர ஆரம்பித்துவிடும்.

போ... சும்மாவேனும் இந்தப் பரிசோதனையைச் செய்து பார். ஆனால் உனக்கே அந்தச் செல்வம் அல்பம் என்கிற ஞானத்தையும் அதே விவ்வம் கொடுக்கும். அதுதான் பெரிய ஆச்சரியம் என்றவர், தன் இடைமடியில் இருந்து ஒரு ஏட்டுக்கட்டினை எடுத்து தந்து, 'இதை ஊருக்குச் சொல்' என்றார்.

நானும் விரித்துப் பார்த்தேன்.

வியப்புத்தறி என்னுள் இயங்க ஆரம்பித்து விட்டது!

-ரசமணி வித்தகர் பெரியய்

அந்தப் பெண் தொங்கிய கிளையில் அன்று அவ பயன்படுத்திய கயிறு! அதுமட்டும் கழட்டப்படாத போல அப்படியே இருந்தது.

செக்குவும் கிட்டானும் விதிர்த்துப் போனார்கள். அ அவிழ்த்துத்தான் அவளை அடைத்துக் கட்டிய சாக் மூட்டையைக் கட்டினர்.

அது நன்றாக ஞாபகத்திற்கு வந்தது.

"அண்ணே... அப்படிப் பாக்காதீங்க. கவுத் அன்னிக்கே அவுத்துட்டோம். திரும்ப இன்னிக்கு எப் வந்துச்சினுல்லாம் சத்தியமா தெரியாதுண்ணே" -அ கோரஸாகப் புலம்பினார்கள்.

"அப்ப கவுத்துக்கு கால் முளைச்சு நடந்து வ தானே ஏறிக் கட்டிக்கிச்சாக்கும்?"

-கர்ஜித்தான் விருமாண்டி, இருவரும் பரிதாபமா பார்த்தனர்.

"அது சரி... எங்கடா... எவனோ ஒப்பாரி வைக்கிற னியே... எங்க?"

"அது... அது..."

"நேத்து ராத்திரி டென்ட்டுக் கொட்டாய்ல எதா காத்து கறுப்புப் படம் பாத்தீங்களாக்கும்?"

"இல்லண்ணே... நம்ம டுரிங்குல தில்லானா மோக பாள்ல ஓடிகிட்டிருக்கு..."

"அப்படின்னா எங்கடா...?"

"தெரியலேண்ண... ஆனா சத்தியமா நாங்க அ சத்தத்தைக் கேட்டோம். ஒரு பொட்டச்சியையும் தோம்."

"எவனாவது தேவடியாக் குந்தாணிங்க.. எவனையாவது இழுத்துகிட்டு வந்து ஜோலி பாத்துருப்பாளுக. நீங்க வரவும் போக்கு காட்டிச் சுத்த உட்ருப்பாளுக..."

"அது.. அது..."

"அதேதான்டா... அதேதான்! இப்ப சொல்றேன்.. இந்தப் பெரியந்தோப்பை உட்டு நீங்க இரண்டு பேரும் வெளிய போவக்கூடாது. அந்தக் குந்தாணி திரும்ப வருவா. அவளை ஒரே அமுக்கா அமுக்கி, தூக்கிகிட்டு வர்றீங்க. விருமாண்டியோட தோப்புல விளையாட்டு காட்றவளை கிழிப்புடணும் வீறி..."

"அண்ணே ஏஏ..."

"கூவாதீங்கடா நாயுங்களா... கெடங்க இங்கணயே"

விருமாண்டி ஒரு பீடியைப் பற்ற வைத்தபடியே விலகத் தொடங்கினான்!

❑ ❑ ❑

ஜீப் பாக்ஸில் இருந்து ஒரு கோக் டின்னை எடுத்து குலுக்கிப் பார்த்துவிட்டுப் பின் உடைத்தவராக க்ளாரா திசை நீட்டினார் சீஃப் என்ஜினீயர் சங்கரதாஸ்.

"தேங்க்யூ..." என்று அவளும் வாங்கிப் பருகும் போது ஒரு காரின் பிரவேசம். க்ளாராவுக்கு சற்றுத் தள்ளி வந்து நின்ற அதிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான் அவளது புதிய பி.ஏ.வான வெங்கட்.

க்ளாரா விமானத்தில் அவனுக்கு முன்பே வந்து விட்டாள். பி.ஏ.வுக்கு ரயிலில் த்ரீ டயர் ஏ.சி. வரை தான் அனுமதி. எல்லாம் ஆஃபீசின் ரூல்.

க்ளாரா காத்துக் கொண்டிருப்பாள் என்பதுபோல அவர்கள் ஓடி வந்தான்.

"குட்மார்னிங் மேடம்..."

"வெரி குட்மார்னிங்..." என்றவள் எதிரே அவன் மறந்து விட்டு வந்திருந்த செல்ஃபோனை எடுத்து நீட்டினான்.

"ஓ... தேங்க்யூ..." என்றவள், முதல் காரியமாக எக்ஸ் யூஸ்மீ... என்று ஒரு ஓரமாகச் சென்று நின்று சரண்யாவை அதன் மூலம் பிடித்தாள்.

"க்ளா..."

"யெஸ் சரண்... ஆர் யூ ஓ.கே.?"

"எனக்கென்ன... ஆமா, அவசரம்னு போனியே... எனிதிங் இம்பார்ட்டண்ட்?"

"ஆமாம்.... வெரி இம்பார்ட்டண்ட் மேட்டர். அதைப் பத்தி நான் இப்ப செல்லுல பேச முடியாது. நேரில் பேசறேன்."

"சீரியஸா ஒண்ணும் இல்லையே?"

"எதுக்கு டென்ஷனாகறே? நான் நைட் வந்துடுவேன். ஈவினிங் செவன்தர்ட்டி ஜெட் ஏர்வேஸ்ல புறப்பட்டு ஒன்பது மணிக்கெல்லாம் உன் முன்னால் இருப்பேன். அப்ப பேசலாம்."

"ஜஸ்ட் விவகாரம் என்னன்னு சும்மா க்ளூ கொடேன்."

"ஸாரி... பை!"

-செல்லை கட் செய்தாள். திரும்பி வந்தாள். சங்கர் தாஸ் அருகே வந்து, "எக்ஸ்க்யூஸ் மி மேடம்... ஒரு முக்கியமான விஷயம்..." என்றார். அப்படியே அந்த இன்லாண்ட் லெட்டரையும் காட்டினார். விஷயத்தையும் சொன்னார்.

க்ளாரா முகம் மாறிற்று. அப்படியே மௌனமாகச் சுற்றி ஒரு பார்வை பார்த்தாள். ஒரு பக்கம் ஃபேக்டரிக்கான நிர்மாணப் பணிகள். ஒரு பெரிய கிரேன் லிஃப்ட் பெரிய கர்டர் ஒன்றைத் தூக்கி கூரை ஒன்றை உருவாக்குவதில் குறியாக இருந்தது.

அப்படியே அதற்கு நேர் எதிர் திசையில் சல்லடையால் சலித்தாற்போல செம்மண் புழுதிப்படலம் ஒன்றின் நடுவே கோயில் மெல்லத் தெரிந்தபடி இருந்தது.

"வெங்கட்..." கூப்பிட்டாள். அவன் ஓடிச் சென்று, யெஸ் மேடம் என்றான்.

"இந்த ஊர்லையே வாழ்ந்துகிட்டிருக்கற சிலரோடு தான் டிஸ்கஸ் பண்ண விரும்பறேன்" என்றவள் பார்வையில் திரும்பவும் குருமூர்த்தி பட்டார்.

அவரை அருகில் அழைத்தாள்.

இரண்டு நாற்காலி கொண்டுவந்து போடச் சொல்லி அமர்ந்து கொண்டு அவரையும் அமர்த்தினாள்.

"நீங்க எல்லாம் போய் வேலையைப் பார்க்கலாம்..." என்று மற்றவர்களை அனுப்பினாள்.

குருமூர்த்திக்கு அவள் அளிக்கும் முக்கியத்துவம் பிடித்திருந்தது.

கொஞ்சம் கூச்சம், கொஞ்சம் மகிழ்ச்சி என்று அவளைப் பார்த்தார்.

"ஸார்... உங்க சொந்த ஊர் எது?"

"இதே ஊர்தான் மேடம்..."

"அப்படியா.... இந்த வில்லேஜ்லையா பிறந்தீங்க?"

"ஆமாம்... எங்க முன்னோர்கள் இந்த ஊருக்கு வந்து ரொம்ப தலைமுறையாச்சுன்னா பாத்துக்குங்களேன்... இதோ நீங்க பாக்கறீங்களே இந்த கோயில்... இதுக்கு ஊழியம் பண்ணக் வந்தவாதான் என் முன்னோர்கள்."

"அப்ப உங்களுக்கு இந்த ஊர் பத்தி எல்லா விஷயமும் தெரிஞ்சிருக்கும்னு சொல்லுங்க..."

"உங்களுக்கு என்ன தெரியணும் மேடம்..?"

"இவ்வளவு புராதனமான ஒரு கோயில் எப்படி மண் மூடிப்போச்சு...?"

"ஒரு மழை வெள்ளத்துலன்னு சொல்வாங்க. கோயிலை ஒட்டி ஒரு ஆறு இருந்தது. அதுல காட்டு வெள்ளம் ரொம்பச் சாதாரணம். இப்ப ஆறும் கிடையாது வெள்ளமும் கிடையாது..."

"ஆறுன்னா ரிவர்தானே....?"

"ரிவரேதான்... எங்க ஊர்ல காசு பணம் திருட்ற மாதிரியே ஆத்தையும் திருட்றதுல சிலர் கெட்டிக்காரங்க."

"சரி... பை நேச்சர் ஃபோர்ஸ் கோயில் மண் மூடிப் போனது. அப்புறமா அதை மீட்கணும்னு தோணலியா?"

"தெரியல மேடம்... நான் அப்ப பொறக்கக்கூட இல்ல. என் அம்மாகிட்ட கேட்டா ஒருவேளை தெரியலாம்."

"சரி... உங்களைபோலவே இங்க பரம்பரை பரம்பரையா யாரெல்லாம் இருக்காங்க..?"

"ஊர்ல முக்காலே மூணு வீசம்பேர், பரம்பரை பரம்பரையா இங்க இருக்கறவாதானே!"

"இந்த ஊரோட டோட்டல் ஸ்ட்ரெங்த்?"

"என்ன ஒரு நூறு, நூத்து ஐம்பது குடும்பம் இருந்தா அதிகம்..."

"எல்லாருக்கும் என்ன தொழில்..?"

"மேல்கட்டு முழுக்க விவசாயம். கீழ்கட்டுக்கு ஆடு மாடு மேய்க்கறதுதான் தொழில். அப்புறமா வயல்ல வேலைக்கு வருவாங்க..."

"அதென்ன மேல் கட்டு... கீழ் கட்டு...?"

"நான் மேல் சாதி, கீழ்சாதிங்கறத அப்படிச் சொல்லினேன்."

"யூ மீன், எங்க நாட்டுல இருக்கற பிளாக் அண்ட் ஒயிட் மாதிரியா?"

"கொஞ்சம் அப்படித்தான்..."

"மேல் சாதி எத்தனைக் குடும்பம் இருக்கு?"

"அது... அது.... என்ன ஒரு அஞ்சாறு குடும்பம் இருந்தா அதிகம்."

"வாட்...!" அதிர்ந்தாள் க்ளாரா.

"என்ன மேடம்... அஞ்சாறு குடும்பம்தான்ன உடனே ஆச்சரியமா இருக்கா?"

"ஆமாம்... இந்த அஞ்சாறு குடும்பமா, மொத்தமா மீதி இருக்கற அவ்வளவு பேரையும் கண்ட்ரோல் பண்றாங்க?"

"இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு... ஒரு ராஜா ஊரையே நிர்வாகம் பண்றதில்லையா?"

"சரி... அவங்கல்லாம் இப்ப இருக்காங்களா?"

"ஏன் இல்லாம...? ஊர் மணியக்காரர், வி.ஏ.ஓ. பஞ்சாங்கக்காரர் இவங்கள்லாம் யாராம்?"

"ஸீ... ஆமா இவங்களுக்கெல்லாம் இங்க ஃபேக்டரியும், கோயிலும் வரப்போறது தெரியும்தானே?"

"இதென்ன ரகசியமா என்ன...? ஊரறிஞ்ச விஷயமாச்சே!"

"அப்படி இருக்க, அவங்களை இங்க நான் பார்க்கவே இல்லையே! ஏன்?"

"அது... அது..." தயங்கினார் குருமூர்த்தி.

"எது?"

"இல்ல... அவங்களுக்கெல்லாம் கொஞ்சம் பயம்னு நினைக்கறேன்..."

"பயமா...?"

"ஆமாம் மேடம்... அவங்களுக்கு நிறையவே பயம்... அதுலையும் உங்களுக்கு இடத்தை வித்த தாமோதர் முதலியார் செத்த பிறகு சிதம்பரம் செட்டியாரை பாம்பு கடிக்கவும் அது அதிகமாயிடுத்து."

-குருமூர்த்தி க்ளாரா எதிர்பார்த்த அந்த இடத்திற்கு கச்சிதமாக வந்து நின்றார்.

24

"சித்தவனத்தில் நான் கண்ட அந்த சித்த புருஷர் தந்த ஏட்டுக் கட்டில்தான் எத்தனை எத்தனைச் செய்திகள்!"

'ஆசைகளால் ஆனவை வினைகள்!'

இரும்பை உரிக்க இரும்பையே பயன்படுத்து கிற மாதிரி, ஆசைகளால் ஆன வினைகளையும் அதன் போக்கில் போயே மாற்றிட முடியும். பரி காரார்த்தம் என்னும் இச்செயல்பாடுகள் அறவினை களாகும். அறவினை வளர வளர கருவினை கூடைக் கோழியாய் அடைந்துவிடும்.

நாயும் பூனையும் வளர்க்கப்படும் இல்லத்தில் தவறான விதி, நேராகிக் கொண்டிருக்கிறது என்பது பொருள். விதிகளை மீறியே பழகியவன், தான் செய்த சிற்சில அறச்செயல்களாலே மிருகங்கள்மேல் காதல் கொள்கிறான். அதுவே பின் அவன் விதிகளை மீறிய கர்மச் செயல்களுக்கு தீர்வாகிறது.

ஒரு நாயினுக்கு ஒரு வேளை நீயிடும் உணவு, பைரவத் திருவடிக்கு வைத்திடும் செவ்வரளியாய் மாறிவிடுகிறது.

அந்த ஏட்டில் இப்படி அரிய செய்திகள் தொடர்ந்து கொண்டிருந்தன!

-ரசமணி வித்தகர் பெரியய்

குருமூர்த்தி மேல் கட்டு, கீழ்கட்டு என்றும், அதில் கீழ்கட்டு தொண்ணூற்றி ஐந்து சதம் என்றும் கூறி ஒரு சில குடும்பங்கள்தான் இங்கே மேல்கட்டு என்று கூறி

தில் போய் க்ளாராவின் மனது செருகிக் கொண்டு நின்றது.

குருமூர்த்தி க்ளாராவின் பொருட்படுத்தலையும், சமதையாக உட்கார வைத்துப் பேச வைப்பதையுமே ஒரு பெரிய விஷயமாக நினைத்துவிட்டார் என்பது அவர் மளமளவென்று ஒன்று விடாமல் பேசுவதிலேயே விளங்கி விட்டது.

"ஆமாம் உங்களுக்கு இங்க எவ்வளவு நிலம் இருக்கு?" க்ளாரா கேட்ட கேள்விக்கு ஒரு வருத்தம் கலந்த தோற்றம்தான் முதல் பதிலாக அமைந்தது.

"என்ன மிஸ்டர் குருமூர்த்தி... நீங்களும் இங்க மேல்கட்டுல ஒருத்தர்தானே?"

"ஆமாம் மேடம்... ஆனாலும் கோயில் பிராமணன்கற தால அப்படி ஒண்ணும் பெருசா எங்களுக்கு இங்க நில புலன் இல்லை."

"யூ மீன்... ?"

"அஞ்சு ஏக்கரா நிலத்தைதான் என் தாத்தா ஏத்துண் டார்னு சொல்வா..."

"ஐ டோன்ட் அண்டர்ஸ்டாண்ட்,"

"அதாவது கோயில் மண்ணடைஞ்சு போய் பொழப்பு போய்ட்ட நிலைல எங்க முன்னோர்களுக்கு தெற்கே லேலங்காட்டுல ஒரு ஐம்பது ஏக்கராவை தந்து வாழ்ந் துக்கச் சொன்னதாகவும், 'இல்ல வேண்டாம்.. எனக்கு ஊடக்கே கொஞ்சம் இடம் கிடைச்சாலும் போறும்'னு என் தாத்தா சொன்னதாகவும் கேள்விப்பட்டிருக்கேன்...

"ஐம்பது ஏக்கரைவிட ஐந்து ஏக்கரை ஏன் உங்க தாத்தா பெரிசா நினைச்சார்?"

"அது... அது... கோயிலுக்குத் தானமா கொடுத்த நிலம். சிவன் சொத்து நமக்கு எதுக்குன்னு அவர் நினைச் திருக்கலாம்."

"அப்படின்னா இந்த ஐந்து ஏக்கர், கோயில் நிலமில்லியா?"

"இந்த ஊரே சிவன் கோயில் சொத்துன்னு சொல்வாங்க. அதனால்தான் இதை விக்கறதுக்கே ரொம்ப யோசிப்பாங்க. ஆனா அதெல்லாம் ஒரு காலம். இப்பதான் தாமோதரன் முதலியாரும் சிதம்பரம் செட்டியாரும் உங்களுக்கு இந்த இடத்தை வித்துட்டாங்களே?"

-குருமூர்த்தியிடம் பேசியதில் இப்படி ஒரு க்ளாரிட்டி கிடைக்கும் என்று க்ளாரா துளிகூட எதிர்ப்பார்க்கவில்லை.

"என்ன மேடம் ஊரே சிவன் சொத்துன்னா அதை எப்படி உங்களுக்கு விக்க முடியும்னு லாஜிக்கா ஒரு கேள்வி எழும்பறதோ?"

"அஃப்கோர்ஸ்..."

"ஊரே சிவன் சொத்துங்கறது அந்த நாளைய உண்மை. அதாவது சுந்தரபாண்டியன்கற பாண்டியராஜன் இந்த ஊர்ல இந்தக் கோயிலைக் கட்டினதா சொல்வா. கோயிலைக் கட்டி அதுல ஒரு வேத பாடசாலையும் அமைச்சு, பிராம்ணாளையும் தங்க வெச்சு, ஆயிரம் பசு, ஆயிரம் காளை மாடுன்னு கொடுத்து இங்க அவா ஜீவனம் பண்ண எல்லா வசதிகளும் அந்தப் பாண்டிய ராஜா செய்து கொடுத்தானாம்.

அவாளை கவனமா பாத்துக்கவும் விவசாயம் பண்ணவும் வேளாங்குடிக்காரான்னு சிலரையும் அவன் இங்க குடியேத்தினதா சொல்வா. எங்கேயும் இல்லாதபடி சொர்ண விக்ரகம் இந்த ஊர்ல இருந்ததாலே..."

-க்ளாரா முகம் அவர் சொர்ண விக்ரகம் என்றவுடன் சுருங்கியது. அவரும் புரிந்து கொண்டார். "சொர்ண விக்ரகம்னா ப்யூர் கோல்டு ஸ்டாச்சூன்னு அர்த்தம்..."

"ப்யூர் கோல்ட்...?"

"ஆமாம்... பசும் தங்கம்! இன்னிக்கெல்லாம் கோடிகளாலக் கூட மதிப்பிட முடியாது. ஏன்னா புராதனம் ஒரு பக்கம் தங்கம்கற மதிப்பு ஒரு பக்கம்..."

"அப்ப அதெல்லாமும் மண்மூடிப் போச்சா?"

"அது... அது..." குருமூர்த்தி கொஞ்சம் இழுத்தார்.

"என்ன இழுக்கறீங்க?"

"உண்மையைச் சொல்றேன் மேடம். அது மண் மூடித்தா, இல்ல யாராவது கொண்டு போய்ட்டாளா, இல்ல வேற எங்காவது பாதுகாப்பா இருக்கான்னு அதுவும் தெரியாது."

"அது சரி.. ஊரே சிவன் கோயில் சொத்துன்னீங்க. அப்ப கோயில் சொத்தை எப்படி விக்க முடியும்?"

"பாய்ன்ட்டுக்கு வந்துட்டீங்க. இங்க எல்லாருக்கும் அனுபவ பாத்யதைதான். வெள்ளைக்காரன் காலத்துலதான் அதுல நிறைய குளறுபடியெல்லாம் வந்தது..."

"குளறுபடி...?"

"ஓ... உங்களுக்கு இன்னும் எங்களோட வாய்க்கு வசதியா நாங்க பேசற பேச்சுக்கு அர்த்தம் தெரியலைன்னு நினைக்கறேன். குளறுபடின்னா ஒரே தப்பும் தவறுமான்னு அர்த்தம்."

"அது யாரால... யாரோ வெள்ளைக்காரங்கன்னு சொன்னீங்களே?"

"எல்லாம் உங்க முன்னோர்கள்தான். ஓ.... நீங்க அமெரிக்கான்னா...? எங்களை ஆட்டிப்படைச்சவா லண்டன்ல்லா இருக்கா!"

"யூ மீன் ஈஸ்ட் இண்டியா கம்பெனி பீப்பிள்ஸ்..?"

"எனக்கு சரித்திரம் சரியாத் தெரியாது. இந்த எலிசபெத் ராணி, மௌண்ட்பேட்டன், ராபர்ட் கிளைவ்னு சில பேர் ஞாபகத்துல இருக்கு..."

"ஓகே... கமான்... அவங்களுக்கும் இந்த ஊர் நிலத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"சரிதான்.. அவாளால இந்த ஊர்னு இல்லை, பல ஊர்கள் எப்படி எல்லாம் மாறிடுத்து தெரியுமா? அந்தக் காலத்துல பட்டயம், கல்வெட்டு இதெல்லாம்தான் ஓனர் ஷிப்புக்கு ஆதாரம். இந்த பிரகஸ்பதிகள்தான் பாண்டு பேப்பர், முத்திரைத்தாள்னு ஆரம்பிச்சு வெச்சவா..."

"தென் வாட்?"

"அதாவது அவா பீரியட்ல அவாளுக்கு கால் அமுக்கி விட்டே ரொம்பப் பேர் கோயில் நிலங்களை தங்களோட பேருக்கு எழுதி வாங்கிண்டுட்டா.

'அப்படி வாங்கிண்டவர்தான் தாமோதர முதலியார், சிதம்பரம் செட்டியார்னு கேள்வி."

"வாட் அபௌட் யுவர் ஃபைல் ஏக்கர்?"

"எங்க தாத்தா அதுக்கு ஒத்துக்கலை. எங்களுக்கு அனுபவ பாத்யதையே போறும்னுட்டார். இப்பவும் எங்களுக்கு அனுபவ பாத்யதைதான். அதாவது நாங்க உழுதுக்கலாம். எவ்வளவு விளையறதோ அதுல மூணுல ஒரு பங்கை கோயிலுக்குக் கொடுத்துடணும்."

"கோயில்தான் இல்லையே...?"

"அதனால நான் என்ன பண்றேன்னா, வருஷம் வருஷம் ஐயப்ப சீஸன்ல அன்னதானமா பண்ணிட்றேன்."

"சரி, இப்பத் திரும்ப கோயில் ஃபங்ஷன் ஆக ஆரம்பிச்சுட்டா...?"

"கோயிலுக்கே கொடுத்துட்டுப் போறேன்."

"இந்த மாதிரி இங்க எவ்வளவு குடும்பம் இருக்கு?"

"அதை நீங்க வி.ஏ.ஓ. கிட்டதான் கேக்கணும். எனக்கு தோராயமாதான் தெரியும்."

"ஐ ஸீ..."

க்ளாரா, ஆழமாகப் பார்த்துக் கொண்டே சொன்ன விதம் அவரை மிரட்டியது.

"மேடம்... ஒரு ரிக்வெஸ்ட்,"

"என்ன?"

"நான் உங்ககிட்ட இங்க பேசியதை தயவு செய்து நீங்க யார்கிட்டையும் காட்டிக்க வேண்டாம்."

"பயமா?"

"ஆமாம்... அதுலையும் விருமாண்டின்னு ஒருத்தன் இருக்கான். என்னால் கோயில் நிலத்தை உழுதுப் பராமரிக்க முடியலைன்னு உழவடையை அவனுக்குக் கொடுத்தேன். என்னைப் போலதான் பலரும் கொடுத்திருக்கா. இந்த ஊர்ல அவன்தான் சண்டியர். அவன் வெச்சதுதான் சட்டம்."

"ஓகே... நீங்க கவலைப்பட வேண்டாம். கான்ஃபிடன்ஷியலா, அதை நான் கீப் அப் பண்ணிக்கறேன்."

"இன்னொரு ரிக்வெஸ்ட்."

"கமான்... வாட்ஸ் தட்?"

"எனக்கு குமார்னு ஒரு பிள்ளை, ஒன்லி ஒன் சன். படிச்சு டிகிரியெல்லாம் வாங்கியிருக்கான். ஆனா நம்பைல வேலை..."

"ஓ... அவருக்கு இங்க வேலை வேணுமா?"

"ஆமாம்... ஆமாம்..."

"சீஃப் எஞ்ஜினியர்கிட்ட அவரோட ரெஸ்யூமை கொடுங்க. ஐ வில் கன்சிடர் இட்."

"ரொம்ப நன்றி மேடம்... அவனுக்கு மட்டும் இங்க வேலை கிடைச்சுட்டா எங்களுக்கெல்லாம் ரொம்ப உபயோகமா இருக்கும். ஏன்னா..."

க்ளாரா கைகளை உயர்த்தி, அவசியமில்லை.. என் மனம் புரிந்து கொள்ள முடியும் என்பது போல பார்த்தாள்.

அவரும் ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டுக் கிளம்பினார்.

❑ ❑ ❑

மேற்கு பக்கமாய் சூரியன் சரிந்து கொண்டிருந்தான். காரில் அந்த இறந்துவிட்ட தாமோதர முதலியார் வீட்டுப் பக்கம் சென்றபோது அதிர்ச்சியாக இருந்தது.

"அவங்க குடும்பத்தோடு மதுரைக்குப் போய்ட்டாங்க" என்ற பதில், பக்கத்து வீட்டில் இருந்து வந்தது.

அடுத்து சிதம்பரம் செட்டியார்!

அவரும் காசி யாத்திரைக்குப் போய்விட்ட தகவல் வந்து முட்டியது.

க்ளாரா தாடையை வருடி விட்டுக் கொண்டாள். திரும்பவும் கோயில் பக்கம் வந்தாள்.

ஒரு கம்ப்ரஸர் ஏர் பைப்பில் ஓஸ் பைப் போட்டு தண்ணீர் தருவித்து, கூலி வேலை செய்தவர்கள் கை, கால் முகம், கழுவிக் கொண்டிருந்தனர்.

அனந்த நாராயணன் நடுவில் ஓடி வந்தார்.

மதியத்தில் அவள் பார்த்த கல்வெட்டுச் செய்திகளுக்கான பதிலை அவள் இன்னமும் சொல்லவேயில்லையே...?

"மிஸ்டர் அனந்த நாராயணன்! கோ அஹெட், திங்க் அந்த மெஸ்ஸேஜ் நம்மை மிரட்ட யாரோ செய்திருட்டுத்தனம். அதாவது குளறுபடின்னு நினைக்கறேன். எது வந்தாலும் சரி, முன் வெச்ச காலை பின் வைக்கக் கூடாது" என்றாள். அனந்தாவும் ஆமோதித்தார். கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள் அவரது உதவியாளர் பெண்மணியான அந்த சாகம்பரி!

25

அந்த ஏட்டுக்கட்டில் அரிய தகவல்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. 'அன்றாட வாழ்வில் கர்ம வினைகளின் காரணமாகவும், கிரக மாற்றங்களின் காரணமாகவும் நேரும் துன்பங்களுக்கு கலியைப் பொறுத்து உத்தரவாத நிவாரணங்கள் வேழத்தாரும், மூழத்தாரும் (குரங்கு)' என்று ஒரு குறிப்பு என்னை கவ்விப்பிடித்தது.

அதாவது விநாயகப் பெருமானையும், ஆஞ்சனேய மூர்த்தியையும் அது குறிப்பதைப் புரிந்து கொண்டேன். இவர்களைச் சரணடைந்தால் இவர்கள் பேராற்றல் பேருதவியாக இருக்கும். அதற்காய் உடைக்கும் சூரைத் தேங்காய் போல் துன்பங்கள் சிதறிபோகும் என்ற அந்தக் குறிப்பிற்கு ஆதாரமான பாடல் என்னை வெகுவாக கவர்ந்தது.

'விழும் நீர் மழைநீர்... ஏறும் நீரோ இளநீர், ஈதுதன் மேனியோர் மாயை, நாரதை உரித்ததும் சோபை, ஆயினும் பற்றெனும் ஓடு ஆங்கே இருத்தலைப் போன்றதே நம் கூடு! கூடதனுள்ளே மழையும் தராத, மண்ணும் தராத வெண்ணகம் தந்திடும் நன்னீர். இதைப் போன்றதே வெள்ளை மனத்துக் கண்ணீர். உடைபடும் காயெலாம் ஓர் மாயை. உடைக்க உள்ளிருப்பதோ அத்தூய பிரசாதம்... அதற்கீடு இல்லையாதலால் இதுவே ப்ரசோதம்!'

-அதாவது பக்தியுடன் வேழனுக்கு உடைக்கப் படும் ஒவ்வொரு தேங்காயும் நம் வினையையும் உடைக்கிறது. அது மட்டுமல்ல, தேங்காயின் நீரும், அதன் வெள்ளைப் பருப்பும் மிக விசேஷமானவை. உடைக்கும் முன்புவரை உலகில் எந்த நுண்ணுயிராலும் தீண்ட முடியாதவை; தோஷமற்றவை.

எனவே மிகப்பெரிய பிரசாத தகுதி, அதற்கு எப்பொழும் இருக்கிறது போன்ற உண்மைகளை மெல்ல என்னால் உணர முடிந்தது.

-ரசமணி வித்தகர் பெரியய்யா

சரகம்பரி கவனிப்பதை க்ளாராவும் கவனித்தாள். அவள் பார்வையில் இருப்பது ஒரு சராசரி ஆர்வமா, இல்லை ஒரு திட்டமிட்ட நோக்கமா என்பது மட்டும் அந்த நொடிக்கு குழப்பியது.

அதை அவள் உணரும்படியாக காட்டிக் கொள்ளாமல் கிளம்பினாள். காருக்கு அருகே வெங்கட் காத்துக் கொண்டிருந்தான்.

-அவள் வரவும் கதவைத் திறந்துவிட்டான்.

"நீங்க வரலையா வெங்கட்..."

"எனக்கு நைட் பதினோரு மணிக்கு அனந்தபுரி எக்ஸ்பிரஸ் மேடம். ஐ ஹேவ் சம்ஃபீஷியன்ட் டைம்."

"தென்..."

"நான் முதன்முதலா இந்தச் சொக்கம்பட்டிக்கு வந்துருக்கேன். ஸோ.... கொஞ்சம் இருந்து எல்லாத்தையும் கவனிச்சுட்டு, நம்ம எஞ்ஜினியர் ராத்திரி எட்டு மணிக்கு கிளம்புவாராம். அவரோடு கிளம்பிடறேன்..."

"ஓ.கே. பை!"

-க்ளாராவின் கார் புழுதிப் படலத்தோடு புறப்பட்டது.

❑ ❑ ❑

டி.வி. முன்னால் ரிமோட்டும் கையுமாக அமர்ந்திருந்தான் சரண்யன். ஒரு புரொக்ராம் கூட அவனுக்கு பிடிக்கவில்லை. டாப் ஒன்னில் இருப்பதாகக் கேள்விப் பட்ட மெகா சீரியல் ஒன்றில் ஒரு பெண் அழுது கொண்டிருந்தாள்.

'சோகத்தைப் பிழிஞ்சுக் கொடுக்கறதுன்னா இதுதான் [illegible]...' என்று நினைத்துக் கொண்டான்.

பறவைபோல பறந்துப் பறந்து பழக்கப்பட்டவனுக்கு [illegible] மிருகம் போல கூண்டுக்குள் இருப்பது பெரிய [illegible]டமாக இருந்தது.

க்ளாரா மட்டும் ஸ்டேட்ஸிலிருந்து வராமல் போயிருந்[illegible] நடந்திருக்கும் சம்பவங்களால் நிச்சயம் குழம்பிப் [illegible]த்தியமே பிடித்திருக்கும் என்றுதான் நினைத்தான்.

மீமாடாமேல் க்ளாராவின் க்ளோஸப் புகைப்படம் [illegible]ந்து கொண்டிருந்தது. எடுத்து முத்தமிடும்போது, [illegible] பாதாம் பாலுடன் புஷ்பா மாமி எதிரே வந்து [illegible]றாள்.

அவனை வெட்கமும் கோபமும் சம அளவில் ஆக்ர[illegible]த்தது.

"பாதாம்பால் கொடுக்க வந்தேன்... இதோட நீங்க [illegible] ஸ்லீப்பிங் பில்ஸை இப்ப போட்டுக்கணும். [illegible]ப்படுத்தச் சொல்லியிருந்தேன்..."

மாமி அவனை மழுங்கடித்தாள். அவனும் திணற [illegible] பாலை வாங்கிக் கொண்டான். மாமியோ போகா[illegible] நின்றாள்.

[illegible]ணாலேயே ஒரு அரைச் சிமிட்டலில் காரணம் [illegible]டான்.

"[illegible]ங்களை ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்[illegible]..?"

[illegible]மதியாக, என்ன என்கிற மாதிரி பார்த்தான்.

"[illegible]யாண வயசை நீங்க தாண்டிட்டதாதான் நான் [illegible]க்கறேன். அந்த ஃபாரீன் லேடியை தான் ரொம்பப் [illegible]ச்சிருக்கே... சட்டு புட்டுன்னு கல்யாணம் பண்ணிக்க [illegible]டியதுதானே?"

-புஷ்பா மாமி எப்பொழுதும் பேசியே அவன் பார்த்ததில்லை. அவள் பேசியதில் அதுவும் கல்யாணம் பற்றிப் பேசியதில் அவன் முகத்தில் ஒரு தனிப் பிரகாசம்.

"பண்ணிக்கணும் மாமி... பண்ணிக்கணும்..." என்றான் செருமலோடு.

"என்னடா ஒரு சமையல்காரி போய் உங்க வாழ்க்கைப் பிரச்சினையைப் பேசறதா நினைக்கக் கூடாது. சில நாளாவே நீங்க இப்படி நடமாட முடியாத நிலையில் சிரமப்பட்றத பாக்கறேன்.

'அந்த ஃபாரீன் லேடிகிட்டையும் நன்னா வெந்த ஒரு கொழுக்கட்டை பூரணம் மாதிரி ஒரு நல்ல இனிமை தெரியறது... உங்காத்து பெரியவா காதுல விஷயத்தைக் கொண்டு போய் ஒரு நல்ல நாள் பார்த்து கல்யாணத்தை நீங்க பண்ணிக்கறது ரொம்ப நல்லதுன்னு எனக்குத் தோண்றது."

"தேங்க்ஸ்... ரொம்ப தேங்க்ஸ்..." என்று மாமியை பார்க்க, மாமி விலகத் தொடங்கினாள். பாதாம்பாலும் இதழ்க் கடையில் தித்தித்தபோது கெடிகாரப் பெண்டுலம் ஒன்பது முறை சப்தித்தது.

க்ளாரா வந்து விடுவதாகச் சொன்ன நேரம்.

எனவே ஸ்லீப்பிங் டேப்ளட்டை உரித்து எடுத்ததோடு அப்படியே வைத்துவிட்டான். அடுத்த நொடி ஹாய் என்கிற குரலுடன் க்ளாரா வந்து நின்றாள்.

"வாவ்.. வாட் ஏ பங்க்ச்சுவல்.. வாட் ஏ பங்க்ச்சுவல்!" அவனும் வியந்தான். அப்படியே கெந்தி நடந்து வந்த பேராசைக்காரன் மாதிரி கட்டிக்கொண்டான்.

அவள் தடுக்கவில்லை. மாறாகப் பதிலுக்குக் கட்டித் தழுவி, கழுத்தோரம் முத்தமிடவும் செய்தாள். அந்த நொடி எடுத்த பிறப்புக்கு முழு அர்த்தம் கிடத்து விட்ட போல அவனுக்குத் தோன்றியது... மிக இதமாக இருந்

தது. அப்படியே வாழ்க்கை போதும்.. வாழ்ந்தது போதும்! செத்தாலும் பாதகமில்லை என்றெல்லாம் தோன்றியது.

நெடுநேரம் அணைப்பை அவன் விடவில்லை.

அவளும் விலக்கவில்லை. அவளுக்கும் அது தேவை போல் இருந்தது. அணைப்பை விட்டு விலகாமலே அவன் கேள்விகளை ஆரம்பித்தான்.

"க்ளா... போன காரியம் என்ன ஆச்சு? நியூ பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்ல ஒண்ணும் பிரச்சினை இல்லையே?"

"ஓ.கே. சரண்?"

"அப்புறம் சொல்லு!"

"இப்ப அந்த விஷயம் எதுவும் வேண்டாம் சரண்யன். இந்த ராத்திரியை இரண்டு பேரும் ஸ்மூத்தா ரிலாக்ஸா பீல் பண்ணலாமே..."

"எதுக்கு இந்த ஃபவுண்டேஷன்? அங்க எதாவது பிராப்ளமா?"

"பிராப்ளம் இனி வந்தாதான் உண்டு. பை த பை ரொம்ப ஷார்ட்டா உனக்கு பதில் சொல்லிட்றேன். அங்க சக்கரவர்த்தி மோட்டார்ஸ் பிராஞ்ச் ஓபன் பண்றதுல யாருக்கோ பிடிக்கலை. அட் தி சேம் டைம். அங்க கோயிலை கண்டுபிடிச்சு புதுப்பிக்கறதையும் சிலர் விரும்பலை.

என் யூகம் சரியா இருந்தா உன் ஃபாதர் மிஸ்டர் சக்கரவர்த்தி ஹார்ட் அட்டாக்ல செத்திருக்க வாய்ப்பே இல்லை."

க்ளாரா சொல்லி முடிந்ததுதான் தாமதம், சட்டென்று விலகிய சரண்யன் அவளை மிக பதற்றத்தோடு பார்த்தான்.

"வேண்டாம்... அப்படிப் பார்க்காதே... இதுக்குதான் நான் அந்த விஷயத்தைப் பேச விரும்பலைன்னு சொன்னேன். என் கருத்தையும் ஒரு யூகமா சென்னேன்."

"உன் யூகம் எனக்குத் தெரிஞ்சு பொய்யானதே இல்லை க்ளாரா..."

"அப்படியா?" அவள் ஆச்சரியத்தை முகத்தில் காட்டிய நொடி அவளது செல்சிணுங்க, காதைக் கொடுத்தாள்.

"எக்ஸ்ட்ரீம்லி வெரி ஸாரி மேடம்... ஐ ஆம் டிஸ்டர்பிங் யூ..."

"கமான்.... வாட்ஸ் த மேட்டர்...?"

"இட்ஸ் வெரி பேட் நியூஸ். உங்க பி.ஏ. வெங்கட் இப்ப உயிரோட இல்லை!"

-அந்த பதில், க்ளாராவை ஒரு கிள்ளு கிள்ளியது.

26

அந்த சுவடிக்கட்டு ஏராளமான அரிய தகவல்களைச் சொல்லிக் கொண்டே போனது. சித்தவனத்தில் வந்த வேலையை விட்டுவிட்டு அதிலேயே லயித்துப் போனேன். பிறகுதான் ஸ்மரணை ஏற்பட்டு காது கேட்பதற்கான அந்த மூலிகையைத் தேடி அலைய ஆரம்பித்தேன். மந்த்ர வல்லாரை என்கிற அந்த மூலிகை விசேஷமானது. மந்திர ஒலியால் தான் அதை இனம் காண முடியும். அதற்கென்று ஒரு பிரத்யேக மந்த்ரம் உள்ளது அதை எந்த அதிர்வில் சொல்ல வேண்டும் என்றும் உள்ளது. அந்த அதிர்வைத்தான் குரு கற்றுத் தருவார்.

அவரது வாய் வழியே வரும் சப்த அதிர்வு அளவு, கேட்ட பலரையும் கச்சிதமாகத் தொற்றிக் கொள்ளும். அதே அளவு அந்த மந்திரத்தை ஜெபித்தபடி வனத்தில் குறிப்பாக ஓடைப் போக்குள்ள இடத்தில் சுற்றி வரவேண்டும். ஓடைப்போக்கில் கரும்பாறைகள் இருப்பது உத்தமம். அந்தப் பாறைகளோடு கூடிய கரைவெளியில் மந்த்ர

வல்லாரை ஒரு உயிருள்ள பாம்பு போல நீரோடு நெளிந்தபடி இருக்கும்.

ஜெபிப்பு அதிர்வு கேட்டு அது நீர்ப்பரப்புக்கு மேல் வரும். அதை வணங்கிவிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

மூலிகையை இனம் காண்பது சப்தத்தால். அதுகுறை நீக்குவதும் சப்த அடைப்பைத்தான். மந்திரம் என்பதே சப்தம் சார்ந்ததுதானே? எனவே தான் காரணப் பெயராக வந்ததோ என்று கருதத் தோன்றியது.

இப்படி மந்த்ர வல்லாரையை நான் நாடிச் செல்லும்போது இன்னொரு அதிசயக் காட்சியையும் கண்டேன். அதுதான் நவபாஷாண மெழுகை உருவாக்குவது.

ஒரு சித்த புருஷர் அப்படி ஒரு மெழுகை உருட்டிப் பிசைந்து கொண்டிருந்தார் ஒரு குகைக்குள்! நானும் பார்த்துவிட்டேன்.

-ரசமணி வித்தகர் பெரியய்யா

க்ளாரா விக்கித்துப்போனாள். நெடுநேரம் பேச்சே வரவில்லை. சரண்யனுக்கும் ஏதோ அதிர்ச்சிக்குரிய தகவல் என்பது புரிந்துவிட்டது.

வெடுக்கென்று அவள் கரத்தில் இருந்து செல் போனைப் பிடுங்கினான். காதில் வைத்து சரண்யன் ஹலோ கிங் என்றான்.

"குட்மார்னிங்... ஸாரி... குட் ஈவினிங் சார்..."

மறுமுனையில் சிவில் என்ஜினியர் தந்தியடித்தார்.

"என்ன சங்கரதாஸ்... என்ன பிரச்சினை?"

"அது... நம்ம மேடத்தோட பி.ஏ. வெங்கட் இருக்காருல்ல சார்..."

"அவருக்கென்ன?"

"அவர் கோயில் பக்கமா வேடிக்கை பார்த்துக்கிட்டிருக்கும்போது ஆக்சிடென்ட்டா ஒரு விஷயம் நடந்து இறந்துட்டார் ஸார்..."

"ஆக்சிடென்ட்டான்னா...?" - அலறினான் சரண்யன்.

"இங்க அந்த ஆர்க்கியாலஜிஸ்ட் ஒரு வீரபத்ரர் சிலையைக் கண்டுபிடிச்சிருந்தார். அதை நிறுத்தி வைக்கக்கூடாதாம். படுக்க வைக்கணுமாம். ஆனா இவர் நிறுத்தி வெச்சிருக்கார்... அதை தொட்டுப் பார்க்கும் போது அது அப்படியே வெங்கட் மேல விழுந்து..."

சங்கரதாசின் விளக்கம் சரண்யனையும் கட்டிப்போட்டது. க்ளாராவை பதிலுக்குப் பார்த்தான். அவள் சுதாரிக்க ஆரம்பித்தாள். அவனிடம் இருந்து செல்லை வாங்கி, "மிஸ்டர் சங்கரதாஸ்.... உடனடியாக ஆக்சிடென்ட் கம்ப்ளைன்ட் கொடுத்துடுங்க, லீகலா எது நடக்கணுமோ அது நடக்கணும், டோன்ட் ஒர்ரி.... நான் காலை ஃப்ளைட்லயே திரும்ப அங்க வரேன்" என்று ஃபோனை கட் செய்தாள்.

"க்ளா..." சரண்யன் உடைந்த குரலோடு சற்றே கலங்கிய கண்களுடன் அவளைப் பார்த்தான்.

"நான் சொன்ன விஷயங்களை கன்ஃபார்ம் பண்றேன் சரண்யன், எங்கேயும் எதுலேயும் மித்தே கிடையாது. எல்லாம் மேன்மேட்தான். கோயிலை பாதிதான் தோண்டியிருக்கோம். முழுசா தோண்டவிடாம செய்யத்தான் இந்தக் கொலை.

"கொலைகாரன் இதை ஒரு அஸைன்மென்ட்டாவே செய்துகிட்டிருக்கான்."

"எப்படி... எப்படி இவ்வளவு வேகமா முடிவுக்கு வரே...? யோசிச்சு பார் க்ளாரா. ஒரு பக்கம் கோயில் கட்டணும்; இல்லாட்டி பிரச்சினைதான்கற மாதிரி இங்க ஃபேக்டரிக்குள்ள வரிசையா ஆக்சிடென்ட்ஸ். அங்க

ஊர்ல கோயிலுக்கு எதிராவும் ஆக்சிடென்ட்ஸ், குழப்பமா இல்ல?"

"ஒரு குப்பமும் இல்ல. இங்க நடந்த சம்பவத்தோட தொடர்ச்சிதான் அங்கேயும் தொடருது. 'கோயில் மேல கை வைக்காதே. சொக்கம்பட்டியில ஃபேக்டரியும் கட்டாதே' இதுதான் எதிரி நமக்கு கொடுக்கற செய்தி. அதை இங்க உள்ள சிலர்தான் தப்பா புரிஞ்சுகிட்டு, 'கோயில் கட்டணும். அப்பதான் பிரச்சினைகள் தீரும். அதுதான் கடவுளோட விருப்பம்'னு நினைச்சு செயல் பட்டிருக்காங்க..."

"இல்ல க்ளாரா... இப்பவும் சொல்றேன். நீ சொல்றது குழப்பமாதான் இருக்கு. அந்த ஜோசியர் நாகபூஷணத்துக்கிட்ட ஆரம்பிச்ச விஷயம் இது. அவர்தான் கோயிலை கட்டச் சொன்னவர். அப்பாவோட டெத் டேட்டை ஜாதகம் பார்த்து கண்பிச்சும் சொன்னவர்."

"ஓ.கே. சரண்யன். நீ டென்ஷனாகாதே. நான் பார்த்துக்கறேன். என் கன்க்ளுஷன்ல எந்த மாற்றமும் இல்ல. நடக்கற விஷயங்களுக்குப் பின்னால ஒரு தனிமனிதர் இல்ல. ஒரு க்ரூப் இருக்கு. எல்லாம் மேன் மேட்தான். அந்த முடிவுல எனக்கு எந்த மாற்றமும் இல்லை."

"க்ளா..."

"வேண்டாம்... இதுக்கு மேல எதுவும் பேசாதே..."

"எப்படிப் பேசாம இருக்க முடியும்? அங்க போயிருக்கற உயிர், நம்ம ஃபேக்டரி எம்ப்ளாயியோடது. அவங்க ஃபேமிலிக்கு சொல்லணும். எவ்வளவோ விஷயங்கள் இருக்கு. நீ முதல்ல ஹெச்.ஆர்.டி. பிரசாத்துக்கு தகவல் கொடு. அந்த இடியட் எனக்கென்னன்னு படுத்துத் தூங்கிகிட்டிருப்பான். அப்டியே ஜெனரல் மேனேஜர் சண்முகா, ஏ.ஜி.எம். அனந்தாச்சாரி எல்லாருக்கும் தகவல் கொடு. அந்த சீஃப் என்ஜினியர் நமக்குச் சொன்னதோட விட்டுருக்கப்போறான்..."

-சரண்யனின் படபடப்புக்கு நடுவில் அவன் இடுப்பில் நறுக்கென்று ஏறியது க்ளாரா அவன் பேச்சைக் கேட்டபடியே தயார் செய்த ஸ்லீப்பிங் டோஸ் இஞ்ஜெக்ஷன்.

"ஏய்... எதுக்கு... எதுக்கு இப்ப இந்த ஊசியைப் போட்டே? நான் உன் கூட நிறைய பேசணும் க்ளா..."

-கைகளை உதறிக் கொண்டு கதறினான் சரண்யன். ஆனால் பலனில்லை.

❑ ❑ ❑

கோயில் வளாகத்தில் ஒரு மூலையில் முழுவதுமாய் போர்த்தப்பட்ட நிலையில் கிடந்தது வெங்கட்டின் பிரேதம்.

சற்றுத் தள்ளி, விழுந்த நிலையிலேயே கிடந்தது அந்த வீரபத்ரர் சிலை. ஒரு ஐம்பதடி தூரத்தில் கையைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தார் ஆர்க்கியாலஜிஸ்ட் அனந்த நாராயணன். அருகில் சாகம்பரி, சீஃப் என்ஜினியர் என்று இன்னும் சிலர்.

செய்தியின் வேகம் போஸ்ட்மாஸ்டர் குருமூர்த்தியையும் இழுத்து வந்திருந்தது. ஒரு பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் தெரிந்த அந்த பிணத்தைப் பார்த்தபடி அதிர்ந்து போயிருந்தார்.

பக்கத்திலேயே ஊர்க்காரர் ஒருவர். "சாமி... பார்த்தீங்களா? இந்தக் கோயிலை திரும்ப எடுத்துக் கட்டினா இப்படி எல்லாம் நடக்கும்னு நம்ம பெரியவங்க சொன்னதெல்லாம் உண்மைங்கற மாதிரி ஆயிடிச்சு, பார்த்தீங்களா?"

"சும்மா இருய்யா... நடந்துகிட்டிருக்கறது ஒரு நல்ல காரியம். நீ பாட்டும் எதையாவது உளறி வைக்காதே."

"அட... என்ன சாமி நீங்க? முதல்ல தாமோதரன் செட்டியார் போய்ச் சேர்ந்தார். அடுத்து சிதம்பரம் செட்டியார் கொஞ்ச நாள் ஊர்லயே இருக்க வேண்டாம்னு காசி யாத்திரையே போய்ட்டார். இப்ப மூணாவதா இதோ சாமியே வந்து தடுக்கற மாதிரி சிலை மேல விழுந்து ஒரு ஆள் அவுட்.

"இதுக்குமேல என்ன சாமி வேணும்?"

-அவர்கள் பேசிக் கொண்டிருப்பது ஒரு பீடியைப் புகைத்தபடி அங்கே வந்து பார்த்த விருமாண்டியின் காதிலும் விழுந்தது.

அவன் வரவும் எல்லோரும் கப்சிப்!

அவன் தைரியமாகவும், தனி சுதந்திரம் உடையவன் போலவும் நேராகப் பிரேதம் கிடக்கும் இடத்திற்குச் சென்றான்.

துணியை விலக்கி பிரேதத்தைப் பார்த்தான். பின் 'சரேல்' என்று இழுத்து மூடிவிட்டு சற்றுத் தள்ளி கிடந்த அந்த வீரபத்ரர் சிலை அருகே சென்றான். ஒரு ஆள் உயரச் சிலை. நிச்சயம் அரை டன் எடை இருக்கும்.

அதைத் தொட்டுப் பார்த்தான்.

அனந்த நாராயணன் கத்தத் தொடங்கினார்.

"ஏய்.. யார் மேன் அது? சங்கரதாஸ்! கூப்புடுய்யா அவனை... போலீஸ் வரும்போது இவன் பாட்டும் ஏதையாவது செய்து வைக்கப் போறான்."

அது அவன் காதிலும் விழுந்தது. முழுச் சட்டையை மாற்றி விட்டுக்கொண்டே திரும்பி வந்தான். அனந்தநாராயணன் முகம் கோணும்படி அவரை ஒரு பார்வை பார்த்து விட்டு, "போலீஸ் என்னா பெரிய போலீஸு...? இந்த ஊர்ல நான்தான் போலீஸ்... ஐ.ஜி.. எஸ்.பி.. டி.எஸ்.பி எல்லாம் நான்தான். என்னைப் பத்தி தெரியலைபோல. டேய்! சொல்லி வைங்கடா..." என்றபடியே அங்கிருந்து கிளம்பினான்.

கால்கள் அவனது புளியங்காடு நோக்கித்தான் சென்றன. கிட்டானும், செக்குவும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கும் ஆர்வம். அதேசமயம் இருட்டில் தனியே யாரோ எதிரில் வரும் ஆரவம்!

அருகே வரவும் பார்த்தான். போஸ்ட்மேன் வேலாயுதம்.

"ஏய்... என்னா இந்த நேரத்துல...?"

வேலாயுதம் முகத்தில் அப்பலான சோகம்.

"குருமூர்த்தி சாரை பார்க்கத்தாண்ணே போய்கிட்டு இருக்கேன்..."

"அந்த ஆள் நம்ம ஊர் மூடின கோயில்கிட்ட இருக்கான். ஆமா இந்த நேரத்துல அவனை எதுக்குப் பாக்கப் போறே?" கேள்வியோடு எதிரில் தெரியும் தனது புளியங்காட்டு மூங்கில் படப்பு நுழைவாயிலை ஒரு பார்வை பார்த்தான். நுழைவாயிலுக்குப் பின்னால் உள்ள குடிசையில் தீப்பந்த வெளிச்சம்.

"கொஞ்சம் பணம் தேவைண்ணே... அதுக்குத்தான்!" என்று வேலாயுதம் சொன்னது காதில் விழவேயில்லை. பதிலுக்கு சலங்கை சப்தம்தான் காதில் கேட்டது. குடிசையை ஒட்டி வெள்ளைப் புடைவையில் ஒரு பெண் நடந்து போவதை அவனால் நன்றாகப் பார்க்க முடிந்தது. கொஞ்சம் அமிலத்தைச் சப்பினது போல் இருந்தது.

"அட தேவடியாத் தட்டுவாணி... பேய் வேஷம் போட்டு என் புளியங்காட்டை லாட்ஜ் ஆக்கப் பாக்கறியா?"

-கத்திக் கொண்டே வேலாயுதத்தைத் தவிர்த்து விட்டு புளியங்காட்டுக்குள் ஓடினான்.

எங்கெங்கோ தேடினான்.. ஒவ்வொரு மரமாய் எட்டிப் பார்த்தான்.. இறுதியாக அன்று அந்த இளம்பெண் பிணமாகத் தொங்கிய மரத்திடம் வந்தபோது நெஞ்சில் திம்மென்று ஒரு குத்து வந்து விழுந்தது.

அதே கிளையில் வேட்டியையே தூக்குக் கயிறாகக் கட்டி, அதில் கழுத்தை மாட்டிக் கொண்டு நாக்கு வெளித் தள்ள தொங்கிக் கொண்டிருந்தனர் கிட்டானும். செக்குவும்!

27

காது கேட்க உதவும் அந்த மந்திர மூலிகையை ஓடும் அருளிக்கரையில் அமர்ந்து அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி, அந்த சப்த அதிர்வலைகளைக் கேட்டு எப்படி ரிமோட்டால் டி.வி. ஆன் ஆகிறதோ அப்படி அந்த மூலிகைக் கொடியும் வெளிவர அதைக் கைப்பற்றுதல் என்பதெல்லாம் அசாதாரண விஷயங்கள்.

சமயங்களில் அழுகுண்ணி வேர்ச்செடி கையில் அகப்பட்டு ஏமாற்றிவிடும். அதன் சாற்றை காதில் விட்டால் அவ்வளவுதான்! அதன்பின் நித்யச் செவிடாகிவிடும் அந்தக் காது. எனவே மூலிகை வைத்யன் என்பவன் ஒரு தெய்வீக புருஷனாக அவசியம் இருக்க வேண்டியது அவசியம். எனக்கு அந்த சித்த புருஷர் தந்த ஏட்டுக்கட்டில் வைத்தியர்கள் பற்றியும் ஒரு குறிப்பிருந்தது. அதை இன்று உலகில் உள்ள அத்தனை வைத்தியர்களும் அறிய வேண்டியது அவசியம்.

'வைத்யன் என்பவன் மனித உருவில் உள்ள கடவுளாவான். கடவுளுக்குப் பிறகு அவனே வலியாகிய துன்பத்தை நீக்குகிற உரிமையும் தகுதியும் பெற்றவன் ஆகிறான்.

எல்லோரும் வைத்யனாகி விடமுடியாது.

அதற்கு ஜாதக ராசிகளின் அனுமதி மிக முக்கியம். அது பூர்வ ஜென்ம புண்ணிய பலன்களைப் பொறுத்தது.

எனவே புண்ணிய பலத்தால் வைத்யனாகிறவர்கள் அதைக் கொண்டு மோட்ச கதியை அடையப் பார்க்க வேண்டும்.

ஏன் என்றால் வியாதியால் வருகின்ற துன்பம் என்பது ஒருவனின் கர்ம வினை. அதை புண்ணிய பலமுள்ள வைத்யனின் மருத்துவம்தான் நீக்கும்; நீக்கவும் முடியும். அப்படி ஒரு காரியத்தைச் செய்யும் போது அதற்கு ஒரு விலை வைப்பதும், குறிப்பாக தனது சேவையை பணத்துக்கு விற்பதன் மூலம் நோயாளியின் உபாதைக்குக் காரணமான கர்மவினை, வைத்யனின் கணக்கில்தான் வரவு வைக்கப்படுகிறது.

எனவே வைத்தியர்கள் தங்கள் கடமைக்கு அநியாய விலை வைப்பதை போன்ற ஒரு பாதகச் செயல் அவர்களுக்கு வேறு எதுவுமில்லை.

இப்படிச் செய்பவர்களின் சந்ததிகள் மிக மிகப் பாதிக்கப்படுவார்கள்.

ஒரு வைத்யன்தான் மஹாவிஷ்ணு! என்ற ஏட்டின் கருத்து என்னையே கட்டிப்போட்டுவிட்டது. இப்படிப்பட்ட சிந்தனைகளுடன் நான் அந்தக் காட்டில் நடந்த போதுதான் ஒரு குகைக்குள் நவ பாஷாணங்களைக் கொண்டு சில சொரூபங்களை உருவாக்கும் அந்த சித்தரையும் பார்த்தேன்.

அவரும் ஒரு சிவலிங்கத்தை மிகுந்த சிரத்தையுடன் உருவாக்கியபடி இருந்தார்!

-ரசமணி வித்தகர் பெரியய்யா

விருமாண்டி தொங்கிக் கொண்டிருந்த இருவர் சடலங்களையும் பார்த்து ஒரு வினாடி உறைந்துவிட்டான். கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை! இவர்கள் தற்கொலை செய்து கொண்டார்களா... இல்லை யாராவது கொலை செய்து இப்படித் தொங்க விட்டுவிட்டார்களா? அவனுக்குள் பூச்சி நெளிந்தது. விதிர்ப்பில் நின்றவனின்

காதில் மீண்டும் சதங்கை சப்தம். இப்படி இரண்டு பேரையும் பிணமாகப் பார்த்திராவிட்டால் யாருடி அவ...? என்றுதான் கத்தியிருப்பான். அதுவும் துளி கூட பயமே இல்லாமல்.

ஆனால் அதிசயமாக இப்பொழுது பயந்தான். அனேகமாக வாழ்நாளிலேயே அவன் முதன்முறையாகப் பயப்படுவதாகக்கூட சொல்லலாம். கண்டங்கழுத்தெல்லாம் வியர்த்து வடிந்தது. கண்ணிரண்டும் தொங்கிக் கொண்டிருந்த அந்த இருவர் மேலேயே சென்றது, சதங்கை சப்தம் ஒருபக்கம் கேட்டு அச்சமூட்டியது. தைரியத்தைச் சிரமப்பட்டு வரவழைத்துக் கொண்டவன், சதங்கை சப்தம் வந்த பக்கம் திரும்பி ஓடினான். அடர்ந்த புளியங்காட்டின் இருட்டில் தழைத்து வளர்ந்திருந்த புளியமரக்கிளை ஒன்று, ஓடிவந்த அவன் நெற்றிமேல் பட்டு மோதியதில் அப்படியே பின்னால் தள்ளப்பட்டு சுருண்டு விழுந்தான்.

அதன்பின் அவனால் எழுந்திருக்க முடியவில்லை... மயங்கிவிட்டான்!

❑ ❑ ❑

வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள் போஸ்ட் மாஸ்டர் குருமூர்த்தியின் மனைவி சிவகாமி.

'ரொய்ய்ங்ங்...' என்னும் ராக்கோழிகளின் வாசிப்புச் சப்தம் காதைத் திருக, யார் வீட்டிலோ டி.வி. மெகாசீரியல் ஒன்றின் வசனம் வெளிப்பட்டு அவள் காதை அடைந்து கொண்டிருந்தது. அதையெல்லாம் ரசிக்கும் மனநிலையே அவளிடம் இல்லை. குருமூர்த்தியை அன்று போல் அவள் என்றுமே பார்த்ததில்லை. எதையோ எழுதிக்கொண்டு, எதையெல்லாமோ எடுத்துப் பார்த்துக் கொண்டு, அடிபட்ட காக்கை ஒன்றைச் சுற்றிப் பறக்கும் தவிப்புள்ள ஒரு காக்கையாகத்தான் அவர் இருந்ததாக அவளுக்குத் தோன்றியது.

இடையில் கோயில் பகுதியில் ஒருவர் மீது விக்ரகம் ஒன்று விழுந்ததில் உயிர் போய்விட்டது என்பது தெரிந்து வெளியேறியவர் இன்னும் வரவில்லை.

'எங்கேயோ யாருக்கோ எதுவோ ஆனால் இவருக்கு என்ன வந்தது?' அவளுக்குள் கோபக் கேள்வி புடைத்துக் கொண்டு எழும்பும் சமயம், விதுக்கு விதுக்கு என்று சைக்கிளை மிதித்துக் கொண்டு குருமூர்த்தி திரும்பும் அரவம் கேட்டது. வீட்டு வாசலில் எரிந்தபடி இருக்கும் கோலி பல்ப் வெளிச்சத்துக்குள் ஒரு கறுப்பு உருவமாய் பிரவேசித்தவர், சைக்கிளை ஓரங்கட்டி விட்டு உள்ளே பிரவேசித்தார். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் அவரது தாய். அவளருகே போய் நின்று எழுப்ப முயன்றார்.

"எதுக்கு இப்ப அம்மாவை எழுப்பறேன்? அப்படி என்ன அவசரம்?"

"சும்மா இருடி, அம்மா... அம்மா..."

-அந்த முதிய பெண்மணியும் மலங்கலாய் கண் விழித்தாள்.

"அம்மா! கோயில்ல ஒரு அசம்பாவிதம்..." ஆரம்பித்தார்.

"சிவகாமி சொன்னா... இப்ப என்ன அதுக்கு?"

"இல்ல... இன்னும் போலீஸ் வரல. உடம்பு அங்கேயே தான் கிடக்கு..."

"அதுக்கென்னடா இப்போங்கறேனோல்லியோ?"

"என்னம்மா நீ? மண்ணடைஞ்ச கோயிலை அந்தக் காலத்துல சிலர், மந்திர தந்திரங்களுக்குப் பயன்படுத்தினான்னு நீ கூடச் சொல்லியிருக்கியே..."

"அதுசரி.. இப்ப உனக்கு என்ன தெரியணும்?"

"இல்ல... கோயில்ல மூல விக்ரகங்களைவிட பரிவாரத் தேவதைகளுக்கு சக்தி அதிகம் வந்துடுத்து... அது நல்லதுக்கில்லைன்னுதான் அவைகளை படுக்கப்போட்டா

அதனால கோயிலும் மண் மூடிப்போயிடித்துன்னு சொல்லியோல்லியோ?"

"ஆமாம்...."

"அப்படி படுக்கப்போட்ட விக்ரகம் ஒண்ணு ஆத்துல அடிச்சுண்டு போனதாகவும், அதை ஒருத்தர் கண்டெடுத்து நிறுத்தி வெச்சப்போ சுத்தி இருக்கற இடமெல்லாம் எரிஞ்சு போனதாவும்கூட சொல்லியிருக்கேதானே?"

"அதெல்லாம் பழங்கதை, இப்ப அதுக்கென்ன?"

"இங்கே இன்னிக்கு விக்ரகத்தை நிறுத்தி வைக்கப் போய்தான் ஒரு உசுர் போயிருக்குமா..."

"அப்படியா....?"

"ஆமாம்மா... என் கேள்வி எல்லாம் இதுதான். இவ்வளவு நாளைக்குப் பிறகுமா அந்தக் கல் விக்ரகங்களுக்கு சக்தி இருக்கும்?"

"இல்லாமலா ஒரு உசுர் போயிருக்கு...?"

"அப்படின்னா தொடர்ச்சியா பல பேர் சாவாளா?"

"இதென்னடா கேள்வி...?"

"இல்ல.... இனி இந்த ஊர்ல இருந்தா உயிரோட இருக்க முடியாதுன்னுதான் சிதம்பரம் செட்டியார் காசி யாத்திரை போய்ட்டாராம்! இப்பதான் என் காதுல விழுந்தது. அதை எந்த அளவு நம்பறதுன்னுதான் தெரியல. அதான் கேட்டேன்..."

குருமூர்த்தி எதற்கு தூங்குகிறவளை எழுப்பி அப்படிக் கேட்டார் என்று அப்பொழுதுதான் சிவகாமிக்கும் புரிந்தது.

ஆனால் அவன் தாயாலோ தெளிவாய் ஒரு பதிலைக் கூறமுடியவில்லை. அவள் குழம்பத் தொடங்கினாள். அப்பொழுது சார்... என்று ஒரு குரல்.

திரும்பிப் பார்த்தார். வேலாயுதம் வந்து கொண்டிருந்தான்.

"வேலாயுதம்.. நீயா...எங்கே இந்த நேரத்துல?"

"உங்களைப் பார்க்கத்தான் சாமி வந்தேன்..."

"ஆமா... நீ போன காரியமெல்லாம் முடிஞ்சுதா?"

அவன் மௌனமாய் உஷ்ணப் பெருமூச்சு விட்டான்.

"என்ன வேலாயுதம்.. இன்னும் ஏதாவது பிரச்சினையா?"

"ஆமாம் சாமி... தங்கச்சியும் பசங்களும் அநியாயமா போய்ட்டாங்க சாமி..."

-அவன் அப்படியே உடைந்து போய் அழுதான். அழட்டும் என்று அவரும் விட்டுவிட்டார். அதன்பின் சிறிது நேரம் கழித்து, "சரி சரி... அழறதால போறவங்க திரும்பவாப் போறாங்க...? மனசைத் தேத்திக்கோ... என்ன பண்றது..." என்றார். அவனே கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "சாமி. ஒரு அஞ்சாயிரம் பணம் வேணும் சாமி..." என்றான்.

"அஞ்சாயிரமா?"

"ஆமாம் சாமி.. கொஞ்சம் அவசர செலவு. என் தங்கச்சியோடு என் சின்னம்மாவும் நெருப்புல விழுந்துடிச்சு. ஆனா அது பொழைச்சுகிச்சு. அதுக்கு வைத்யம் பார்க்கத்தான்..."

"அது சரி... நூறு இருநூறுன்னா தந்துடுவேன். அஞ்சாயிரம்னா நான் எங்கடா போவேன்...?"

"எனக்கும் உங்களை விட்டா வேற யார் இருக்கா?"

"வாஸ்தவம்தான். இங்க நாங்களே இந்த ஊர்ல இருக்கலாமா, வேண்டாமாங்கற குழப்பத்துல இருக்கோம். நீ வேற பணம் காசுன்னா நான் எங்கடா போக...?"

இறுதியில் குருமூர்த்தி கைவிரிக்க, சோர்வுடன் வேலாயுதம் வீட்டை விட்டு கிளம்பினான். மனசெல்லாம் ஒரே குமைச்சல்.

சாலையில் ஒரே இருட்டு!

மணி நடுநிசியை நெருங்கிக் கொண்டிருந்தது.

புளியங்காட்டைக் கடக்கும்போது எதிரே ஒரு உருவம். அதிர்ந்துவிட்டான்.

"கலவரப்படாதே... நான்தான் விருமாண்டி..." என்று தான் வரவும்தான் சற்று நடுக்கம் நின்றது. விருமாண்டியும் நெருங்கி வந்தான்.

"எங்க போறே...?"

"என் ஊருக்கு..."

"சரி சரி... என்கூட வந்து எனக்கு ஒரு சகாயம் பண்ணிட்டுப் போ..."

"என்னா சகாயம் விருமாண்டி...?"

"வாடா சொல்றேன்..."

"அண்ணே! எனக்கு மனசே சரியில்ல. என்னை விடு..."

"லேய்! வாடான்னா..?" விருமாண்டி எகத்தாளமாய் சிரியபடி நடந்துக் குடிசை முகப்புக்குச் சென்றான். மண் வெட்டியும் கடப்பாரையும் இருந்தது. எடுத்துக் கொண்டான். வேலாயுதத்துக்கு என்னவோ, ஏதோ என்று உடம்பு நடுங்கியது.

"இந்த செக்குவும் கிட்டானும் தெரியும்ல...?"

"ஆமாண்ணே...!"

"இரண்டு நாயிகளுக்கும் என்னாச்சுன்னு தெரியல. ஆனா புளியங்காட்டுலயே தூக்குல தொங்கிட்டானுக... அவிகக்கு போனா நான்தான் அடிச்சுக் கொன்னுபுட்டேம்னு இப்ப வந்துருக்கற சப் இன்ஸ்பெக்டரு.

"எனக்கு வேற வழி தெரியல... இப்போதைக்கு உடம்பை இறக்கி இங்கையே எங்கையாச்சும் புதைச்சுப் பிடலாம்னுதான் உன்னைக் கூப்பிட்டேன்."

விருமாண்டியின் விளக்கம் வேலாயுதத்தின் மனதை அப்படியே கிள்ளும்போது விருமாண்டி அந்த மரத்திடம் இருந்தான்.

ஆனால் தொங்கிக் கொண்டிருந்த பிணங்களைத்தான் காணவில்லை!

விருமாண்டிக்கு 'பகீர்' என்றது.

28

அந்த குகைக்குள் மூலிகைச் சாறுகளைக் கொண்டும் மண்ணிடைக் கிடைக்கும் சில தாதுக்களைக் கொண்டும் அனலில் வாட்டியும் அடுப்பில் கொதிக்க வைத்தும், ஸ்புடம் போட்டும் அந்த சித்த புருஷர் நவபாஷாண லிங்கமொன்றை உருவாக்கியபடி இருந்தார்.

பாஷாணம் என்றால் விஷம் என்று ஒரு பொருள். பாஷாணத்திற்கு உண்மையான பொருள் 'குணம்' என்பதுதான்.

என்னைப் பார்த்து சிரித்த அந்த சித்த புருஷர் தான் இப்படி ஒரு பொருளை எனக்குக் கூறியவர். அதேசமயம், குகைக்கு வெளியே ஒரு ஜீப் ஓடுவது போன்ற சப்தமும், சில மலைப்பளியர்கள் நடமாட்டமும் காதில் விழுந்தது.

ஒரு பளியன் நாங்கள் இருக்கும் குகைக்குள் எட்டிப்பார்ப்பதைக் கூட நான் பார்த்தேன். ஆனால் அவனோ, உள்ளே மிருகங்கள் எதுவும் படுத்திருக்கவில்லை என்ற குரலோடு விலகிப்போனான்.

நவபாஷாண சுதையை ஒரு குயவனைப் போல பிசைந்தபடி இருந்த அந்தச் சித்த புருஷரோ சிரித்தார். அந்தச் சிரிப்புக்கு பொருள் எனக்கு விளங்கிவிட்டது. அவன் கண்களை அவர் கட்டிவிட்டதை உணர்ந்து கொண்டேன்.

'ஏன் அப்படிச் செய்தீர்கள்... எனக்கு மட்டும் உங்கள் தரிசனம் எப்படிக் கிடைத்தது?' என்று கேட்டேன்.

'நீ கோள்களின் பிடியில் இருந்து விடுபட்டவன். நீயும் ஒரு சித்தன். ஆனால் கோள்களின் பிடியில் அவர்களால் இயக்கப்படும் மனிதர்கள் தன்னைக் காணலாகாது. நீயும் கூட சொரூபமாகி எதிராளிகளின் கண்களைக் கட்டுவதென்றால் கட்டலாம் என்றார். அப்படியே இந்த ஒன்பது பாஷாணங்களும் ஒன்பது குணங்கள். அதாவது ஒன்பது கோள்களின் குணங்களை உடையவை. இதை ஒருசேரக் கட்டுவது அசாதாரணம். அப்படிக் கட்டியதைத் தெய்வமாகத் தொழ, கோள்களால் நேரிடும் துன்பங்கள் தீரும். முதலில் அது நேத்ரத்தாலும், பின் அபிஷேகப் பொருளாலும், பின் மந்திர சப்த எதிரொலிகளாலும் நிகழும் இந்த நவபாஷாண லிங்கம் கூட, சில அற்புதங்களைச் சாதிக்கப்போகிறது' என்றார் அவர். அது...?

-ரசமணி வித்தகர் பெரியய்யா.

விருமாண்டி விர்விதிர்த்துப் போனான். அதுவரை அந்த மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பிணங்கள் எங்கே போயிற்று என்பது தெரியாமல் விழித்தான். அவனுக்கு மேல் வேலாயுதம்!

நள்ளிரவு நேரம்...

சிலுசிலுவென்ற காற்று... ஆனால் உணர்விலோ வெப்பம்.

"அண்ணே..." விருமாண்டியை வேலாயுதம்தான் அழைத்தான்.

"என்னண்ணே... எதைப் பார்த்து இப்படி மிரண்டு போய் நிக்கறீங்க...?"

"அது... அது.... இங்கன... இங்கன..." விருமாண்டியிடம் இருந்து வார்த்தைகள் வெளிவர மறுத்தன. சொல்லி வைத்த மாதிரி, திரும்பவும் ஒரு அழுகுரல் சப்தம் மிக மெலிதாய் கேட்டது.

"யாருண்ணே.. இந்த ராத்திரியில் உங்க காட்டுக்குள்ள அழுவறது..?" வேலாயுதமும் திணறலுடன் கேட்டு முடித்தான்.

"தெ... தெரியல..."

"என்னண்ணே நீங்களே பயப்படற மாதிரி தெரியுதே...?"

"இல்ல... ஆமாம்... இங்க சில நாளாவே என்னென்னவோ நடக்குது?"

"அப்படின்னா...?"

-வேலாயுதம் கேட்ட நொடிப்பொழுதில் தீப்பந்தமுடன் ஒரு பெண் சற்று தூரத்தில் நடந்து போவது தெரிந்தது. "யாருண்ணே அது?" -வேலாயுதம் கேட்க விருமாண்டியும் பார்த்தான். நல்ல பளிச்சென்ற கறுப்பு வண்ண பட்டுப்புடைவையில் தலைவிரிக் கோலத்தில் நெற்றி கொள்ளாத குங்குமப் பொட்டோடு ஒருத்தி!

அச்சு அசலாக எல்லைக் காளி சிலையை ஒத்தி எடுத்தவளாக... .

"அண்ணே ஓஓஓ...!"

-வேலாயுதம் மயங்கி விழுந்தான். விருமாண்டி சிறிது நேரம் உற்றுப்பார்க்க, அந்தப் பொண்ணும் திரும்பிப் பார்த்தாள்.

அப்படியே அவனை நோக்கி வந்தாள்.

கலீரிட்டது கால் சதங்கை ஒலி. திகுதிகுத்தது தீப்பந்தம்...! விருமாண்டி அவள் நெருங்கவும் தொடை நடுங்க ஆரம்பித்தான். அவனையுமறியாமல் 'ஆத்தா... ஆத்தா...' என்று நாத்தழுதழுத்தான்.

"ஆத்தாதான்... ஆத்தாவேதான்! என் எல்லைல எல்லாரும் ஆட்டமா போட்றீங்க? அழிஞ்சு போயிடுவீங்க.. இனி உன்னையோ, இல்லை யாரையுமே நான் இங்க பார்க்கக் கூடாது.

ஓடு..! ஓடுடான்னா..!"

-உக்ரமாய் கத்தினாள் அந்தப் பெண்... இல்லை இல்லை காளி! விருமாண்டி அப்படியே மயங்கிச் சரிந்து விழுந்தான்.

❑ ❑ ❑

தொழிற்சாலை கட்டுமானப் பணிகள் அப்படியே நிறுத்தப்பட்டிருந்தன. எப்படியோ மோப்பம் பிடித்து சில பத்திரிகையாளர்களும் வந்திருந்தனர்.

சீஃப் எஞ்ஜினியர் சங்கரதாஸ் அவர்களோடு போராடிக் கொண்டிருந்தார். வெங்கட்டின் பிணம் அப்புறப்படுத்தப் பட்டிருந்தது.

ஆனால் அந்த வீரபத்ரர் கல் விக்ரகம் அப்படியே கிடந்தது. அதை வளைத்துக்கட்டி புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

மற்ற கல் விக்ரகங்கள், ஹட்டுக்குள் கிடந்தன. ஹட்டுக்கு வெளியே ஆர்க்கியாலஜிஸ்ட் அனந்த நாராயணனும் சாகம்பரியும் நின்று கொண்டிருந்தனர்.

ஹட்டுக்குள் இருக்கும் விக்ரகங்களை புகைப்படம் எடுக்க அவர்கள் யாரையும் அனுமதிக்கவில்லை.

சீஃப் எஞ்ஜினியர் காக்காய் விரட்டுவதுபோல விரட்டிக் கொண்டு க்ளாராவுக்காக காத்திருந்தார்.

ரிப்போர்ட்டர்களுக்கு இதெல்லாம் சாதாரணம். ரப்பர் போல வளைந்துக் கொடுத்து, கேள்விகளைக் கேட்டபடி இருந்தனர்.

"சார்... சக்கரவர்த்தி மோட்டார்ஸ் நிறுவனத்துக்கு சென்னைலயும் பிரச்சினைன்னு கேள்விப்பட்டோமே, நிஜமா?"

"என்ன பிரச்சினை..? ஒரு பிரச்சினையும் இல்லை."

"அப்ப இங்க எதுக்கு புதுசா தொழிற்சாலை கட்டணும்?"

"இங்க மட்டுமல்ல.. உலகம் பூராவும் கட்டுவோம், கட்டணும். இது வளர்ச்சி."

"இல்ல... இங்க தொழிற்சாலை தொடங்கக் காரணமே வேறன்னு கேள்விப்பட்டோமே...?"

"அப்படி என்ன கேள்விப்பட்டீங்க?"

"சென்னை தொழிற்சாலையில் ஏதோ வாஸ்துக் கோளாறு இருக்கறதாவும், அந்தத் தொழிற்சாலையையே அப்படியே இங்க மாத்திடப் போறதாகவும்..."

"வாயைக் கழுவுங்க. எல்லாம் அபத்தம்! எங்க டர்ன் ஓவர் அதிகமாயிடுச்சு. அவ்வளவுக்கு சென்னையில் கெபாசிட்டி இல்லை. அதுமட்டுமில்ல... இங்க தொடங்கினா கிராமப்புறங்கள் வளரும்கற எண்ணமும் ஒரு காரணம்."

"இல்ல... இங்கையும் ஏதோ பிரச்சினைன்னு..."

"ஒரு பிரச்சினையுமில்ல... நடந்திருக்கறது ஒரு தற்செயலான விபத்து. மிஸ்டர் வெங்கட் அந்தச் சிலையை அசைச்சுப் பார்த்துட்டு, யாரோ கூப்பிடவும் திரும்பியிருக்கார். அப்ப அது அவர்மேல விழுந்து, அமுக்கிடுச்சு... அவ்வளவுதான்."

"ஆனா இங்க யாரும் இடம் வாங்கறதில்ல, விக்கறதில்ல... மீறி வாங்கினா இப்படித்தான் ஆகும்னு கேள்விப்பட்டதெல்லாம்..?"

"எல்லாம் கட்டுக்கதை?"

"அப்படின்னா தெரிற்சாலையை மட்டும் கட்ட வேண்டியதுதானே...? எதுக்குப் புதைஞ்சுபோன ஒரு கோயிலைத் தோண்டி எடுக்கணும்?"

-நிருபர்கள் விடுகிற மாதிரி தெரியவில்லை! சங்கரதாஸுக்கு எரிச்சலாக வந்தது.

"ஸாரி... இதுக்கெல்லாம் பதிலை, எங்க எம்.டி. வரும்வாங்க, அவங்கக்கிட்ட கேட்டுக்குங்க" என்று நழுவினார்.

அவர்கள் அடுத்து ஆர்கியாலஜிஸ்ட் அனந்த நாராயணனைப் பிடித்தனர்.

"சார்... இந்தக் கோயிலை தோண்டி எடுக்கறதாலதான் இந்த மரணம் நடந்ததா சொல்றாங்களே...?"

"அபத்தம்"

"அப்ப இங்க எந்த பவரும் இல்லேங்கறீங்களா?"

"பவர் இல்லாத இடம் எது? கடவுள்ங்கற பவர், எல்லா இடத்துலேயும் நீக்கமற நிரம்பியிருக்கார்."

"அப்படின்னா மரணத்துக்குக் காரணம்?"

"ரொம்ப சிம்ப்பிள்... இது ஒரு விபத்து!"

"அப்ப கோயிலை முழுசா தோண்டி எடுப்பீங்களா?"

"அதுதானே என் வேலை...?"

"இங்க ஒரு கல்வெட்டுச் செய்தி இருக்கறதாவும் அதன்படி இந்தக் கோயிலுக்குன்னு தங்கத்தால் ஆன லிங்கம், அம்பாள் விக்ரகம்லாம் இருக்குதாமே?"

ஒரு நிருபர் அப்படிக்கேட்ட நொடி அனந்தநாராயணன் முகத்தில் திகைப்பு.

"நோ... எல்லாம் பொய். அப்படி எல்லாம் எதுவும் இல்லை" என்றார் வேகமாக.

"நீங்கதான் பொய் சொல்றீங்க?" மறுத்தார் ஒரு ரிப்போர்ட்டர்.

"நான் எதுக்குப் பொய் சொல்லணும்? எனக்கு அதனால என்ன லாபம்?"

"என்ன லாபமா? அந்தச் செய்தியை அப்படியே மறைச்சுட்டு, அந்த தங்க விக்ரகங்களை நீங்க எடுத்துக்க முயற்சிக்கலாம் இல்லையா?"

"வாட்!" அனந்தாவின் தாடையில் பச்சையாய் நரம்பு புடைத்தது. ஆனால் வேகமாய் அனந்தா எதிரில் கல்வெட்டுப் புகைப்படம் ஒன்றை நீட்டினார் ரிப்போர்ட்டர் ஒருவர்.

அதைப் பார்க்கவும் பகீரென்றது.

குகைக்குள் க்ளாராவுக்கு அனந்தா சுட்டிக்காட்டிய அதே கல்வெட்டு!

அனந்தாவுக்கு தலையைச் சுற்றியது. இது எப்படி உங்களிடம் என்பது போலப் பார்த்தார். அதைக் காட்டிய ரிப்போர்ட்டர் முகத்தில் ஒரு கீற்றான வெற்றுப்புன்னகை.

அதேசமயம், க்ளாராவின் கார் அங்கே வேகமாகப் பிரவேசித்தபடி இருந்தது. நடக்கின்ற அவ்வளவையும் அந்தக் காக்கையும் தோண்டி எடுக்கப்பட்ட கோபுரக்கலசம் மேல் அமர்ந்த நிலையில் பார்த்துக்கொண்டிருந்தது!

29

"அந்த சித்த புருஷரும், அவர் பிசைந்துப் பிடித்த அந்த லிங்க உருவமும், அதன் ஒருவிதமான வாசமும் என்னை நெகிழ்த்திவிட்டது.

உலகில் நவபாஷாண விக்கிரக சொரூபங்கள் அபூர்வமானவை. விரல்விட்டு எண்ணும் அளவில் தான் அவையும் உள்ளன. நவபாஷாணங்களைத் தேடிப்பிடித்து உரிய அளவில் கலந்து ஒரு கலவையை உருவாக்குதென்பது சாதாரண ஒரு விஷயம் என்பதில் இருந்து, அதற்கு கோள்களை ஜெயித்த மனிதர்கள் வேண்டும் என்பதையும் அங்கே அந்த சித்த புருஷர் மூலம் அறிந்தேன்.

அவருக்கு வயது 121. -ஒரு அறுபது வயது பூர்த்தி செய்தவர்களையே கோள்களின் கருணையைப் பெற்றவர்களாக இந்த உலகம் கருதுகிறது. இதில் இரண்டு அறுபதை ஒரு உயிர் எந்த உத்பாதகமும் இன்றி கடந்திருக்கிறது என்றால் அது எத்தனை மேம்பட்டதாக இருக்கும்!

இப்படி கோள்களின் கருணையைப் பெற்றவர்களை வணங்குவது, அவர்களின் ஆசியைப் பெறுவதும் விசேஷம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நானோ ஆசிகளுக்கெல்லாம் மேலாக பெரும் தவமே செய்திருக்கிறேன் என்பதை அங்கே அந்த சித்த புருஷரையும், நவ கோள்களின் அம்சமான நவபாஷாணங்களை இணைத்து அவர் லிங்க சொரூபம் உருவாக்கியதையும் பார்த்து வியந்து, அந்த லிங்கத்தை முதலில் பூஜிப்பவன் நானாக இருக்கவேண்டும் என்று விரும்பினேன். நான் எனக்குள்ளே நினைத்ததை அந்த சித்த புருஷர் நொடிப்பொழுதில் உணர்ந்து கொண்டு, 'வெளியே வடகிழக்கில் நிறைய ஓடைமல்லிகள் பூத்திருக்கின்றன, பறித்து வந்து வணங்கு!' -என்றார்.

நானும் வெளியே ஓடினேன். அப்பொழுதுதான் என் எதிரில் இன்னொரு சித்த புருஷர் அந்த குகைக்குள் நுழைந்தபடி இருந்தார்.

அவரைப் பார்த்ததும் வணக்கம் சொன்னேன்.

- ரசமணி வித்தகர் பெரியய்யா

அந்தப் பத்திரிகை நிருபர்களில் ஒருவர் நீட்டிய அந்த கல்வெட்டுப் புகைப்படம், க்ளாராவை ஒரு கிள்ளு கிள்ளியது.

எட்டிப்பார்த்த அனந்த நாராயணன் முகத்திலும் அதிர்ச்சி பரவியது.

அடுத்த நொடி க்ளாராவின் பார்வை அவரைத்தான் பார்த்தது. அவரோ திரும்பி கோயில் பக்கம் பார்த்தார். குறிப்பாக அந்தக் குகைப்பாதையை கண்டறிந்த பகுதியைத்தான் பார்த்தார்.

குகையின் நுழைமுகப் பகுதி முன்பு, பெரிதாக ஒரு தட்டி அடைப்பு. அது வைத்தது வைத்தபடி இருந்தது.

"மேடம்... இந்த ஃபோட்டோவை இவங்க எப்படி எடுத்தாங்கன்னு தெரியலை... இட்ஸ்ஹைலி இம்பாஸிபிள்..." என்றார் சற்று பலத்த குரலில்.

அந்த நிருபரோ, "காத்து புகமுடியாத இடத்துல கூட புகுந்துடுவோம் நாங்க... இதோட நதிமூலம் ரிஷிமூலம் இருக்கட்டும். இந்த கல்வெட்டுச் செய்தி வெளியே தெரியக்கூடாதுன்னு நீங்க நினைக்க என்ன காரணம்?"

ஒரு பேடை விரித்தபடி, பேனா ரீஃபில் மூக்கையும் கங்காரு போல் எட்டிப்பார்க்க செய்து கொண்டு அந்த நிருபர் பேசியபோது, அனந்த நாராயணனுக்கு அப்படி ஒரு கோபம் வந்தது.

"லுக்... இங்க நடந்து கிட்டிருக்கிறது ஒரு சர்வீஸ் ஓர்க். நூறு சதவிகிதம் பிரைவேட் மணியை ஸ்பெண்ட் பண்ணிச் செய்துகிட்டிருக்கிற ஒரு நல்ல காரியம். எதை எப்ப சொல்லணும் சொல்லக்கூடாதுங்கறது எங்க விருப்பம்..." என்று அந்த ரிப்போர்ட்டர் முன்பு பாய்ச்சலாகச் சென்றார்.

க்ளாரா பத்திரிகைச் சுதந்திரத்தின் பல பரிமாணங்களை அமெரிக்க மண்ணில் பார்த்தவள். அவளுக்கு அந்த

ரிப்போர்ட்டரின் கேள்வி, நியாயமானதாகத்தான் தோன்றியது.

"மிஸ்டர் அனந்தநாராயணன்... ப்ளீஸ் பீ காம். நான் பதில் சொல்லிக்கறேன்" என்று அவரைத் தடுத்தவளை அந்த நிருபர் ஆச்சரியத்துடன் பார்த்தார்.

"இப்ப உங்களுக்கு என்ன தெரியணும்?"

"கல்வெட்டுச் செய்திப்படி விபரீதங்கள் நடக்க ஆரம்பிச்சிருச்சே... இனி என்ன செய்யப்போறீங்க?"

"எது விபரீதம்?"

"உங்க பி.ஏ. இறந்து போய்ட்டார்... இந்த ஊரைச் சேர்ந்த பல பெரியவங்களும் ஊரை விட்டே ஓடிப் போய்ட்டாங்க. உங்க தொழிற்சாலையிலேயும் தொடர்ச்சியா பல பிரச்சனைகள்..."

-அந்த நிருபர் நான்கு பக்க விஷயங்களையும் தெரிந்தே பேசுவது போல தோன்றியது.

"எக்ஸ்க்யூஸ் மீ!" இன்னொரு நிருபர் கத்தரித்தார். க்ளாரா அவரைப் பார்த்தாள்.

"இந்தக் கோயில் இந்த ஊரைச் சேர்ந்ததுதானே?"

"அதுல என்ன சந்தேகம்?"

"புராதனமான பாண்டியர் கால கோயில்தானே?"

"அப்படித்தான் கேள்விப்படறோம்?"

"அப்ப ஆர்க்யாலஜி டிபார்ட்மென்ட்டு இல்ல வந்து இதைத் தோண்டி வெளிய எடுக்கணும்? ஒரு லீடிங் கம்பெனிக்கு இது மேல ஏன் இவ்வளவு அக்கறை?"

-க்ளாரா அந்தக் கேள்வியால் திணறும் போது அனந்த நாராயணன் கை கொடுப்பதுபோல வேகமாக முன்வந்தார்.

"லுக்... நான் ஆர்க்கியாலஜிகாரன்தான். ஆர்க்கியாலஜி ஒரு விஷயத்துல இறங்கணும்னா அதுக்குப் பல காரணங்கள் இருக்கணும். சும்மா ஒரு பாழடைஞ்ச கோயிலையோ,

இல்ல புதைஞ்சுபோன கோயிலையோ புதுப்பிக்கறது ஆர்க்கியாலஜி வேலை கிடையாது..."

"அப்படி என்ன காரணம் வேணும் அதுக்கு? தங்கத்துல லிங்கம், தங்கத்துல அம்பாள் விக்ரகம்லாம் இருந்துருக்குங்கறதைவிட ஒரு பெரிய காரணம் தேவையா என்ன?"

"அது இப்பதானே தெரிய வந்துருக்கு... இதுல எவ்வளவு உண்மை இருக்குன்னு யாருக்குத் தெரியும்?"

"சரி... இனியாவது ஆர்க்கியாலஜி என்ட்டராகுமா?"

"அவங்க நுழைஞ்சா கதையே மாறிடும். இந்தக் கோயிலைப் புதுப்பிச்சு, இதுல ஆறுகால பூஜை நடக்கணும்கறதுதான் எங்க நோக்கம். அது மட்டுமல்ல... இது இந்த ஃபேக்டரிக்குன்னு வாங்கின நிலத்துல இருக்கற கோயில். ஒரு வகைல இது ஃபேக்டரி ப்ராப்பர்ட்டி..."

"அப்ப ஆர்க்கியாலஜி வந்தாலும் விடமாட்டீங்க, அப்படிதானே?"

"சாரி.. இதுக்குமேல எந்தக் கேள்வி கேட்டாலும் நாங்க பதில் சொல்லத் தாயரில்ல..."

-அனந்தநாராயணன் பேச்சைக் கத்தரித்துக் கொண்டு வெகுவேகமாக அந்த சுரங்கப்பாதை தோண்டப்பட்ட இடத்திற்கு சென்றார். மூடியது மூடியபடி இருந்தது. உள்ளே யாரையும் அனுமதிக்கவில்லை. சாகம்பரியிடம் வேறு எச்சரிக்கை செய்திருந்தார். முதல் காரியமாக அவளைத்தான் தேடினார். அவள் க்ளாரா அருகில் பூனை போல் நின்றுகொண்டிருந்தாள். கையை ஆட்டி அழைத்தார். அவளும் வேகமாக அவரை நெருங்கினாள்.

"சாஹா... அந்த ரிப்போர்ட்டர் எப்படி ஃபோட்டோ எடுத்தான்..? இங்க நீ என்ன பண்ணிகிட்டிருக்கே?"

"அதான் சார் எனக்குத் தெரியலை..."

"இப்படிச் சாதாரணமா கையை உதறதுக்கு நீ எதுக்கு? இது எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா? வில்லேஜ் சைடுல இந்த மாதிரி விஷயங்கள் பரவினா அது எவ்வளவு பின் விளைவுகளை உருவாக்கும் தெரியுமா?"

அனந்தநாராயணன் உஷ்ணமாகிக் கத்துவது க்ளாரா காதிலும் விழுந்தது. அவளுக்குள் புதுப் புது எண்ணங்கள்.

அந்த ரிப்போர்ட்டர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். சைகை காட்டி அருகில் அழைத்தாள். நெருங்கினார்.

"அந்த ஃபோட்டோவை கொஞ்சம் நான் பார்க்கலாமா?"

ரிப்போர்ட்டரும் எடுத்து நீட்டினான். அதில் தேதியும் நேரமும் பதிவாகியிருந்தது. தன் கெடிகாரத்தில் தேதியைப் பார்த்தாள். 19 செவ்வாய்க்கிழமை என்று காட்டியது. ஃபோட்டோவிலோ 12ஆம் தேதியின் பதிவு. ஃபோட்டோவை திரும்பவும் ஆழமாக ஒருமுறை பார்த்தவள் ரிப்போர்ட்டரிடம் திருப்பிக் கொடுத்தவளாக, "இதை நீங்க எடுக்கலை.. உங்களுக்கு யார் அனுப்பினதுன்னும் எனக்குத் தெரியும்!" என்றாள்.

அந்த ரிப்போர்ட்டரின் முகத்தில் லேசான மாற்றம்.

"மேடம்... இது என் அட்ரசுக்கு தபால்லதான் வந்தது. இங்கதான் யாரோ அனுப்பி வெச்சுருக்கணும்னு நான் நினைச்சேன்" என்று கொஞ்சம் இறங்கி வந்தார் அவர். க்ளாரா ஒரு சிரிப்பு சிரித்தாள்.

"யார் இந்த ஃபோட்டோவை அனுப்பினாங்க மேடம்? உங்களுக்குத் தெரியும்னீங்களே.. இது எங்க பத்திரிகைலயிருந்து இந்த ஊரைப்பற்றி, இந்தக் கோயிலைப்பற்றி ஒரு பரபரப்பு ஏற்படணும்கறதுதான் உங்க எண்ணமா?"

அந்த நிருபர் அடுத்தடுத்துக் கேட்க வேண்டிய கேள்விகளைத்தான் கேட்டார்.

"சொல்றேன்... எல்லாத்துக்கும் பதிலை விவரமா சொல்றேன். ஒண்ணு மட்டும் உறுதி. இனி ஒரு உயிர் கூட இங்க போகாது. கோயிலை முழுசா மிஸ்டர் அனந்த நாராயணன் வெளிய எடுத்துத் தருவார். இங்க ஆறுகால பூஜைகள் அதுல நடக்கும். அதேசமயம் எங்க தொழிற் சாலையும் எந்தவித பிராப்ளமும் இல்லாம அமோகமா தொடங்கி நடக்கும். இந்த என் கருத்தை நீங்க பத்தி ரிகைல போடணும்னு கேட்டுக்கறேன். இந்த ஃபோட்டோ செய்தி ஒரு ஃப்ராட். இது ஒரிஜினல் கல்வெட்டே இல்லை. இங்க கோயிலும் கம்பெனியும் வந்துடக் கூடாதுன்னு நினைக்கற சிலரோட சதிச்செயல்.

"எப்படின்னு கேட்கறீங்களா?

கல்வெட்டு எங்களுக்குத் தோண்டப்பட்ட நிலைல தெரிய வந்ததே 16ஆம் தேதிதான். அதாவது 15ஆம் தேதி மிஸ்டர் அனந்த நாராயணன் பார்த்து எனக்குத் தகவல் தந்து, நான் 16ஆம் தேதி வந்து பார்த்தேன்.

அப்படிப்பட்ட கல்வெட்டை எப்படி 12ஆம் தேதி ஒருவர் ஃபோட்டோ எடுத்திருக்க முடியும்?"

-அவள் கேள்வி அந்த நிருபரை நிமிர்த்தியது.

30

புதிராய் உள்ளே நுழைந்த சித்த புருஷரை வணங்கியபடியே வனத்துக்குள் வடகிழக்கு மூலை யில் பூத்திருக்கும் மலர்களைப் பறிக்கச் சென்றேன்.

மலர்களும் பூத்துக்குலுங்கிக் கொண்டிருந்தன.

அழகு, வாசம் என்று ஒருங்கே அமைந்த ஒருவித ஜீவ வெடிப்புதான் மலர்கள். மந்திர ஒலியோடு கூடி இறைவன் மேல் விழுந்து, எடுத்து பிறப்புக்கு ஒரு அர்த்தத்தையும் கண்டுவிடுகின்றன. அதுவே அவைகளுக்கும் மோட்சம்.

'அப்படிப்பட்ட மலர்களைக் கொய்யும் போது அந்த மலரைத் தரும் தாவரத்துக்கு நன்றி கூறவேண்டும்' என்று கிசுகிசுப்பாய் ஒரு குரல், என் காதில் ஒலித்தது. அப்படியே அது தொடர்ந்து...

'மனிதர்களைவிட மரமும் செடியும் கொடியும் நன்றி உணர்வு அதிகம் உடையவை. எவனொரு வன் தாவரங்களை வளர்க்கிறானோ, எவனொருவன் தாவரங்களை வணங்குகிறானோ, எவனொருவன் தாவரங்களை தன்னைவிட மேலாக கருதுகிறானோ அவனுக்கு தாவரங்களும் எல்லா கருணையும் செய்யும். அவனுக்குப் பசித்த வேளைக்கு சோறு வந்து சேரும். அவன்மட்டும் வியர்வையில் நனைய மாட்டான். அவனை நிழல் தேடிவரும்! இது ஏதோ மிகைப்பாடான ஒரு கருத்தல்ல... நீ தொடர்ந்து வாழ்ந்து பார்... இந்த உண்மையை உன் வாழ்வில் நீ உணருவாய்' என்றது அந்தக் குரல்.

நானும் மகிழ்வுடன் மடி நிறைய மலர்களுடன் மீண்டும் குகை நோக்கித் திரும்பினேன். அங்கே நவபாஷாண லிங்கத்தை தலைமேல் வைத்தபடி அமர்ந்திருந்தார், அந்த சித்தபுருஷர். அவர் என்னைப் பார்த்து 'உம்... உன் பூஜையைத் தொடங்கு' என்றார். நானும் கைவசம் இருந்த மலர்களைத் தூவி வழிபாடு செய்தேன். அந்த சித்த புருஷர் சிரம் மேல் இருந்த அந்த மகாதேவ லிங்க சொரூபம் என்னுள் பலவித எண்ணக்கிளர்ச்சிகளை உண்டாக்கியது.

'கருணை வேறு, மகாதேவம் வேறு இல்லை' என்று அந்த நொடி ஒரு பரிவு. 'மனித வாழ்வில் ஆக்கவேண்டியவை, அழிக்கவேண்டியவை, அறியவேண்டியவை என்று மூன்று நிலைகள் மிக முக்கியம். இதில் அறியவேண்டியதற்கு பிரம்மா துணை செய்கிறார். ஆக்கவேண்டியதற்கு விஷ்ணு துணைசெய்கிறார். அழிக்க வேண்டியதற்கு மகாதேவனே பெருந்துணை செய்கிறார்.

நம்முள் முதலில் தீவினை அழியவேண்டும் 'நான்' என்னும் அகந்தை அழிய வேண்டும். ஆணவம், கண்மம், மாயை என்று இந்த சரீரத்துக்குள் ஒளிந்திருப்பதை எல்லாம் அழிக்க மகாதேவனால் மட்டும் தானே முடியும்?'

என்னுள் மகாதேவம் குறித்துப் புதுப்புது தெளிவுகள். அப்பொழுது அந்த சித்தர், அந்த நவ பாஷாண லிங்க சொரூபத்தை புதிதாய் வந்த சித்த யோகியிடம் தந்து, 'இதை அந்தப் பணக்கார தொழிலதிபர் வீட்டில் சேர்த்து விடு... மற்றவை தானா நடக்கும்' என்றார். அப்படிச் சொன்னதில் ஏதோ ஒரு உட்பொருள் இருப்பது போல எனக்குத் தோன்றியது.

-ரசமணி வித்தகர் பெரியய்யா

அந்தப் புகைப்படம் பற்றிய சந்தேகங்களை க்ளாரா போட்டு உடைக்க, நிருபர் முகத்தில் ஒருவித ஆச்சரியப் பிரகாசம் ஏற்பட்டது.

அனந்த நாராயணனும் தாடையைத் தேய்த்துக் கொண்டு, "கிரேட் மேடம்... உங்களுக்கு நல்ல டிடெக்டிவ் மைண்ட், இது எனக்கு ஆரம்பத்துல தோணலையில்லை..." என்றார்.

"அப்ப அந்தக் கல்வெட்டு, அதிலுள்ள செய்தி இதெல்லாம் சமீபத்திய மனிதத் தயாரிப்பா?" நிருபரிடமும் மிக லேசான கேள்வி.

"நிச்சயமா.. உட் யூ ப்ளீஸ்... இந்த ஃபோட்டோ உங்களுக்குத் தேவையா...? இதை எனக்குத் தரமுடியுமா?"

-க்ளாரா கேட்டாள்.

நிருபர் முகத்தில் ஆரம்பத்தில் ஒரு தயக்கம்.

"டோன்ட் ஒர்ரி... உங்களுக்கு வேணும்னா நான் இதைக் கொண்டே பல காப்பி எடுத்துத் தரேன்."

"இல்ல மேடம். நீங்க இதை வெச்சு சம்திங் ஏதோ கண்டுபிடிக்க விரும்பறீங்கன்னு தெரியுது, ஐ வில் கோ வாப்பரேட் வித் யூ... இந்தாங்க."

"நைஸ்... வெரி நைஸ்!"

-க்ளாரா பதிலோடு பார்ப்பது தெரியாமல் சாகம்பரியை ஒரு பார்வை பார்த்தாள். அவள் ஜீன்ஸ் பேண்ட்டின் பாக்கெட்டினுள் இருக்கும் செல்ஃபோன் மேல் இறுக்கமாகக் கையை வைத்தபடி நின்று கொண்டிருந்தாள்.

ஃபோட்டோவும் க்ளாராவின் ஹேண்ட் பேகினுள் அடங்கியது.

"பை த பை... இது எனக்கு வந்த கவர். இதையும் தரேன். இந்த கவர்ல இருக்கற போஸ்டல் முத்திரை உங்களுக்கு இன்னும் கொஞ்சம் ஹெல்ப் பண்ணலாம்" அவன் அந்த ஃபோட்டோவுடனான காகித உறையையும் நீட்டினான்.

அவளும் அதை வாங்கிப் பார்த்தாள்.

ஃப்ரம் அட்ரஸ் இல்லை. முத்திரையில் சொக்கம்பட்டிக்கு எல்லா விதத்திலும் போட்டிக்கிராமமாக விளங்கும் சக்திவேல்புதூர் கிராமத்தின் முத்திரை, அனந்தநாராயணனும் எட்டிப் பார்த்தார். க்ளாரா கவரை முழுமையாகப் பார்க்கவிடாதபடி கவரை மூடி, திரும்ப உள்ளே வைத்துக் கொண்டாள். அனந்தநாராயணன் கொஞ்சம் கசந்து வழிந்தார்.

"மிஸ்டர் அனந்த நாராயணன்... ஃபர்தரா என்ன பண்ணணும்னு நான் பார்த்துக்கறேன். இன்னும் கொஞ்ச நேரத்துல போலீஸ் வந்துடும். ஒரு பட்டாலியன் போலீஸே வந்து இங்க காவல் இருக்கப்போகுது. நீங்க பாட்டும் உங்க வேலையைப் பாருங்க. மிஸ்டர் சங்கரதாஸ்... நீங்களும் நான்- ஸ்டாப்பா நம்ம கன்ஸ்ட்ரக்ஷன் ஒர்க்கை கன்ட்டினியூ பண்றீங்க. இனி இங்க எந்தத் தப்பும் நடக்காது."

-க்ளாராவின் உறுதியான பதிலைத் தொடர்ந்து சிவில் என்ஜினியர் சங்கரதாஸ் சற்று விரைப்பாக... கச்சிதமாகப் புழுதிக் கவளங்களோடு ஒரு போலீஸ் ஜீப்பும், ஒரு பெரிய போலீஸ் வேனும் வந்தபடி இருந்தன.

ஊரே அதைப் பார்த்து ஆச்சரியத்தில் ஆடிப்போய் விட்டது. குறிப்பாக சைக்கிளில் தபால் கட்டுக்களுடன் வந்தபடி இருந்த வேலாயுதம், போலீஸ் ஜீப்பையும் வேனையும் பார்த்து வியப்பின் உச்சிக்குப் போனான்.

அப்படியே அவனது சைக்கிள், குருமூர்த்தி வீட்டுமுன் தேங்கி நின்றது. பரபரப்பாய் உள்ளே நுழைந்து விஷயத்தையும் சொன்னான்.

"என்ன வேலாயுதம் சொல்றே... நம் ஊர்ல போலீஸ் படையா?"

"ஆமாம் சாமி... வீரப்பனைப் பிடிக்க காட்டுக்குள்ள படை படையா போனாங்களே.. அந்த மாதிரி வந்துருக்குறாங்க. ஊரே காலியாகப்போகுதுன்னு நான் நினைச்சா, தலைகீழா இருக்குது!"

குருமூர்த்தி ஒன்றும் பிடிபடாமல் ஈரக்காக்கைபோலத் தலையை உதறிவிட்டுக் கொண்டார்.

"உங்களுக்கு இன்னொரு விஷயம் தெரியுமா?"

"என்னடா?"

"இனி விருமாண்டிக்கும் இந்த ஊருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. விருமாண்டி ஊரைவிட்டே ஓடிட்டான்னா நம்புவீங்களா?"

"அப்படியா?"

"அதை ஏன் கேக்றீங்க... நேத்து ராத்திரி உங்ககிட்ட பணம் கேட்டு, நீங்க இல்லைன்னு சொல்லவும் நொந்து போய் திரும்பிப் போய்கிட்டிருந்தேனா... அப்ப எதுத்தால அவன் வந்தான்..."

-வேலாயுதம் முதல்நாள் இரவு நடந்தவைகளைக் கூறி முடிக்க, குருமூர்த்தி முகத்தில் வியப்பான வியப்பு. அவர் மனைவி சிவகாமியும் உடன் வந்து சேர்ந்து கொண்டாள்.

"நான்கூட, இனி நாம இந்த ஊர்ல இருக்கவேண்டாம்... எதுனா ஆய்டப்போறதுன்னு இவரண்ட சொல்லிண்டு இருந்தேன். ஆனா நீ ஏதேதோ சொல்றியே" என்றாள் அவள்.

"சாமி! வர்ரீங்களா? அங்க என்னதான் நடக்குதுன்னு போய்ப் பார்போம்..."

"இன்னிக்கு எவ்வளவு லெட்டர் வந்துருக்கு?"

"ஒரே ஒரு கவர்தான்... அதுவும் அந்த புதுகம்பெனிக்குதான்..."

-வேலாயுதம் தன் காக்கிப்பை சீலை உடைத்து உள்ளிருந்து கடிதத்தை எடுத்துப்போட்டான். யாரோ கையால் எழுதி அனுப்பியிருந்தார்கள். மேலே 'மிக அவசரம்' என்று ஒரு குறிப்புவேறு.

"என்னடா இது..?" ஃப்ரம் அட்ரஸைக் காணோம்.. மேல மிக அவசரம்கற குறிப்பு வேற!"

"யாருக்குத் தெரியும்?"

"பிரிச்சுப் பார்ப்போம்..."

"சாமி ஈஈ..." அலறினான் வேலாயுதம்.

"தப்பு இல்ல..?" என்றபடி அதன் மேல் ஒரு முத்திரையைக் குத்தி முடித்தவர், "கிளம்பு... உன் சைக்கிள்ளயே போய்டலாம்" என்றார்.

அதேபோல அவனது சைக்கிளை தள்ளிவிட்டு ஒரு ஓட்டம் ஓடி, பின் கேரியரில் ஏறி அமர்ந்துகொள்ளவும் செய்தார்.

❑ ❑ ❑

ராயப்பேட்டை...

சரண்யனின் பங்களா!

அந்த நாளைய லண்டன் பெண்டுல கெடிகாரம் போட்ட சப்தம் கேட்டு மெல்லக் கண் திறந்தான் சரண்யன். கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தான். மணி சரியாகப் பன்னிரண்டு! வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்த வனுக்குள் க்ளாரா மயக்க ஊசிபோட்டு அவனைச் சாய்த்ததுதான் முதலில் ஞாபகத்தில் வந்தது.

"அதற்காக இவ்வளவு நேரமா மயக்கமும் தூக்கமுமா நான் இருந்துவிட்டேன்?"

அவன் மனதில் ஒருவித இனம் தெரியாத துடிப்பு. 'க்ளாரா இருக்கிறாளா? இல்லை, போய் விட்டாளா?' என்பது தெரியாது ஒருவிதத் தவிப்போடு மளமளவென்று எழுந்து பாத்ரூம் சென்றவன், முதல் காரியமாக முகத்தை கண்ணாடியில் பார்த்தான். அதீத தூக்கத்தில் கன்னப்பரப் பில் ஒருவித பலூன் புடைப்பு. மளமளவென்று வாஷ் பேசின் முன் தலையைக் குனிந்து பைப்பைத் திறந்து முகம் கழுவத் தொடங்கினான்.

தண்ணீர் அதீத சிலுசிலுப்போடு முகத்தில் பரவி,அவன் உடம்பு முழுவதும் ஒரு மெல்லிய மின்னலையை உருவாக்கியது.

மூக்கினுள்ளும் கும்மென்று ஒரு வாசம் பரவல். சில நொடி கையில் தேங்கியிருந்த நீரால் மூக்கருகே வைத்து முகர்ந்தபடியே இருந்தான். மிக உற்சாகமாய், மிக இன்ப மாய் இருந்தது. க்ளாரா... அவள் தொடர்பான எல்லா விஷயங்களும் அந்த நொடி மறந்து, தண்ணீரால் முகம் கழுவுவதும் ஸ்லாகிப்பதும் பெரிய இன்பமாய் இருந்தது. போதும் என்கிற மாதிரி கா... கா... என்கிற ஒரு காகத்தின் குரல்!

சட்டென்று திரும்பியவன், ஜன்னலுக்குப் புறத்தில் மீண்டும் அந்த காக்கையைப் பார்த்தான். அவனையுமறி

யாமல் ஒரு இனம்புரியாத பயம் நெஞ்சக்கூட்டில் மெல்லக் கசியத் தொடங்கியது. அவன் எழுந்து விட்டது தெரிந்து, சமையல்கார புஷ்பா மாமியும் கையில் காபி யுடன் வந்தபடி இருந்தாள். அவனை நெருங்கியவள், ஒருவித ஆச்சரியமுடன் அவனைப் பார்த்தாள்.

அவனோ காகத்தின்மேல் இருந்து பார்வையை எடுக்க வேயில்லை. அவளுக்கோ அவன் பழைய சரண்யனாய் அடிபட்டு கோணல் மாணலாய் இல்லாமல் மிக நேராக நிற்பது எப்படி என்கிற ஆச்சரியம்!

31

'நான் பார்க்க என் கண் எதிரில் உருவாகி, என்னாலும் பூஜிக்கப்பட்ட அந்த லிங்கம், என் கண் எதிரிலேயே ஒரு சித்தரால் கொண்டு செல்லப் பட்டது. அது எங்கே செல்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள என் மனது துடித்தது.'

சித்த புருஷர்கள் எதிரில்தான் நினைத்தாலே போதுமே...? அவரும் என் எண்ணத்தைத் தெரிந்து கொண்டு, 'அது ஒரு பெரிய ஆன்மிகப் புரட்சியை செய்வதற்காகவும்' கர்ம வினைப்படி விடுதலை யடைய வேண்டிய பல சிவனடியார்களுக்காகவும் இங்கிருந்து செல்கிறது.

ஒரு பழமரமானது காய்த்துக் குலுங்கினால் போதும். பறவைகள் தானாகத் தேடி வந்து அதை உண்டு பசியாற்றி விட்டு சென்று விடும்... இங்கே பழமரம் காய்த்துக் குலங்க வேண்டும். அதுதான் முக்கியம்' என்று அவர் பேசியது கொஞ்சம் விளங்கியது. மீதம் விளங்கவில்லை.

அதுவும் அவருக்கு தெரிய வந்து அதற்கும் பதில் தந்தார்.

'உனக்கு முழுமையாக சிறிது காலத்தில் புரிந்து விடும்... நீ புறப்படு. சப்த மூலி வேறு உன் கையில் இருக்கிறது. அது சூரியனைக் கண்டால் செயலிழந்து விடும். எனவே இரவோடு இரவாகச் சென்று கறுப்புத் துணியால் சுற்றி வைத்து, பின் அதை நசித்துச் சாறெடுத்துப் பின் அதைப் பாது காத்துப் பயன்படுத்து' என்று வழிமுறைகளையும் கூறினார்...

என்னிடம் சிலிர்ப்பு! கூடவே 'அந்த நவ பாஷாண லிங்கம் எங்கே போயிருக்கும்?' என்ற அந்த பிரதான பிராண்டல்!

-ரசமணி வித்தகர் பெரியய்யா

கம்பீரமாக நிற்கும் சரண்யனை புஷ்பா மாமி, படு இயல்போடு பார்க்க... சரண்யனும் அதை உணர்ந்தவன் போல அவளைப் பார்த்தான்.

அப்படியே காக்கை மேலும் பார்வை சென்று கோபம் பீறிட்டது.

"என்ன இது? என்னால நம்பவே முடியலியே... உங்களப் பார்த்தா நீங்க ஒரு படுத்த படுக்கையில இருக்கற வியாதியஸ்தர்னு யாரும் சொல்லமாட்டா, நன்னா நேரா இப்ப நிக்கறேளே!" என்று தன் ஆச்சரியத்தை அவள் வெளிப்படுத்த...

"ஆமாம் மாமி... நானே இப்பதான் பார்க்கறேன்" -என்றவன் ஒருமுறை கை கால்களை உதறிவிட்டுக் கொண்டான்.

அந்த இடைவெளியில் புஷ்பா மாமியும் அந்தக் காக்கையைப் பார்த்தாள்.

"இந்தக் காக்கா இங்கையே சுத்திச் சுத்தி வந்துண்டுருக்கு... போகவே மாட்டேங்கறது. இப்ப இங்க ஜன்னலண்டை உட்கார்ந்துண்டுருக்கே!" என்று தன் பங்குக்குச் சொல்ல...

"எனக்கும் ஒண்ணும் புரியல மாமி... அது என்னவோ என்னையே பார்க்கற மாதிரி தோண்றது..." என்றவன் அதை நோக்கிச் செல்ல, அது உடனே சட்டென்று எழும்பிப் பறக்கத் தொடங்கியது. புஷ்பா மாமியும் கவனித்தாள். பிறகு... "ரொம்ப நேரமா தூங்கிண்டு இருக்கேளே. காத்தால காபி கூட சாப்பிடலையே.. என்ன ஏதுன்னு பார்ப்போம்னுதான் வந்தேன்" என்றாள்.

"ரொம்ப அசந்துட்டேன்... ஆனா இப்ப முகம் கழுவினதுக்குப் பிறகு ரொம்ப ஃப்ரெஷ்ஷா ஃபீல் பண்றேன்..."

"நானும்தான்.. வரவர இந்த ஆத்துல எல்லாருமே ரொம்ப சுறுசுறுப்பா நடந்துக்கறா. காய்க்வே காய்க்காத சப்போட்டா மரத்துல எவ்வளவு பிஞ்சு விட்ருக்குத் தெரியுமா!

"ஒரு வாழை கன்னு நாலு நாள்ல இடுப்புக்கு மேலே வளர்ந்துடுத்து. இந்த ஆத்துல எல்லாமே விசித்திரமா இருக்கு. இன்னொரு முக்கியமான விஷயம்..."

"என்ன மாமி?"

"நேத்து ராத்திரி கிணத்தடில ஒரு பத்து, பதினைந்து பேர் குளிக்கற மாதிரி சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தேன். நான் போனப்போ கிணத்தைச் சுத்தி ஒரே ஜலம்.. அன்னிக்கு ஒரு நாள் நீங்க கூடச் சொன்னேள். நாங்க யாரும் நம்பல. ஆனா இப்ப என்னமோ எனக்குப் பயமா இருக்கு..."

-புஷ்பா மாமி சொன்னதில் சரண்யன் அப்படியே உறையத் தொடங்கினான்.

இப்படி எல்லாம் அந்த நவபாஷாண லிங்கத்தை அன்று ஆத்திரத்தில் கிணற்றுக்குள் தூக்கிப் போட்ட பிறகுதான் நடக்கிறது. ஒருவேளை அதுதான் வீட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கெல்லாம் காரணமோ?

சரண்யன் குழப்பத்தோடு ஒரு மூலையில் சென்று அமர்ந்த நிலையில் தொலைபேசி அழைப்பு. புஷ்பா மாமிதான் சென்று எடுத்தாள்.

"யார் வேண்டும்?"

"மாமியா... நான் க்ளாரா பேசறேன். அவர் எழுந்துட்டாரா...?"

"ஓ... இப்பதான் ஒரு பதினைஞ்சு நிமிஷம் ஆறது. உங்களுக்கு ஒரு சந்தோஷமான விஷயம். அவர் இப்ப நூறு சதவிகிதம் குணமாயிட்டார்..."

"அப்படியா... கொஞ்சம் அவர்கிட்ட கொடுங்களேன்..."

தொலைபேசி சரண்யன் கைக்கு மாறியது.

"என்ன க்ளா... எதுக்கு லேண்ட் லைன்ல வந்துருக்கே?"

"தூங்கிண்டு இருந்தா எழுப்ப வேண்டாம்னு வேலைக்காரங்ககிட்ட சொல்லதான்..."

"மண்ணாங்கட்டி... நீ பாட்டும் ஸ்லீப்பிங் இஞ்ஜெக்ஷனை போட்டுட்டு போய்ட்டே. இங்க எவ்வளவு குழப்பம் தெரியுமா?"

"இங்கையும்தான்... ஆனா இப்பதான் சரண் ஒரு பிடி கிடைச்சிருக்கு."

"என்ன சொல்றே க்ளாரா?"

"வெரி சிம்ப்பிள்.. நம்ம கம்பெனி வளர்ச்சி பிடிக்காத ஒரு பொறாமையாளர் விட்டு விட்டு மிதிக்கலா டிஸ்டர்ப் பண்ணிகிட்டே வந்துகிட்டிருக்கார்."

"ஸோ... மனித சதிங்கறது உன் தீர்மானமா?"

"எக்ஸாக்ட்லி..."

"ஆனா நான் இப்ப உனக்கு நேர் எதிரா யோசிக்க ஆரம்பிச்சிருக்கேன். மிராகிள்ங்கற வார்த்தைக்கு இப்ப நானே ஒரு உதாரணமா இருக்கேன் க்ளாரா..."

"என்ன சரண்... நீயா இப்படி பேசறே..?"

"நான் பேசலை... என் அனுபவம் பேசுது. என்னைப் பார்த்தா நீயும் ஒத்துப்பே.. நௌ ஐ ஆம் ஆல்ரைட், அதுக்குக் காரணம் என்னன்னும் தெரியும்."

"உனக்குத் தெரிஞ்ச அந்தக் காரணத்தைச் சொல்லேன்."

"வெரி சிம்ப்பிள்... ஒரு சிவலிங்கம்தான் எல்லாத்துக்கும் காரணம். நீ கூட ஒருநாள் வீட்ல எங்கே அதுன்னு தேடினியே...?"

"ஆமாம்..."

"அதை நான்தான் ஆத்திரத்துல தூக்கி நம்ம வீட்டுக் கிணத்துல போட்டுட்டேன். ஆனா அது அந்தக் கிணத்தையே மாத்திடிச்சு க்ளாரா...

"அது இப்ப கிணறு இல்ல ஹோலி டேங்க். எங்க மதத்துல தண்ணிக்கு ஒரு தனி சக்தி உண்டு. அதனால தான் இங்க ஆறு, குளத்துக்கு ஒரு தனி இடம்..."

"ஐ நோ... ஐ நோ. மிராகிள்னு சொன்னியே... அது என்ன?"

"நௌ அயாம் பர்ஃபெக்ட்லி ஆல்ரைட். ரத்தக் காயத்துல இருந்து, சித்தச் சோர்வு வரை எல்லாமே மாயமா மறைஞ்சு போச்சு...

மனசு முழுக்க ஒரே தைரியம்தான். இங்க பட்டுப் போன செடியெல்லாமும் முளைச்சிருக்கு... இந்தக் கிணத்துக்கு கண்ணுக்குத் தெரியாதபடி சித்தர்கள் பலர் வந்து குளிச்சுட்டுப் போறாங்க."

"புராணக் கதைகள்லதான் நான் இப்படி எல்லாம் படிச்சிருக்கேன்..."

"அப்ப நான் சொன்னதை நீ நம்பப் போறது இல்லியா?"

"நம்பறேன்... நீ சொல்றதுலையும் உண்மை இருக்கு. இல்லாம நீ பேசமாட்டே... நான் சொல்றதுலையும்

உண்மை இருக்கு. இதுக்கெல்லாம் மேலான ஒரு உண்மையும் இருக்கு. அது என்னன்னு தெரியணும். அட் தி சேம் டைம். காகம் ஒண்ணு என்னைத் துரத்தி கிட்டே இருக்கு. அது எதுக்குன்னு சொல்லத் தெரியல..."

சரண்யன் காகத்தைப் பற்றி சொன்னதற்கு க்ளாரா விடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை. அவளிடம் ஒருவித அமைதி.

"க்ளா... நீ அங்கையே இரு. நான் வரேன். அதுக்கு முந்தி, இங்க எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு.."

ஃபோனை வைத்த சரண்யன் அந்தக் கிணற்றை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தான். அதேசமயம், எதிரில்- "வெரி குட்மார்னிங் ஸார்" என்றபடி ஜி.எம். சண்முகா!

அவர் முகத்திலும் சரண்யனின் பரிபூரண குணப் பாட்டைப் பார்த்து ஆச்சரியம்.

"என்ன ஸார் இது... படுத்த படுக்கையா இருப்பீங் கன்னு நினைச்சு வந்தா துள்ளிக் குதிச்சுகிட்டு ஓடறீங் களே..."

"ஆமாம் சண்முகா. நீங்க கொஞ்சம் வெய்ட் பண் ணுங்க... வந்துட்றேன்."

-சரண்யன் வேகமாக அங்கிருந்து விலகினான். எதற்கு இப்படி ஓடுகிறான் என்பதுபோல பார்த்த சண்முகாவிற்கு புஷ்பா மாமி பதில் சொன்னாள்.

"ஒரு நவபாஷாண லிங்கம் ஒண்ணு... அதை அவர் கிணத்துல தூக்கிப் போட்டுட்டார். அதை எடுக்கத்தான் போறார்னு நினைக்கறேன்..."

"என்னது... ஸார் கிணத்துல இறங்கறாரா...? நோ! இந்த உடம்போட அவர் எதுக்கு ரிஸ்க் எடுக்கறார்...?

நோ..." சண்முகா பின்னாலேயே துரத்திக் கொண்டு ஓடினார்!

❑ ❑ ❑

க்ளாரா எதிரில், தபாலில் வந்த அந்த ஒற்றைக் கடிதத்தை நீட்டிக் கொண்டிருந்தான் வேலாயுதம். வாங்கியவள் பிரித்து விட்டுப் படித்தாள்.

முகத்தில் பயமும் குழப்பமும் சம அளவு ஓடத் தொடங்கியது!

32

'அந்த சப்த மூலி' என்னும் மூலிகை, பல அற்புதங்களைச் செய்துவிட்டது. தொழிலதிபரின் செவிட்டுக் காதுகளும் கேட்கத் தொடங்கிவிட்டன. அவர் அப்படியே சாஷ்டாங்கமாக என் காலில் விழுந்தார். 'பெரியய்யா... நீங்கள் நிஜமாலுமே பெரிய ஆள் ஐயா' என்றார்.

'நான் பெரியவனில்லை... இந்த நாட்டின் காடுகள் அதிலுள்ள மூலிகைகள் தான் பெரியவை. அவைகளின் கருணையால்தான் மனித குலம் வாழ்கிறது' என்றேன் நான்.

'உங்களை வைத்து நான் நமது நாட்டின் பழமை யான விஷயங்களின் சிறப்பை வலிமையாகப் புரிந்து கொள்கிறேன். ஆனால் எனது சகா ஒருவர் இருக்கிறார். அவருக்கு நமது பழமையைக் காசாக்குவது எப்படி என்பதுதான் சிந்தனையே' என்றார்.

பிறகு அவரே தொடர்ந்தார்.

'ஒரு மனிதனுக்கு பணக்கிறுக்கு மட்டும் பிடித்துவிடக் கூடாது. அது ஆபத்தானது. லட்ச லட்சமாக சம்பாதிக்கத் தொடங்குவதில்தான் அந்த ஆபத்து ஆரம்பமாகிறது' என்றார்.

ஒரு மாதம்...

ஒரே ஒரு மாதம், அந்த லட்சங்களில் சில ஆயிரங்கள் குறைந்தாலும் மனது நடுங்கத் தொடங்கிவிடுகிறது. பரம ஏழையாகி பிச்சை எடுக்கப் போய்விடப் போவதுபோல மனது கற்பனை செய்து பார்த்து அந்த செல்வத்தை பல மடங்கு சம்பாதிக்க அது எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராகி விடுகிறது' என்றார்.

எனக்கும் அதில் உண்மை இருப்பது போலத் தோன்றியது. இதை எதற்கு இப்பொழுது இவர் கூறுகிறார் என்றும் ஒரு எண்ணம் ஏற்பட்டது. அடுத்து அவர் கூறியது என்னை அப்படியே அதிர்ச்சியில் உறைய வைத்துவிட்டது!

அது...?

-ரசமணி வித்தகர் பெரியய்யா

சண்முகா அந்த பருத்த உடலோடு ஓடியது ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் கூட இருந்தது. சரண்யனோ கிணற்றை நெருங்கிவிட்டான். அந்தத் திட்டை நெருங்கியவன், ஒரு வினாடி வந்த வேகத்தையெல்லாம் விட்டு விலகி அப்படியே தேங்கி நின்று, அங்கு நிலவிய ஒரு வகை வாசத்தை ஆழமாக சுவாசித்தான்.

அப்படியே நீர்ப்பரப்பையும் பார்த்தான். வானத்துச் சூரியனின் பிம்பங்கள் பட்டு தளதளத்துக் கொண்டிருந்தது நீரலைகள்.

"சார் சார்..." என்று அந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு குறுக்கில் நுழைந்தார் ஜி.எம். சண்முகா.

சரண்யனும் அவரை ஊடுருவினான்.

"என்ன சார்... இதுல குதிக்கப் போறீங்களா?"

"ஆமாம் சண்முகா..."

"ஐயோ... என்ன சார் இது? உங்க உடம்பு இருக்கற நிலைல..."

"நௌ ஐ ஆம் ஆல்ரைட். எனக்குள்ளே இப்ப பயங்கரமான புத்துணர்ச்சி. ஒரு மலையைப் பிளக்கச் சொன்னா லாஜிக் பார்த்து இம்பாஸிபிள்னுல்லாம் சொல்லமாட்டேன். கோடாலியோட நான் தயாராயிடுவேன்..."

"இருக்கலாம்... அதுக்காக இந்தக் கிணத்துல நீங்க இறங்க நினைக்கறது டு மச். வேண்டாம். உள்ளே எது இருந்தாலும் அதை நாம வேற யாரையாவது வெச்சு எடுக்கச் சொல்லலாம். ப்ளீஸ்! சொன்னா கேளுங்க..."

-சண்முகா நயமாகத் தடுத்து அவனை கையைப் பிடித்து உள்பக்கமாக இழுத்து வந்தார். அந்தச் சமயமாகப் பார்த்து எங்கோ போயிருந்த அந்தக் காக்கை, மீண்டும் குரலோடு அந்த கிணற்றுத் திட்டு மேல் பிரசன்னமாகியது.

சரண்யனும் திரும்பிப் பார்த்தான்.

வெறித்தான். அது மளுக்கென்று கிணற்றுக்குள் பாய்ந்து நீரில் படபடப்போடு மூழ்கி எந்தது. பின் சிறகுகளை உதற விட்டுக் கொண்டு வானில் ஏறியது.

சரண்யனிடம் வெறிப்பு விலகவேயில்லை. புஷ்பா மாமியும் சேலை முந்தியை இழுத்து விட்டுக் கொண்டு சகலத்தையும் பார்த்தபடி இருந்தாள்... சண்முகா முகத்திலும் வியப்பு.

"மிஸ்டர் சண்முகா... இந்த காக்கா ஒண்ணு இங்கேயே சுத்திச் சுத்தி வருது..." என்றான் அவரிடம் சரண்யன்.

"நான் ஒண்ணு சொல்லலாமா?" -கத்தரித்தாள் புஷ்பா மாமி. இருவருமே என்ன என்பது போல அவளைப் பார்த்தனர்.

"காக்கா ஒண்ணு இப்படி சுத்திச் சுத்தி வந்தா பித்ருக்கள்ல யாருக்கோ மனக்குறை இருக்குன்னு அர்த்தம்..."

"பித்ருக்களா அப்படின்னா?"

"பித்ருன்னா தெரியாதா... காலமாயிட்ட உங்க தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா இவாள்லாம்தான்.."

"அதுல இந்த காக்கா யாரு..?"

"என் வரைல அனேகமாக இது உங்க அப்பாவாதான் இருக்கணும். அவருக்கு ஏதோ குறை... அவர் எதையோ சொல்ல விரும்பறார்..."

-புஷ்பா மாமியின் விளக்கத்தைத் தொடர்ந்து சரண்யன் முகத்தில் ஒரு கேலியான புன்னகை.

"என்ன சிரிக்கறேள்.... நம்ப முடியலியா நான் சொல்றது...?"

"இல்ல... இதை எப்படி எடுத்துக்கறதுன்னுதான் தெரியல. காக்காங்கறது ஒரு எச்சல் பொறுக்கி. செத்த எலி, புழு, பூச்சின்னு சாப்பிட்ற ஒரு மாமிசப் பட்சிணி... செத்துப்போன ஆத்மாக்கள் இப்படி ஒரு ஜீவன் வடிவத்துலையா வருவா. ஏன் ஒரு புறாவா, கிளியால்லாம் வரக்கூடாதா?"

-சரண்யன் கேட்க, புஷ்பா மாமி பதில் கூறத் தெரியாமல் விழிக்கும்போது, சண்முகா முகத்திலும் இனம் புரியாத சலனங்கள்.

"எக்ஸ்க்யூஸ் மீ சார்... சில முக்கியமான விஷயங்கள் பத்திப் பேசி முடிவுக்கு வரணும். அதுக்குத்தான் வீட்டுக்கே உங்களைப் பார்க்க வந்திருக்கேன்..." என்று அவனை தன் பக்கம் இழுத்தார். அப்படியே கிணற்றையும் ஒரு பார்வை பார்த்து முடித்தார்.

சரண்யன் அவரோடு சேர்ந்து அந்த மாளிகை வீட்டின் ஹால் பகுதிக்குச் சென்றான். திண்டு திண்டான வடநாட்டுப் பாணி சோஃபாக்களில் ஒயிலாகக் கால் மேல் கால் போட்டு அமர்ந்தான். அவரையும் 'என்ன..?' என்கிற மாதிரி பார்த்தான்.

"இப்ப உங்களைப் பார்க்கும்போது பழைய பாஸ், மிஸ்டர் சக்கரவர்த்தியைப் பார்க்கற மாதிரியே இருக்கு" என்றார் சண்முகாவும் ஆங்கிலத்தில்.

"அவரோட பிள்ளை நான்... தெருவுல போறவன் மாதிரி எப்படி இருப்பேன்?"

-அதிர்ந்து நச்சென்று ஒரு கேள்வி. சண்முகா முகத்தில் அசடு வழிய ஆரம்பித்தது.

"சரி.. என்ன விஷயம்? சீக்கிரமா சொல்லுங்க. ஒன் மினிட்..." அவரிடம் கேட்டுவிட்டு, மளமளவென்று செல்ஃபோனில் அவனது பி.ஏ.வை பிடித்தவன்,

"நான் இம்மீடியட்டா மதுரை போகணும். நம்ம ஃபேக்டரிக்கும் போகணும். எல்லா ஏற்பாடும் செய்துட்டு உடனே எனக்கு இன்ஃபார்ம் பண்ணு" என்றான்.

சண்முகா உடனே நிமிர்ந்தார்.

"என்ன சார்... நீங்க சொக்கம்பட்டிக்கு கிளம்பிட்டீங்களா?"

"யெஸ்... அங்கே க்ளாரா தனியா ரொம்ப கஷ்டப்பட்டுகிட்டிருக்கா. வரேன்னு சொல்லியிருக்கேன். இங்க செத்துட்ட பி.ஏ. வெங்கட் ஃபேமிலில ஒண்ணும் பெரிசா பிராப்ளம் இல்லையே?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்ல சார். சமாளிச்சுட்டோம். ஆனா..."

"ஃபேக்டரிக்குள்ள ஒரே காசிப்... இனி இந்த கம்பெனில இருந்தா உயிரோட இருக்கறது கஷ்டம்னு, இதான் சாக்குன்னு நம்ம காம்பிடிட்டர் இப்ப சென்னை

வந்துருக்கான். நம்மகிட்ட இருக்கற எக்ஸ்பீரியன்ஸ்டு ஹேண்ட்ஸை எல்லாம் பணத்தாலையே கட்டிப்போட்டு தன் ஃபேக்டரிக்கு தூக்கிட்டுப் போக, எல்லா வேலை யையும் ஃபுல்ஸ்விங்கா செய்ய ஆரம்பிச்சுட்டாங்க..."

"ஸோ...?"

"அனந்தாச்சாரி எல்லாரோடயும் பேசி சமாதானம் செய்துகிட்டிருக்கார்..."

"எதுக்கு?"

"விட்டா எல்லாரும் போய்டுவாங்களே..."

"போகட்டும்... ஒரு சிலரை நம்பியா நம்ம ஃபேக்டரி இருக்கு?"

"இது உணர்ச்சி வசப்பட்டு சிந்திக்கற நேரமில்ல. இப்ப புத்திசாலித்தனம்தான் பிரதானம்..."

"என்ன செய்யணும்கறீங்க...?"

"நான் சொன்னா தப்பா எடுத்துக்கக் கூடாது..."

"என்னன்னு முதல்ல சொல்லுங்க..."

"நமக்கு எதுக்கு கோயில், புனருத்தாரணம், அது, இது எல்லாம்?"

"வாட் டு யூ மீன்?"

"அது... மேடம் நம்ம சொக்கம்பட்டி பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன்ல ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கறதா கேள்விப்பட்டேன்."

"அதுக்கென்ன...?"

"இங்கயோ நிலைமை ரொம்ப கேள்விக்குறில இருக்கு... இப்போ போய் எக்ஸ்பான்ஷன், அது, இது எல்லாம் எதுக்கு?

'வி வில் கான்சன்ட்ரேட் ஹியர் ஒன்லி. உள்ள எல்லோருக்கும் ட்ரான்ஸ்ஃபர் பயம் வேற வந்துடுச்சு. டேய்! நம்மளை அந்த காஞ்ச பய ஊருக்குத் தூக்கப்

போறாங்கடா. அதுக்கு பம்பாய்ல நம்ம காம்பிடிட்டர் கிட்ட போய் சேர்ந்துடலாம்னு சொல்றாங்க..."

"ஸோ..."

"நீங்க சொக்கம்பட்டி போக வேண்டாம். மேடத்தையும் கிளம்பி வரச்சொல்லுங்க. நாளைக்கே எம்ப்ளாயீஸ் முன் னால ஒரு பப்ளிக் அட்ரஸ் பண்ணுங்க. அதுல அங்க ஃபேக்டரி கட்டப் போறதில்ல. இங்கையே டெவலப் மெண்ட்ஸ் நிறைய இருக்குன்னு சொல்லி, ஒரு பத்து பேருக்கு ப்ரமோஷன் ஆர்டரும் கொடுக்கணும். நீங்க... இதை எல்லாம் செய்தா நிலைமை ஓரளவு சீராயிடும்."

"ஐ ஸீ..." சரண்யன் சண்முகாவை கவலையோடு பார்த்துவிட்டு அப்படியே க்ளாராவைப் பிடித்தான்.

"க்ளா... ஒரு முக்கியமான விஷயம்..." -என்றும் ஆரம்பித்தான்.

"என்ன சரண் என்னை உடனே கிளம்பி வரச் சொல்லப் போறியா?"

"இல்ல க்ளாரா... இங்க நம்ம ஜி.எம். சண்முகா புதுசா ஒரு பிராப்ளத்தைச் சொல்றாரு. நம்ம காம்பிடிட்டர் இப்ப சென்னைல டேரா போட்டு, மீன்பிடிக்கற மாதிரி நம்ம கம்பெனி பீப்பிள்ஸை பிடிக்கப் போறானாம். ரெட் சிக்னல் கொடுக்கறாரு சண்முகா."

"நான் இதை எதிர்பார்த்தேன். நோ பிராப்ளம் சரண்... நான் இப்ப சொல்லப் போறதை ஏன், எதுக்குன்னுல்லாம் கேக்காம அப்படியே கேட்டுச் செய்வியா?"

"ஐ ட்ரஸ்ட் யூ.. ஐ வில் சப்போர்ட் யூ ஒன்லி. கமான் என்ன பண்ணனும் சொல்லு."

"நல்லா கேட்டுக்கோ... நம்ம ஜி.எம். நோட் போட்டு எழுதின சில ஃபைல்ஸை கைல எடுத்துக்கோ. போட்ட பிளான்படி நீ இங்க கிளம்பி வர்றே... அதேசமயம், 'சொக்கம்பட்டில பிளாண்ட் திட்டமிட்டபடி கட்டி

முடிக்கப்படும்னு' ஒரு மெஸ்ஸேஜை நோட்டீஸ் போர்டு லையும் போட்டுடு.

"காம்பிடிட்டர் நம்ம ஃபேக்டரில இருந்து யாரை வேணா கூட்டிகிட்டுப் போகட்டும்... விட்டுடு. ஆனா எந்தக் காரணம் கொண்டும் திரும்பி மட்டும் வரக் கூடாதுன்னு பர்சனல் மேனேஜர் அவங்ககிட்ட எழுதி வாங்கிக்கட்டும். எந்த விதமான காம்பன்சேஷனும் அவங் களுக்குக் கிடையாதுன்னும் சொல்லிடு. என்ன?"

"ஓகே. டன். இப்பவே சண்முகாகிட்டையே சொல்லிட் றேன். நீயும் கூட நேர்ல அவர்கிட்ட சொல்லிடு..."

"வேண்டாம், நீயே சொல், உடனே கிளம்பியும் வா. இங்க உனக்கு பல ஆச்சரியங்கள் காத்திருக்கு..."

"ஷ்யூர்.... நான் போட்ட பிளான்படி அடுத்த விமானத் துலயே வந்துட்றேன். ஓகே."

-ஃபோனை வைத்துவிட்டு சரண்யன் சண்முகாவைப் பார்த்தான்.

சண்முகாவும் அவனைப் பார்த்தவராக, "என்ன சார்... யார் வேணா போகட்டும் விட்டுடுங்கன்னு சொல்லிட் டாங்களா மேடம்?" என்றார் கச்சிதமாக.

"எக்ஸாக்ட்லி... அவங்களுக்கு எந்த காம்பன்சேஷனும் கிடையாது. க்ளாரா சொன்னா அர்த்தம் இருக்கும் மிஸ்டர் சண்முகா... சரி, வேற ஏதாவது முக்கியமான விஷ யம்...?"

"நத்திங் சார்.... நீங்க புறப்படுங்க..." என்றவர் அவரும் கிளம்பினார். புறப்பட்டு விட்ட அவரை 'ஒன் மினிட்' என்று தடுத்த சரண்யன், "ஒய் டோன்ட் யூ கம் வித் மீ?" என்றான்.

சற்றே தடுமாறிவிட்டு 'வித் ப்ளெஷர்' என்றவர், "வெரி ஸாரி சார்... ஜெர்மன்ல இருந்து மிஸ்டர் ப்ரையன்

தாமஸ் வர்றார். அவரோடு மீட்டிங் அல்ரெடி டிஸைடட்" என்றார்.

"ஐ ஸீ..." என்றவன், அவரை வழியனுப்பி விட்டு வேகவேகமாக ஷேவ் செய்து கொள்ளத் தொடங்கினான். இடையிட்டது அவன் பி.ஏ.வின் தொலைபேசி.

"சார்... டிக்கெட் அண்ட் கார் ரெடி."

"வெரிகுட்... அப்படியே நம்ம சண்முகா சார் ஹேண்டில் பண்ற ஜெர்மன் கம்பெனி ஃபைல்ஸ் வேணும்..."

"அதை அவர் பி.ஏ.கிட்டதான் கேக்கணும்."

"கேட்டு எடுத்துகிட்டு வந்து கொடுங்க. முடியா துன்னா என்னை காண்டாக்ட் பண்ணச் சொல்லுங்க..."

"யெஸ் சார்."

சரண்யன் ஃபோனை வைத்துவிட்டு ஷேவிங்கை முடித்தான். ஜன்னல் அருகே வந்து நின்று, திரைச் சீலையை விலக்கிவிட்டு, வெளிக்காற்று முகத்தில் பட வெளியே பார்த்தான்.

மெயின் கேட்டுக்கு அப்பால் சாலையும் மனிதர்களும்!

ஒரு ஆச்சரிய அதிர்ச்சியாக அன்று அந்த நவ பாஷாண லிங்கத்தைக் கொடுத்த அந்த பிச்சைக்கார சன்யாசியும் நிற்பது தெரிந்தது.

'ஹக்!'

33

'அந்த தொழிலதிபர் கூறிய செய்தியில் நம்ப முடியாத அளவுக்கு விஷயங்கள். ஒரு கிராமத்தில் பழம்பெரும் ஆலயம் ஒன்று புதைந்து போய் விட்டது. மனிதர்கள் சுயநலம் புதைந்துபோன

ஆலயத்தைத் திரும்பவும் மீட்கவேயில்லை. ஏனென்றால் ஆலயம் திரும்ப மீட்கப்பட்டால் அதற்குச் சொந்தமான சொத்துக்கள் பற்றியெல்லாமும் கிளற வேண்டிவரும். இதனால் புதைந்த ஆலயத்தை திரும்ப தோண்டியெடுக்க யாரும் முன் வரவில்லை. முன்வருபவர்களுக்கும் பலவிதங்களில் இடையூறு.

இந்த நிலையில் அந்த ஆலயத்தைத் தோண்டி புனருத்தாரனம் செய்யும் பொறுப்பை என்னைப் போன்ற ஒரு தொழிலதிபருக்கு ஒரு ஜோதிடர் ஏற்படுத்தினார். தொழிற்சாலை கட்டுமானம் என்கிற பெயரில் அவர் அதில் ஈடுபட்டால் எதிர்ப்பு வந்தாலும் சமாளித்து விடலாம் என்பது ஜோதிடரின் எண்ணம்... அதேசமயம் அந்த ஆலயத்தில் தங்கத்தில் விக்ரகங்கள் இருந்து அவை அங்கே எங்கே இருக்கின்றன என்பதே தெரியாதபடி புதைந்து கிடந்தன.

அந்த விக்கிரகங்களை அடைவதுதான் ஜோதிடரின் எண்ணம்... அதை எடுக்கும்பொழுது சில உயிர்ப் பலிகள் நேரலாம் என்பதும் அவருக்குத் தெரிய வந்தது. தொழிற்சாலை கட்டுமானத்திற்கு நடுவில் பரிகாரம் என்ற பெயரில் காரியங்கள் நடக்கும் பொழுது விபரீதமாக எது நடந்தாலும், பழி நிறுவனத்தின் மேல்தான் விழும். அதேசமயம் காரியத்தில் கண்ணாக இருந்து அந்த தங்க விக்கிரகங்களை அடைந்துவிட வேண்டும் என்பது அந்த ஜோதிடரின் எண்ணம். சொர்ண விக்கிரகங்களை வைத்து சில வழிபாடுகளும், பூஜைகளும் செய்தால் சில சித்திகளை அடையலாம் என்பதும் அவரது எண்ணம்... ஆனால் ஊருக்கே நல்ல நேரம் கெட்ட நேரத்தைக் கூறும் ஜோதிடருக்கே கெட்ட நேரம் என்றுதான் கூற வேண்டும். அவரது விபரீதமான எண்ணம் அந்த தொழிலதிபருக்கு விளங்கிவிட்டது.

அந்த தொழிலதிபரும் மனம் குழம்பிப் போனார். அடுத்து என்ன செய்வது? அதை எப்படிச் செய்வது

என்கிற குழப்பத்தோடு இருந்த அவர் சித்தர்மலை காட்டில் உள்ள ஒரு குடிலில் வந்து ஓய்வெடுத்தார்.

ஓய்வின்போது சித்தர் மலைக்காட்டிலுள்ள குகை லிங்கம் ஒன்று கண்ணில் பட்டு அவருக்கு அருளியது. அதன் மூலம் அவர் குழப்பம் நீங்கியது.

புதைந்த சிவன்கோயிலை திரும்பவும் தோண்டி எடுத்து புனருத்தாரணம் செய்வது. அப்பொழுது சொர்ணலிங்கமும், விக்கிரகமும் கிடைத்தால் அதை ஊரறிய பிரதிஷ்டை செய்து அந்தப் பேராசை பிடித்த ஜோதிடருக்குப் பாடம் கற்பிப்பது என்று தீர்மானித்தார். இதை அவரே என்னிடமும் கூறினார். காது கேளாத நிலையில் அவர் சொன்னதை ஓரளவுதான் நான் புரிந்து கொண்டேன். ஆனால் அவர் மரணத்துக்குப் பிறகு முழுவதுமாகப் புரிந்து கொண்டேன்.

பாவம் அவர்... ஒரு செயற்கரிய செயலைச் செய்ய விரும்பிய அவர் திடீரென்று இறந்தது எனக்கு அதிர்ச்சியை தந்தது.

கோயில் விஷயமாக களத்தில் இறங்குபவர்களுக்கு இப்படித்தான் விபரீதம் நேரும் என்று கூறியதில் உண்மை இருக்குமோ என்று பயந்தேன். ஆனால்...

-அந்த தொழிலதிபர் பெரியய்யாவாகிய என்னிடம் கூறிய விஷயங்களில் ஏராளமான மர்மங்கள். குறிப்பாக இறுதியாக அவர் கூறியது...

-ரசமணி வித்தகர் பெரியய்யா

அந்தப் பிச்சைக்கார சன்யாசியைப் பார்த்த நொடி பரபரப்பான சரண்யன் முன்போல அவர்மேல் வெறுப்பில் சிக்காமல் அவரைத் தேடி ஓடத் தொடங்கினான் வீட்டு மாடிப்படிகளில் ஒரு ஒலிம்பிக் பந்தய வீரனைப் போல தாவிக் குதித்தும், வேகமாக ஓடியும் மெயின் கேட்

அருகே வந்து நின்று பார்த்தபோது அந்த மனிதரைக் காணவில்லை.

சரண்யன் முகத்தில் பலத்த ஏமாற்றம்!

கவனித்துக் கொண்டே இருந்த கேட் வாட்ச்மேனுக்கு எல்லாமே ஆச்சரிய அதிர்ச்சியாக இருந்தது. சரண்யன் அவனைப் பார்க்கவும் வேகமாக கைகளை உயர்த்தி சல்யூட் அடித்தான்.

"யோவ்... இங்க ஒரு சாமியார் நின்னுகிட்டு இருந்தானே... எங்கய்யா?"

"அவரா சார்... இப்பதான் போனார்."

"எங்க... எந்தப் பக்கம்...?"

"அதை நான் கவனிக்கல. ஆனா ஒரு முக்கிய விஷயம் சொல்லி உங்ககிட்ட சொல்லச் சொன்னார்..."

"என்ன... என்ன சொன்னார் அவர்?"

"உள்ள கிணத்துக்கு காவல் போடணுமாம். அதுல யார் இறங்கினாலும் ஆபத்தாம். ஆனா நீங்க இறங்கினா மட்டும் ஒண்ணும் ஆகாதாம்!"

"என்னய்யா இது... ஏன் இப்படி எல்லாம் சொன்னேன்னு கேட்டியா?"

"எங்க சார்... அந்த ஆள் பேசறத கேட்கணும்னுதான் தோணிச்சு. பதிலுக்குத் திருப்பி கேட்கணும்னே தோணலை சார்..."

"அப்ப சரி... நான் இப்ப ஊருக்குக் கிளம்பிட்டிருக்கேன். வர்றவரை கிணறுகிட்ட யாரும் போகக்கூடாது. ஜாக்கிரதை! என்ன?"

-சரண்யன் கட்டளையிட்டது அந்த வாட்ச்மேன் நெற்றியில் ஆச்சரியப் பந்தலைப் போட்டது.

அன்றைக்கு பேசியதற்கு நேர் எதிரான பேச்சு! இங்கே என்னதான் நடக்கிறது என்றே தெரியவில்லையே...

அவன் குழம்ப பீம்பீம் என்று ஆபீஸ் ஜீப்பின் சப்தம். திரும்பிப் பார்த்தான். சரண்யனின் பி.ஏ. ஜி.எம் சண்முகா ஹேண்டில் செய்த ஃபைல்களுடன் ஜீப்பில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தான்.

"பரவாயில்லியே... படு ஃபாஸ்ட்டா கொண்டு வந்துட்டியே..." சரண்யன் அந்த ஃபைல்களை கேட்டு வாங்கிக் கொண்டான்.

பி.ஏ. ஏர் டிக்கெட்டையும் பணிவாக நீட்டினான். அதையும் வேகமாக வாங்கிக் கொண்ட சரண்யனிடம் அதிசுறு சுறுப்பான ஒரு தோற்றம்!

பி.ஏ.வுக்கும் அது ஆச்சரியத்தை தந்தது!

❑ ❑ ❑

சக்திவேலன் புதூர்!

வி.ஏ.ஓ. ராஜாமணியின் வீட்டு புழக்கடைத் தோட்டத்தில் வி.ஏ.ஓ. ராஜாமணியோடு அமர்ந்து தண்ணியடித்துக் கொண்டிருந்தான் விருமாண்டி. தண்ணி என்றால் தண்ணி... அப்படி ஒரு தண்ணி! ஒரு வாய் தண்ணி என்றால் ஒரு வாய் சிப்ஸ். கண்ணிரண்டும் ரத்தத்தில் குளித்து முடித்திருந்தன. ராஜாமணியும் போதையில் இருந்தார். ஆனால் அதில் துளிகூட நிதானபங்கமில்லை.

விருமாண்டியோ விடாமல் குடித்துக் கொண்டிருந்தது அவருக்குள் ஏராளமான சந்தேகங்களை தோற்றுவித்துக் கொண்டிருந்தது.

"விருமாண்டி... எதுக்கு இப்படி நெப்பு நிதானம் இல்லாம குடிக்கறே?"

"இல்ல ராஜாமணி... என்ன எதுவும் கேட்காதே! நான் ஆத்தாளையே நேர்ல பார்த்தவன்... நல்ல வேளை தப்பிச்சேன்..."

"எந்த ஆத்தா... எங்க பார்த்தே!"

"உனக்குச் சொன்னா புரியாது. தா.. சொக்கம்பட்டில இருக்கற என் புளியங்காட்டை நான் அப்படியே யாருக் காவது வித்துடலாம்னு பாக்கேன். நீகூட வாங்கிக்கறதா இருந்தா வாங்கிக்க எனக்கு சௌகர்யமா போகும்..."

"ஏன் அதை விக்கறே...?"

"அதையெல்லாம் கேக்காதே... உனக்கு வேணுமா சொல்லு."

"அட போய்யா வெண்ண... என்னவோ அப்பன் பாட் டன் சொத்து மாதிரில்ல கேக்கறே. அது உங்க ஊர் சிவன்கோயில் சொத்துல்ல..."

"அதபத்தி உனக்கென்ன... பட்டா என்பேர்ல தான் இருக்குது."

"அதுசரி... காசை தூக்கி எரிஞ்சாதான் பத்திர ஆபிஸ்ல அந்த ஆபிஸையே கூட எழுதிக் கொடுத்துடு வானுங்களே..."

"அதான் இல்ல... வெள்ளக்காரன் காலத்துலையே என் தாத்தா கலெக்டர் மூலமா எழுதி வாங்கிட்டாரு."

"அதுசரி... இதை நாங்க நம்பவாக்கும்?"

"சரி நம்புனா நம்பு. இல்லாட்டி விடு."

"சரி சாமி. உன்னை நான் நம்புறதாவே இருக்கட்டும். இப்ப ஏன் திடீர்னு அந்த காட்டை விக்கறே?"

"எனக்கு பணத்தேவை... விக்கறேன்.. போதுமா?"

"பணத்தேவைன்னா புது கம்பெனி கட்டறவங்ககிட்ட கேள்... அவங்களுக்குத்தான் ஊர்பூரா இடம் தேவையா இருக்குதே. இனி உங்க ஊர்ல அவங்க நாட்டாமை தானேய்யா நிக்கப்போகுது..."

"தா... இந்த பேச்செல்லாம் எதுக்கு? உனக்கு புளியங் காடு வேணும்னா சொல்லு. இல்லாட்டி விடு." விருமாண் டியிடம் விற்றே தீர வேண்டிய ஒரு பரபரப்பும் துடிதுடிப் பும் நன்றாகத் தெரிந்தது.

தப்பித்தவறிகூட அந்த போதையிலும் தான் புளியங் காட்டில் அமானுஷ்ய அனுபவங்களால் மிரண்டது பற்றி மூச்சே விடவில்லை அவன்!

வி.ஏ.ஓ. ராஜாமணியோ வேறுவிதமாக அவனை கணக்குப் பண்ணத் தொடங்கியிருந்தார்.

❑ ❑ ❑

ஐம்பதடிக்கு ஒரு போலீஸ்! முக்கியமான ஓர் இடத்தில் இரண்டு போலீஸ் வேன்கள். அங்கங்கே ஊர்மக்களின் நடமாட்டங்கள். இதற்கு நடுவே திடுகலாய் நுழைந்திருந் தது சரண்யனின் கால் டாக்சி!

"மேடம் சார் வந்துட்டார்..." என்று அனந்த நாரா யணன் சொல்ல அதுவரை ஏதோ ஒரு ஃபைலில் மூழ்கியிருந்த க்ளாரா நிமிர்ந்தாள். சரண்யனும் அவள் எதிரில் வளைந்து நின்ற காரிலிருந்து இறங்கினான்.

ஒரு மூவி கேமரா தோளில் தொங்கியபடி இருக்க படு ஸ்மார்ட்டாக சினிமா ஹீரோ போல் கூலிங்கிளாஸ் சகிதம் அவளை நோக்கி நடந்தான்.

க்ளாரா அவனது துள்ளலான நடையைப் பார்த்து மிரண்டு போனாள்.

"வாவ்.. ச்ச்சரண்!" என்றாள் மேல் அண்ணத்தில் எச்சில் தெரிக்குமளவு.

வந்த வேகத்தில் கட்டிக் கொண்டான் அவனும். பின் எல்லோரும் மரியாதையாக செலுத்திய வணக்கங்களை ஏற்றுக் கொண்டான்.

அப்படியே ஒரு பார்வை. கட்டட வேலை படுஜோராக நடந்து கொண்டிருந்தது. எங்கும் தேக்கமில்லை. அனந்தா வும் கோயிலை தன் சகாக்களுடன் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். சரண்யனைப் பார்த்து "ஹவ் ஆர் யூ சார்" என்று கேட்கவும் தவறவில்லை.

பக்கத்திலேயே புதிதாக மஞ்சள் பாலீதினில் போடப் பட்ட ஹட் ஒன்று. அதற்கு வெளியில் நிறைய பிரம்பு நாற்காலிகள்.

அதில் போய் அமர்ந்தவள், "சண்முகா சார்" யூஸ் பண்ண ஃபைல்ஸை கொண்டு வந்தியா? என்றுதான் முதலில் கேட்டாள்.

சரண்யன் காரை திறந்து பின் சீட்டில் கிடந்த ஃபைல் களை எடுத்துக் கொண்டு திரும்ப வந்து அமர்ந்தான் அவள் எதிரில். அப்படியே, "இது எதுக்குன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" என்று கேட்டான்.

க்ளாரா தன் ஹேண்ட் பேக்கில் இருந்து சில கடிதங்களை எடுத்து அவன் முன்னால் போட்டாள்.

"இதெல்லாம் அப்பப்ப இந்த ஃபேக்டரி கேம்பசுக்கு வந்த லெட்டர்ங்க!" என்றும் சொன்னாள்.

"சரி அதுக்கென்ன க்ளாரா?"

"இல்ல.. இதெல்லாம் மொட்டைக் கடிதங்க. இதுல ஒரு லெட்டரோட கையெழுத்து மிஸ்டர் சண்முகா கையெழுத்துப் போலவே இருக்கற மாதிரி ஒரு எண்ணம் எனக்கு..."

-க்ளாரா பதிலோடு ஃபைலை திறந்தாள். பக்கங்களை யும் புரட்டினாள். சண்முகா அங்கங்கே எழுதியிருக்கும் குறிப்புகள் கண்ணில் பட்டன. கடிதங்களில் ஒன்று சண்முகாவின் குறிப்பில் காணப்படும் கையெழுத்தோடு ஒத்துப் போனது! சரண்யனும் கவனித்தான். க்ளாரா முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை.

34

அந்த தொழிலதிபர் தொடர்ந்தார். 'எனது இனிய நட்பிற்குரிய அந்த தொழிலதிபர் ஓசைப் படாமல் தன் கம்பெனிக்கு இடம் வாங்கி அங்கே கட்டிட வேலையை தொடங்க பூமி பூஜையும் போட்டுவிட்டார்.'

ஒரு அதிசயம் போல அவர் பூமி பூஜை செய்ய குழி தோண்டிய இடத்தில் ஒரு தாழிப்பானை கிடைத்து அதனுள் பூஜிக்கப்பட்ட நிலையில் அம்பாளின் தங்க விக்கிரக மேனி இருந்திருக்கிறது. துளியும் காற்று புக முடியாத நிலையில் சமாதி யாகிப்போன அந்த நிலைப்பாட்டிலும் அம்பாளின் திருமேனியில் போட்டிருந்த மலர் மாலை வாடி யிருக்கவில்லை. முன்னால் ஒரு அகல் விளக்கும் எரிந்து கொண்டிருந்திருக்கிறது.

தொழிலதிபர் அதைப் பார்த்து அதிசயத்தில் ஆழ்ந்து போனார். அவருடன் அப்பொழுது அவரது ஜெனரல் மேனேஜர் மட்டும்தான் இருந்திருக்கிறார். தான் பூமி பூஜை போடுவதோ, கம்பெனியை கட்டத் தொடங்குவதோ கூடியவரை ஜோதிடருக்கு தெரியக் கூடாது என்பது அவரது தீர்மானம். எனவே அங்கே குழியினைத் தோண்டியவர், எஞ்ஜினியர் சங்கரதாஸ் மற்றும் பூஜிக்க வந்த அந்தணர் என்று ஐந்து பேருக்கு மேல் அங்கே யாருமில்லை. இதில் எஞ்ஜினியர் சங்கரதாஸ் தேங்காய் பழம் வாங்கிவர ஜீப்பை எடுத்துக் கொண்டு சென்றுவிட்ட நிலை யில், அந்தணரும் குளிக்கச் சென்றிருக்கும்போது குழிதோண்டி மட்டும் இன்னும் சில அடி தோண்ட முயன்றானாம். அப்பொழுதுதான் அந்த தாழிப் பானையில் அம்பாளின் சொர்ண விக்கிரகம் கண்ணில்பட்டிருக்கிறது. அவரது ஜெனரல் மேனேஜர்

கூட அந்த காட்சி பார்த்து வெலவெலத்துப் போய் விட்டதாக சொன்ன தொழிலதிபர் அதை உடனேயே அப்படியே தன் கார் பின் சீட்டில் எடுத்து வைத்துக் கொண்டுவிட்டாராம்.

சொர்ண விக்கிரகம் கிடைத்துவிட்டது. அதுவும் மிகத் தற்செயலாக சொர்ணலிங்கமும் இங்குதான் எங்காவது இருக்க வேண்டும் என்று பூஜித்த தொழிலதிபர், ஜெனரல் மேனேஜர் வாயைக் கட்டிப் போட்டதோடு அந்த குழியைத் தோண்டியவனுக்கும் நிறைய பணத்துடன் அவனது பெருவிருப்பமான சிங்கப்பூர் வேலைக்கும் ஏற்பாடு செய்து கொடுத்து விட்டார்.

அடுத்த லிங்கமும் கிடைக்க வேண்டும். கிடைத்து விடும்... எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அப்படிக் கிடைத்தால் அரசுக்கு அதைத் தரமாட்டேன். கோவிலை புதுப்பித்து அதில்தான் ஸ்தாபிதம் செய்வேன் என்றார். ஆனால் அந்த ஜோதிடரோ எனக்கு இன்னும் சில நாள்தான் வாழ்க்கை. அதன் பிறகு என் ஆயுள் முடிந்து விடும் என்று கூறியிருக்கிறார் என்றும் கூறினார். நான் கூட அவரைத் தேற்றினேன். இறைவன் உங்களைக் கைவிட மாட்டான் என்றேன்.

'நானும் மரணத்திற்கு அஞ்சவில்லை. மரணம் என்பது ஒரு மாற்றம்தானே? ஆனால் ஒரு ஆலயம் எப்படி எல்லாம் ஆகிவிட்டது பார்த்தீர்களா? நமது ஆலயங்கள் அந்த நாள் முதல் இந்தநாள் வரை அழிந்து அழிந்து துளிர்ப்பதே வாடிக்கையாகி விட்டது' என்றார்.

நான் அப்பொழுது சிரித்து விட்டேன்.

'கடவுளுக்கு தன் ஆலயத்தையே பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. மனிதக் கயவர்களிடம் அடிக்கடி சிக்கி அப்பாவி சிறைவாசம் அனுபவிக்கிற மாதிரி அனுபவிக்கிறார். இவரை எப்படி சர்வ வல்லமை படைத்தவர் என்று கூற முடியும்' என்று கேட்டேன்.

இந்தக் கேள்வி அவரை குத்திக் கிழித்துவிட்டது. 'தவறு நண்பரே... உலகமெங்கும் இறைவன் உள்ளான். அவனை ஆலயத்தில் மையப்படுத்தி அழைத்து அவனருளைப் பெற முயற்சிப்பது மனிதன்தானேயன்றி இறைவனில்லை.' ஒருவகையில் ஆலயமும் ஆசையின் சின்னம்தான். ஆனால் இந்த ஆசை மனிதனை கடைத்தேற்றும் ஆசை. ஆனாலும் ஆசையால் எது வந்தாலும் அதில் பேராசைக் கொடியும் தொற்றும், பரவும். அங்கே அதன் காரணமாக பாவச் செயல்கள் நடக்கத்தான் செய்யும். உலகை ஆட்டிப்படைக்கும் மாயை, ஆலயங்களைக்கூட விட்டு விடவில்லை.

இந்த ஆலயம் கூட மாயவலையில் சிக்கி விட்டது மீட்க வேண்டும் என்றார்.

அந்த பதிலில் எனக்கும் நிறைவுதான். ஆனால் அவரால் மீட்கமுடியவில்லை. விதி வென்றுவிட்டது. மாற்றம் என்று சொன்ன மரணம் அவரைக் கொண்டு சென்றுவிட்டது.

'இப்படி ஆகிவிட்டதே வைத்தியரே...?' என்று என்னிடம் வருந்தினார் தொழிலதிபர்.

நானோ சித்த வனம் சென்று நவபாஷாண லிங்கத்தை உருவாக்கிய சித்த புருஷரிடம் அவ்வ எவையும் கூறி வருந்தினேன்.

'கவலைப்படாதே... எனது நவபாஷாண லிங்கம் அனைத்துச் சங்கடங்களையும் தீர்க்க ஒரு நிவாரணியாகச் செயல்படத் தொடங்கிவிட்டது.

ஒரு நல்ல முடிவு ஏற்படும். அப்பொழுது ரசமணிகளை உருவாக்கிக் காட்டுவதில் வல்ல நீயே ஒரு ரசமணியோடு அங்கு சென்று நடப்பதைக் காண்பாய்' என்றார்.

எனக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.

"ஸ்வாமி... ஒரு ஆலயத்தின் சீரழிவை நீங்கள் சரி செய்துவிட்டதுபோல தோன்றுகிறது. இந்த உலகில் இப்படி எத்தனையோ ஆலயங்கள்.

அங்கெல்லாம் சென்று' மீட்கப் போவது யார்?" என்று கேட்டேன். வேறு யார்? அந்தப் பகுதியில் புண்ணிய பலங்களை தேடிச் சேர்ப்பவர்கள்தான் என்று நொடியில் அந்த சித்த புருஷரிடம் இருந்து பதில் வந்தது. எனக்கு வெலவெலத்து விட்டது.

அந்த பதிலே பல உண்மைகளையும் விளக்கி விட்டது. பாழ்பட்ட மனம் கொண்டவர்கள் இருந் தால் பாழ்பட்ட ஆலயங்கள் இருக்கத்தான் செய்யும் என்பதே அது.

- ரசமணி வித்தகர் பெரியய்யா

வெற்றிப் புன்னகை சிந்திய க்ளாராவைப் பார்த்த சரண்யன் அப்படியே க்ளாரா கையில் உள்ள கடிதத் தையும் ஃபைலில் உள்ள குறிப்பையும் பார்த்துவிட்டு அதீதமாக முகம் மாறவும் செய்தான்.

"என்ன சரண்யன் அதிர்ச்சியா இருக்கா?"

"ஆமாம் க்ளாரா... சண்முகாவா அந்த கல்ப்ரிட்!"

"அஃப்கோர்ஸ். என்னை அவர் அடிக்கடி புகழ்ந்தப் பவே சந்தேகப்பட்டேன். அவர் டிக்டேட் பண்ண ஒரு லெட்டரைப் பார்த்திருந்த எனக்குள்ள அவரோட பெக்கூ லியரான லெட்டர் ஸ்ட்ரோக் ஸ்ட்ராங்கா ரெஜிஸ்டர் ஆயிடிச்சு.

"இந்த மொட்டைக் கடிதங்கள் இங்க வந்தவை. சிவில் எஞ்ஜினியர் சங்கரதாஸ் தந்தார். ஏற்கெனவே நான் இது யாரோ செய்யற சதிங்கற சந்தேகத்துல இருந்தேன்."

"எப்ப கல்வெட்டு ஃபோட்டோவோட ஒரு நிருபர் என்னை மடக்கப் பார்த்தாரோ அப்பவே பல உண்மைகள் தெரிய ஆரம்பிச்சிடிச்சு. இப்போ இது க்ளைமாக்ஸ். ஆமாம் இந்த ஃபைல்களை நீ மிஸ்டர் சண்முகாவுக்கு தெரிஞ்சு கொண்டு வந்தியா, இல்லை ரகசியமாவா?"

"இதுல ரகசியத்துக்கு இடம் இல்ல க்ளாரா. என் பி.ஏ. தெரிஞ்சுதான் கொண்டு வந்திருப்பான். நான் வேணும்னா கேட்கட்டுமா?"

சரண்யன் சாவதானமாக சொன்ன பதில் க்ளாராவை நெற்றியைத் தேய்க்க விட்டது.

"ஏன் க்ளாரா.. எனிதிங்க சீரியஸ்?"

"சீரியஸ்தான். இந்த நிமிஷம் சண்முகா அலெர்ட் ஆகியிருப்பார்."

"யூ மீன்...?"

"அவர் தலைமறைவாகலாம். இல்லே நம்ம காம்பி டிடரோட வேகமாக போய் கைகோர்த்துகிட்டு ரொம்ப ஸ்ட்ராங்கா நம்மளை எதிர்க்கலாம். எது எப்படி இருந்தா லும் சரி, இங்க அவருக்கு ஆள் இருக்கணும். இல் லேன்னா என் பி.ஏ. வெங்கட் இறந்திருக்கமாட்டான்..."

"ஓ... நீ அப்படிப் போறியா..? இங்க நீ யாரை டவுட் பண்றே?" சரண்யன் கேட்கும்போதே ஹட்டுக்கு வெளியே பக்கவாட்டுப் படுதாவில் ஒரு அசைவு. அதை க்ளாராவும் கவனித்தாள். சட்டென்று யாரைன்னு நான் சொல்வேன்? என்றவள் அசுர வேகத்தில் வெளியில் வந்தாள். அவள் எதிரில் சாகம்பரி!"

❑ ❑ ❑

வி.ஏ.ஓ ராஜாமணி சொன்னதை எல்லாம் கேட்கக் கேட்க சப்இன்ஸ்பெக்டர் நெற்றில் ஏராளமாகச் சுருக்கங் கள் விழ ஆரம்பித்தன.

"விருமாண்டி கிட்ட இப்ப பழைய வீரம் கொஞ்சம் கூட இல்லை. என்னன்னே தெரியல. பயந்து நடுங் கறான். அந்த புளியங்காட்டை யார் தலைலயாவது கட்டிடணும்னு துடிக்கறான். எதனால அந்த புதுக்கம் பெனிக்காரங்ககிட்ட போகமாட்டேங்கிறான்னும் தெரியல,

அவங்களும் இவன்கிட்ட வரலை, உள்ளார திக்குதம்பா ஏதோ இருக்கு சார்..."

வி.ஏ.ஓ தொடர்ந்து கொண்டே போனார். சப் இன்ஸ்பெக்டரும் ஒரு முடிவுக்கு வந்தவராக, ஒரு வடநாட்டுப் பொண்ணு காணாம போனது சம்பந்தமா ஏற்கெனவே எனக்கு அவன்மேல ஒரு கண்ணு இருக்கு. இப்ப நீங்க சொல்றதையும் வெச்சுப் பார்த்தா அவளை வளைக்க இதுதான் சரியான சமயங்கற மாதிரி தோணுது" என்றார்.

"ஆமாம்... பிடிச்சு நாலு இழு இழுத்துப்பாருங்க, பல உண்மைங்க தெரிய வரலாம்."

"அதுக்கு முந்தி அந்த புளியங்காட்டுக்குள்ள ஒரு சுத்து சுத்தி வர்றேன். ஏன்னா அதுதானே இப்ப அவளை படுத்திகிட்டு இருக்குது."

"ஆமாம்.. ஆத்தாளை நான் நேர்லையே பார்த்தேன், அப்படி, இப்படின்னு ஏதேதோ உளறினான். புளியங்காட்டுக்குள்ளார ஒரு சுத்து சுத்தி வர்றதும் நல்லதுதான்..."

வி.ஏ.ஓ.வும் ஏற்றிவிட்டார்! அப்படியே, "சார் இந்த விஷயத்துல நான்தான் பத்த வெச்சேன்கறது தெரிய வேண்டாம்" என்றும் கைகளைப் பிசைந்தார்.

சப் இன்ஸ்பெக்டர் இதழ்கிடையில் அதன் நிமித்தம் ஒரு தெற்றுச் சிரிப்பு. அதேசமயம் ஸ்டேஷன் வாசலில் ஒரு ஜீப் தேங்கி நிற்க, சில போலீஸ்காரர்கள் சாகம் பரியை இழுத்துக் கொண்டு உள்ளே நுழைந்து அவர் முன் அவளை நிறுத்தினர். சப் இன்ஸ்பெக்டர் அவளைப் பார்த்து ஒருமுறை முறைத்துவிட்டு, "என்ன. அப்ரூவராயிட்டியா?" என்று கேட்க அவள் தலை தாழ்ந்து கொண்டது.

"இந்தம்மா மாட்டி என்ன சார் பிரயோஜனம்..? மெயின் வில்லன் தற்கொலை பண்ணிகிட்டான் சார்" என்றார் ஒரு கான்ஸ்டபிள்.

"என்னய்யா சொல்றே?" பதறினார் சப் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம் சார்.. இவளை, அப்புறமா நாம தேடிப் போயிருக்கிறோமே அந்த எடுபட்ட தபால்கார பய வேலாயுதத்தை எல்லாம் ஏவிவிட்டு காரியம் பார்த்த அந்த ஜெனரல் மேனேஜர் சண்முகா ஒரு லெட்டர் எழுதி வெச்சுட்டு தற்கொலை செய்துகிட்டாராம்!

இவளோட நாங்க ஸ்டேஷனுக்கு புறப்படும்போது தான் அந்த வெள்ளைக்காரம்மாவுக்கு செல்ஃபோன்ல தகவல் வந்துச்சு. நம்ம இன்ஸ்பெக்டரு, அப்புறம் க்ரைம் பிராஞ்சு கதிர்வேலு எல்லாம் அங்க அடுத்து என்ன பண்றதுன்னுதான் பேசிகிட்டிருக்காங்க. இவளை உள்ற லாக்கப்புல வெச்சு பூட்டச் சொன்னாங்க" என்றார்.

அதேசமயம் போஸ்ட்மேன் வேலாயுதத்தையும் அள்ளிப் போட்டுக் கொண்டு உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர் சிவில் உடுப்பில் விவசாயிகளைப் போல தோற்றத்தில் இருந்த இரண்டு போலீஸ்காரர்கள்.

"எப்படியோ நாங்க போலீசுன்னு தெரிஞ்சு தப்பிச்சு ஓடப்பார்த்தான் இவன். பாஞ்சு அமுக்கிப்பிட்டோம்" என்றனர். பதிலுக்கு வேலாயுதம் கண்ணீர் விழிகளுடன் சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்தான். அவனும் பேசத் தொடங்கினான். புதுக்கம்பெனியில் பெரிய வேலை.... அப்படியே கிடைக்கற தங்கத்துல கொஞ்சம்னு அந்த ஜெனரல் மேனேஜர்தான் ஆசை காட்டினார் சார்.

"ஏற்கெனவே சில பவுன் தங்கத்துக்காக என் தங்கச்சி அது பெத்த குழந்தையோட தீக்குளிச்சு தற்கொலை செய்துகிட்டா... சாவறதுக்கு முந்தி வாழா வெட்டியா இருந்தா. அப்பப் பார்த்து இப்படி ஒரு சந்தர்ப்பம் வரவும் அவர் பேச்ச கேட்டு அவர் சொன்னபடி நடக்க ஆரம்பிச்சேன்.

"என் வேலை விருமாண்டியை மிரட்டி அந்த புளியங் காட்டை விட்டு துரத்தறதுதான். அதுக்கு தோதா விருமாண்டியால கெட்டுப்போன ஒரு பொண்ணு அந்த புளியங்காட்டுல தூக்கு போட்டுகிட்டு செத்துப்போனா. அவளை செக்குவும் கிட்டானும்தான் புதைச்சாங்க... அங்க இருந்துதான் என் வேலையை நான் காட்ட ஆரம்பிச்சேன்.... பிணத்தைத் தோண்டி எடுத்து வேற இடத்துல புதைச்சுட்டு அவங்கள குழப்பினேன். அவங் கள முதல்ல வெட்டி விட்டாதான் விருமாண்டியை சுல பமா நெருங்க முடியும்னு தோணிச்சு. நான் நினைச்ச மாதிரியே அவங்களும் பயந்து நடுங்க ஆரம்பிச்சாங்க. ஒரு ராத்திரியில அவங்களுக்கு விஷ சாராயத்தை வாங்கிக் கொடுத்து கொன்னு, தூக்குல தொங்கி உசுர் விட்ட மாதிரி செட்டப் செஞ்சு விருமாண்டியை பதற விட்டேன்.

"நான் எதிர்பார்த்த மாதிரியே விருமாண்டி மெல்ல வழிக்கு வந்தான். கடைசியா ஒரு பொண்ணை மோகி னிப் பிசாசாக்கி உச்சமா மிரட்டவும் காட்டை விட்டு ஓடிட்டான்."

"அப்புறம்தான் ஜி.எம். சார் கூட்டனியான ஜோசியர் ஒருத்தர் உள்ள நுழைஞ்சு ஒவ்வொரு இடமா சுத்தி வந்து தேடினார். கடைசியில் ஒரு மரபொந்துக்குள்ள தங்கச் சிவலிங்கம் இருக்கறத கண்டுபிடிச்சுட்டார். அதுக்கு மேல மரம் வளர்ந்து மூடியிருந்துச்சு. அதை வெட்டி எடுக்க இன்னிக்கு நாள் பார்த்தோம். ஆனா அதுக்கு முந்தியே இந்த பொண்ணு சாகம்பரி மாட்டி, இது சொல்லி நான் மாட்டி வரிசையா எல்லாரும் மாட் டிட்டோம்..."

வேலாயுதம் ஒருவாறு அவரிடம் அவர் கேட்காமலே சொல்லிமுடிக்க, சப்இன்ஸ்பெக்டரும், "அந்த புளியங் காட்டுக்குள்ள அதுவும் மரத்துலதான் சிவலிங்கம் இருக் குன்னு எப்படி ஜோசியருக்கு தெரியும்" என்று கேட்டார்.

"அதெல்லாம் எனக்கு தெரியாது. இதுக்கு அந்த ஜோசியர்தான் பதில் சொல்லணும்" என்று கூறிவிட்டு அதோடு வாயை மூடிக் கொண்டான்.

❑ ❑ ❑

ஜோதிடர் நாகபூஷணம் வீட்டை போலீஸ் சுற்றி வளைத்தபோது கதவு தாழிடப்பட்டிருந்தது. நெடுநேரம் தட்டியும் பதிலில்லை. சாவித்துவாரம் வழியாக பார்த்த போது அவர் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார்.

ஏராளமாய் அதிர்ந்து கதவைப் பிளந்து கொண்டு அவரை சமீபிக்கவும் காலடியில் ஒரு கடிதம் கிடந்தது.

எடுத்துப் பார்த்த இன்ஸ்பெக்டர் அதில் ஊடுருவ ஆரம்பித்தார்.

"காவல்துறைக்கு!

நானும் ஜி.எம். சண்முகா வழி தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து விட்டேன். என் பிறந்த நேரமும் ஜாதகமும் பிழையானது என்பது இப்பொழுதுதான் புரிகிறது.

சொக்கம்பட்டி மகாதேவ ஆலயம் பற்றிய ரகசியங்கள் பல ஆண்டுகளாக பேசப்பட்டு வருபவை. அங்கு சொர்ண மூர்த்தங்கள் இருப்பது வதந்தியல்ல உண்மை என்பதை பிரசன்னத்தில் பலமுறை உறுதி செய்து கொண்டேன்.

அதை அடைந்து பூஜிப்பதுதான் என் லட்சியம் என்றும் தீர்மானித்தேன். அதற்காகவே தொழிலதிபர் சக்கரவர்த்தி யும் வேறுவிதமாகத் தூண்டிவிட்டேன். இந்நிலையில் ஜி.எம். சண்முகா போட்டிக் கம்பெனியாளர்களிடம் விலை போன நிலையில் சொக்கம்பட்டியில் தொழிற்சாலை வரக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். சிவன் சொத் தான நிலத்தில் கம்பெனி வந்தால் அது எல்லோருக்கும்

அழிவைத் தரும் என்று உணர்த்தவும், பரிகாரமாக ஆலயத்தை கட்டி புனருத்தாரணம் மட்டும் செய்ய வேண்டும் என்று அவர் சக்கரவர்த்திக்கு புரிய வைக்க சென்னை ஃபேக்டரியிலேயே செயற்கையாக பல விபத்துக்களை உருவாக்கினார். இயற்கையாக நடந்து விபத்துக்களையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

இதனால் சக்கரவர்த்தியும் ஆலயத்தை புதுப்பிக்க வேகமாக முயன்றார். அதற்கான பூமி பூஜையில் எதிர்பாராத விதமாக தங்க விக்ரகம் ஒரு தாழியில் இருந்து அகப்பட்டது. அதிலேயே சிவலிங்கமானது புளியங்காட்டில் ஒளித்து வைக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்தது.

அந்த நாளில் ஆலயம் மண்மூடிப் போய்விட்ட நிலையில் குருக்கள் ஒருவர் தங்க விக்ரகங்களை அதை அபகரிக்க முயன்ற சிலரிடம் இருந்து பாதுகாக்கச் செய்த ஏற்பாடு அது என்பதும் புரிந்தது. ஆனால் அந்த குருக்கள் என்ன ஆனார் என்பது தெரியவில்லை. இந்நிலையில் சக்கரவர்த்தி தங்கச் சிலையை தன் பொறுப்பில் வைத்துக் கொண்டது சண்முகாவுக்கும் எனக்கும் அதிர்ச்சியளித்து.

அதேசமயம் எங்களை வைத்துக் கொண்டே அவர் எதிரியாக நடப்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். சக்கரவர்த்தி சொக்கம்பட்டியில் தொழிற்சாலையும் கட்ட ஏற்பாடுகள் செய்யவும் சண்முகாவுக்கு சங்கடம் அதிகமாகியது. இந்நிலையில் அந்த தங்கச் சிலையை சக்கரவர்த்தி எங்கு வைத்திருக்கிறார் என்பதும் தெரியவில்லை. அதை தெரிந்து கொள்ள ஒருநாள் சண்முகா பெரிதும் முயன்று பார்த்து அதில் சக்கரவர்த்தியோடு சண்டையிட நேரிட்டது. அதன் முடிவாக சக்கரவர்த்தியை சண்முகா தலையணையால் அமுக்கிக் கொல்லும்படி ஆகிவிட்டது.

அதை நானும் விதிப்படியான மரணம் என்று சில கடிதங்களைக் கொண்டு நம்ப வைத்தேன். சரண்யன் வரவும் அவன் மூலம் எங்கள் திட்டத்தை தொடர்வது என்றும் முடிவு செய்தோம். ஆனால் சரண்யன் க்ளாரா என்கிற பெண்ணுடன் வந்தது எதிர்பாராத திருப்பம் என்றால், அவள் புத்திசாலித்தனங்களின் சிகரமாக இருந்தது அதைவிட பெரிய திருப்பத்தை எங்கள் வரையில் ஏற்படுத்தி விட்டது.

தொட்டுத்தொட்டு அவளையும் அனைவரையும் வழிக்குக் கொண்டுவர செய்த முயற்சிகளில் ஒரு புகைப்படப் பிழை, மற்ற பிழைகளை எல்லாம் காட்டிக் கொடுத்துவிட்டது. இனி நானோ, சண்முகாவோ வாழ்வதில் அர்த்தமே இல்லை.

நடந்த உண்மைகளை ரத்தினச் சுருக்கமாகக் கூறிவிட்டேன். சத்தியமாக அந்த தங்கச்சிலை இருக்கும் இடம் தெரியாது. ஆனால் லிங்கம் விருமாண்டியின் கட்டுப்பாட்டில் உள்ள புளியமரக்காட்டில் ஒரு அரச மரத்தோடு சேர்ந்து பின்னிப் பிணைந்து வளர்ந்துவிட்ட புளியமரத்தின் பொந்துக்குள் இருக்கிறது. அதில் சர்பங்களும் நிறைய உள்ளன. குருக்கள் திட்டமிட்டுதான் அதில் போட்டுள்ளார். அவர் எதனால் அப்படிச் செய்தார். அதற்கு யார் காரணம் என்பதெல்லாம் வரலாற்றில் மறைந்து விட்டவை.

ஆனால் கோயில் சொத்து தொடர்பான நம்பிக்கைகளை பயன்படுத்தி நிலத்தை கம்பெனிக்கு விற்ற தாமோதர முதலியார் முதல். சிதம்பரம் செட்டியார் வரை பலரை மிரட்டிப் பணிய வைக்க முடிந்தது. இவர்களிடம் பலித்த விஷயம் ஒரு வெள்ளைக்கார பெண்மணியிடம் பலிக்காமல் போனதுதான் ஆச்சரியம்...” அந்தக் கடிதம் தொடர்ந்தபடி இருந்தது... அடுத்த பக்கத்தில்?

35

ஜோதிடரின் இறுதிக் கடிதத்தைப் படித்தபடி இருந்த அந்த போலீஸ் அதிகாரியின் பார்வை ஒருமுறை, விட்டத்து கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த ஜோதிடர் நாகபூஷணத்தைப் பார்த்தது. அந்த நொடி அந்த அதிகாரியின் கண்களுக்கு ஜோதிடர் தெரியவில்லை. ஆசை ஒன்று, இல்லை யில்லை பேராசை ஒன்றுதான் முழம் கயிற்றில் தொங்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

அவரது சகாக்கள் சூழ்நிலைகளை நோட்டம் போட்டு கண்களாயே அளந்தபடி இருந்தனர். மார்ச்சுவரி வேனுக்கு வயர்லெஸ் மூலம் தகவல் போயிருந்தது. அவரும் கடிதத்தைத் தொடர்ந்தார்.

'வெள்ளைக்காரப் பெண் க்ளாரா மிக புத்திசாலி. நிர்வாகம் சந்தித்து வரும் பிரச்சினைகளுக்கு பின்னால் உள்ள காரணத்தைக் குழப்பமேயின்றி கண்டு கொண்டு விட்டார். அதை நாங்கள் அவர் போஸ்ட் மாஸ்டர் குருமூர்த்தியோடு விலாவாரியாகப் பேசியதை வைத்துப் புரிந்து கொண்டோம். அடுத்தடுத்து இடத்தை விற்ற தாமோதர முதலியார் மற்றும் சிதம்பரம் செட்டியார் குடும்பத்தைச் சந்திக்க அவர் புறப்படவும் க்ளாரா கச்சிதமாகப் பயணிப்பது புரிந்து போயிற்று.

அனைத்திற்கும் மேலாக சரண்யன் படுத்த படுக்கையாய் இருக்க க்ளாரா நிர்வாகத்தையே திறம்பட செலுத்தக் கூடிய அளவு பொறுப்புக்கு வருவார் என்றோ, அதற்கு சரண்யனும் இடமளிப்பார் என்றோ கனவிலும் எதிர்பார்க்கவில்லை. நிர்வாகம் மிகத் தடுமாறி சண்முகா தான் முழுப் பொறுப்புக்கு வருவார் என்றே எதிர்பார்த்தோம். அதற்காகவே சரண்யன் காரில் பாம்பை விட்டோம்.

சரண்யன் அதிகபட்சம் இறந்துவிட, நிர்வாகம் சண்முகா கைக்கு வரும். அவர் அதைப் போட்டியாளருக்கு சுலபமாக விற்றுவிடுவது என்பது எங்கள் திட்டமாக இருந்தது. போர்டு உறுப்பினர்களுக்கும் இதைவிட வேறு வழி இருக்க வாய்ப்பு இல்லை. உள்ளே பணியாற்றுபவர்களுக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று கருதினோம்.

ஆனால் க்ளாராவின் நிர்வாகச் செயலாற்றலால் எல்லாம் மாறிவிட்டது. இடையில் மந்திரம் போட்டது போல வேறு நிகழ்வுகள் நடந்து திசை திருப்பிவிட்டன.

என் ஜோதிடம் எங்கே, எப்படி பொய்யாயிற்று என்று இந்த நொடி விளங்கவில்லை. இறுதிவரை அந்த தங்க அம்பிகை விக்ரகமும் கிடைக்கவில்லை.

சொக்கம்பட்டி கிராமத்தில் ஒரு சிலர் தவிர அவ்வளவு பேரும் எங்கள் பக்கம் இருந்தும், பலன் வேறுவிதமாக மாறிவிட்டது.

கோயில் விக்ரகங்களின் கண்களைச் சிதைத்து, அதை நிமிர்த்தி வைக்கக் கூடாது என்றெல்லாம் பயமுறுத்தி நுட்பமாக மிரட்டியும் பலனில்லை.

காலம்தான் எங்களுக்கு எதிரியாகிவிட்டது.

அதிலும் கல்வெட்டுப் புகைப்படத்தில் பதிவான அந்த நாளும் நேரமும் காலம்தானே? கூர்ந்து கவனித்த போதுதான் தெரிந்தது. அன்று ப்ரதோஷம். சிவபிரான் விஷமுண்டு அதை கண்டத்தில் தாங்கிய வேளை. எங்கள் திட்டம் என்னும் விஷத்தையெல்லாமும் தன் கண்டத்தில் தாங்கி விட்டார்.

நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

'ஒரு தடயமும் விடாமல் ஒரு கொலைகூட இந்த உலகத்தில் நடந்ததில்லை' என்று! கூடவே பல குற்றப் பழமொழிகளும் நினைவுக்கு வருகிறது.

'குற்ற உணர்ச்சி என்பது ஒரு காற்றுள்ள பந்து. அது மனதில் மூழ்கவே மூழ்காது.' அதேபோல், 'குற்றவாளி

ஒரு பங்கு புத்திசாலி என்றால் அதைக் கண்டறிபவன் இரண்டு பங்கு புத்திசாலி. எல்லோரையும் விட காலம் தான் பெரிய புத்திசாலி!'

அந்தக் காலத்தை வளைத்து நான், சண்முகா மற்றும் சிவன் சொத்தை அனுபவிக்க முயன்ற பலரும் இன்று காலத்தாலேயே தண்டிக்கப்பட்டுவிட்டோம்.

தெய்வம் நின்று கொல்லும் என்பது சத்தியமாகி விட்டது. அன்றே கொல்வதில் கூட ஒருவித கருணை ஒளிந்துள்ளது. கொஞ்சம் கொஞ்சமாய் தவிக்கவிட்டு, மனச்சூறாவளியில் சுழலவிட்டு அவரவர் அவரவர்க்குள் முனங்கக்கூட திராணியில்லாமல் சாவதிருக்கிறதே அது கொடியது.

தெய்வம் எப்படி நின்று கொல்லும் என்பதுதான் என் வரையில் யாராலும் அறிய முடியாத மகாதேவ ரகசியம். அது ஆளுக்கு ஆள் மாறுபடுகிறது. வாழ்க அந்த சக்தி... சிவமே... உன்னைத் திருடியாவது செவ்வந்தனாக எண்ணினேன். உள்ளத்தால் திருடி உன் அடியவனாவதே பெரிய செல்வந்தனாவதற்கு சமம்தான். கள்ளத்தால் திருடியதற்கு தண்டனையை எனக்கு நானே அளித்துக் கொண்டு விடுகிறேன்.

ஜோதிடப்படி என் ஆயுள் இன்னும் பல வருடங்கள். அதுவரை என் ஆன்மா பிசாசாய்க் கிடந்து அலைவதே நான் எனக்கு அளித்துக் கொள்ளும் பெரிய தண்டனை யாகும். வருகிறேன்.

இப்படிக்கு
நாகபூஷணம்.

கடிதத்தைப் படித்து முடித்தவர், எல்லா சிடுக்குகளுக் கும் தெளிவான விடை கிடைத்து விட்டது போல அதை மடித்து பாக்கெட்டில் பத்திரமாக வைத்துக் கொண்டார்.

❑ ❑ ❑

சண்முகா வீட்டில் அவரது பிரேதத்தைக் கைப்பற்றிய போலீஸ் அதிகாரி வசமும் இதேபோல ஒரு விளக்கக் கடிதம்! அவரும் க்ளாராவைத்தான் புகழ்ந்திருந்தார். உபரியாக ஒரு விஷயத்தைச் சொல்லியிருந்தார். சக்கரவர்த்தி மோட்டார்ஸுக்கு போட்டியான நிறுவனம், அவருக்கு நிர்வாகத்தில் ஒரு பங்கையே அளிப்பதாகக் கூறி இருந்ததாம். இணை இயக்குனர் என்கிற ப்ரமோ ஷன் வேறு.

வர்த்தக உலகின் சாமர்த்திய நியாயங்களே வேறு. அதில் நான் மயங்கிவிட்டேன் என்று எழுதியிருந்தாராம். வேடிக்கைதான். ஆனால் கால நேரத்தின் நியாயம் வேறாக இருந்துவிட்டது.

❑ ❑ ❑

கான்ஃபரன்ஸ் ஹாலில் நடந்த அந்த மேல்மட்டக் கூட்டத்திற்கு அனந்தாசாரி தலைமை ஏற்றிருந்தார். அருகில் க்ளாராவும், சரண்யனும் இறுக்கமாக அமர்ந் திருந்தனர்.

அனந்தாச்சாரி சுருக்கமாகப் பேசினார். 'நடந்து முடிஞ்ச எல்லா விஷயமும் இப்ப எல்லாருக்கும் தெரியும். அவற்றைப் பற்றி பேசி வருத்தப்பட்றதவிட அடுத்து என்ன செய்யப் போறோம்கறது ரொம்ப முக்கியம். நம்ம பாஸ் சக்கரவர்த்தி சாரோட கொள்கைப்படி நாம இனி நடக்கறதும், தொழிற்சாலையை இன்னும் பல கிளைகள் காணும்படி வளர்த்துவதும்தான் இனி நம் முன்னால் உள்ள விஷயங்கள். அதை சின்சியராக செயல்படுத்து வோம்.

இந்த சந்தர்ப்பத்துல நம்ம ஜே.எம்.டி.யான மேடம் க்ளாராவை நான் உங்க எல்லார் சார்பாகவும் மனமார பாராட்டறேன். அவங்க நமக்கு கிடைச்சிருக்கற ஒரு பொக்கிஷம்!

-அனந்தாச்சாரி சொல்லி முடிக்கவும் மென்மையாக கைதட்டல் வெளிப்பட்டு அடங்கியது. அருகில் மலர் மாலை அணிந்தவராக கண்ணாடிச் சட்டத்திற்குள் இருந்து ஒரு புகைப்பட ரூபத்தில் பார்த்துக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தி.

மீட்டிங் முடிந்து சரண்யனும் க்ளாராவும் வெளியில் வந்தனர். ஒரு போலீஸ் அதிகாரி காத்திருந்து வந்து சந்தித்தார்.

"இன்னும் என்ன சார்.. என்கொயரி ஏதாவது பாக்கி இருக்கா?" சரண்யன் சற்று எரிச்சலுடன் கேட்டான்.

"அந்த தங்க அம்பாள் விக்ரகம் உங்க வீட்லதான் இருக்கணும்னு நினைக்கறோம்."

- அவர் சொன்னது நெஞ்சினில் குத்தியது போல் இருந்தது.

"என் வீட்லையா... யார் சொன்னா?"

"பூமி பூஜையின் போது அது கிடைச்சதாவும், அதை உங்க அப்பாதான் எடுத்துகிட்டுப் போனதாகவும் சண் முகா தன் ஸ்டேட்மெண்ட் லெட்டர்ல குறிப்பிட்டிருக்கார். ஜோதிடர் லெட்டர்லையும் அதுக்கான ரெஃபரன்ஸ் இருக்கு..."

"ஐ ஸீ..."

"புளியங்காட்டுல ரெய்டு போய் சிவலிங்கத்தை மரப் பொந்துக்குள்ள இருந்து எடுத்தாச்சு. இது ஒண்ணுதான் பாக்கி. உங்க வீட்லதான் உங்க அப்பா எங்கையாவது மறைச்சு வெச்சிருக்கணும்னு நினைக்கறோம்."

அவர் சொல்லச் சொல்ல தலையாட்டியபடியே வெளியே போர்ட்டிகோவில் நிற்கும் காரை சமீபித்தான். அருகிலேயே நிமிர்ந்து வளர்ந்திருக்கும் அசோக மரக் கிளையில் அந்தக் காக்கை!

எங்கே அவன் கவனிக்காமல் போய்விடுவானோ என்பது போல அது ஒருமுறை கரைந்தது.

அவனோடு க்ளாராவும் கவனித்தாள்.

அவனுக்கு சுரீர் என்றது. அந்த போலீஸ் அதிகாரியோ ஒன்றும் புரியாமல் பார்த்தார். அது அடுத்த நொடியே எழும்பிப் பறக்கத் தொடங்கியது. தார்ச்சாலைக்கு நேர் மேலே என்னைப் பின் தொடருங்கள் என்கிற மாதிரி...

"சரண்... கமான் கிளம்புங்க. அது எங்க போகுதுன்னு பார்ப்போம்..." க்ளாரா தூண்டினாள்.

"என்ன சார் இது.. யாராவது பார்த்தா சிரிப்பாங்க. இது என்ன சினிமா சமாச்சாரமா...?" போலீஸ் அதிகாரி கேட்டு முடிப்பதற்குள் அது மறைந்தேவிட்டது. க்ளாரா கைகளை குத்திக் கொண்டாள். சரண்யனும் அவரை வெறித்தபடி, "கார்ல ஏறுங்க. வீட்டுக்குதான் இப்ப போறோம்" -என்றான்.

காருக்குள்...

"ஸாரி சார், நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?"

-அந்த போலீஸ் அதிகாரி ஆரம்பித்தார்.

"நத்திங்.... உங்களைப் போல திங்க் பண்ணினவன் தான் நான். ஆனா இப்ப நான் சிந்திக்கறவிதமே மாறிப் போச்சு..."

"நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியல..."

"புரியாது. புரியவும் வேண்டாம். ஒண்ணு மட்டும் நிச்சயம் மிஸ்டர் போலீஸ் ஆபீசர்.

"வாழ்க்கைல நமக்குப் புரியாத விஷயங்கள் நிறைய இருக்கு. அது புரியணும்னா அது முதல்ல தெளிவா புரியட்டும், அப்புறம் இறங்கறேன்னா அது கடைசிவரை புரியாமலே போயிடும். நஷ்டமும் நமக்குதான்."

-அவன் சொன்னது அவரை மேலும் குழப்பியது. க்ளாராவோ களுக்கென்று சிரித்துவிட்டாள். போலீஸ்

ஆபீசர் பக்கம் திரும்பி, "ஸாரி... சரண்யனோட வேதாந்தம் உங்க வரைல 'half way through'. அதனால குழப்பமாதான் இருக்கும். அவர் சொல்றதுக்குப்பின்னால மிதிக்கலா நிறைய விஷயங்கள் இருக்கு. நான் கூட அதையெல்லாம் வெச்சு ஒரு நாவல் எழுதலாம்னு இருக்கேன்" என்று கண் சிமிட்டினாள் க்ளாரா! தோளை உயர்த்தியபடி உதட்டைப் பிதுக்கி தலையைச் சாய்த்து பதிலுக்கு ஒரு சிரிப்பு சிரிக்கத்தான் அவரால் முடிந்தது.

காரும் ராயப்பேட்டையிலுள்ள பிரம்மாண்ட அவனது இல்லத்தில் நுழைந்தது. அடுத்த நொடியே கும்மென்று ஒரு வித வாசம். அந்த போலீஸ் அதிகாரியும் உணர்ந்தார். அந்த நொடி கிணறும் அதில் தூக்கிப்போட்ட லிங்கமும்தான் சரண்யன் நினைவில் வந்தது.

காரைவிட்டு இறங்கியவன். 'க்ளா! ஒன் மினிட்' என்றபடியே கிணறு நோக்கி நடந்தான். திட்டின்மேல் மீண்டும் அந்தக் காகம். அவன் வரவும் தண்ணீரில் பாய்ந்து மூழ்கி எழுந்துப் பறந்தது. அவனுக்குப் புரிந்து விட்டது. பின்னால் மெல்ல நடந்து வரும் க்ளாராவையும், போலீஸ் ஆபீசரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, அப்படியே கிணற்றுக்குள் ஒரு டைவ் அடித்தான்.

"சரண்..." அலறியபடி ஓடினாள் க்ளாரா. அதற்குமேல் அந்த ஆபீசர் கிணற்று நீர்ப்படுகை மேல் சலன அலைகள்.

"மேடம்... என்ன இது! சாருக்கு நீச்சல் தெரியும் தானே?" போலீஸ் ஆபீசரின் பதறலைத் தொடர்ந்து "நல்லா தெரியும். டோன்ட் ஒர்ரி" என்றாள். இதற்குள் புஷ்பா மாமியும் சமையற்கட்டில் இருந்து ஓடிவந்தாள். அனைத்தையும் கவனித்தாள்.

எதற்காக இப்படி அன் கிணற்றில் பாய்ந்தான் என்று போலீஸ் ஆபீசர் நினைக்க, அப்படியே அன்று தூக்கி

போட்ட அந்த நவபாஷாண லிங்கமுடன் மேலே வந்தான் அவன்.

"வாவ்!" க்ளாரா உற்சாகத்தில் கூவினாள். அவனோ "ஆபீசர்... நீங்க கேட்ட அந்த தங்கச் சிலையும் உள்ளதான் இருக்கு" என்றவன், பலத்த பிரயத்தனத்தில் அதையும் எடுத்துக் கொண்டு மேலே வந்தான்!

க்ளாரா அந்த லிங்கம் தொடர்பான விஷயங்களை ஆபீசருக்கு சொல்லத் தொடங்கியிருந்தாள்!

அவரோ வாயைப் பிளந்துவிட்டிருந்தார்.

❑ ❑ ❑

மூன்று மாதங்களுக்குப் பிறகு...

சொக்கம்பட்டி ஆலய கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடந்து முடிந்தது. அதிகாலை 5.45-க்கு கும்பாபிஷேகம். வானில் சந்திரன், சூரியன் என்று இருவரும் இரு திசையில் இருந்து கவனித்தது தனிச் சிறப்பான ஒரு விஷயமாக கருதப்பட்டது.

கூட்டமான கூட்டம்.

எல்லோரும் சரண்யன், க்ளாராவின் கைகளை குலுக்கிப் பாராட்டினார்கள்.

ஒருவர் கைகுலுக்கும் பொழுது உள்ளங்கையில் கோலிகுண்டு போல ஒன்றை ரகசியமாக வைத்தார்.

என்ன என்று பார்த்தான். ரசமணி!

"என்ன பாக்கறீங்க... இது அபூர்வமான ரசமணி. திருஷ்டி, ஏவல் ஓம்பல்னு எல்லாத்துலயும் காப்பாத்தக் கூடியது.

ஒரு பழைய கோயிலை காலத்துக்கும் மெச்சும்படியா புதுசா ஒரு நவபாஷாண லிங்கத்தோட தந்துருக்கற உங்

களுக்கு நான் இதுகூட செய்யலேன்னா எப்படி?" என்று கேட்டு அவரும் சிரித்தார்.

சரண்யன் அவரிடம், "நீங்க யார்?" என்று கேட்க- "என்னை ரசமணி வித்தகன் பெரியய்யான்னு சொல் வாங்க..." என்றவர், "இந்த லிங்கத்தோட ரிஷிமூலமும் நதிமூலமும் எனக்குத் தெரியும்..." என்று மர்மமாகக் கண் சிமிட்டினார்.

"யோவ்... அங்க என்ன வளவளன்னு பேசிகிட்டு, போய் வரிசைல நின்னு சாமி கும்புட்றதை விட்டுட்டு..." விருமாண்டியின் அதட்டல் குரல் இடையிட்டு, அவ ரைப் பிடித்துத் தள்ளிவிட்டது. நெற்றிப்பட்டையுடன் நிறையவே மாறியிருந்தான் விருமாண்டி!

குருமூர்த்தியும் ஓடியாடிக் கொண்டிருந்தார்.

க்ளாராவுக்கு மிக மிக நெகிழ்ச்சியாக இருந்தது.

"அப்பா ஆரம்பிச்சதை பிள்ளை முடிச்சுட்டீங்க, அவ ரும் இருந்திருந்தா எவ்வளவோ நன்னா இருந்திருக் கும்..." என்றார் ஜி.எம். ஆக பதவி உயர்வு பெற்றுவிட் டிருந்த அனந்தாச்சாரி.

"ஏன் இல்லாம...? அவரும் இங்க இருந்து எல்லாத் தையும் பார்த்துட்டுதான் இருக்கார்..." என்றபடியே கோயில் கோபுரத்தைப் பார்த்தாள் க்ளாரா. அதில் ஒரு லிங்க விக்ரக சுதை வடிவத்துக்கு அருகில் அந்தக் காக்கை!

(முற்றும்)

திருமகள் நிலையம்